# தமிழ் அன்னை

பம்மல் சம்பந்த முதலியார்

International Institute of Tamil Studies

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# தமிழ் அன்னை

பம்மல் சம்பந்த முதலியார்

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamil Annai |
| Author | : | Pammal Sambandha Mudaliar |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113<br>Ph. 2542992. |
| Publication No. | : | 438 |
| Language | : | Tamil |
| Edition | : | Reprint |
| Date of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | vi + 146 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 40/- (Rupees Forty Only) |
| Printed by | : | Powerman Printers<br>89, Coral Merchant Street<br>Mannady, Chennai - 600 001<br>PH. 5248342 |
| Subject | : | Tamilology |

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் அரிய நூல்களை வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை *600 113*

# அணிந்துரை

வழக்கறிஞர், நீதித்துறையின் மாண்புமிகு நடுவர், நாடக ஆசிரியர், நாடக இயக்குநர், நாடக நடிகர் என்றவாறு பல்வேறு பரிணாமங்களைக் கொண்டவர் ப்ம்மல் சம்பந்த முதலியார்.

தமிழ்நாடகம் கலை உணர்வில்லாது, சாதாரண வயிற்றுப்பிழைப்புக் கலைஞர்களின் கைப்பாவையாக ; இழிந்தோர் கலையாகக் கருதப்பட்ட நிலையினை மாற்றிக் கற்றோர், கல்லாதோர் அனைவரும் கண்டு களிக்கும் கலையாகத் தமிழ்நாடகத்தை உருவாக்கிய பெருமை பம்மல் சம்பந்த முதலியாரைச் சாரும்.

*1891* ஆம் ஆண்டு 'சுகுண விலாச சபா' என்னும் நாடகக் குழுவைத் தொடங்கி, 'புஷ்பவல்லி' என்னும் நாடகத்தை மேடையேற்றியதைத் தொடர்ந்து 'மனைவியைத் தேர்ந்தெடுத்தல்' வரை *94* நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்து மேடையேற்றித் தமிழ்நாடக வளர்ச்சிப் பணியாற்றியவர் பம்மல் சம்பந்த முதலியார். இவருடைய, 'நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?' என்னும் நூல் சிறந்த நடிப்புக் கோட்பாட்டு நூலாக விளங்கக் காணலாம்.

இவருடைய படைப்புகளாகிய தமிழ் அன்னை பிறந்துவளர்ந்த கதை, சிவாலயச் சில்பங்கள், பேசும்படக்காட்சி, நடிப்புக்கலை, கதம்பம் ஆகியவற்றை மறுபதிப்பாக வெளியிடத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திடம் நிதி உதவி கோரிய நிலையில் இவை அணைத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே தொகுதியாக வெளியிட்டால் அந்நூல்விற்பனை எளிதாக அமையாது என்பதால் இவ்வைந்து படைப்புகளையும் இரண்டு தொகுதிகளாக வெளியிட முடிவுசெய்யப்பட்டது. அவ்வகையில் முதல் தொகுதியில் தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதையும், சிவாலயச் சில்ப்ங்களும் இடம்பெறுகின்றன. இத்தொகுதிக்குத் **தமிழ் அன்னை** என்று பெயரிடப்பட்டுள்ளது. பேசும்படக் காட்சி, நடிப்புக்கலை, கதம்பம் ஆகிய மூன்று படைப்புகளும் இரண்டாவது தொகுதியில் இடம்பெறுகின்றன.

அதற்கு **நடிப்புக் கலை** என்ற பெயர் அமைக்கப்பட்டுத் தனிநூலாக வெளியிடப்பெறுகின்றது. பம்மல் சம்பந்தமுதலியாரின் இப்படைப்புகளை இரண்டு தொகுதிகளாக வெளியிடுவதால் இவற்றை வாங்கிப் பயன்பெறுவது எளிதாகும். முதல் தொகுதியாகிய தமிழ் அன்னையில் தமிழ் அன்னை பிறந்த வளர்ந்த கதை என்பது முதலில் அமைக்கப்பட்டுள்ளது. நாடக ஆசிரியர், நாடக இயக்குநர், நாடக நடிகர் என்ற நிலையில் தமிழில் அறியப்பட்ட பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதையில் சொல்லாராய்ச்சி செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. மனித சமுதாயத்தின் தொடக்கம் பற்றியும் மனித மொழிகளின் தொடக்கம் பற்றியும் கூறித் தமிழ்மொழியே மூத்தமொழி என்பதை விளக்க இந்நூல் முயலுகிறது.

தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்ற சொற்கள், பிறமொழியிலிருந்து தமிழிற்கு வந்து கலந்து நிற்கும் சொற்கள், தமிழ்ச்சொற்கள் ஆகியனவும் தமிழ் இலக்கணச் சொற்கள், வழக்கற்றுப் போன தமிழ்ச் சொற்கள், ஊர்ப்பெயர்கள், மனிதர்களின் பெயர்கள், சாதிப்பெயர்கள், இன்று பொருள் மாறி விளங்கும் தமிழ்ச் சொற்கள், காரணப் பெயர்கள் போன்றனவும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. தம் கருத்தை நிலைநாட்ட டாக்டர் கால்டுவெல், டாக்டர் டிரெண்ட், டாக்டர் பர்னல், டாக்டர் குண்டர்ட் போன்ற அறிஞர்களின் கருத்துகளைத் துணையாகக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்நூல் பம்மல் சம்பந்த முதலியாரின் புலமைத்திறனுக்குச் சான்றாகும்.

இந்நூலில் இரண்டாவது படைப்பாக இடம்பெற்றுள்ளது சிவாலயச் சில்பங்கள் என்பதாகும்.

இந்தியா கோயில்கள் நிறைந்த நாடு என்று புகழப்படும் சிறப்புடையதாகும். தமிழரின் கலைநுட்பங்களும், இறையாண்மையும் கோயில்களால் வெளிப்படுகின்றன. கோயில்களின் தோற்றத்தையும், சிற்பக் கலையின் வகைப்பாட்டையும் இந்நூலாசிரியர் ஆய்வு நோக்கில் எடுத்துக்கூறியுள்ளார். சிவாலய அமைப்பு முறைகளையும், வழிபாட்டு முறைமைகளையும் எடுத்துக்கூறியதோடு கால வாரியாகக் கோயில்களை வகைப்படுத்திக் கோயிற் கட்டடக் கலையின் சிறப்பை விளக்கியிருப்பது பம்மல் சம்பந்த முதலியாரின் பன்முக நோக்கிற்குக் கட்டியங்கூறுவதாக அமைந்துள்ளது.

பம்மல் சம்பந்த முதலியாரின் படைப்புகளை இந்நிறுவனம் மறுபதிப்பாக வெளியிடுவதால் அவருடைய மொழிநடையில் எவ்விதமாறுதலும் செய்யாமல், மூலத்தில் இருந்த வண்ணமே மறுபதிப்புச் செய்யப்படுகின்றது.

இந்நூலை மறுபதிப்பாக வெளியிட நிதியுதவி வழங்கிய தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கும், அதன் இயக்குநர் **முனைவர் ம. இராசேந்திரன்** அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

நிறுவன வளர்ச்சியில் ஆர்வத்துடன் அக்கறை காட்டிவரும் நிறுவனத்தின் தலைவரும், தமிழக அரசின் கல்வி மற்றும் தமிழ் ஆட்சிமொழி- பண்பாட்டுத்துறையின் **மாண்புமிகு அமைச்சருமான முனைவர் மு. தம்பிதுரை** அவர்களுக்கும், தமிழ் ஆட்சிமொழி- பண்பாட்டுத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் **செயலர் திரு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும் **கூடுதல் செயலர் திரு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நூலுக்கு ஒளியச்சுக்கோப்புச் செய்து தந்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திருமதி பி. கௌசல்யாவிற்கும், அழகிய முறையில் நூலை அச்சிட்டுத் தந்த சென்னை பவர்மேன் அச்சகத்தார்க்கும் நன்றியும் பாராட்டுகளும் உரியன.

*சென்னை* **இயக்குநர்**

*நாள் : 8-11-2002*

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை | 1 |
| சிவாலயச் சிற்பங்கள் | 112 |

# தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை

தமிழ் மொழிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பிக்கும் போது, தமிழ் மொழி முதன்முதல் எங்கு உண்டாயது, எப்படி உண்டாயது என்று அறிவது அவசியமாகும்.

கடவுள் இப்பூமண்டலத்தையும் அதனுள் மனித வர்க்கத்தையும் சிருஷ்டித்து, மனிதர்களுக்குப் பேசும் திறமையைக் கொடுத்தார் என்பது மதங்களின் அபிப்பிராயம், இது ஒருபுறம் நிற்க.

பாஷை அல்லது மொழி என்பது மனிதவர்க்கம், வாயினால் ஒலிக்கும் அர்த்தமுடைய சப்தங்களைக் குறிப்பதாம். இப்பூமண்டலத்தில் மனிதர்கள் உற்பத்தியாகி விர்த்தியடைந்த விஷயத்தைப்பற்றிக் கூறும் சாஸ்த்திரத்திற்கு ஆந்திரோபாலஜி (anthropology) என்று பெயர். இதற்குத் தமிழில் "மனிதர்களுடைய பூர்வீக நாகரீக சாஸ்திரம் என்று கூறலாம். இந்த சாஸ்திர ஆராய்ச்சி செய்தவர்களுட் சிலர் மனிதன் பூமியில் அநேக ஆயிரம் வருடங்களுக்கு முன் ஓர் இடத்தில் தோன்றி, பிறகு எங்கும் பரவினன் என்று எண்ணுகின்றனர்; இங்ஙனமாயின், பல பாஷைகளும் ஒரே ஆதி பாஷையிலிருந்து உற்பத்தியாயிருக்க வேண்டும். ஆயினும் அந்த சாஸ்திரம் கற்றுணர்ந்தவர்களுட் பலர். மனித வர்க்கமானது இப்புவியில் பல இடங்களில் தோன்ற ஆரம்பித்ததென்று அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வபிப்பிராயப்படி, சில பாஷைகள் இவ்வுலகில் ஆதியில் உண்டாகியிருக்க வேண்டும். பிறகு அவைகளிலிருந்து தற்காலத்திய பல பாஷைகள் பிரிந்திருக்க வேண்டும். அன்றியும் இவ்வுலகில், மனிதர்கள் உற்பத்தியானபிறகு, ஆதியில் நாகரீகமில்லாத காட்டு மனிதர்களாய் குகைகளில் மிருகங்களைப் போல வசித்து, காடுகளில் மற்றப் பிரயாணிகளை வேட்டையாடி ஜீவித்து வந்தனர் என்றும், பிறகு ஆடு மாடுகளைப் பழக்கி, அவற்றின் பால், மாமிசம் முதலியவற்றை உண்டுவந்தனர் என்றும், அவைகளை மேய்ப்பதற்காகப் பசும்புல்லுள்ள பல இடங்களில் சஞ்சரிக்கத் தலைப்பட்டனரென்றும், அப்படிச் சஞ்சரிக்கப் புகுந்தவர்கள், சமுத்திரக் கரையிலுள்ள பிரதேசங்களுக்கும் போனவர்கள் மீன் பிடிக்கக் கற்று அங்கு தங்கினர் என்றும், செழிப்புள்ள நிலங்களுக்குப்

போனவர்கள் நிலத்தையுழுது விதை விதைக்கக் கற்றுக் கொண்டு அவ்விடத்தில் தங்கத் தலைப்பட்டனரென்றும், பிறகு இம்மாதிரியாக அவர்கள் தங்கின இடங்களெல்லாம் சிற்றூர்களாகி, மனிதர்கள் முதலில் மண்ணினால் அமைத்து கட்டிடங்களைக் கட்டி, தீயுண்டாக்கும் முறைகளைக் கற்று சுட்ட மண் அல்லது செங்கல்லினால் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்து, கடைசியில் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவித நாகரீகங்களையும் அடைந்தனர் என்று மேற்குறித்த சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இவ்வாறு, கொஞ்சம் கொஞ்சமாக நாகரீகமடைந்த மனித வர்க்கமானது, ஆதிகாலம் தொடங்கி, மற்றப் பிராணிகள் ஒன்றுக்கொன்று எங்ஙனம் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, வாயினால் சப்தங்களை உண்டாக்குகின்றனவோ அங்ஙனமே, வாயினால் ஒலியை எழுப்பி, ஒருவருக்கொருவர், தாம் விரும்புவதையோ, வேண்டுவதையோ, தெரிவித்திருக்க வேண்டுமென்பதற்கு ஐயமில்லை. இவ்வொலிகள், நாளடைவில், ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வரப்பட்டு இன்ன ஒலி செய்தால் இன்ன பொருள் என்று வழக்கின் மூலமாக நிர்ணயிக்கப்பட்டதே, மனித பாஷையின் உற்பத்தியாகும். இதைப்பற்றி இன்னும் விவரித்துக் கூற இது இடமல்ல.

மனித வர்க்கத்தின் உற்பத்தியைப் பற்றியும், மனித பாஷையின் ஆரம்பத்தைப் பற்றியும், மேற்கூறியதைக் கொண்டு, தமிழ் பாஷையானது ஆதி பாஷைகளிலொன்று என்பதைப் பற்றி இனி ஆராய்வோம்.

பூகோள உறுப்பிலக்கணத்தை ஆராயும் சாஸ்திரறிஞர் (Geologists) இந்தியாவின் தென்பாகமானது, அதாவது தக்காணம் (Dekkan) என்று சொல்லப்பட்ட விந்தியமலைக்குக் கீழுள்ள பிரதேசமானது, ஆதிகாலம் தொடங்கி பூபாகமாக, அதாவது தரையாகவே, இருந்ததாக அபிப்பிராயப்படுகின்றனர். இதைக் கொஞ்சம் விவரித்துக் கூற வேண்டியிருக்கிறது; தற்காலம் ஆசியா கண்டத்தில் மங்கோலியா தேசத்தில் பாலைவனமாயிருப்பதும், ஆப்பிரிக்கா கண்டத்தில் சஹாரா எனும் பாலைவனமும், ஆதிகாலத்தில் நீர் நிரம்பிய, சமுத்திர பாகமாயிருந்ததென்று அங்கு தற்காலமும் கிடைக்கும் நீர்வாழ் ஜந்துக்களின் ஹஸ்தி (Bones) களைக் கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தென் இந்தியாவில் அப்படியில்லை. இங்கு மண்ணின் கீழ் இருக்கும் பாராங்கற்கள் (Granite rock) ஆதிகால முதல் கற்பாறைகளாகவே இருந்திருக்க வேண்டுமென்று அந்த சாஸ்திரறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆகவே, இப்பூமண்டலத்தில் மனிதர்கள் மேற்சொன்னபடி பல இடங்களில் ஏககாலத்தில் உற்பத்தியாயிருந்தால், தென் இந்தியாவிலும், மனிதர்கள் ஆதிகாலத்திலேயே உண்டாயிருக்க வேண்டுமென்று எண்ண ஆதாரமுண்டு. இவ்வாறு நாம் எண்ணுவது,

சில வருடங்களுக்கு முன் வட இந்தியாவில் சர். ஜான் மார்ஷல் (Sir John Marshall) என்பவர். மொஹன்ஜதரொ (Mohenjo Daro) ஹாரப்பா (Harappa) என்னும் ஊர்களில் ஆழமாய்த் தோண்டி கண்டுபிடித்த கட்டிடங்களைப் பற்றி, எழுதியிருக்கும் விஷயங்களினால், மிகவும் ஊர்ஜிதமடைகிறது. அந்த சாஸ்திரஞர், அவ்வூர்களில் கண்டுபிடிக்கப்பட்ட செங்கற் கட்டிடங்கள் இன்றைக்கு சுமார் *5000* வருடங்களுக்கு முன் இருந்தனவென்று கூறி அவைகள் தென் இந்தியாவிலுள்ள திராவிட நாகரீகத்திற்கு மிகவும் ஒற்றுமை உள்ளனவாயிருக்கின்றனவென்று ரூபித்துள்ளார். ஆகவே திராவிட நாகரீகமானது ஆதிகாலம் தொடங்கி தென் இந்தியாவில் பரவியிருக்க வேண்டுமென்பது திண்ணமாம். திராவிட நாகரீகமானது மேற்கூறியபடி புராதனமாய் இங்கிருந்திருந்தால், திராவிட பாஷையும் அதனுடன் உற்பத்தியாய் இருக்கவேண்டும் என்று நினைத்தல் நியாயமெனத் தோன்றுகிறது.

தமிழில் மிகவும் பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் தமிழ் அகத்தை நான்கு பிரிவாக, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் எனப் பிரித்து, இந்நாற்பாங்கு நிலத்தில், ஒவ்வொன்றிலும் வாழும் மனிதர்களைப் பற்றியும், அவர்களுடைய தொழில்களைப் பற்றியும் நாகரீகத்தைப் பற்றியும் கூறியிருப்பது, திராவிடர்கள் தென் இந்தியாவில் தொன்று தொட்டு வசித்து வருகின்றனர் என்பதை ஒருவிதத்தில் மிகவும் ஊர்ஜிதப்படுத்துகிறதெனக் கூறலாம். ஆகவே, தமிழ் பாஷையானது உலகத்தில் மிகவும் புராதன பாஷைகளில் ஒன்று என்று நாம் எண்ணுவதில் தவறில்லை.

மேற்குறித்தபடி ஆதி மனிதர்கள் முதலில் வேட்டையாடி ஜீவித்தும், பிறகு ஆடுமாடுகளை மேய்த்து ஜீவித்தும், நீர் நிலைகளில் மீன் முதலியவற்றைப் பிடித்து ஜீவித்தும் பிறகு- நிலத்தை உழுது பயிரிட்டு ஜீவித்து, கடைசியில்- வீடு முதலியவைகளைக் கட்டிக் கொண்டு பட்டணங்களை உண்டாக்கி ஜீவிக்க ஆரம்பித்தனர், என்று நாம் ஒப்புக் கொள்வதானால், தமிழ் பாஷையானது மிகவும் புராதனமான பாஷைகளில் ஒன்று என்று ரூபிப்பதற்கு ஒரு ஹேது உண்டாகிறது. மேற்கண்ட ஒவ்வொரு பிரிவினையு மெடுத்துக்கொண்டு அப்பிரிவினர் பேசியிருக்கக்கூடிய ஆதி வார்த்தைகள், பழமையான தமிழ் மொழிகளாயிருக்கின்றனவா என்று ஆராய்வோம். இச்சந்தர்ப்பத்தில் பேசத் தொடங்கிய காலத்தில், அவர்கள் உபயோகித்த மொழிகள் ஓர் அசை இரண்டு அசை கூடிய சிறு மொழிகளாகவும், பெயர்ச் சொற்களாகவும் இருந்திருக்க வேண்டுமென்பது பாஷாதத்துவ சாஸ்திரிகளுடைய அபிப்பிராயம் என்பதை நாம் கவனிக்க வேண்டியதாம். இதன் பிரகாரம் வேட்டையாடி ஜீவித்த குறிஞ்சி நில மனிதர்கள் ஆதியில் வழங்கிய சொற்களைக் கவனிப்போம். இவை, காடு, மலை, யாறு, நாய், நரி, பூனை, எலி, மான், கரடி, யானை, பன்றி, கீரி, மயில், வில், அம்பு, ஈட்டி,

வலை, கை, கால், கண், மூக்கு, வாய், காது, தலைமயிர், பாம்பு, தேள், முயல், அகில், ஆமை, தேக்கு, வேல், தோல், தேன், பல், நாக்கு, விரல், வால் போன்ற பதங்களாகும். இவைகளெல்லாம் சுத்தத் தமிழ் பதங்களாயிருப்பத்தைக் காண்க.

ஆடு மாடுகள் மேய்ப்பதினால் ஜீவித்த முற்காலத்திய மனிதர்கள் உபயோகித்த பதங்களுக்கு உதாரணமாக ஆ, ஆடு, மாடு, கோழி, பசு, கன்று, கழுதை, இலை, தழை, புல், நீர், செடி, மரம், காய், கறி, பால், முள் முதலியவைகளைக் கூறலாம்.

சமுத்திரக் கரைகளிலும், நீர்நிலைகளிலும் மீன் முதலியவற்றைப் பிடித்து ஜீவித்த நெய்தல் நில மக்கள் உபயோகித்த பதங்களுக்கு உதாரணமாக, மீன், அலை, கடல், ஏரி, தூண்டி, உப்பு, தோணி, படகு, சுறா, தவளை, நுரை, ஆமை முதலியவைகளைக் கூறலாம்.

மருத நில மக்கள் உபயோகித்த பதங்களுக்கு உதாரணமாக, ஏர், எருது, எருமை, மேழி, வீடு, கூரை, மனை, மழை, இடி, மின்னல், மண், சேர், விரை, சோளம், வாழை, மா, பலா, ஊர், பாக்கம் முதலியவைகளைக் கூறலாம். இவைகளெல்லாம் சுத்த தமிழ் மொழிகளேயாம்.

அன்றியும் மேற்சொன்ன நாற்பாங்கு நிலத்தோடும் முதலில் உபயோகித்திருக்கக் கூடிய விகுதிகளுக்கு உதாரணமாக, கொல், தின், எய், அடி, கடி, பிடி, மேய், கறவெட்டு, அகழ், குடி, நட, வா, மடி, போ, உண், அறு முதலியவைகளைக் கூறலாம். இவைகள் தமிழ் மொழிகள் என்பதைக் கவனிக்க.

ஆதிகாலத்தில் மனிதர்கள் பேச ஆரம்பித்தபொழுது, ஓர் ஒலி அல்லது இரண்டு ஒலிச் சொற்களைத்தான் பெரும்பாலும் உபயோகித்திருக்க வேண்டுமென்று கூறினோம். இதை இன்னொருவிதத்தில் ஆராய்ந்து பார்ப்போம். குழந்தைகள் பேசத் தொடங்கும் பொழுது அவர்கள் எளிதில் உச்சரிக்கக்கூடிய எழுத்துக்கள், ம, ப, என்பவையாம். வாயை மூடித்திறந்தால் மா என்கிற ஒலி உண்டாகிறது; கொஞ்சம் கெட்டியாய் அழுத்தித் திறந்தால் பா, என்றும் சப்தம் உண்டாகிறது; இவ்வெழுத்துகளடங்கிய சொற்களே, பெரும்பானும் எல்லா பாஷைகளிலும் குழந்தைகள், முதலில் குறிக்கவேண்டிய, அவர்கள் பெற்றோரைக் குறிக்கும் சொற்களாக உபயோகப்படுகிறதைக் காண்க. பெரும்பாலும் எல்லா திராவிட பாஷைகளிலும் 'அம்மா', 'அப்பா' எனும் சொற்கள் தாய் தந்தையரைக் விளிக்கும் சொற்களாம். (ஆங்கிலத்திலும் பப்பா, மம்மா என்னும் சொற்களை ஒத்திட்டுப் பார்க்க). ஆயினும் திராவிட பாஷைகளில் ஒன்றாகிய துளுவ பாஷையில் அப்பா, என்றால் தாய் என்று அர்த்தமாம். அம்மா என்றால் தகப்பன் என்று அர்த்தமாம்; குழந்தைகள் பிறகு கற்க வேண்டிய நெருங்கிய பந்துக்களைக் குறிக்கும் சொற்களும்

இங்ஙனம் சிறு சொற்களாக இருப்பதைக் கவனிக்க. அண்ணா, ஆய்யா, தாதா, மாமா, மாமி போன்றனவாம்.

இனி, திராவிட பாஷையாகிய தமிழ் பாஷை மிகவும் புராதனமானது என்பதற்கு நமக்குள்ள ஆதாரங்களை ஆராய்வோம்.

தமிழில் தற்காலம் நமக்குக் கிடைத்திருக்கும் புஸ்தகங்களில் தொல்காப்பியம் என்பது மிகவும் பழமையான ஒரு நூலாம். 'தொல்காப்பியம் தொல் + காப்பியம். இச்சொற்றொடரில் தொல் என்பதற்கு பழமை என்று பொருளாம். முதல், இடைச்சங்கங்கள் என்று இரண்டு சங்கங்கள் இருந்தனவோ, இல்லையோ, தொல்காப்பியமானது கடைச்சங்க காலத்திற்கு முந்திய நூல் என்பதுற்கு ஐயமில்லை. கடைச்சங்கம் என்பதின் காலம் திருவள்ளுவர் காலமாம். ஆகவே தொல்காப்பியமானது சற்றேறக்குறைய தற்காலத்தில் வழங்கும் கிறிஸ்துவ ஆண்டிற்கு முற்பட்ட நூல் என்று நாம் ஊகிக்கலாம். அக்காலத்தில் வரையப்பட்ட இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தை ஆராயுமிடத்து இதற்குமுன் அநேகம் தமிழ் இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்று நாம் ஒருவாறு நிச்சயிக்கலாம். 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறல்' என்னும் நியாயம் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதேயாம். அன்றியும் ஒரு பாஷையில் புஸ்தகங்கள் இயற்றப்படும் ஸ்திதி வருமுன், அநேகம் ஆயிரம் ஆண்டுகளாக அப்பாஷை பேசப்பட்ட பாஷையா யிருந்திருக்க வேண்டுமென்பது எல்லா பாஷா தத்துவ சாஸ்திரிகளாலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆகவே தொல்காப்பியம் இயற்றப்படுவதற்கு முன், அநேக ஆயிரம் வருடங்களாக தமிழ் பாஷையானது தமிழகத்தில் பேசப்பட்டிருக்க வேண்டுமென்று நிச்சயமாய்க் கூறலாம்.

இனி சரித்திர மூலமாக, தமிழ் புராதன பாஷையென்பதற்கு ஏதாவது அத்தாட்சிகள் இருக்கின்றனவா என்று இனி யோசிப்போம். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே, தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் ஆண்டுவந்தனர் என்று பூர்வீக சரித்திர ஆராய்ச்சிசெய்த அறிஞர் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். தமிழில் இவர்களுக்கு மூவேந்தர் என்று பெயராம். சேர, சோழ, பாண்டியர்களுடைய பூர்வீக பாஷை தமிழ் என்பதற்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. சேரர்களுடைய முக்கியமான பட்டணம் வஞ்சி என்பதாம். சோழ அரசர்களுடைய புராதனமான முக்கியப் பட்டணம் உரையூர்; பாண்டியர்களுடைய முக்கியப் பட்டணம் ஆதியில் மதுரை என்று ஒன்றிருந்ததாகவும், அது கடல்கொள்ளப்பட்டபின், கவாடபுரம் என்பது ராஜதானியானதாகவும், அதுவும் அழிந்தபிறகு, தற்காலத்திய மதுரைப் பட்டணம் ராஜதானியானதாகவும் கூறப்பட்டிருக்கிறது. பாண்டியர்களுக்கு ஆதிகாலத்தில் தாம்ரபர்ணியின் கரையிலிருந்த கொற்கை என்னும் ராஜதானி ஒன்றுண்டு. அக்கொற்கையிலிருந்து தற்கால மதுராபுரிக்கு

தங்கள் ராஜதானியை கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமேயே மாற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்று டாக்டர் கால்ட்வெல் அபிப்பிராயப்படுகிறார். சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் தொன்று தொட்டுத் தமிழ் பாஷை வழங்கி வருகிறது வாஸ்தவம்தான். ஆயினும், சேர நாடாகிய தற்காலத்திய மலையாள தேசத்தில் மலையாள பாஷையன்றோ வழங்கப்படுகிறது என்று சிலர் கேட்கலாம். அவர்களுக்கு நாம் இரண்டு விதத்தில் பதில் உரைக்கலாம் முதலாவது, மலையாள பாஷை தமிழின் கிளை பாஷை யென்பதாம். இரண்டாவது, பழைய காலத்தில் இந்நாட்டில் வழங்கிய பாஷை தமிழே என்பதற்கு அந்நாட்டில் தற்காலம் கிடைக்கும் சாசனங்களும் கல்வெட்டுகளுமே போதுமான சாட்சியாம். கிபி. எட்டாம் நூற்றாண்டிலும் மலையாள தேசத்தில் கிடைக்கும் சாசனங்களும் கல்வெட்டுகளும் தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன; ஆகவே அக்காலத்தில் கூட அவ்விடங்களிலெல்லாம் சுத்தத் தமிழே பேசப்பட்டது என்பது திண்ணம்.

சரித்திர ஆராய்ச்சியினால் பாண்டிய அரசர்கள் கி.மு. *26*ஆம் ஆண்டிலும், *20*ஆம் ஆண்டிலும், தென் இந்தியாவிலிருந்து ஐரோப்பா கண்டத்திலுள்ள ரோம நகரத்தில் ஆண்ட அகஸ்டஸ் சிசர் (Augustus Caesar) என்பவருக்கு ராயபாரிகளை அனுப்பியதாக ரூபிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் 'மஹாவம்சோ' என்று சொல்லப்பட்ட சிங்கள தீபத்துச் சரித்திரத்தில் கி.மு. *205*ஆம் ஆண்டில் ஏலேலன் என்னும் சோழ அரசன், அத்தீபத்தின் மீது படையெடுத்து வந்து, அதன் அரசனைவென்று அனுராதபுரம் எனும் பழை பட்டணத்தில் அரசாண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்த அனுராதபுரத்தில் ஏலேலசிங்கனைப் புதைத்த இடம் இப்பொழுதும் பார்க்கலாம். வட இந்தியாவில் கி.மு. *773* முதல் கி.மு. *232* வரையில் அரசாண்ட அசோக மஹாராஜாவின் கல்வெட்டுகளில் சேர, சோழ, பாண்டியர்களுடைய தேசங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மேலும், எகிப்து தேசத்தில் ஆண்ட "சாலமோன்" என்னும் அரசன் காலத்தில் தென் இந்தியாவிலிருந்து 'தோகை' (மயில்) அவர்கள் கப்பலின் மூலமாக, வர்த்தகங்களால் மற்ற சரக்குகளுடன் கொண்டு போகப்பட்டதென்று கூறப்பட்டிருக்கிறது. சர்லமோன் அரசன் அரசாண்ட காலம் சுமார் கி.மு. *1000*ஆம்; ஆகவே, இன்றைக்கு *3000* வருடங்களுக்கு முன்பாம். எழுத்து மூலமாகத் தாம் கண்டறிந்தவற்றுள் மிகவும் புராதனமான "தோகை" எனும் இத் தமிழ்மொழிக்குத் தமிழர்கள் அனைவரும் நமது பாஷையின் தொன்மையை ஐயந்திரிபற விளக்குவதற்காக நன்றி பாராட்ட வேண்டும்.

இனி நமது தேசத்தில் புராதனமான சமஸ்கிருத புஸ்தகங்களில், தமிழ் பழமையான பாஷை என்பதற்கு ஏதாவது ஆதாரங்கள் கிடைக்கின்றனவா என்று பார்ப்போம். "உதயணன் காதை" என்பது ஒரு பழயநூல். இதன் மூலநூல் பிரஹத் கதா சமஸ்கிருத சொல். உதயணன் காதையில், உதயணன் ராஜதானியாகிய ராஜகிரஹம் "தமிழ்ச் சேரி" எனும் ஓர் இடம் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. "தலைப்பெரும் சேனைத்

தமிழ்ச் சேரியும்" என்பதைக் காண்க. இந்த ராஜக்கிரகமானது உதயணன் ஆண்ட தேசத்திற்கு கி.மு. 700 ஆம் ஆண்டில் தலைநகராயிருந்தது. பாகவத புராணம் எனும் சம்ஸ்கிருத நூலில் சத்யவாகன் எனும் அரசன் திராவிடர்களுடைய அரசன் என்று கூறப்பட்டிருக்கிறது. புராதன இதிஹாசமாகிய சம்ஸ்கிருத மஹாபாரதத்தில் சேர, சோழ, பாண்டிய தேசங்களைப் பற்றி கூறியிருக்கிறது. பாரதத்தில் அர்ச்சுனன் திக்விஜயம் செய்த காலத்தில் பாண்டிய அரசியாகிய சித்ராங்கதையை மணந்ததாகச் சொல்லி யிருக்கிறது. அன்றியும் அத்தேசத்தின் பிரதான பட்டணம் மணலூர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மணல் + உர் = மணலூராம். மணல் என்பதும் ஊர் என்பதும் சுத்தத் தமிழ் மொழிகளாம். ஆகவே, மஹாபாரத யுத்தக் காலத்தில் தென் இந்தியாவில் தமிழ் பாஷையானது பரவியிருந்ததென்பதற்கு இது ஒரு முக்கிய ஆதாரமாம். எனவே, 'தோகை' என்பதைப் போல் "மணலூர்" எனும் பதமும் தமிழ் அபிமானிகளுக்கு நடுபெரும் ஊன்றுகோலாம். மஹாபாரத யுத்தமானது சுமார் கி.மு. 1500 வருடத்தில் நடந்ததாக எண்ணப்படுகிறது. தமிழ்ச் சங்க நூல்களில் "உதியஞ் சேரல்'' எனும் சேர அரசன் பாண்டவர்களுடைய சைனியத்திற்கு உணவிட்டதாகக் கூறப்பட்டிருப்பதை இங்கு நாம் கவனிக்க வேண்டும். ஆகவே, இன்றைக்கு 3500 வருடங்களுக்கு முன்பே தமிழ் பாஷை வழக்கத்திலிருந்ததாகவும் ரூபித்தபடியாகும். மஹாபாரதத்தினும் புராதன சமஸ்கிருத கிரந்தமாகிய வால்மீகி ராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் 10 ஆவது சர்க்கத்தில் திராவிடம் எனும் தேசம் கூறப்பட்டிருக்கிறது. அன்றியும் கிஷ்கிந்தா காண்டத்தில் 41வது சர்க்கத்தில் தெற்கே சோழ பாண்டிய, கேரள தேசங்களிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாண்டியர்களுடைய பழைய ராஜதானியாகிய கவாடபுரமும் குறிக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கருதுங்கால் சர்ஜான் மார்ஷல் என்பவர் இன்றைக்கு 5000 வருடங்களுக்கு முன் திராவிடர்கள் எனும் ஜாதியார் சிறந்த நாகரீகத்துடன் வாழ்ந்தவர் என்று கூறியது மிகையன்று என்று நாம் கூறலாம். அத்திராவிடர்களுடைய பாஷை தமிழ் பாஷையென்பது இனி நாம் கூறமலே விளக்கமாம்.

தமிழ் பாஷையானது மிகவும் புராதனமான பாஷைகளில் ஒன்று என்பதற்கு, மேற்கூறிய ஆதாரங்களன்றி, இவ்விஷயங்களில் நிஷ்பட்சபாதமாய் ஆராய்ந்தறியத்தக்க மேல்நாட்டு அறிஞர்களுடைய அபிப்பிராயமும் நமக்குக் கிடைத்திருக்கிறது. டாக்டர் கால்ட்வெல் தமிழ் பாஷையானது ஆரிய பாஷையைப் பார்க்கிலும் பழமையான பாஷையாயிருக்கலாம் எனக் கூறியுள்ளார். தமிழ் மொழி மிகவும் புராதனமானது என்பதற்க 6 நியாயங்கள் எடுத்து விவரித்திருக்கிறார்; அன்றியும் தமிழானது திராவிட பாஷைகளுக்குள் எல்லாம் மிகவும் பழமையானது என்றும் கூறியுள்ளார். எட்வர்ட். பி. ரைஸ் (Edward Prise) என்பவர் திராவிடர்கள், தற்காலம் அவர்கள் இருக்கும் இடத்திலேயே. ஆதிகால முதல் இருந்திருக்கிறதாகக் காண்கிறது என்று சொல்லியுளார்.

திராவிட பாஷைகளுக்குள் தாய் பாஷையாயிருந்தது தமிழ் என்று காலஞ்சென்ற "மனோன்மணியம்" நூலாசிரியராகிய சுந்தரம் பிள்ளை அவர்களைப் போன்ற தமிழ் வித்வான்கள் கூறியதன்றி, பாஷா தத்துவ சாஸ்திரம் பயின்ற, பல ஆங்கில வித்வான்களும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். கால்ட்வெல் துரை, மங்கோலிய பாஷைக்கும் திராவிட பாஷைகளுக்கும் மிகவும் பொருத்தம் இருப்பதாகக் கூறியுளார். அன்றியும் "ஆஸ்திரேலியா தீவின் மேற்குப் பாகத்திலும் தெற்குப் பாகத்திலும் உள்ள சுதேச ஜாதியார் பேசும் பாஷையில், நாள், தீ, அவள், நாம் முதலிய பதங்கள் அநேகமாய் சென்னை ராஜதானியில் மீன் பிடிக்கும் ஜாதியார் உபயோகிக்கும் தமிழ் பதங்களேயாம். ஆகவே, பழயதான தமிழ்மொழி ஆஸ்திரேலியா வரையில் பரவியிருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன், இப்பொழுது சமுத்திரமாயிருக்கும் பாகமெல்லாம் பூமியாயிருந்து. தென் இந்தியாவுடன் ஆஸ்திரேலியா கலந்திருந்ததாக பூதத்வ சாஸ்திரிகள் எண்ணுவது கவனிக்கத்தக்கது.

இனி, தாய் பாஷையாகிய தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம் மலையாளம் முதலிய பாஷைகள் கிளைகளாகப் பிரிந்ததைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். பாஷா தத்துவ சாஸ்திரத்தை பட்சபாதமில்லாமல் ஆராயும் அறிஞர், மேற்குறித்த திராவிடர்களுடைய ஆதிபாஷை தமிழ் என்றும், அதனினின்றும், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய பாஷைகள் அநேக நூற்றாண்டு முன்பாகப் பிரிந்தன என்றும் தற்காலம் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

சாதாரணமாக பாஷைகள் பேசப்பட்ட பாஷைகளாக மாத்திரம் இருக்கும் பொழுதுதான், அவைகள் அதிகமாக மாறுதல் அடைகின்றன வென்றும் எழுதப்பட்ட பாஷைகளான பிறகு அவ்வளவாக மாறுவதில்லை என்றும் பாஷா தத்துவ சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். இதன்படி தெலுங்கும், கன்னடமும் தமிழானது எழுதப்பட்ட பாஷையாதவற்கு முன்னரே பிரிந்திருக்க வேண்டுமென்று எண்ணுவதற்கு இடங்களிருக்கிறது. மலையாள பாஷையானது சில நூற்றாண்டுகளுக்கு முன்புதான் பிரிந்திருக்க வேண்டுமென்பதற்கு ஐயமில்லை.

தற்காலம், நாம் கேவலம் தெலுங்கு பதங்கள் என்று நினைக்கும் படியான அநேக வார்த்தைகள் ஆராய்ந்து பார்க்கும்போது பழயத் தமிழ் பதங்களாமெனக் கண்டறிவோம். "அங்கடி" எனும் பதம் தெலுங்கே என்று நாம் எண்ணக்கூடும். அங்கடி என்பதற்கு கடை என்று அர்த்தமாகும்; ஆயினும் சுமார் *1800* வருடங்களுக்குமுன் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் எனும் நூலை ஆராய்ந்து பார்ப்போமாயின் அதில் 'அங்காடி' என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அதே அர்த்தத்தில் அன்றியும் நாள் 'அங்காடி' பகற்கடை இரவங்காடி (இராக்கடை) யென்றும்

சொற்றொடர்களும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாகவே சுத்த தெலுங்கு பதங்கள் என்று நாம் எண்ணக்கூடிய சில பதங்கள், பூர்வீக தமிழ் மொழிகளின் மருவே, என்று ரூபிக்க அவற்றுள் சிலவற்றை அடியிற் குறிப்போம்.

| **தெலுங்கு பதம்** | **அர்த்தம்** | **பூர்வீகத் தமிழ் பதம்** |
|---|---|---|
| அட்டமு | குறுக்கு | அட்டம் |
| தமாலபாகு | வெற்றிலை | தமாலம் |
| அத்தமு | கண்ணாடி | அத்தம் |
| குக்கா | நாய் | குக்கன் |
| கோதி | குரங்கு | கோந்தி |
| வ்ராயி | எழுது | வரை |
| பென்டு | பெண் | பெண்டு |
| முகிசினதி | முடிந்தது | முகிந்தது |
| அவ்வா | பாட்டி | ஒளவை |
| தல்லி | தாயார் | தல்லி |

இச்சந்தர்ப்பத்தில் "அக்கடா", தாரி என்றும் சாதாரணமாகத் தெலுங்கு பதங்கள் என்று எண்ணப்படுபவைகளைக் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் அவரது ராமாயணத்தில் தமிழ் பதங்களாக உபயோகித்திருப்பது கவனிக்கத்தக்கது. நாம் சற்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்போமாயின் ஏறக்குறைய எல்லா தெலுங்கு பதங்களும், புராதனமான தமிழ் பதங்களின் மருவேயாம் என்று புலப்படும்.

மேற்சொன்னப்படியே கன்னடமும் தமிழிலிருந்து பிரிந்தது என்பதை ரூபிக்கலாம்; இதற்குச் சில உதாரணங்கள் அடியிற் குறிப்போம்:-

| **கன்னடம்** | **அர்த்தம்** | **பழய தமிழ் மொழி** |
|---|---|---|
| மாது | வார்த்தை | மாற்றம் |
| தந்தெ | தகப்பன் | தந்தை |
| மனெ | வீடு | மனை |
| கள்ள | திருடன் | கள்ளன் |
| துப்பா | நெய் | துப்பு |
| உகரு | நகம் | உகிர் |
| ஒலெ | அடுப்பு | உலை |
| திங்களு | மாசம் | திங்கள் (சந்திரமான மாசம்) |
| சிக்கது | அகப்பட்டது | சிக்கியது |
| கண்டு | ஆண்டு | கண்டு (கண்ட பூனை) |
| ஹாலு | பால் | பால் |

(தமிழ் பா பெரும்பாலும் கன்னடத்தில் ஹாவாகிறது)

மேற்சொன்னபடியே மலையாள பாஷையிலும் சில உதாரணங்களைக் குறிப்போம்:-

| மலையாளம் | அர்த்தம் | பூர்வீகத் தமிழ் |
|---|---|---|
| பறை | சொல் | பறை |
| ஊண் | சாப்பாடு | உணவு |
| ஞான் | நான் | யான், ஞான் |
| வள்ளம் | நீர் | வெள்ளம் |
| அச்சன் | கம்பன் | அச்சன் |
| நோக்கு | பார் | நோக்கு |

மலையாளமானது முக்கியமாக வினைச்சொற்களின் முடிவுகளை நீக்கிவிட்டது; அன்றியும் அநேகம் சம்ஸ்கிருத மொழிகளைத் தன்னுட் சேர்த்துக்கொண்டது. இங்கு, திருவாங்கூர் ராஜ்யத்தில் ஓர் மலையாள ஜாதியர் பேசும் தமிழும் மலையாளமும் கலந்த பாஷைக்கு மலைபாஷை என்றும் பெயர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தெலுங்கு முதலிய பாஷைகளிலிருந்து தமிழ் பதங்கள் உண்டாயிருக்கலாகாதா என்ற கேள்வி பிறக்கக் கூடும்; அப்படி எண்ணுவதற்கில்லை என்பதற்குச் சில உதாரணங்களைக் கருதுவோம். வெண்ணெ என்பது தமிழ் பதம், தெலுங்கில் இதற்கு வென்ன என்று பெயர்; வெண்ணெய் என்பதற்கு வெள் + நெய், என்று பிரித்து அர்த்தம் கூறலாம். வென்ன என்பதற்கு அவ்வாறு அர்த்தம் கூற முடியாது; இங்ஙனமே, தேங்காய் என்பது தெங்கின்காய் என்பதாம் (சிலர் இது தென் + காய் = தேங்காய் என்றாயது என்று கூறுவாருமுளர்) இதற்கு தெலுங்கு பதமாகிய டெங்காய் என்றும் பதத்தை அவ்வாறு பிரித்து அர்த்தம் செய்ய முடியாது.

மற்ற உதாரணங்கள்:- சோம்பேறி, தமிழ் - சோமாரி தெலுங்கு; சிற்றொலி - சிட்டெலுகா; இங்ஙனமே ஊறுகாய் எனும் தமிழ் பதத்தையும் ஊறுகாய எனும் தெலுங்க பதத்தையும் உணருங்கள்.

இந்தத் தமிழ் மொழி பேசுபவர்கள் *1921* ஜனத்தொகைக் கணக்கின்படி *25* மிலியனாம். தற்காலம் தமிழ்மொழி வழங்கும் ஜில்லாக்கள் சென்னை ராஜதானியில் செங்கல்பட்டு, தஞ்சாவூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, ராமநாதபுரம், திருநெல்வேலி, தென் ஆற்காடு, கோயமுத்தூர், சேலம். சித்தூர், நெல்லூர் ஜில்லாக்களின் சில பாகம்; அன்றியும் இலங்கைத் தீவில் யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்கள். மேலும் ரங்கூன், பினாங்கு, சிங்கப்பூர், மோரிசு (Mauritius) முதலிய இடங்களிலும் வழங்குகின்றது. அன்றியும் பெங்களூர், பல்லாரி, சிகந்தராபாத் முதலிய ராணுவங்கள் தங்குமிடங்களிலும் கொஞ்சம் வழங்கப்படுகிறது.

நமது தமிழ் பாஷையில் 58500 மொழிகள் இருப்பதாக ஒருவாறு கணக்கிடப்பட்டிருக்கிறது. இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் மனிதர்களால் சாதாரணமாகப் பேசப்பட்டு வரும் பாஷைகள் எந்நேரமும் மாறிக்கொண்டேயிருக்கும். தமிழ் மொழியிலும் இந்நியாயப்படி, புராதனமான சில மொழிகள் வழக்கற்று மடிந்து போயிருக்க வேண்டும், நூதனமான பல மொழிகள் பிறந்திருக்கவேண்டும் என்பதற்குச் சந்தேகமில்லை. இது ஒரு பாஷையின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாம்.

## செந்தமிழும் - கொடுந் தமிழ்

மேற்சொன்னபடி, ஆதிகாலத்திலேயே தமிழ் மொழியானது மாறுதலையடையத் தொடங்கிற்று என்பதற்கு பூர்வத்திய தமிழ் செந்தமிழ் நாடு, கொடுந் தமிழ்நாடு என்று பிரிக்கப்பட்டதே அத்தாட்சியாம். செந்தமிழ் நாடு என்பதற்கு, சுத்தமான கலப்படமில்லாத தமிழ் மொழிகள் பேசப்பட்ட தேசம் என்று பொருளாம்; கொடுந்தமிழ் நாடு என்பதற்கு தமிழ் மொழிகள் கொஞ்சம் மாறுபாடு உடையனவாய்ப் பேசப்படும் நாடு என்று பொருள் கொள்ளலாம். முற்காலத்தில் செந்தமிழ் நாட்டின் எல்லை "வைகையாற்றின் வடக்கு, மருதையாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு" என்று கூறப்பட்டிருக்கிறது. கொடுந்தமிழ் நாடென முற்காலத்தில் கூறப்பட்டவை:- தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேணாடு பூழி, பன்றி, அருவா, அருவாவதலை, சீதம், மலாரு, புனநாடு எனப் **பன்னிரண்டாம்**. அன்றியும் சிலர் செந்தமிழ் நாடென்பது பாண்டி நாடென்றும், மற்றும் சிலர் சோழ நாடென்றும் கூறியுள்ளார். அவர்கள் அவ்வாறு கூறியதற்கு தத்தம் நாட்டின் மீது அவர்களுக்கிருந்த அபிமானம் தான் காரணம் என்று ஊகிக்கலாம். மொத்தத்தில் ஆராயுமிடத்து செந்தமிழ் என்பது கற்றவர்களால் வழங்கப்பட்ட சுத்தத் தமிழ் என்றும், கொடுந்தமிழ் என்பது மற்றோரால் வழங்கப்பட்ட சிதைந்த தமிழ் என்றும் எண்ணலாம்.

## முத்தமிழ்

பூர்வக் காலத்தில் தமிழானது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூவ்வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன்படி தமிழ் மொழிகளையும், இயற்றமிழ் மொழி, இசைத் தமிழ்மொழி, நாடகத் தமிழ்மொழி என மூன்று வகையாகக் கருதலாம்.

*(1)* **இயற்றமிழ் மொழி** என்பது சாதாரணமாக நாம் செய்யுட்களிலும் வசன நடையிலும் உபயோகிக்கும் சொற்களாம்; அவைகளுக்கு உதாரணங்கள் கொடுப்பது மிகையாம்.

*(2)* **இசைத் தமிழ்மொழிகள்** தமிழர்களுடைய 'சங்கீதத்தைச் சார்ந்த மொழிகளாம், இதற்கு உதாரணமாக குறிஞ்சி, தக்கை, கொல்லி, கௌவாணம், முதலிய பண்களின் பெயர்களையும், குரல், துத்தம்,

கைகிளை, உழை முதலிய ஸ்வரங்களின் பெயர்களையும், யாழ், தண்ணுமை, குழல், துடி முதலிய வாத்தியங்களின் பெயர்களையும் கூறலாம்.

*(3)* **நாடகத்தமிழ் மொழிகள்** தமிழ் நாடகப் பகுதியின்கண் உபயோகிக்கப்பட்ட மொழிகளாம்; இதற்கு உதாரணமாக அல்லியம், கொடுகொட்டு, தோற்பாவை, குரவை முதலிய கூத்துக்களின் பெயர்களையும், பிண்டி, பிணையல் எழிற்கை, தொழிற்கை, முதலிய அபிநயத்திற்குரிய மொழிகளையும், எழுதி, சோடிணை வேழம்பர், ஒட்டவனை, முதலிய சொற்களையும் கூறலாம்.

## இலக்கணப் பிரிவு

பூர்வ இலக்கண ஆசிரியர்கள் தமிழ்ச் சொற்களை **இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்** என்று நான்கு வகையாகப் பிரிந்திருக்கின்றனர்.

*(1)* **இயற்சொல்** என்பது செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொல்லாம். இதற்கு இலக்கணம் "இயற் சொற்றாமே. செந்தமிழ் நிலத்து, வழக்கொடு சிவனித் தம் பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே'' என்று தொல்காப்பியம் கூறுகிறது. இதன்பொருள் "செந்தமிழ் நிலத்தின் கண்ணே, வழங்குதலொடு பொருந்தி, அச்செந்தமிழ் நிலத்தும், கொடுந் தமிழ் நிலத்தும், கேட்போர்க்குத் தத்தம் பொருள் வழுவாமல் ஒலிக்கும் சொல்லாம்" என்றவாறு. உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர் இதற்கு "திரிபின்றி இயல்பாகிய சொல்லாவன, நிலம், நீர், வளி, சோறு, கூழ், பால், மக்கள், மரம், தெங்கு, கழுகு என்றும் தொடக்கத்தன" என்று உரை எழுதியுள்ளார்.

*(2)* **திரிசொல்** என்பது செய்யுளில் மட்டும் வழங்குதற்குரிய சொற்களாம். இயற்றமிழ் சொற்கள் செய்யுளில் உபயோகப்படும் பொழுது, எதுகைக்காகவோ, மோனைக்காவோ, சீர் முதலியவற்றின் இலக்கணங்களுக்காகவோ, சற்று மாற்றப்பட்ட சொற்களாம்.

"ஒரு பொருள்குறித்த வேறு சொல்லாகியும்
வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகியும்
இருபாற்றொன்ப திரி சொற்கிளவி"

என்பது சூத்திரம். இதன் பொருள். "அவ்வியற் சொல் திரிந்த திரி சொல்லாகிய சொல்லை ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொல்லாயும், பல பொருளைக் குறித்துவரும் ஒரு சொல்லாயும், இரு வகைப்படும்" என்பதாம். திரி **சொல்** என்பது திரிந்து வரும் சொல். மேற்சொன்ன இயற்சொல்லில் திரிக்கும்பொழுது, அதன் எழுத்து சிறிது **நிரம்** மாறுவனவும், அந்த இயற்சொற்களையே பிற சொற்களால் முழுவதுவும் மாற்றுவது **மான** இருவகையாம்,'' இதற்கு அடியிற்கண்ட உதாரணங்களை நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்:-

| இயற்சொல் | சிறிது திரிந்தது | முழுவதும் திரிந்தது |
|---|---|---|
| கிளி | கிள்ளை | தத்தை |
| மயில் | மஞ்ஞை | பிணிமுகம் |
| மலை | | வெற்பு |

இவை ஒரு பொருள் குறித்த வேறு சொல்.

உந்தி யாழ்ப்பந்தல்

அனகு கோழி
கூகை } இம்மூன்றும் சாதியின் பெண்பாற்படும் பெயர்.
மயில்

மேற்சொன்னவை பெயர்த் திரிசொல் உதாரணங்கள்.

கேட்ஹீமாயின், செப்பீமன், ஈங்குவந்தித்தாய், புகழ்ந்திடுமல்லரோ, என்மனார், என்றிகினோரே, பொலாங்குரைத்து, இவை சிறிது திரிந்த வினைத்திரி சொற்கள். இவை போன்றவை செய்யுட்களுக்காக புலவர் திரித்துக்கொண்ட சொற்களாம்" என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார். கோடி (கொடி) இந்திர நாலம் (இந்திர காலம்) சுப்பிரமண்ணியன் (சுப்பிரமண்யன்) என்பவற்றைக் கூறலாம்.

*(3)* **திசைச்சொல்** என்பது வேறு நாடுகளிலிருந்து வந்து தமிழில் வழங்கப்படும் சொற்களாம். இதற்கு அடியார்க்கு நல்லார் கொடுத்திருக்கும் உதாரணம் "குடாவடியுளியம்" (கரடிக்குட்டி). இதற்கு இலக்கண சூத்திரம்.

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற்கிளவி" – என்பதாம்.

இதன் பொருள் திசைச்சொல்லாகிய சொல், செந்தமிழ் நாட்டைச் சார்ந்த பன்னிரண்டு நிலத்தும், தாம் குறித்த பொருளையே விளக்கும் தன்மையுடையன என்பதாம். மேற்குறித்த பன்னிரு நிலம்:- பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பள்ளிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலையநாடு, அருவா நாடு, அருவா வடதலை. இப்பன்னிரண்டையும் சூழ்ந்த பன்னிரண்டு நாடுகள்:- சிங்களம், பழந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளுவம், குடகம், கருநடம், கூடம், வகுடு, தெலுங்க, கலிங்கம்.

நச்சினார்க்கினியர் திசைச்சொல்லுக்குக் கூறிய உதாரணங்கள்:-

ஆ, எருமை, என்பதை தென்பாண்டி நாட்டார் பெற்றம் என்கின்றனர்.

| | | |
|---|---|---|
| தாய் | குட்டநாட்டார் | தள்ள |
| நாய் | குட்டநாட்டார் | ஞெள்ள |

| | | |
|---|---|---|
| தந்தை | குடநாட்டார் | அச்சன் |
| வஞ்சர் | கற்காநாட்டார் | கையர் |
| ஏடா | சீதநாட்டார் | ஏறுவன் |
| தோழி | சீதநாட்டார் | இருளை |
| தம்மாமி | சீதநாட்டார் | தந்துவை |
| தாய் | பூழிநாட்டார் | ஏமலி |
| சிறுகுளம் | பூழிநாட்டார் | பாழி |
| செய் | அருவாநாட்டார் | சேறு |
| சிறுகுளம் | சிங்களம் | கேணி |
| குறுணி | அருவாவடநாட்டார் | குட்டை |
| ஐயோ | சிங்களம் | அந்தோ |
| சொல் | வடுகு | செப்பு |
| மாமரம் | துளுவம் | கொக்கு |

*(4)* **வடசொல்** என்பது வடக்கு பாஷையாகிய சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ் பாஷைக்கு வந்த சொல்லாம். இதற்குத் தொல்காப்பியச் சூத்திரம்:

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே" என்பதாம்.

இதன்பொருள். "வடசொல்லாகிய சொல். உரப்பியும், எழும்துங் களத்தும், கூறும் வடவெழுத்துக்களின் நீங்கி இருசார்மொழிக்கும் பொதுவாகிய எழுத்தாற் இயன்ற சொல்லாம்" என்றவாறு. இதற்கு உதாரணமாக, நச்சினார்க்கினியர் இருவகைச் சொற்களைக் கூறியுள்ளார்:-

சான்றோர் **செய்யுட்கண் வருவன:-** வாரி, மேடு, குங்குமம், மணி, மானம், மீன்ம், லீகம், வேணு, காரணம், காரியம், நிமித்தம், காரகம்.

மற்றவர் **செய்யுட்கண் வருவன:-** மலம், அமலம், மூலம், கோயம், ஞானம், ஞேயம், தாமலம், புராமதிலகம், நாமம், யானம், உள்பலம்.

வடசொற்கள் பிற்காலத்து இலக்கண நூலாசிரியர்களால் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவ்விருவகையான **தற்சமம், தற்பவம்** என்பவையாம். தற்சமம் என்றால் அதற்குச் சமானமானது என்று பொருள்படும். இதற்கு உதாரணமாக, காரணம், உபமானம், உத்தரம், கமலம் முதலியவற்றைக் கூறலாம். மேற்சொன்ன மொழிகளெல்லாம் சம்ஸ்கிருத்திலிருக்கும் உச்சரிப்புடனேயே ஏறக்குறைய தமிழிலும் அப்படியே வழங்கப்படுகின்றன. தற்பவம், தமிழில் திரிந்து வரும் வட சொல்லைக் குறிப்பதாம். தற்பவம் என்றால் அதனின்றும் உண்டானது என்று பொருள். தேயு (தேஜஸ்) விண்ணப்பம் (விஞ்ஞாபனம்) தேதி (திதி) முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். வடமொழியிலிருந்து, மேற்சொன்னபடி

தமிழில் வந்திருக்கும் சொற்கள் ஆயிரக்கணக்காயுள்ளன. இவைகளைப் பற்றி பிறகு நாம் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டி வரும். இங்கு தமிழுக்குரிய *18* மெய்யெழுத்துகளன்றி, சிறந்த எழுத்துகளாகிய, ஜ, ஷ, ஸ ஹ, க்ஷ முதலியவைகளுடன் கூடிய பதங்கள் சாதாரணமாக சம்ஸ்கிருதத்திலிருந்து வந்த பதங்களாகும், என்பது கவனிக்கத் தக்கது, உதாரணங்கள்.

| ஜ | ஷ | ஸ | ஹ | க்ஷ |
|---|---|---|---|---|
| லஜ்ஜை | புஷ்பம் | பிரஹஸனம் | பரிஹாசம் | பக்ஷம் |
| ஜோதி | அதிர்ஷ்டம் | அகஸ்மாத்தாய் | அசஹ்யம் | க்ஷேமம் |
| பியோஜனம் | காஷ்டம் | பாயஸம் | ஹஸ்தி | லக்ஷம் |
| ஜரை | பாஷ்யம் | ஸ்காந்தம் | பரிஹாரம் | அக்ஷரம் |
| ஜீவனம் | நஷ்டம் | பிரஸவம் | ஹீனம் | லக்ஷியம் |

## இடுகுறிப்பெயர் - காரணப்பெயர்

அன்றியும் தமிழ்ப் பெயர்ச்சொற்கள், இடுகுறிப் பெயர்ச்சொற்கள் காரணப் பெயர்ச்சொற்கள் என்று இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரிவானது எல்லா பாஷைகளிலும் உண்டு. இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இன்ன காரணத்தினால் இன்ன பொருளுக்கு இப்பெயர் வைக்கப்பட்டதென்று நமக்குத் தெரியுமாயின் அது காரணப் பெயராகும்; அக்காரணம் தெரியாத பெயர்களுக்கு எல்லாம் இடுகுறிப் பெயர்களாக மதிக்கப்படுகின்றன; ஆதியில் மனிதன் பேசத் தொடங்கிய காலத்தில் அவன் ஒவ்வொரு வஸ்துவிற்கும் பெயர் வைத்ததற்கு ஏதாவது காரணம் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. தொல்காப்பியர் தமிழ் மொழிகளைப்பற்றி இங்ஙனமே அபிப்பிராயப்படுகிறார். அக்காரணத்தை நாம் மறந்து போன பிறகு அப்பெயர்களுக்கு எல்லாம் இடுகுறிப் பெயர்களாக நம்மால் தற்காலம் மதிக்கப்படுகின்றன. காரணத்தைக் கண்டுபிடிப்போமாயின் அவைகளைக் காரணப்பெயர் பகுதியில் சேர்க்க வேண்டியவர்களாகிறோம். ஆதி காலத்து மனிதன், தேள், பூனை, எலி என்று அப்பிராணிகளுக்கு ஏன் அப்பெயர் வைத்தார் என்று நாம் அறியோம். ஆகவே அம்மொழிகள் இடுகுறிகளாக மதிக்கிறோம். தேள் என்பதற்கு தீள் என்று வைத்திருக்கலாகாது? பூனை என்பதற்கு மூஹ என்று ஏன் வைக்கவில்லை? எலி என்பதை அவன் இலி என்று ஏன் அதைத்திருக்கலாகாது? என்று கேட்டால், அதற்கு நம்மால் பதில் சொல்ல தற்காலம் முடியவில்லை. இந்த ஜந்துக்களுக்கெல்லாம் ஏதாவது பெயர் வைக்க வேண்டி இப்பெயர்களை இட்டிருக்க வேண்டும். ஆதிகாலத்தில் என்றுதான் கூறக்கூடும். அப்படிப்பட்ட

பெயர்கள் காரணப்பெயர்களாக மதிக்கிறோம், காக்கைக்கு அப்பெயர் வைத்ததற்கு கா கா என்று அது கூவுகிற சப்தத்திலிருந்து ஒலிப்பெயராக வந்திருக்க வேண்டும். இங்ஙனமே **குயில்** என்கிற பெயரும், அப்பட்சி செய்யும் கூ என்ற சப்தத்தி இன்றும் வந்திருக்க வேண்டுமென்று டாக்டர் கால்ட்வெல் கூறுகிறார். இந்த நியாயத்தை நாம் ஒப்புக்கொண்டால் குயில் எனும் பதம் காரணப் பெயராகும், ஒப்புக்கொள்ளாவிட்டால் இடுகுறிப் பெயராகும். எருமை எருது என்னும் பதங்கள், ஏர் என்னும் பதத்திலிருந்து வந்தன. அதாவது ஏரில் கட்டியிழுக்க உபயோகமாகும் ஜந்துக்கள், என்று கால்ட்வெல் துரை கூறியுள்ளார். இது உண்மையாயின் இவ்விரண்டு பெயர்களும் காரணப் பெயர்களாகும். கோநாய் என்பது நாய் என்கிற பதத்திலிருந்து வந்திருக்கலாம். கோ+நாய் அதாவது நாய் வர்க்கத்தில் அதிக பலமுள்ளது. சிறந்தது, அரசனைப் போன்றது என்று பொருள் படலாம்; அப்படியாயின் இது காரணப் பெயராம். வெற்றிலை என்பது வெறும்+இலை, எனவும் கற்கண்டு என்பது கல்+கண்டு எனவும், வந்த காரணப் பெயர்கள் என்று எல்லோரும் அறிவார்கள். இப்படியே ஒவ்வொரு பொருளின் பெயரையும் எடுத்துக் கொண்டு, அது இடுகுறிப் பெயரா, காரணப் பெயரா என்று ஆராயலாம். இவ்வாறு செய்வது மிகவும் பயனைத் தரும் என்பதற்கு ஐயமின்று. இச்சந்தர்ப்பத்தில் ஒரு தமிழ் அறிஞர் ஆதியில் அசைச்சொற்களுக்கும் அர்த்தமிருந்தன. அவைகளை பிறகு நாம் மறந்துவிட்டோம் என்று கூறினாராம்.

மேலும் ஒரு பொருளுக்கு இடுகுறிப் பெயரும் இருக்கலாம் காரணப் பெயரும் இருக்கலாம். **மான்** என்கிற பதத்தை எடுத்துக் கொள்வோம். ஆதித் தமிழ் மனிதன் மர்ன் என்கிற ஜந்துவிற்கு, ஏன் அப்பெயர் வைத்தான் என்று நாம் அறிகிலோம். ஆகவே அப்பதத்தை இடுகுறியாக மதிக்கிறோம்; ஆயினும் அதே சந்துவிற்கு புல்வாய் என்கிற பெயரும் தமிழில் உண்டு. இது காரணப் பெயராகும். புல்+வாய் = புல்வாய்; எந்நேரமும் புல்லை மேய்ந்து கொண்டிருக்கும் (மென்றுகொண்டிருக்கும்) வாயையுடைய பிராணி என்பது இப்பதத்திற்கும் பொருளாம், ஆகவே இது காரணப் பெயராயது. இப்படியே புலி என்பதற்கு தெற்கே கடுவாய் என்கிற பெயர் உண்டு. புலி இடுகுறிப் பெயராம், கடு+வாய்= கடுவாய், கடுமையான வாயையுடையது காரணப்பெயராம். இத்தகைய உதாரணங்கள் பல உள அவைகளைக் கூறப்புகின் பெருகும் இதனுடன் விடுத்தோம். பொதுவில் தமிழ் நாட்டில் ஆதிகாலத்தில் கிடைத்துள்ள பொருள்களுக்கெல்லாம் இடுகுறிப் பெயர்களுண்டென்று ஒருவாறு கூறலாம். அன்றியும் அயல்நாட்டிலிருந்து வந்த பொருள்களுக்கெல்லாம் அவைகள் கிடைக்கும் தேசங்களில் அவைகளுக்கு வழங்கி வந்த பெயர்களையோ, அல்லது காரணப்பெயர்களையோ வைத்தனர் என்று மொத்தத்தில் கூறலாம்; இதைப்பற்றிக் கருதுமிடத்து, பூ, காய் கறி மர வர்க்கங்களை எடுத்துக் கொண்டு ஆராய்வோம்.

மா, பலா, வாழை முற்காலத்தில் தமிழ் அகத்தில் வளர்ந்தோங்கின செடிகளாம்; ஆகவே, அவற்றின் பூ, பிஞ்சு, காய், கனி முதலியன தமிழ் சொற்களால் குறிக்கப்பட்டன. பூர்வத்தில் தமிழில் முப்பழம் என்றது, மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழமாம். இவைகள் இடுகுறிப் பெயர்களாம். தமிழ் நாட்டிலேயே பூர்வத்தில் உற்பத்தியான அவரை, வண்டை, கத்திரி, முருங்கை, பாகல், அகத்தி, சுரை முதலிய காய் கறிகளின் பெயர்கள் பெரும்பாலும் இடுகுறிப் பெயர்களே. கிழங்கு வகையில், தமிழ் வழங்கும் தேசத்திற்குரிய சேப்பங் கிழங்கு, கருணைக் கிழங்கு, வள்ளிக் கிழங்கு முதலியனவும் இடுகுறிப்பெயர்களே. கிழங்கு எனும் தமிழ்ச்சொல் பூமியின் கீழிருந்து வெட்டி எடுக்கப்படுமாதலால், அப்பெயர் கொண்டது என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இங்ஙனமே கீரை வர்க்கத்தில் வாலைக்கீரை, முளக்கீரை, ஆரைக்கீரை முதலியவற்றைக் கூறலாம். ஆயினும் இவற்றுள் சில காரணப் பெயர்களாகவும் இருக்கின்றன. உதாரணமாக அறுகீரையைக் கூறலாம்; இதை சாதாரண ஜனங்கள் அரைக்கீரை என்று கூறுகிறார்கள். அரைக்கீரை என்று அறுகீரை என்பதின் மருவென்று இதைப்பற்றிக் கூறும் பதார்த்தகுண சிந்தாமணி முதலிய வயித்திய நூல்களால் அறிகிறோம். இக்கீரையானது மற்றக் கீரைகளைப் போல் அல்லாமல், அறுத்துக்கொண்டே வந்தால் வளர்ந்து கொண்டே வரும். ஆகவே, இதற்கு அறு கீரை யெனப் பெயர் வழங்கலாயிற்று. புளியாரை என்பது அரைக்கீரை வகையில் புளிப்பினையுடையதாம். பொன்னாங்கண்ணிக் கீரை என்பது பொன்னாம் கண்ணுக்குக் கீரை, என்று சிலர் கூறுகின்றனர். இதன் மூலமாக நமது முன்னோர்கள் சில பதார்த்தங்களுக்குப் பெயர் வைத்த பொழுது, அவற்றின் குணத்தை வெளிப்படுத்தும்படியான பெயர்களே வைத்திருக்கின்றனர் என்று நாம் கூறலாம்.

இது நிற்க, தமிழகத்தில் உண்டாகாது வெளி தேசங்களிலிருந்து இங்கு கொணரப்பட்ட பதார்த்தங்களுக்குப் பெரும்பாலும் அத்தேசங்களில் வழங்கிவரும் பெயர்களாவது, அல்லது காரணப்பெயர்களாவது வழங்கப்படுகின்றன. இவற்றுள் சில உதாரணங்களை ஆராய்வோம். ஆப்பில் (Apple) என்கிற மேனாட்டிலிருந்து நமது தேசத்திற்கு வந்தது. இதற்கு ஆங்கில மொழியாகிய ஆப்பில் என்கிற பதமே உபயோகிக்கப்படுகிறது. அன்னாசிப்பழம் என்பது நமது தேசத்தில் ஆதியில் உண்டானதல்ல. வெளி தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்டு பிறகு இங்கு பயிர் செய்யப்பட்டது. அன்னாசி என்கிற பதம் போர்த்துகேயர் பாஷையிலுள்ள "அனனாஸ்" என்கிற மொழியிலிருந்து நாம் எடுத்துக்கொண்டோம். இப்பழத்தைத் தரும் செடியானது முதல்முதல் தென் அமெரிக்காவில் உற்பத்தியானதாம். அங்கு பிரேஜீலியர் பாஷையில் "நாநாஸ்" என்று பெயருடையதாம். **சர்க்கரை** என்பது வெளிநாட்டிலிருந்து வந்ததென எண்ணப்படுகிறது. **சீனி** சர்க்கரை சீனா தேசத்திலிருந்து வந்ததாம். பழைய தமிழ்ப் பெயர் வெல்லம் என்பதாம். **பரங்கிச் சக்கை**

என்பது வெளிநாட்டு வஸ்துவென்று பெயரைக் கொண்டே சொல்லிவிடலாம். இவ்வாறு, அநேக பதங்களை எடுத்துக்கொண்டு அவைகளின் பூர்வோத்தரத்தை விசாரித்தால் நமக்கு இன்பத்தையும் அறிவையும் புகட்டும் என்பதற்குச் சந்தேகமில்லை. மிளகாய் என்கிற பதத்தை ஆராய்வோம். இப்பதத்தைப் படித்துப் பார்ப்போமாயின் மிளகு+காய்=மிளகாய் என்பதாம். மிளகு என்பது இடுகுறிப் பெயராம். மிளகானது சாதாரணமாக மலையாள நாட்டில் உற்பத்தியாகும் வஸ்துவாம். அதற்கும் மிளகாய்க்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம். இதற்கு பதில் என்னவெனின் மிளகாய் தமிழ்நாட்டில் பூர்வத்தில் உண்டானதல்ல; வேறு தேசங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட பொருள்; மிளகைப்போல் அதுவும் மிகுந்த காரமுள்ள வஸ்துவாயிருந்தமையால், அதற்கு மிளகாய் என்று காரணப்பெயர் உண்டாயிற்று. இதற்குத் தெலுங்கிலும் "மிரியலுகாய்" என்று பெயர் இருப்பது கவனிக்கத்தக்கது. இதற்கு ஆங்கிலத்தில் சில்லி (Chilli) என்று பெயர். அப்பெயரை ஆராயுமிடத்து தென் அமெரிக்காவில் சில்லி (Chilli) என்கிற தேசத்தில் இது ஆதியில் உண்டாகி, பிறகு ஐரோப்பா கண்டத்திற்கு கொண்டுபோகப்பட்டு, இது ஆங்கிலத்தில் 'சில்லி' என்கிற பெயர் கொடுக்கப்பட்டதை நாம் அறிகிறோம். அன்றியும் பூர்வ காலத்தில் கப்பல்கள் மூலமாக மலையாள தேசத்திற்கு மிளகாய்கள் முதன் முதல் கொண்டு வரப்பட்டனவென்பதற்கு, அத்தாட்சியாக மலையாள தேசத்தில் இதற்கு "கப்பல் மிளகு" என்கிற காரணப் பெயர் வந்தது கவனிக்கத்தக்கது. "முட்டைக்கோஸ்" என்கிற பதத்தை எடுத்துக் கொள்வோம். இதற்குப் பொருள் உருண்டையாயிருக்கப்பட்ட "கோஸ்" என்றாகும். கோஸ் என்கிற பதம் தமிழ் பதமன்று. அதனாலேயே இப்பதார்த்தம் வேறு தேசத்திலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டதென்று நாம் ஊகிக்கலாம் இது ஐரோப்பா கண்டத்தில் சாதாரணமாக வளரும் பொருளாம்; இது வளருவதற்கு குளிர்ச்சியான பூமிவேண்டும். "கோஸ்பூ" என்று வழங்கப்படுகிற பதார்த்தமுமப்படியே. பெங்களூர் அவரைக்காய் என்பது ஆங்கிலத்தில் பிரஞ்சு பீன்ஸ் (French Beans) என்று பெயருடையது, அது பிரான்சு தேச மூலமாக நமது நாட்டிற்கு வந்தது; அவரை வர்க்கத்தை ஒத்திருப்பதால் அதற்கு அவரையென்றும், பெங்களூரில் முதன் முதல் பயிரிடப்பட்டபடியால் பெங்களூர் அவரைக்காய் என்றும் பெயர் வந்திருக்க வேண்டும். இங்ஙனமே பெங்களூர் கத்தரிக்காய் என்று ஒரு பதார்த்தம் சென்னையில் விற்கப்படுகிறது. தற்காலம் இதற்கும் நமது நாட்டுக் கத்திரிக்காய்க்கும் சம்பந்தமில்லை. ஆயினும் வெளி உருவத்தில் கத்தரிக்காயை கொஞ்சம் நிகர்த்திருப்பதால் இதற்கு பெங்களூர் கத்தரிக்காய் என்று பெயர் உண்டாயிற்று. இதே பதார்த்தத்திற்கு பெங்களூரில் சீமை கத்தரிக்காய் என்று பெயர்? இதனால் இப்பதார்த்தம் சீமையிலிருந்து பெங்களூர் மூலமாக இங்கு வந்து சேர்ந்ததென ஊகிக்கலாம். உருளைக் கிழங்கு எனும் பதத்தை எடுத்துக் கொள்வோம் உருளை+கிழங்கு =

உருளைக்கிழங்காம்; உருளையாயிருக்கிற கிழங்கு என்று பொருள்படும்; ஆகவே, இது காரணப்பெயராகும். இது காரணப் பெயராயிருப்பதனால் வெளி ஊரிலிருந்து வந்திருக்கலாம் என்று ஒருவாறு நிர்ணயிக்கக்கூடும்; வாஸ்தவமும் அப்படித்தான். ஐர்லாண்டு (Ireland) முதலிய மேனாட்டு தேசங்களில் முதன் முதலில் உற்பத்தியாக்கப்பட்டு, ஐரோப்பியர் மூலமாக நமது நாட்டிற்கு வந்த பதார்த்தமாகுமிது. வெளி தேசங்களிலிருந்து வரும் பதார்த்தங்களுக்கெல்லாம், சீமை என்கிற மொழியைச் சேர்த்து பெயரிட்டிருப்பதைக் கவனிக்கவும், உதாரணமாக சீமை அவரை, சீமை தக்காளி முதலியவற்றைக் காண்க.

திராட்சை என்பது "திராக்ஷா" எனும் வடமொழியாம். பதத்தை நோக்குமிடத்தே அது சுத்தத் தமிழ் மொழியல்லவென்று தெரிகிறது. இத்திராட்சையானது வட இந்தியாவிலிருந்து தென்னாட்டிற்கு வந்ததென்பதை நாம் அறிகிறோம். மதுரை முதலிய இடங்களில் இதற்குக் கொடி முந்திரி என்கிற பெயர் வழங்குகிறது. கொடிகளில் உண்டாகும் முந்திரி எனும் காரணப்பெயராம். தீராட்சி என்பது தீவு. திராட்சை என்பதின் சிதைவாம். இப்பதத்தை நோக்குமிடத்து இது தீபங்களிலிருந்து நமது நாட்டிற்கு பூர்வம் கொண்டுவரப்பட்டதென விளங்கும். மொலாம் பழம் என்பது ஆங்கில மெலன் (Melon) என்பதிலிருந்து வந்தது. இதுவும் வெளி தேசத்திலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட வஸ்துவாம். இவ்வாறே ஒவ்வொரு பதார்த்தத்தின் பெயரையும் எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்க்கலாம். ஆயினும் அவ்வாறு செய்ய அவகாசமில்லாதபடியால், புகையிலை என்கிற தமிழ்மொழியை மாத்திரம் இங்கு ஆராய்ந்துவிட்டு மேலே செல்வோம். புகையிலை என்று புகை+இலை=புகையிலையாம். இதற்குப் புகையைத் தரும் இலை என்று பொருள் கூறலாம். ஆகவே, இது காரணப்பெயராம்; புகையிலையைச் சுருட்டிப் பிடிப்பதற்கு "சுருட்டு" என்கிற பெயர்; இதுவும் காரணப் பெயராம். இதனாலாகிய மூக்குத் தூளாகிய பொடியும் காரணப்பெயராம்; இப்பதங்களினால் ஆதிகாலந் தொடங்கி, ஐரோப்பியர் புகையிலையைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்த காலம்வரையில் புகையிலையை உபயோகிக்கும் வழக்கம் நமக்குக் கிடையாது என்று கூறலாமல்லவா?

இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என்று நாம் குறித்த இரண்டு பிரிவுகளின்றி, காரண இடுகுறியென்று மற்றொரு பிரிவு தமிழ் இலக்கண நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக சிவபெருமானது ஒரு பெயராகிய முக்கண்ணன் என்பதைக் கூறலாம். முக்கண்ணன் என்பது மூன்று கண்களையுடையவன் என்று சாதாரணமாய்ப் பொருள்படும் ஆயினும் விசேஷார்த்தமாக இப்பெயர் இங்கு சிவபெருமானுக்கு உபயோகப்படுவது காரண இடுகுறிப் பெயராம்.

## இதர பாஷையிலிருந்து தமிழில் புகுந்த சொற்கள்

உலகில் பேசப்பட்டு வரும் ஒவ்வொரு பாஷையும் சதா காலம் மாறிக்கொண்டே வருகிறதென முன்பே அறிந்தோம்; அதாவது எப்பொழுதும் பழய சொற்கள் மறைந்தும் புதிய சொற்கள் புகுந்தும் மாற்றமடைகிறதென்று, இவ்வண்ணமே நமது தமிழ் மொழியும் மாறிக்கொண்டு வருகிறதென்பதற்கு சந்தேகமில்லை. ஒரு பாஷையில் இதர பாஷைகளிலிருந்து மொழிகள் எடுத்துக்கொள்ளப்பட்டனவென்பது, அப்பாஷைக்கு அவமான காரியமாகாது. செழித்தோங்கும் ஒவ்வொரு பாஷையும் மற்ற பாஷைகளிலிருந்து அநேகம் பதங்களை உட்கொண்டே வருகிறதென்பதற்கு ஐயமிற்று. தற்காலத்தில் இங்கிலீஷ் என்றும் வழங்கும் பாஷையில் நார்மன் பிரெஞ்சு (Norman French) லாதின் (Latin) மொழிகளும் ஆயிரக்கணக்காக நுழைத்திருக்கின்றன, அன்றியும் இன்றும் அநேக இதர பாஷைகளிலிருந்தும் பதங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன; இதனால் இப்பாஷைக்கு என்ன குறைவு? தமிழில் சமஸ்கிருத மொழிகள் இருப்பதைவிட இங்கிலீஷ் பாஷையில் அதிகமான லதீன் மொழிகள் இருப்பதாக ஒரு பாஷா தத்துவ சாஸ்திரியார் கூறுகிறார். நமது தாய் பாஷையாகிய தமிழ் பாஷையினின்றும்கூட இங்கிலீஷ் பாஷையானது சில வார்த்தைகளை இரவல் வாங்கிக் கொண்டிருக்கிறதென்பதை பிறகு ரூபிப்போம். இதனால் இங்கிலீஷ் பாஷைக்கு என்ன தாழ்வு? நாகரீகம் விர்த்தியாகி உலகிலுள்ள ஜாதியாரெல்லாம் ஒருவரோடொருவர் கலக்க ஆரம்பித்த பிறகு கலப்படமில்லாத பாஷையே கிடையாதென்றே ஒருவாறு கூறலாம்,

மேற்சொன்னபடி ஒரு பாஷையில் இதர பாஷை பதங்கள் புகுவதற்கு அநேக காரணங்களுண்டு; முதலாவது அப்பாஷை வழங்கும் நாட்டைச் சுற்றிலும் வேறு பாஷைகள் பேசுபவர்கள் வசிப்பதாம் ; இரண்டாவது, வேறுபாஷைகள் பேசுபவர்கள் அந்நாட்டில் வந்து குடியேறுவதாகும்; மூன்றாவது வேறு பாஷை பேசும் அந்நிய நாட்டார் அத்தேசத்துடன் வர்த்தகம் செய்வதாம்; நான்காவதாக, வேறு பாஷை பேசுபவர்கள் அந்நாட்டை ஜெயித்து அரசாள்வதாம்.

இனி இவைகள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டு தமிழ் பாஷையில் புதிய பதங்கள்•புகுந்ததைப் பற்றி ஆராய்வோம்.

*(1)* முதலாவது தெலுங்கு பாஷையானது, ஆதி தமிழ் பாஷையிலிருந்து பிரிந்த பாஷையன்று, வேறு பிரத்யேகமான பாஷையென்று நாம் அபிப்பிராயப்படுவோமாயின், ஆந்திரதேசம் ஏற்பட்ட, தமிழ்நாட்டின் வடக்கிலிருக்கும் தேசத்திலிருந்து தெலுங்குப் பதங்கள், அதிகமாய் வந்தனவென்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் தொல்காப்பிய நூலார், தெலுங்கென்றும் வடுகென்றும் இரு பிரிவாகப் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது; வடுகு என்பது வடக்கத்திய பாஷையெனப் பொருள்படும். ஆயினும் தற்காலம் பல பண்டிதர்களால் இவ்விரண்டும் ஒன்றாகவே மதிக்கப்படுகின்றது. "வடுகன் தமிழ் அறியான்" என்று காளமேகப் புலவர்

கூறியது இச்சந்தர்ப்பத்தில் நமக்கு ஞாபகம் வருகிறது. நமது தமிழ் நாடானது சற்றேறக் குறைய மூன்று பக்கங்களிலும் சமுத்திரத்தினால் சூழப்பட்டிருத்தலால், வடக்கு வழியாகத் தவிர அன்றி அயல் நாட்டுப் பதங்கள் தமிழில் புகுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் இல்லாமற் போயிற்று.

*(2)* இரண்டாவது ஒரு பாஷையில் புதிய பதங்கள் புகுவதற்குக் காரணம் அந்நியர்கள் அந்நாட்டில் வந்து குடியேறுவதாம் என்று கூறினோம். இம்மார்க்கத்தினால்தான் தமிழ்ப் பாஷையில் ஆயிரக் கணக்கான சம்ஸ்கிருத மொழிகள் வந்து புகுந்தன வென்பதற்கு சந்தேகமில்லை. தற்காலம் வழங்கும் தமிழில் அநேக ஆயிரம் சம்ஸ்கிருத பதங்கள் உபயோகிக்கப்படுகிறபடியால் சில சம்ஸ்கிருத அபிமானிகள் சம்ஸகிருத பாஷையிலிருந்தே தமிழ் உற்பத்தியாயது என்று கூற இடங்கொடுத்தது.

சம்ஸ்கிருத பாஷையை தாய் பாஷையாக உடைய ஆரியர்கள் தமிழ்நாட்டில் குடியேறப் புகுந்தது இன்றைக்கு சுமார் *3000* வருடங்களுக்கு முன்பிருக்கலாம் என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்களால் ஒருவாறு கணிக்கப்பட்டிருக்கிறது. பிரன்பானர்ஜீ (Biren Bonnerjea) என்னும் சாஸ்திரறிஞர் ஆரியர்கள் திராவிடர்களிடம் அணுகிய காலத்தில் ஆரியர்களைவிட திராவிடர்கள் அதிக நாகரீகமுடையவர்களா யிருந்தனர் என்று கூறியிருக்கிறார். இச்சந்தர்ப்பத்தில் பூர்வீகத் தமிழர்களுடைய நாகரீகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்த காலஞ்சென்ற கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் பூர்வீகத் தமிழர்கள், சங்கீதம், இலக்கணம், வான சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம் முதலியன ஆரியர்கள் இங்க வருமுன்னரே அறிந்திருந்தனரென்றும், அவைகளில், அவர்கள் உபயோகித்த மொழிகள் கேவலம் தமிழ் மொழிகளாம் என்றும் கூறியிருக்கின்றனர். இவ்விஷயத்தில் மிகுந்த ஆராய்ச்சி செய்த கால்ட்வெல் துரையவர்களும் ஏறக்குறைய இதே அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். மேலும் பூர்வீக நாகரீக சாஸ்திரம் என்று சொல்லக்கூடிய ஆர்க்கியாலஜி (Archaeology) என்னும் சாஸ்திர நிபுணர்கள் தற்காலம் மொஹன்ஞ்ஜதரோ ஹாரப்பா முதலிய இடங்களில் திராவிடர்கள் கி.மு. *3000* வருடங்களுக்கு முன்னமே வீடுகள் முதலியன கட்டக்கூடிய நாகரீகத்தை யடைந்திருந்தனர் என்று நிரூபித்திருக்கிறார்கள்.

இனி, வடமொழி யெனப்பட்ட சம்ஸ்கிருதத்திலிருந்து தென்மொழியெனப்பட்ட தமிழில் சம்ஸ்கிருத பதங்கள் எவ்வாறு கலந்தனவென்று ஆராய்வோம். எல்லா சரித்திரக்காரர்களும் ஆரியர்கள் தென் இந்தியாவில் குடியேறியது, இந்நாட்டை வெற்றி பெறவேண்டும் என்று அல்ல, சாந்தமான மார்க்கங்களினால்தான், இங்கு புகுந்தனர் என்று ஒப்புக்கொள்ளுகின்றனர். யுத்தம் செய்து வெற்றியினாற் புகாது சாந்தமான துறைகளில் புகுந்ததினால்தான் வடமொழிகள், சுலபமாகவும் அதிகமாகவும் தமிழுட்கலந்தன என்று கூறலாம்.

முதன் முதல் தென்னாட்டிற் குடியேறிய ஆரியர்கள், ரிஷிகள் ஆசாரியர்கள், புரோகிதர்கள், சோதிடர்கள் முதலியோர் என்று எண்ணப்படுகிறது. அவர்களிற் பெரும்பாலார், ஆரிய மதத்துடன், தென்னாட்டில் வழங்கிய சிவ

ஆராதனம், லிங்க ஆராதனம், முருகவேள் ஆராதனம், கிராம தேவதைகளாகிய காளி முதலியவைகளின் ஆராதனம், முதலியவற்றை மிகவும் சாதுர்யமாய்ச் சேர்த்து, தற்காலத்தில் ஹிந்து மதம் என்று வழங்குவதை இந்நாட்டில் ஸ்தாபித்தனர் என்று பூர்வீக சாஸ்திரஞர்களால் எண்ணப்படுகிறது. ஆரியராகிய குருமுனி எனப்பட்ட அகஸ்தியர், தமிழ்நாட்டிற்கு வந்து இலக்கணம், ஜோதிஷம், வைத்தியம் முதலிய நூல்கள் ஸ்தாபித்தார் என்று கூறுவது இதை ஒருவாறு ஸ்திரப்படுத்துகிறது. ஆரிய மதமானது தமிழ் நாடெங்கும் பரவவே, ஆரியச் சொற்களும் பரவ ஆரம்பித்தன. அவற்றுள் மத சம்பந்தமான மொழிகள்தான் முதலில் பரவியிருக்க வேண்டுமென்று ஒருவாறு நாம் ஊகிக்கலாம், யாகம், ஹோமம், அவிர்ப்பாகம், வேதம், உபநிடதம், சன்யாசம் முதலிய ஆரிய பதங்களெல்லாம் அக்கால முதல் இக்காலம் வரை ஏறக்குறைய அப்படியே தமிழில் உபயோகிக்கப்பட்டு இருக்கின்றன அல்லவா? வேதம் என்கிற பதத்திற்கு தமிழில் 'எழுதாக்கிளவி' என்று ஒரு பெயர். சம்ஸ்கிருத வேதம் அநேக நூற்றாண்டுகளாக எழுதப்படாமல், வாய்ப்பாடமாகப் பரம்பரையாகக் கற்கப்பட்டது; இதற்கு மற்றொரு பெயர் 'மறை' மறைந்த பொருளுடையது என்பதாம்.

சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு வந்த மொழிகளெல்லாம் தத்பவம், என்றும் தத்சமம் என்றும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதை முன்பே குறித்துள்ளோம். தத்பவம் என்பவை பிராகிருதத்தின் மூலமாக வந்த வடமொழிகளென்று ஒருவாறு கூறக்கூடும். தத்சமங்கள் நேராக சமஸ்கிருதத்திலிருந்து வந்தனவைகளாகக் கூறலாம். ஆதி காலத்தில் தமிழ் நூல்கள் இயற்றிய ஜைன வித்வான்கள் அநேக சமஸ்கிருத பதங்களை உபயோகித்திருக்கின்றனர்; ஆயினும் பெரும்பாலும் அவைகளைத் தமிழ் மொழிப்போக்கிற்காக சிறிது மாற்றி உபயோகித்திருக்கின்றனர்: இவைகள் பெரும்பாலும் தத்பவங்களாம். உதாரணமாக ஜ, ராஜா என்னும் வடமொழியை அரசன் என்றும், லோக; என்னும் ஸமஸ்கிருத மொழியை உலகு என்றும் மாற்றியிருக்கின்றனர்: ஸ்ரீ என்னும் வடமொழிக்குப் பதிலாக திரு என்னும் பதத்தை உபயோகித்திருக்கின்றனர். ஸ்ரீரங்கம் என்பது திருவரங்கம் என்றாயது, மஹார் என்பதும் மா என்றாயது. இன்னும் இதற்குச் சில உதாரணங்கள்:-

| சமஸ்கிருதம் | தமிழ் |
|---|---|
| சில்மிஷம் | சில்மிஷம் |
| பூர்வாஷாடம் | பூராடம் |
| விஞ்ஞாபனம் | விண்ணப்பம் |
| மார்க்க கிரஹம் | மார்க்கழி |
| ஹந்த | அந்தோ |

வடமொழியினின்றும் தமிழ் மொழிக்கு வந்த பதங்கள் முக்கியமாக தத்வசாஸ்திரம் (Philosophy) ஜோதிஷ சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களி லுபயோகிக்கப்படும் மொழிகளும், மத சம்பந்தமான மொழிகளும் சில்பம் முதலிய

கலைகளிலுபயோகிக்கப்படும் பதங்களுமாம், என டாக்டர் கால்ட்வெல் அபிப்பிராயப்படுகிறார்.

சம்ஸ்கிருத பாஷையிலிருந்து மத சம்பந்தமாக தமிழில் நுழைந்த பதங்களுக்கு உதாரணமாக பூஜை, ஆராதனம், நிவேதனம், அபிஷேகம், பலி, புரோஹிதர், அர்ச்சகர், விக்ரஹம் முதலியவற்றைக் கூறலாம்.

தத்வ சாஸ்திர மொழிகளுக்கு உதாரணமாக: ஆத்மா, அத்வைதம், துவைதம், திரோபலம், மாயை, மோட்சம் முதலியவற்றைக் கூறலாம்.

ஜோதிஷ சாஸ்திரத்தின் மூலமாக தமிழுக்கு வந்த பதங்களுக்கு உதாரணமாக: பிரஹஸ்பதி, சனி, புதன், மண்டலம், கிரஹணம், ராகு, கேது, ராசி, கிரஹம், தியாஜ்யம், நட்சத்திரம் தூமகேது முதலியவற்றைக் கூறலாம்.

வடமொழியில் வழங்கிய, கலைகளின் மூலமாகத் தமிழுக்கு வந்த மொழிகளுக்கு உதாரணமாக: நாடகம் *(?)* அபிநயம், சித்திரம், சில்பம், நிருத்தம், நவரசம், ஹஸ்தம் முதலியவற்றைக் கூறலாம்.

தமிழ்நாட்டில் கிடைக்காது வட இந்தியாவிலிருந்து, தமிழர்கள் அறிந்த மிருகங்கள் சிங்கம், ஒட்டகம் முதலியன; ஆகவே, அவைகளின் பெயர்களும் சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு வந்தன. சிங்கம் என்பது சிம்ஹம் என்கிற வடமொழிச் சொல்லாம்; ஒட்டகம் என்பது 'உஷ்ட்ரம்' என்னும் சம்ஸ்கிருத மொழியாம்.

இவ்வாறு ஆயிரக்கணக்கான வடமொழிகள் தமிழ் பாஷையில் கலந்ததினால், தமிழானது சிறந்த வளப்பமுடையதாய தென்றே சொல்ல வேண்டும். பல பொருள்களுக்கு தமிழ் மொழியும், சம்ஸ்கிருத மொழியும் இரண்டும் வழங்கலாயின.

இதற்கு உதாரணமாகச் சிலவற்றைக் கூறுவோம்:-

| **சுத்தத் தமிழ் மொழி** | **சம்ஸ்கிருதத்திலிருந்து வந்த மொழி** |
|---|---|
| விளக்கு | தீபம் |
| மலர் | புஷ்பம் |
| கெவி | குகை |
| தயிர் | ததி |
| முகில் | மேகம் |
| உயிர் | பிராணன் |

சில பாஷா தத்வ அறிஞர், தமிழ் பதங்களும் சம்ஸ்கிருத பதங்களும் ஒன்றினின்றும் மற்றொன்றிற்கு வராது, இவற்றிற்கு முன் இருந்த ஏதோ ஒரு பாஷையினின்றும் பிரிந்திருக்கலாம் என்று எண்ணுகின்றனர். இதற்கு உதாரணமாக, மொக்கு என்னும் தமிழ் பதமும் முகுளம் என்கிற சம்ஸ்கிருத

பதமும், வேறொரு ஆதி பாஷையிலிருந்தும் பிறந்திருக்கலாம் என்று டாக்டர் குண்டர்ட் (Gundert) என்பவர் எண்ணுகிறார். அடி, உடை, அடை முதலிய பதங்கள் சம்ஸ்கிருத்திற்கும் தமிழுக்கும் பொதுவான பதங்கள் என்று டாக்டர் கால்ட்வெல் துரை அபிப்பிராயப்படுகிறார்.

சாதாரணமாக ஒரு பதம், சுத்தத் தமிழ் மொழியா, அல்லது சம்ஸ்கிருதத்திலிருந்து வந்ததா என்று அறிவதற்கு, அப்பதம் எந்த தாது விலிருந்து வந்ததென்று ஆராய்வோமாயின் சுலபமாய் அறியலாம். பட்சி என்பது பட்சம் எனும் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்தது பட்சம். இஃது, பட்சி இரகையுடையது; ஆகவே, இது சம்ஸ்கிருத பதமாம், சூழ்ச்சி என்பது சூழ் எனும் தாதுவிலிருந்து வந்தது. ஆகவே இது சுத்தத் தமிழ் மொழியாம். (இதை சுட்சி என்று எழுதவது தவறாகும்.) அங்ஙனமே ழ என்கிற எழுத்தும், வல்லி றகரமும் ஆயுத எழுத்தும் அடங்கிய பதங்கள் சாதாரணமாகத் தமிழ் பதங்களாயிருக்கும். இம்மூன்று எழுத்துக்களும் சம்ஸ்கிருதத்திலில்லை; ழ ஃ என்கிற எழுத்து இவ்வுலகில் இந்த இரண்டு எழுத்துக்களும் வேறெந்த பாஷையிலுமேயில்லை யெனலாம்; ஃ என்னும் ஆயுத எழுத்தும் தமிழ் பாஷைக்கே உரியதாம்.

உதாரணங்கள்

| ழ | ஃ |
|---|---|
| கூழ் வாழை | அஃது |
| கழல் | அஃகம் |
| வழக்கு | அஃகல் |
| நிழல் | இஃது |
| பாழ் | கஃசு |

சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் உபயோகிக்கப்பட்டு வரும் சில பதங்களின் பூர்வ அர்த்தம் அறியாது தவறாக வேறு அர்த்தத்துடன், சில மொழிகள் வழங்கப்படுகின்றன. இதற்குச் சில உதாரணங்களை கவனிப்போம். அதிர்ஷ்டம் என்னும் பதத்திற்கு சம்ஸ்கிருதத்தில் கண்ணுக்குப் புலப்படாதது என்று பொருளாம்; ஒருவனுக்கு ஒரு பொன் அதிர்ஷ்டவசத்தால் கிடைத்தது என்று சொல்லும் போது, கிடைத்த காரணம் தெரியாது என்று சொல்வதற்குப் பதிலாக, தெய்வாதீனம், ஈசன் கருணை முதலிய ஏதோ கரணத்தால் கிடைத்தது போல இதுவும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. “கிரி” என்றால் மலையெனப் பொருள்படும் சம்ஸ்கிருதத்தில், இதையறியாத தமிழ் மக்களும் சிலர் “நீலகிரி மலை” “கைலாசகிரி பர்வதம்” என்று உபயோகிப்பது மிகவும் சாதாரணமாகும். சாதாரணமாகத் தமிழில் ‘கிரஹணம் பிடிக்கிறது’ என்று சொல்லுவதுண்டு. ஆயினும் அப்படிச் சொல்பவர்கள் கிரஹணம் எனும் சம்ஸ்கிருத மொழிக்கு

'பிடித்தல்' என்று பொருள் என்பதை அறிவார்களாயின் 'கிரஹணம் பிடிக்கிறது' என்று கூறமாட்டார்களல்லவா? 'பீதாம்பரம்' என்றால் மஞ்சள் வஸ்திரம் என்று பொருள் படும் சம்ஸ்கிருதத்தில்; பீதாம்பரம், சிவப்பு பீதாம்பரம், வெள்ளைப் பீதாம்பரம், என்று கூறுவது தவறல்லவா நாளடைவில் பீதாம்பரம் எனும் பதத்திற்கு பட்டு வஸ்திரங்கள் என்றே அர்த்தம் வழங்கலாயிற்று.

**'சீமந்தம்'** எனும் சம்ஸ்கிருத பதத்தை எடுத்துக்கொள்வோம். இதன் பொருள் முதல் கர்ப்பத்தில் எட்டாவது மாசம் பத்தினிக்கு தலைமயிரை வகிர்த்து செய்யும் சடங்காம். இது பெண்பாலர்க்குரிய சடங்காம், இதையறியாமல் இன்ன முதலியாருக்கு இன்ன தேதியில் சீமந்தம் நடக்கப்போகிறது என்று பலர் எழுதுகின்றனர் இது தவறாகும்; அன்றியும் சீமந்தம் என்பது ஒரு சம்ஸ்கிருத பதம் என்பதை மறந்து 'ஸ்ரீமந்தம்' என்று பலர் எழுதுகின்றனர். **'யோகக்ஷேமம்'** என்னும் சம்ஸ்கிருத தொடர் மொழிக்கு, புதிதாய் பொருள் அல்லது செல்வம் சேர்க்கிறது, இருப்பதை அல்லது பழய செல்வத்தைக் காப்பாற்றுகிறது என்பது பதப்பொருள் ஆகும். இவையறியாது தற்காலம் தமிழர்களிற் பலர் யோக க்ஷேமம் விசாரித்தல் என்றால் தேக சௌக்கியத்தை விசாரிப்பதாக எண்ணுகின்றனர்; சாதாரணமாகத் தமிழர்கள் ஒருவரைப் பார்த்து **'ஒண்ணட்சியமாக'** இருக்க வேண்டும் என்று ஆசீர்வதித்தால், ஒரு குறையுமில்லாமல் இருக்க வேண்டுமென்று பொருள் கூறுகின்றார்களல்லவா? ஆயினும் அச்சொற்றொடரைப் பிரித்து ஆராய்ந்து பார்த்தால் ஒன்று+அட்சயமாக இருக்க வேண்டுமென்று ஆசீர்வதிப்பதாகும். இவ்வாறு இன்னும் அநேக உதாரணங்கள் எடுத்துக் கூறலாம்; ஆயினும் அது பெருகுமாகையால், இன்னும் ஒரு உதாரணத்துடனே இவ்வாராய்ச்சியை நிறுத்துவோம். தமிழில் **'ஐம்முகம்'** என்று சிங்கத்திற்கு ஒரு பெயர் உபயோகிக்கப்பட்டு வருகிறது. சிங்கத்திற்கு ஒரே முகம் என்பது யாவருமே அறிந்ததே. ஆகவே இப்பதம் எப்படி உண்டாயிற்று என்று ஆராய்வோமாயின். சம்ஸ்கிருதத்தில் சிங்கத்திற்கு ஒரு பெயராகிய 'பஞ்சானனம்' என்னும் பதத்திலிருந்து வந்ததென்று அறிவோம். பஞ்சானனம் என்றால் பரந்த முகத்தை, விசாலமான முகத்தை உடையது என்று பொருள். சிங்கத்தின் முகம் மிகவும் விசாலமாயிருப்பதால் அதற்கு சம்ஸ்கிருதத்தில் அப்பெயர் நியமிக்கப்பட்டது; இந்த அர்த்தத்தை யறியாமல், நமது முன்னோர்கள் பஞ்ச+ஆனனம் அதாவது ஐந்து முகம் என்று பொருள்படுத்தி, ஐம்முகம் எனும் தமிழ் பதத்தை சிருஸ்டித்தனர் என்பது திண்ணமல்லவா?

சில தமிழர்கள் சில சம்ஸ்கிருத பதங்கள், மிகவும் இலக்கணமாக உபயோகிப்பதாகக் கருதி, தவறாக உச்சரிக்கின்றனர். உதாரணமாக சிரோமணி, என்பதை சிரோன்மணியென்றும். வம்சம் என்பதை வங்கிஷம் என்றும், பரிசயம் என்பதை பரிட்சையென்றும் அனுபவம் என்பதை அனுபோகம் என்றும் கூறுகின்றனர்; இது தவறாகும்.

சில சம்ஸ்கிருத பதங்களை அவைகள் சம்ஸ்கிருத பதங்கள் என்று அறியாமலே உபயோகிக்கிறோம். உதாரணமாக - **கசமாலம்** என்று

ஆதித்திராவிடர்களும் ஒருவரை ஒருவர் திட்டும் பொழுது உபயோகிக்கும் மொழி; கஸ்மலம் எனும் சம்ஸ்கிருத பதமாம். கட்டாயம் என்பது சம்கிருத பதமாகிய கர்த்தவ்யம் என்பதின் மருவாம். அசங்கியம் என்பது அசஹ்யம் என்பதின் மருவாம். இவ்விதமே சென்னையில் துலுக்கர்கள் விற்கும் தாசனாப்பொடி எனும் பதம் தசனப்பொடி என்பதாம். தசனம்+பொடி = தசனப்பொடி. தசனம் என்பது பல் எனப் பொருள்படும். சுத்த சமஸ்கிருத பதமாம். சிரஞ்சீவி என்பது சிரசீவி எனும் சம்ஸ்கிருத பதத்தின் மருவாம். (அன்றேல் சிரம்சசீவி = அம்பட்டன் எனும் பொருள்படும்) சாதாரண ஜனங்கள் இதை உபயோகிக்கும் பொழுது மரணமில்லாதவன் என்கிற அர்த்தத்தில் உபயோகிக்கின்றனர். சிரசீவி என்பதற்கு சம்ஸ்கிருதத்தில் நெடுங்காலம் ஜீவித்திருப்பவன் என்றுதான் அர்த்தம்.

சில சம்ஸ்கிருத மொழிகளின் அர்த்தத்தை நாம் அறிவோமாயின் அவைகளின் தமிழ் பிரயோகங்களின் கருத்தை நன்றாயறிந்தவர்களாவோம். **'பித்தலாட்டம்'** என்பது பித்தலாடகம் என்பதின் மருவாம். பித்தலை+ஆடகம்=பித்தலாடகம் என்றாம். ஆடகம் என்பத ஹாடகம் எனும் சம்ஸ்கிருத மொழியாம்; அதற்கு பொன் என்று அர்த்தமாகும்; ஆகவே பித்தலாடகம் என்பதற்கு பித்தலையைப் பொன் என ஏமாற்றுதல் என்று அர்த்தமாகி, அதனின்றும் எல்லாவித ஏமாற்றுதலுக்கும் அப்பதமானது உபயோகிக்கப்படுகிறது என்று அறிவோம். தேகம் என்பது சம்ஸ்கிருதத்திலிருந்து வந்த பதமாம், இதை நாம் தேகம் என்றே உபயோகிக்கவேண்டியது; சிலர் இதை திரேகம் என்றும், மிகவும் இலக்கணமாக உபயோகிப்பதாக வெண்ணிக் கூறுவது தவறாகும்.

மேலும், ஒரே உருவையுடைய தமிழில் வழங்கப்படும் சில பதங்கள் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்தனவாயின், ஒரு பொருளைக் குறிப்பனவாயும் சுத்தத் தமிழிலிருந்து வந்தனவாயின் மற்றொரு பொருளைக் குறிப்பனவாய் இருக்கின்றன. இதற்குச் சில உதாரணங்களை ஆராய்வோம். கரி என்றால் யானை என்றும் பொருள்படும், அடுப்புக்கரியையும் குறிப்பதாகும். கரம் என்னும் சம்ஸ்கிருத பதத்திலிருந்து வந்ததாயின், கரத்தையுடையது கரி, யானை என்று அர்த்தத்தைத் தரும் கருப்பு கருமை, எனும் தமிழ் மொழியினின்றும் வந்ததாயின் மேற்சொன்ன இரண்டாவது அர்த்தத்தைக் கொடுப்பதாகும். 'உடு' என்னும் பதம் தமிழ் நூலிலிருந்து வந்ததாயின் உடு என்னும் வினைச் சொல்லாம் (உடையை உடு=தரி) சம்ஸ்கிருத பதமாயின் நட்சத்திரம் எனப் பொருள்படும். அத்தி என்பது ஹஸ்தி எனும் சம்ஸ்கிருத பதத்திலிருந்து வந்ததாயின் யானை என்று பொருள்படும்; ஹஸ்தத்தையுடையது ஹஸ்தி=அத்தி; தமிழிலிருந்து வந்ததாயின் அத்தி எனும் ஓர் வகை மரத்தைக் குறிக்கும். (அத்தி மரம், அத்திக்காய்) குரு என்பதை தமிழ் மொழியாகக் கருதுவோமாயின் கொப்பளத்தைக் குறிக்கும். சம்ஸ்கிருத பதமாகக் கருதுங்கால்; ஞானாசிரியன், ஆசார்யன் என்று அர்த்தமாம்.

## அராபிப்பதங்கள்

ஆரியர்களுக்குப் பின் தென் இந்தியாவிற்கு வந்த அந்நிய நாட்டார்கள் அரேபியர் தேசத்து மனிதர்களாகிய அராபியராம். இவர்கள் மகம்மதியர்கள். இவர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து ஜெயித்தவர்களன்று. வர்த்தகம் காரணமாக முக்கிய வர்த்தக விஷயமாக மலையாளப் பிரதேசத்திற்கு வந்தவர்கள். அந்நாட்டில் தற்காலம் மாப்பிள்ளைகள் என்று கூறப்பட்ட ஜாதியார் பெரும்பாலும் ஆதிகாலத்தில் இங்கு வந்து சேர்ந்த அராபியருக்கும் மலையாள ஸ்திரீகளுக்கும் பிறந்தவர்கள். அராபியர் பூர்வ காலத்தில் கப்பல் யாத்திரை செய்வதில் மிகவும் நிபுணர்களாகி, பல தேசங்களுக்குப் போய் வியாபாரம் செய்து வந்தார்கள். அராபியர் தமிழ் நாட்டிற்கு வர்த்தகர்களாக வந்தபடியால், சாதாரணமாக வர்த்தகத்தில் உபயோகப்படும் அராபிப் பதங்கள் தமிழில் நுழைந்திருக்க வேண்டும்; இதற்கு உதாரணமாகச் சில வார்த்தைகளைக் கூறுவோம். காப்பி, சாவுகார், வசூல், தாயத், அலாக்கு, அனாமத், இரீசால், தொஸ்தா, மாமுல் முதலியன. அவர்கள் மூலமாக மகம்மதிய மதம் முதலில் தென்இந்தியாவில் பரவ ஆரம்பித்தபடியாலும், பின்பு படையெடுத்து வந்த மகம்மதியர்களுடைய மதசம்பந்தமான பாஷை அராபி பாஷையானபடியாலும், தமிழில் மத சம்பந்தமான பதங்கள் சில நுழைந்திருக்கின்றன. உதாரணமாக:-

| | |
|---|---|
| இஸ்லாமி | மகம்மதிய மதம் |
| இக்காமத் | தொழுகைக்கு நின்று கொண்டிருக்கை |
| இகுவாஸ் | மெய்பக்தி |
| இத்திகாத் | நம்பிக்கை |
| இபாபதத் | கடவுளுக்கு செய்ய வேண்டிய வணக்கம் |
| இபுதார் | நோன்பிற்குப்பின் செய்யும் பாரணை |

வர்த்தக மூலமாகவும், மத மூலமாகவுமாவது, வேறு விதங்களில் வந்த சில அராபிப் பதங்களுக்கு உதாரணமாக அடியில் வருவனவற்றைக் கூறலாம்.

| | |
|---|---|
| இஜ்ஜத் | கௌரவம் |
| இன்சாப் | நியாயம் |
| தகரார் | ஆட்சேபணை |
| ஆசாமி | மனிதன் |
| சால்ஜாப் | *(சவால்ஜவாப்)* கேள்வி பதில், கேள்விக்குப் பதில் |

## ஹிந்தி, உர்து, இந்துஸ்தானி பதங்கள்

அரேபியர்களுக்குப் பிறகு தமிழ்நாட்டிற்கு வந்தவர்கள், ஆப்கானிஸ்தான் தேசத்தின் மூலமாக இந்தியாவின் வடக்கே படையெடுத்து வந்து ஜெயித்த, மொகலாயர் உட்பட்ட மகம்மதியர்களாம். இவர்கள் இந்தியாவின் மீது பன்முறை படையெடுத்து வந்து பிறகு வட இந்தியாவில் தங்கிவிட்டனர் என்பது சரித்திர மூலமாக நாம் நன்கு அறிந்த செய்தியே. வட இந்தியாவில் இவர்கள் காலத்தில்

வழங்கி வந்த பாஷைகளில் முக்கியமானவை. ஹிந்தி, ஹிந்துஸ்தானி, உர்து என்பவைகளாம். ஹிந்துஸ்தானி என்பது ஹிந்தி பாஷையினின்றும் உற்பத்தியானதாம். இந்த ஹிந்துஸ்தானி பாஷையுள், பர்ஷியா தேசத்து பாஷையாகிய **பர்ஷியன் பாஷை** கலக்கப்பட்டதனால் உண்டான பாஷை உர்து. ஆகவே, இந்த உர்து பாஷையானது, சமஸ்கிருதம், பர்ஷியன், அராபிக் மூன்று பாஷைகளின் கலப்பு என்று நாம் ஒருவாறு கூறலாம். உர்து என்பது மகம்மதிய ராஜ பாஷையாக இருந்தது. மேற்கண்ட மகம்மதிய அரசர்கள் டில்லியில் நிலையாக நின்றபிறகு தெற்கே படையெடுத்து வந்தனர். *1310* ஆம் வருடம் குட்புதீன், தன்சேனைத் தலைவனாகிய மாலிக்காபூர் என்பவனை தென் இந்தியாவிற்கு படையெடுக்கச் செய்தான். இதுமுதல் மகம்மதியர்கள் தென் இந்தியாவில் பரவத் தலைப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக தென் தேசங்களைப் பற்றி, தமிழ்நாட்டிலும் அரசாட்சி செய்ய ஆரம்பித்தனர். இதன் மூலமாக இவர்கள் பேசிய பாஷைகளிலிருந்து அநேக மொழிகள் தமிழ் பாஷையில் வழங்கப்பட ஆரம்பித்தன. மகம்மதிய ராஜ்யம் தமிழ்நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டதன்றி, வடக்கிலிருந்து வந்த இவர்கள் நாகரிகமும் இங்கு பரவ ஆரம்பித்தபடியால், ராஜாங்க மொழிகளன்றி, பலவிதமான வடக்கத்திய மொழிகளும் தமிழில் கலக்க ஆரம்பித்தன. இப்படிப்பட்ட வார்த்தைகள் அநேகம் நூற்றுக்கணக்காக இருக்கின்றன அவைகளுள் சிலவற்றை ஆராய்வோம்:-

மேற்குறித்த மொழிகளில் பெரும்பாலும் ராஜாங்க விஷயமான பதங்களாயிருப்பது ஆச்சரியமன்று. அதற்கு உதாரணமாக அடியிற் கண்ட பதங்களைக் கூறுவோம்.

| | |
|---|---|
| அசாரம் (அஜராம்) | ஆஸ்தான மண்டபம் |
| அதாலத் | நியாயஸ்தலம் |
| அமல் | அதிகாரம் |
| திவாளம் | நியாயஸ்தலம் (பர்ஷியர்) |
| நஜர் | காணிக்கை |
| தாகீத் | உத்தரவு |
| ஜமீன்தார் | பூமிக்கு சொந்தக்காரன் |
| தபால் | அஞ்சல் |
| பாரா | காவல் |
| ராவுத் (ராகுத்தன்) | குதிரைவீரன் |
| கஜானா | பொக்கசம் |
| தேவடி | அரமனை |
| பேஷ்கார் | காரியஸ்தன் |
| சாபா | முத்திரை |
| பர்வானா | உத்திரவு |
| மஹால் | அரண்மனை |

## நியாயஸ்தல சம்பந்தமான பதங்கள்

| | |
|---|---|
| பிரியாத் | பிராது |
| தாவா | வியாஜ்யம் |
| நபர் | (ஆள்) நபர் ஜாமீன் |
| கபூல் | சம்மதம் |
| நாஜர் | நியாயாதிபதியின் கட்டளையை நிறைவேற்றுபவன் |
| நிஷாநி | கையொப்பம் |

## ஆபரணம், உடை சம்பந்தமான மொழிகள்

தாவணி, துப்பட்டா, தொப்பி, பாஜிபந்து, குல்லா, ஜிமிக்கி, சால்வை, (Shurt) குடுத்தா, சராய், சல்லாப் புடைவை.

## உணவு சம்பந்தமான மொழிகள்

ஹல்வா, புலால், லட்டு, ஜாங்கிரி, பாதுஷா, குல்கந்து.

### வர்த்தகசம்பந்தமான மொழிகள்

நமுனா (மாதிரி) தஸிகத் (கையெழுத்து) குமாஸ்தா, ஜாபிதா, ஜமாகர்ச் (வரவுசெலவு) தராசு, பட்டி, பாக்கி

### வரி சம்பந்தமான மொழிகள்

மாசூல், கிஸ்தி, இரிசால், தர்காஸ்து, செக்பந்தி, ஜமாபந்தி.

### மத சம்பந்தமான வார்த்தைகள்

நஜீப் (தலையெழுத்து) மசூதி, பாத்தியா, கோரி, நிக்கா (மகம்மதிய கல்யாணம்) பத்வா (மகம்மதிய சட்ட தீர்ப்பு)

சில ஹிந்துஸ்தானி மொழிகளை, அவைகள் வேறு பாஷை பதங்கள் என்று அறியாமலே சாதாரணமாகத் தமிழில் உபயோகிக்கிறோம். உதாரணமாக **பரவாயில்லை** (பர்வா=கவலை) தயார் (சித்தம்) பேஷ் சபாஷ் (நல்லது!) முதலியவை.

### ஹிந்துஸ்தானி மூலமாகத் தமிழில் வந்த மொழிகள்

சிபாரிஷ், சிப்பந்தி, தஸ்தாவேஜ், பந்தோபஸ்த், நாஸ்தா, நமாஸ், முதலியன.

### மேற்குறித்தபடி தமிழில் வந்த உர்து பர்ஷியன் பதங்கள்

மராமத், வாரீஸ், ரொடி (ரொட்டி), லத்தி, லாடம், வக்காளத் முதலியன.

### மேற்குறித்தபடி தமிழில் வந்த அராபிய மொழிகள்

ஜல்சா, மோஜ், மிடாய், ரஜா, ராப்தா, ரிவாஜா முதலியன.

### மஹாராஷ்டிர பாஷையிலிருந்து வந்த மொழிகள்

சிவாஜி காலத்தில் மத்திய இந்தியாவிலிருந்து மஹாராஷ்டிரர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்து தஞ்சாவூரில் அரசாண்டனர். இவர்கள் மூலமாகச் சில மராட்டிய மொழிகள் தமிழில் கலக்கலாயின; இதற்கு உதாரணமாக.

ஜட்கா, ஜான்வாசம், கில்லாடி, காமாட்டி, சாம்பார் = குழம்பு வகை, பிட்லெ = ஓர் கூட்டுவகை, தாண்டா = (பின்னலில் அணியும் மாலை) முதலியவற்றைக் கூறலாம்.

இவர்களுக்கெல்லாம் பிறகு தமிழ்நாட்டிற்கு வந்தவர்கள் ஐரோப்பியர்களாம். இவர்களுள் முதன்முதல் வந்தவர்கள் போர்த்துகேயர். பிறகு டச்சுக்காரர்கள், அப்புறம் பிரெஞ்சுக்காரர்கள், கடைசியில் ஆங்கிலேயர்; இவர்கள் முதலில் வர்த்தகஞ் செய்யவே இங்கு வந்தவர்களாவார்கள்.

*(1)* போர்த்துகேயர்கள் தமிழ்நாட்டில் *1498* வருஷம் வந்தனர். அவர்கள் அதிககாலம் தங்கவில்லை. அன்றியும் இரண்டொரு இடங்களில்தான் வர்த்தகத்தின் பொருட்டு இங்கு தங்கினர். அவர்கள் மூலமாகத் தமிழ் பாஷையில் வந்த மொழிகள் சிலவே, அவற்றிற்கு உதாரணமாக:

| | |
|---|---|
| ஜாரா | ஜாடி |
| சன்னல் | பலகணி |
| பாதிரி | கிறிஸ்துவ போதகர் (தகப்பன். |
| பிரங்கி | Fernghi |
| பிராந்தா | Verandhi |
| கொரடா | |
| கோப்பை | Cup |

*(2)* டச்சுக்காரர்கள் போர்த்துகேயரைவிடக் குறைந்தபடி தமிழ்நாட்டில் தங்கினவர்கள். இவர்கள் முதன்முதல் *1609* வருஷம் பழவேற்காட்டில் தங்கினர். பிறகு சதுரங்கப்பட்டணம் (Sadras) வந்தனர். தமிழ் பாஷையில் கலந்த டச்சுமொழி மிகக் குறைந்தனவாம். உதாரணமாக, கக்கூஸ், சாக்கு (கோணிப்பை) முதலியவையே.

*(3)* பிரெஞ்சுக்காரர்கள் *18* ஆம் நூற்றாண்டின் முதலில் தமிழ்நாட்டிற்கு வந்து, பல வருடங்கள் இங்கு தங்கியிருந்து, யுத்த மூலமாகச் சில பாகங்களைக் கைப்பற்றிச் சிலகாலம் நிலைத்திருந்தனர். எனினும், தமிழ் பாஷையில் புகுந்த பிரெஞ்சு பதங்கள் அவ்வளவு அதிகமில்லை. இதற்கு ஒரு காரணம் பிரெஞ்சு மொழிகள் தமிழில் உச்சரிப்பதற்கும் எழுதுவதற்கும் கடினமாயிருப்பதேயாம் என்று ஒருவாறு கூறலாம். இவற்றிற்கு உதாரணமாக

| | |
|---|---|
| பீரோ | பீரவு |
| குசினி | சமையல் அறை |
| பத்தாய் | |
| ரோந்து | |
| லாந்தர் | *(விளக்கு)* |
| பொத்தான் | (Button) |

*(4)* **ஆங்கிலேயர்** இவர்களில் முதலில் மேற்கூறியபடி வர்த்தகத்திற்காக இங்கு வந்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக யுத்தமூலமாக நாட்டைக் கைப்பற்றி, *1947* வருடம் வரை இங்கிருந்தவர்கள். இவர்கள் *1639* வருஷம் சென்னப்பட்டணத்திற்கு வந்து தங்கினார்கள். இவர்கள் பிறகு பிரெஞ்சுக்காரர்களைத் துரத்திவிட்டு, தாமே, தென் இந்தியாவையும் இந்தியா முழுவதையும் கைப்பற்றிய விஷயம் சரித்திரத்தில் கண்டுகொள்க. இவர்கள் இன்றைக்கு *300* வருடங்களுக்கு மேல் நிலையாய்த் தங்கி அரசாண்டு இவர்களுடைய நாகரீகத்துடன் அநேக புதிய ஆங்கில பதங்கள் தமிழ் பாஷைகளில் வழங்கலாயின. அன்றியும் முக்கியமாகத் தமிழ் நாட்டிலுள்ளவர்களெல்லாம் ராஜாங்க பாஷையாகிய ஆங்கிலத்தைக் கற்று வருவதால், ஆங்கில சாஸ்திர மொழிகள் பலவும் தமிழ் பாஷையில் பரவலாயிற்று என்று கூறலாம்.

## வர்த்தக மூலமாக வந்த பதங்கள்

ஆண்டிமாண்டு, புராமிசரி, நோட், செக் (Cheque) பாங்க் (Bank) ஆக்கர் (Hawker) பாபர் (Pauper) இன்சால்வென்ட் (Insolvent) வாட்லோடு (Bottle + ஓடு) பில் *(பணச்சீட்டு)*

## நியாயஸ்தலங்களின் மூலமாக வந்த மொழிகள்

லாயர், ஜட்ஜ், ஆட்வகேட், பாரிஸ்டர், அப்பீல், செஷன்ஸ்.

## ஆங்கில சாஸ்திரங்களின் மூலமாக வந்த மொழிகள்

ஆக்ஸிஜன், ஹைட்ரொஜன், கார்பானிக் ஆசிட் காஸ், தர்மாமிடர், என்ஜின் (Engine) ரேடியம், அல்யுமினியம்.

## ஆங்கிலேயர் புதிதாகக் கண்டுபிடித்த விஷயங்களின் மூலமாக வந்த பதங்கள்

பைசிகல், டெலிபோன், பெலூன், டிராம், பையாஸ்கோப், சினிமா, ரேடியோ முதலியன.

இப்படிப்பட்ட பதங்கள், தற்காலம் தமிழ் பாஷையில் அதிகமாய் நுழைந்து கொண்டு வருகின்றன. உதாரணமாக, ரெயில் என்பதற்கு இருப்புப்பாதை என்று கொஞ்சம் வழங்கப்பட்டிருக்கிறது. எனினும், சாதாரண ஜனங்களில் மிகவும் பெரும்பாலார் ரெயில் என்கிற பதத்தையே பேச்சிலும் எழுத்திலும் உபயோகிக்கின்றனர் என்பது யாவருமறிந்த விஷயமே. இன்னொரு உதாரணமாக **பைசிகல்**, சைகல், என்கிற பதத்தை எடுத்துக்கொள்வோம். இதற்கு துவிசக்கரவண்டியென்று மொழிபெயர்க்கலாம்; ஆயினும் எத்தனைத் தமிழர்கள் சைகில் என்று கூறாது துவிசக்கரவண்டி என்று கூறுவார்கள்? அன்றியும் துவிசக்கர வண்டி என்பதும், சரியான தமிழ் மொழிபெயர்ப்பாயினும் இரண்டு சக்கர வண்டிகளாகிய, கட்டை வண்டிகளையும் குறிக்குமல்லவா? அன்றியும் சாதாரணமாக எல்லா பாஷைகளிலும் பெரிய பதங்களையெல்லாம் குறுக்கி, சிறு பதங்களாக வழங்குவது வழக்கம் அல்லவா.

## ஆங்கிலேயர் மூலமாகத் தமிழ்நாட்டிற்கு வந்த விளையாட்டுகளின் மொழிகள்

கிரிகெட், டெனிஸ், ஹாக்கி, பில்லியர்ட்ஸ், பிங்பாங், கால்ப் (Golf) முதலிய பதங்களெல்லாம் ஆங்கிலேயர் ஆடும் ஆட்டங்களுக்குரியவை; முன் காலத்தில் இவ்வாட்டங்களெல்லாம் தமிழ்நாட்டிலில்லை; ஆகவே அவ்விளையாட்டுகளின் பெயர்களும் அவைகளுக்குரிய பாட், ஓவர் (Over), பெயில் (Bail), இன்னிங்க்ஸ் (Innings), செட் (Set), முதலிய பதங்களும் அப்படியே தமிழில் மாறுதலின்றி நுழைந்தன. சீட்டாட்டத்தை (Cards) எடுத்துக் கொள்வோம். சீட்டு என்பது க்காரணப் பெயராகும். இதில் வழங்கும் நான்கு ஜாதிகளாகிய ஸ்பேட், ஆடுதன், டைமண்ட், கிளாவர் துருப்பு (Trumph) என்னும் ஆங்கிலப் பதங்களையே, தமிழர்கள் சீட்டாடும்போது உபயோகிக்கின்றனர்; இதன் மூலமாகவே இவ்வாட்டம் சாதாரணமாக முன்காலத்தில் தமிழ்நாட்டில் இல்லாமல், பிறகு ஆங்கிலேயர் மூலமாகப் புகுந்தது என்று தீர்மானிக்கலாமல்லவா?

## இங்கிலாந்திலிருந்து தமிழ்நாட்டிற்குப் புதியதாக வந்த பொருளின் பெயர்கள்

சிமிட்டி (Cement), டார் (Tar) பிஸ்கோத்து (Biscuit) சோடா (Soda) லெமனேட் (Lemonade) கோலா (Kola) ஆபில் (Apple) பியர்ஸ் (பேரிக்காய்; Pears) நோல் கோல் (Knol-Khol) இப்படிப் பட்ட ஆங்கிலப் பதங்கள் தமிழில் நுழைவது இயல்பேயாம்.

மேற்கூறியவைகளைப் போன்ற பல ஆங்கிலமொழிகள் தமிழில் உபயோகத்திற்கு வந்திருக்கின்றன; தற்காலமும் வந்துகொண்டேயிருக்கின்றன; இன்னும் வரும் என்பதற்கும் தடையில்லை.

இவ்விஷயத்தில் கடைசியாக இதர பாஷைகளிலிருந்துவந்த சில அபூர்வ பதங்களைக் கருதுவோம்:-

| | |
|---|---|
| ஏசு | இது ஹீப்புரு பாஷையிலிருந்து வந்தது. |
| அப்பு (வீட்டு வேலையாள்) | சிங்கள பாஷையிலிருந்து வந்தது. |
| துப்பாக்கி | துர்க்கி பாஷை |
| ரிக்ஷா | ஜப்பான் பாஷை |
| சம்பான் (தோணி) | சைனா பாஷை |
| தே | சைனா பாஷை |
| புரோக்து | பெரிஷியன் பாஷை |
| பேகம் | பெர்ஷியன் பாஷை |
| சரிகை | ஜரின் என்னும் பர்ஷியன் பாஷையிலிருந்து வந்ததாம். |

## வழக்கற்றுப் போன தமிழ் மொழிகள்

இதுகாறும் தமிழ் பாஷைக்குள் புதிதாய் வந்து நுழைந்த மொழிகளைப் பற்றிக் கவனித்தோம்; இனி தமிழ் பாஷையிலிருந்து மழுங்கி அற்றுப்போன சில மொழிகளைக் கவனிப்போம். ஒரு பாஷையை ஒரு பெரிய மரத்திற்கு உபமானமாகக் கூறலாம். ஒரு பெரிய மரம் எப்படி பல கிளைகளை உடைத்தாயிருக்கிறதோ, அப்படியே ஒவ்வொரு பெரிய பாஷையும் பல கிளை பாஷைகளையுடைத்தாயிருக்கிறது; அன்றியும், எப்படி செழித்து வளர்ந்து வரும் மரம், புதிய துளிர்களை விடுகிறதோ, அதுபோல் அப்பாஷையில் பல புதிய வார்த்தைகள் உண்டாகின்றன; அங்ஙனமே, ஒவ்வொரு மரத்திலும், பழய முதிர்ந்த இலைகள் உதிர்ந்து போவதுபோல், சில பழய மொழிகள் உபயோகமற்று, மறைந்து போகின்றன. இம்முறைப்படி நமது தமிழினின்றும், மாண்டுபோன சில மொழிகளை ஆராய்வோம். உதாரணமாக, அச்சோவே, ஆயமணிகட்டி, ஏளங்கோட்மலை, திணபசித்தெற்றாலம், போழமுள்தளை முதலிய மொழிகளைக் கூறலாம்.

## அற்றுப்போன கலை மொழிகள்

முற்காலத்தில் தமிழர்கள் பயின்றுவந்த சில கலைகள், பிறகு வழக்கில்லாமல், இறந்துபட்டமையால், அக்கலைகளில் உபயோகிக்கப்பட்ட பல பதங்கள் அற்றுப் போயின. ஆகவே, சற்றேறக்குறைய *1500* வருடங்களுக்குள் தமிழர்கள் கட்டிய கோட்டைகளின் உறுப்புக்களின் பெயர்களுக்கெல்லாம் பெரும்பாலும், பிறகு வழக்கத்திலில்லாமல் மடிந்து போயினவென்றே நாம் கருதல் வேண்டும்; அப்பதங்களுக்கு நாம் ஒருவாறு அர்த்தம் அறிந்தபோதிலும், அம்மொழிகள், நூல்களிலும், பேச்சு வழக்கிலும் தற்காலம் உபயோகிக்கப் படுவதில்லை என்று நிச்சயமாய்க் கூறலாம். இப்படிப்பட்ட பூர்வீகத் தமிழ்மொழி களுக்குச் சில உதாரணங்களை இங்கு கருதுவோம்.

| | |
|---|---|
| அகப்பா | கோட்டைமதில் |
| ஐயவித்துலாம் | மதிலுள்ள பொறிவகையிலொன்று, தலைகளைப் பிடித்துத் திருகும்படியானது. |
| எப்புழை | அகத்துள்ளோர் புறத்துள்ளோர் மீது எய்வதற்கு மதிள்மீது அமைக்கப்பட்ட துவாரம். |
| சுருங்கை | கோட்டைக்குக் கள்ள வழி |
| அரிகயிறு | தொட்டவரை அறுக்கும் நூள்பொறி |

## அற்றுப்போன பழய விளையாட்டு மொழிகள்

பண்டைக்காலத்துத் தமிழ்ச் சிறுவர்கள் ஆடிய ஆட்டங்கள் நாளாவாத்தியில் மறைந்தபொழுது அவ்வாட்டங்களின் பெயர்களும் வழக்கற்றுப் போய், மறையத் தலைப்பட்டன. இதற்கு உதாரணமாக, திருவாசகத்தில் கூறப்பட்ட **உந்திபறத்தல், தோணோக்கம், தெள்ளேணம்,** முதலியவற்றைக் கூறலாம். முற்காலத்திய பெண்கள் எப்படி ஆடினார்கள் என்பதையும் மறந்தோம் அம்மாணையெனும் ஆட்டம் சற்றேறக்குறைய *60* வருடங்களுக்குமுன், ஏக தேசமாக சில பெண்களால் ஆடப்பட்டு வந்தது; அதுவும் வரவர மறைந்துகொண்டு வருகிறது.

### அற்றுப்போன பழயகாலத்து ஆடைகளைக் குறிக்கும் மொழிகள்

சிலப்பதிகாரத்தில், குச்சரி, சித்திரம், கம்பி, சில்லிகை, ஏடகம், பச்சிலை, பணிப்பொத்தி, பரியட்டக்காசு, புங்கர்க்காபுகம், பேடகம் முதலிய ஆடைவகைகளின் பெயர்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

## அற்றுப்போன பழய ஆபரணங்களைக் குறிக்கும் மொழிகள்

இங்ஙனமே ஆபரணங்களைக் குறிக்கும் மொழிகளைக் கருதுமிடத்து, அநேகப் பழய பெயர்கள் இறந்துபட்டு, அநேக புதிய மொழிகள் தமிழ் பாஷையில் புகுந்தன என்பதை அறிகிறோம். ஆபரணம் என்பது சம்ஸ்கிருத பதம்; அணிகலன் என்பது தமிழ் மொழியாம். கடைச் சங்க காலத்தில் வழக்கத்திலிருந்த பல ஆபரணங்கள், தற்காலத்தில் தமிழ்நாட்டில் மறைந்துபோயின. அவற்றில் சிலவற்றை இங்கு கூறுவோம்:-

| | |
|---|---|
| பீலி மகரவாள் மோதிரம் | - கால்விரலணிகள் |
| பாடகம், சதங்கை, காஞ்சரி, சிலம்பு | - கால் அணிகள் |
| மேகலை | - நுகப்பணிகள் |
| குறங்கு செறி | - துடையணி. |

சுமார் *50* வருடங்களுக்கு முன் தமிழ்நாட்டில் வழங்கிய சில ஆபரணங்களும் தற்காலம் மறையத் தொடங்கிவிட்டன. உதாரணமாக:-

**தலைசாமான், மயிர்மாட்டி, தாயித்து, எள்ளுப்பூ, நோன்பு முடிச்சு, காது சில்லரை** முதலியவற்றைக் கூறலாம்.

## வழக்கற்றுப்போன முகத்தலளவு நீட்டலளவு இடை முதலிய மொழிகள்

கால மாறுதலினாலும், அரசர்கள் மாறுதலினாலும், வழக்கங்கள் மாறுதலினாலும், மேற்குறித்த மொழிகள் வழக்கற்றுப் போவதும், புதிய மொழிகள் புகுதலும் இயல்பேயாம். அடியிற்காணும் சில பழய தமிழ் மொழிகள் வழக்கற்றுப் போயின என்று கூறலாம்:-

அமைப்பு-ஓர் நீட்டலளவு சுமார் *35* முதல் *50* கஜம் வரையில் கொண்டது.

ஒரு மா.

| | |
|---|---|
| தொடி | (ஒரு பூர்வீக இடை அளவு) |
| கசரை | (சுமார் ¼பலம்) பூர்வீகக் கல்வெட்டுகளில் குறிக்கப் பட்டிருக்கிறது. |
| கவரை | *1½* கலம் (தொல்காப்பியம்) |
| தூகை | ஒரு சிறிய அளவு. |

நிலமளக்கும் சதுர அளவைக் குறிக்கும் பழைய மொழிகளாகிய, மா, காணி, குழி, வேலி முதலிய தமிழ் மொழிகள் இன்றும் தமிழ் நாட்டில் வழக்கத்தில் இருந்தபோதிலும் சீக்கிரம் இவைகள் மறைந்து போகும்போல் இருக்கிறது. கழஞ்சு என்பது பொன்னை நிறுக்கும் ஓர் பழய இடையாகும். இது தற்காலம் சுமார் *72* முதல் *80* கிரெயின் வரைக்குமாகும். சிறங்கை என்பது ஓர் பழைய அளவைக் குறிக்கும் சுத்தத் தமிழ்மொழியாம். சுமார் *40, 50* வருடங்களுக்கு முன் அது சாதாரண உபயோகத்திலிருந்தது. தற்காலம் அதை உபயோகிப்பவர் மிகவும் சிலரே.

## வழக்கற்றுப் போன இசைத்தமிழ் சொற்கள்

இசைத்தமிழ் முத்தமிழின் ஓர் பகுதியாகும். வடமொழி கலப்பு வருவதற்கு முன்னரே, தமிழர்கள் இசையில் மிகவும் பயிற்சிப் பெற்றிருந்தார்கள் என்பதற்குத் தடையில்லை. ஆகவே அதற்குரிய தமிழ் மொழிகளும் பூர்வக் காலத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டும். சங்கீதத்தின் அஸ்திவாரமாகிய சப்த ஸ்வரங்களாகிய ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம் தைவத்ம், நிஷாதம் என்கிற பெயர்கள் தான் தற்காலம் வழக்கத்திலிருக்கும் சம்ஸ்கிருத மொழிகளாம். தமிழர்கள் ஆதிகாலத்தில் அவைகளுக்கு குரல், துத்தல், கைக்கிளை, ஊழ், இளி, விளரி, தாரம் என்று பெயரிட்டிருந்தனர்; இப்பெயர்களெல்லாம் சுத்தத் தமிழ்மொழிகள். இதுவொன்றே ஆதிகாலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய இசையானது. வடக்கேயிருந்து வந்த சங்கீதக் கலையினின்றும் உதித்ததன்று என்று ரூபிப்பதாகும். **ராகம்** என்பது சம்ஸ்கிருத மொழியாம். அது பூர்வத்தில் தமிழில் **பண்** எனும் பெயருடைத்தாயிருந்தது. பண் என்பது தற்காலத்தில்

வழங்கும் மேள கர்த்தா ராகத்திற்கு ஒப்பாகும் என்று மஹாமஹோபாத்யாயர் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். பூர்வத்தில் **நட்டபாடை, கொல்லி, இரத்னம், பஞ்சுரம், தக்கேசி, கொல்லிக்கௌவாணம், அகத்தை, அரும்பான்** முதலிய அநேகப் பண் வகைகள் வழக்கத்திலிருந்தன: இவைகளை முக்கியமாக தேவாரப் பதிகங்களைப் பாடுவதில் தற்காலத்தவர் உபயோகிக்கின்றனர்.

தமிழ்நாட்டில் பூர்வ காலத்தில் பலவகைப்பட்ட இசைக்கருவிகளும் இருந்தன என்பதற்கு ஐயமில்லை. அவற்றுள் **யாழ்** என்பது மிகவும் சிறந்ததாக விளங்கியது! அதை வாசிப்பவர்களுக்கு யாழ்ப்பாணர் என்று பெயராம். (யாழ்ப்பாணம் என்ற நாடானது; இதனின்றும் பிறந்தது என்பது கவனிக்கத்தக்கது) **வீணை** யென்பது பிறகு வந்த சமஸ்கிருத மொழியாம். சிலர் யாழ் என்பதற்கே வீணை என்று அர்த்தம் கூறுகின்றனர்: இவையிரண்டும் வெவ்வேறான இசைக்கருவிகள் என்பதற்குத் திருவாசகத்தில் திருப்பள்ளி எழுச்சியில் 'இந்நிசை விணையர், யாழினர், ஒருபால், என்று கூறப்பட்டதே போதுமான அத்தாட்சியாகும்.

குழல் அல்லது **வேய்ங்குழல்** என்பது மற்றொரு பழைய தமிழ் மொழியாம்; தற்காலத்தில் இதை **புள்ளாங்குழல்** என்று கூறுகின்றனர்; ஆயினும் சரியான மொழி **புல்லாங்குழல்** என்பதாம்.

இசைக்கருவிகள், நரம்புக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி என மூவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன முற்காலம். முன்னர் நரம்புக் கருவியையும் துணைக்கருவியையும் கருதினோம். இனி தோற்கருவியைக் கருதுவோம். இது தோலாற் செய்யப்பட்ட பறை முதலியவற்றைக் குறிக்கும். அவைகளுக்கு நமது முன்னோர்கள் தாழ்ந்த குரலினையுடைய **தண்ணுமைக் கருவிகள்** என்று பெயரிட்டிருந்தனர். இவற்றுள், **பேரிகை, இடக்கை, உடுக்கை, சல்லிகை, கரடிகை, திமில** முதலிய பலவகை கூறப்பட்டிருக்கின்றன. இவைகளனைத்தும் தமிழ் மொழிகளே. இவைகளுள் பல வழக்கற்றுப் போயின.

## வழக்கற்றுப் போன நாடகத் தமிழ் சொற்கள்

நாடகத் தமிழில் பூர்வத்தில் அநேகத் தமிழ்மொழிகள் வழங்கப்பட்டு வந்தன. அவைகள் பிற்காலத்தில் மறைந்துபோயின. நாடகம் என்பது சம்ஸ்கிருத மொழியாயின், அதற்குப் பதிலாக சுத்தத் தமிழ் மொழி கூத்து என்பதாம். கூத்து என்பதைப் பூர்வீகத் தமிழர்கள் பலவகையாகப் பிரித்திருந்தார். முக்கியமாக அகக்கூத்து, புறக்கூத்து என்பது. அன்றியும் **வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல், பொதுவியல், வரிக்கூத்து, சாதிக்கூத்து** முதலிய பிரிவுகள் இருந்தன. **குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு,** தோற்பாவை, புரியம் எனும் பலவகைக் கூத்துகள் முற்காலத்தில் இருந்தன. இப்பெயர்களெல்லாம் பெரும்பாலும் தமிழ்மொழிகளே. அன்றியும் ஆடல் வகையில், கொடு கொட்டி, கடையம்,

அயிராணி, மரக்கால், குடை, குடம், மல், துடி, பெரு முதலிய **இவைகளெல்லாம்** நாளாவட்டத்தில் மறைந்துபோயின.

நாடகத்தைப் பற்றிய சுத்தத் தமிழ்மொழிகள் பூர்வீகத் தமிழில் இல்லையென்று நாம் எண்ணலாகாது. நாடகமாடுபவர்களைக் குறிக்கும் மொழிகள். **கூத்தர் கண்ணுளார்** என்பவைகளாம்! நேபத்தியம் என்பதற்கு **கண்ணுளர் இருக்கை** என்று கூறப்பட்டிருக்கிறது. **நேபத்தியவிதானத்திற்கு,** பழைய தமிழ்மொழி **எழினி** என்பதாம். பூர்வீகத் தமிழில் ஒருமுக எழினி, பொருமுகவெழினி, கரந்துவரல் எழினி என்று மூவகைத் திரைகள் கூறப்பட்டிருக்கிறது கவனிக்கற்பாலது.

## மறைந்துபோன பூர்வீக நாகரிக மொழிகள்

தமிழ்நாட்டில் பூர்வீக நாகரீகம் மாறி, புதிய வழக்கங்கள் உண்டாக, சில பழைய தமிழ் பதங்கள் வழக்கற்றுப் போயின. (ஸ்ரீ புராணம் எனும் ஜைன நூலில், இக்காலத்தில் வழங்காத பல தமிழ் மொழிகள், காணப்படும் என்று டாக்டர் சுவாமிநாத ஐயர் கூறியுள்ளார்) இவற்றிற்குச் சில உதாரணங்களை இங்கு கருதுவோம்:-

ஸ்திரீகள் முற்காலத்தில் **செம்பஞ்சுக் குழம்பு** கூட்டுதல் வழக்கமாயிருந்தது. தற்காலம் அவ்வழக்கம் அற்றுப் போகவே, செம்பஞ்சு என்றால் இன்னது என்று தமிழர்களுக்கு அர்த்தம் சொல்லவேண்டியிருக்கிறது. **அவத்தகம்** என்பது செம்பஞ்சுக் ஒப்பிற்கு, மற்றொரு பெயராம்; இப்பதத்தை அகராதியில்தான் தற்காலம் காணலாம்.

**நொய்யில்** என்கிற பதத்திற்கு மகளிரின் தோள் ஸ்தனங்களில், வரி கோடு எழுதும் சந்தனக் குழம்பு, என்று நாம் அகராதியைப் பார்த்து அர்த்தம் அறிந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்; இவ்வழக்கத்துடன் இப்பதமும் வழக்கற்றுப் போய் விட்டது.

**அட்டப் பல்லக்கு** என்றால் சாதாரணமாகத் தமிழ் பண்டிதர்களுக்குத் தவிர, மற்றவர்களுக்கு அர்த்தமாகாது. இதன் பொருள் குறுக்காகக் கொண்டுபோகும்படி யமைத்த சிவிகை என்பதாம். பல்லக்கு என்பது தமிழ் மொழி, சிவிகை சம்ஸ்கிருத மொழி (சிபிகா) அட்டப் பல்லக்கு என்பது, புவி அரசர்கள், கவி அரசர்கள் முதலிய பெரியோர், மரியாதையாக உபயோகிக்கும் பல்லக்காம். பல்லக்கு சவாரியே தமிழ்நாட்டில் வர வர குறைந்துகொண்டு வரும்பொழுது, அட்டப் பல்லக்கு, எனும் மொழி மங்கியது ஆச்சரியமற்று.

**கழுமரம், கழுவேற்றுதல்** என்னும் மொழிகள் திருஞானசம்பந்த ஸ்வாமிகள் காலத்தில் உபயோகிக்கப்பட்டு வந்தனர். பிறகு மகம்மதிய அரசர்கள் காலத்திலும் அப்பழக்கம் சிறிது இருந்தமையால், அப்பதங்கள் உபயோகிக்கப்பட்டு வந்தன. ஆங்கிலேய அரசாட்சி தமிழ்நாட்டிற்கு வந்த பிறகு, இக்கோரமான தண்டனை தவிர்க்கப்பட்டு, அப்பதங்களுக்கு உபயோகமே இல்லாமற் போயிற்று.

**தொழுக்கட்டை** என்கிற பதத்தின் அர்த்தம் சில கிராமவாசிகளுக்குத் தான் தெரியும்; பட்டணங்களின் குற்றஞ் செய்வோரை தொழுக்கட்டையிலிடுகிற வழக்கம் அற்றுப் போய்விட்டது; நாளடைவில் இப்பழக்கம் முற்றிலும் அற்று, அப்பதமும் வழக்கினின்றும் நழுகிவிடும் என்பதற்கு ஐயமின்று.

ஐம்பது வருடங்களுக்கு முன்பு பாடசாலைகளில் சரியாகப் படிக்காத பிள்ளைகளுக்கு **"கோதண்டம்"** என்றும் ஓர்சிட்சை விதிப்பதுண்டு; தற்காலம் அச்சிட்சையுடன் அப்பதமும் அற்றுப் போய் விட்டது.

தற்காலம் நமது அனுபவத்தில் மறைந்துகொண்டு வருகிற இரண்டொரு தமிழ் பதங்களைக் கவனிப்போம். **தீவட்டி** 'தீவர்தி' என்பது சிலவருடங்களுக்குமுன், தமிழ் நாடெங்கும் உபயோகிக்கப்பட்டதாம்; வாஷிங்டன். விளக்கு, கிட்சன் விளக்கு, பெட்ரோமாக்ஸ் விளக்கு, மின்சார விளக்கு (Electric light) முதலியன நமது நாட்டில் வர ஆரம்பித்த பிறகு, கோயில் உற்சவங்களிலும் தீவட்டிகளை உபயோகிப்பது குறைந்துகொண்டு வருகிறது; இன்னும் சில வருடங்களிலெல்லாம் இவைகளின் உபயோகமே முற்றிலும் அற்றுப்போம் என எண்ணுவதற்கு இடமுண்டு; **அங்ஙனம் நேரிடுமாயின்** 'தீவட்டி' என்றால் என்ன அர்த்தம் என்று தமிழர்கள் அகராதியைத் திறந்து பார்க்க வேண்டிவரும். இச்சந்தர்ப்பத்தில் சில வருடங்களுக்கு முன் ஒரு பரிட்சையில், டார்ச் லைட் டெகாய்டி (Torch light dacoity) என்பதைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய சிலர், தீவட்டிக் கொள்ளை என்று எழுதாது எலக்ட்ரிக் விளக்குகளுடன் கொள்ளை என்று மொழிபெயர்த்தது ஞாபகம் வருகிறது.

**'இரட்டு'** என்பது ஓர்வகை முரட்டுத் துணியாம். இதை ஜனங்கள் சாதாரணமாக 'ரெட்டு' என்று உபயோகிக்கின்றனர். இப்பதமும் முப்பது நாற்பது வருடங்களுக்கு முன் தமிழ்நாட்டில் சாதாரணமாக உபயோகத்திருந்தது. தற்காலம் அத்துணியுடன் இப்பதமும் மறைந்து கொண்டு வருகிறது.

## மங்கிப்போன தொழில்களைக் குறிக்கும் மொழிகள்

ஆதிகாலத்தில் தமிழர்கள் தமது நாட்டைவிட்டு, படகேறிப் பல தேசங்களுக்குப் போய் வர்த்தகம் செய்து வந்தனர் என்பதை நாம் சரித்திர மூலமாக அறிகிறோம். இச்சந்தர்ப்பத்தில் 'திரைகடலோடியும் திரவியம் தேடு' எனும் ஔவை வாக்கியம் கவனிக்கத்தக்கது. **கப்பல்** என்பது தமிழ் மொழியாகும்; மேல் தட்டையுடைய மரக்கலாம் என்று பொருள்படும். **படகு** என்றால் மரக்கலமாம். மணிமேகலை, சீவகசிந்தாமணி முதலிய காவியங்கள் எழுதப்பட்ட காலத்தில் சமுத்திரபிரயாணமானது சாதாரணமாக இருந்தது தமிழ்நாட்டில் என்பது திண்ணம். அக்காலத்தில் தமிழில் வழங்கி வந்த இத்தொழிலைச் சார்ந்த பல தமிழ் மொழிகள் தற்காலம் இறந்துவிட்டன என்றே கருதவேண்டும் நாம் உதாரணமாக:-

| | |
|---|---|
| அமரம் | படகைத் திருப்பும் தண்டு |
| பிறகத்துக்கட்டை | கப்பல் மரவகை |

| | |
|---|---|
| பத்தேமாரி | சிறு மரக்கலம் |
| பருமல் | கப்பலின் குறுக்கு மரக்கை |
| சம்பான் | தோணி. |

இச்சந்தர்ப்பத்தில் ஜப்பான் பாஷையில் மாலு என்பது சமுத்திரத்தின் மீது செல்லும் கலத்தைக் குறிப்பதாமென்பது கவனிக்கத்தக்கது. அன்றியும் சம்பான் என்பது சீன மொழியாம். முற்காலத்தில் இந்த ஜாதியார்களும். நமது தேசத்தில் தமிழர்களுடன் வர்த்தகம் செய்தனர் போலும்.

தற்காலம் தமிழ்நாட்டில், கப்பலேறி வர்த்தகஞ் செய்பவர்கள் மகம்மதியர்களாகிய தமிழ் பேசும் லப்பையார்களும், காயலார்கள் எனும் ஜாதியர்களேயாதலால், அவர்கள் பேச்சில் கப்பல் யாத்திரையைச் சார்ந்த மொழிகளைக் கேட்கலாம். மேலும் ஆதிகாலத்தில் தமிழர்கள் உபயோகித்த கப்பல்களெல்லாம், மரத்தாலானவை என்பதற்கு மரக்கலம் என்னும் பெயரே போதுமான அத்தாட்சியாம். இச்சந்தர்ப்பத்தில் இரும்பு என்பதே. பூர்வீகத் தமிழ்நாட்டில் வழங்கவில்லையென்றும், நெடுங்காலம் சென்ற பிறகுதான் இரும்பு தமிழ்நாட்டில் வழங்கலாயிற்று என்றும். பூர்வீக நாகரீக சாஸ்திரம் என்று சொல்லத்தக்க ஆர்க்கியாலஜி (Archoealogy) என்னும் சாஸ்திர நிபுணர் கூறுகிறார்கள். இரும்பு என்னும் பதம், கடுமை எனும் அர்த்தத்தைக் கொடுக்கும் இரு என்பதிலிருந்து காரணப் பெயராக வந்ததென்று கால்ட்வெல் துரை அபிப்பிராயப்படுகிறார்.

## மறைந்துபோன உணவுப் பொருள்களைக் குறிக்கும் மொழிகள்

தமிழர்களுடைய உணவுப் பொருள்களின் பெயர்களிலும், பழையன கழித்து புதியன புகுதலாயின; ஆதிகாலத்தில் வழக்கிலிருந்து மறைந்துபோன (அல்லது மறைந்து கொண்டிருக்கும்) மொழிகளுக்கு உதாரணமாக அடியில் வருவனவற்றைக் கூறலாம். **நோபை, நுணவை,** என்பவை பழய காலத்து தின்பண்டங்களாம். (இவை எள்ளாற் செய்யப்பட்டவை என்று கூறப்பட்டிருக்கிறது) **எட்கசி** என்பதும் எள்ளாற் செய்யப்பட்ட ஒர்வித உணவாம்.

## மறைந்த பழய தமிழ் அரசாங்கத்து மொழிகள்

தமிழ்நாட்டு அரசர்களுடைய அரசாட்சி மாறி, அந்நியர்கள் ஆள ஆரம்பித்த பிறகு, அவர்கள் அரசைச் சார்ந்த பல தமிழ் மொழிகள் வழக்கற்றுப் போயின. எல்லாவற்றையும் கருதுதல் கஷ்டமாகும். தமிழ் அரசர்கள் பூர்வத்தில் விதித்து, பிறகு மறைந்துபோன வரிகளின் பெயர்களை மாத்திரம் ஆராய்வோம். இப்படி மறைந்துபோன வரிகள் குறைந்தபட்சம் *240*-க்கு மேலிருக்கின்றன*!* இதை ரூபிப்பதற்காக அகரத்தை முதல் எழுத்தாகவுடைய, அப்படிப்பட்ட வரிகளின் பெயர்களை மாத்திரம் இங்கு குறிக்கிறேன்:-

**அடிகாசு, அரிசிக்காணம் அரிமுக்கை, அதிகரணத் தண்டம் அதிகாரப்பேறு, அதிகாரப் பொன்** மற்றவைகளை (க) அனுபந்தத்தில் கண்டு கொள்க.

பூர்வத்தில் தமிழ்நாட்டில் வரி யென்பதற்குக் கரணம் எனும் பதம் உபயோகப்பட்டு வந்ததாம்.

சில பூர்வீகத் தமிழ் மொழிகள் இரவாமற்போனாலும், பல காரணங்களால் மாற்றமடைந்திருக்கின்றன. இவைகளிற் சிலவற்றைக் கவனிப்போம். உச்சரிப்பதற்குக் கஷ்டமாயிருக்கும் சில மொழிகள், சுலபமான உச்சரிப்புடைய மொழிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. உதாரணமாக:-

| | |
|---|---|
| ஞண்டு | நண்டு |
| ஞாடு | நாடு |
| ஞாண் | நாண் |
| ஞாய் | நாய் |
| ஞாழ் | யாழ் |
| ஞான் | நான் |

இக்காரணத்தினாலேயே **யா** என்கிற எழுத்தை முதலாக உடைய மொழிகளுக்குப் பதிலாக ஆ என்கிற எழுத்தையுடைய மொழிகள் சாதாரணமாக வழங்கப்படுகின்றன; உதாரணமாக:-

| | |
|---|---|
| யாண்டு | ஆண்டு |
| யாள | ஆள |
| யாறு | ஆறு |
| யாக்கை | ஆக்கை |
| யாடு | ஆடு |
| யாம் | நாம் |

சில பூர்வீகத் தமிழ் மொழிகள் உச்சரிப்பதற்குக் கஷ்டமானவை களாயிருக்க, அவைகளுக்குப் பதிலாக, உச்சரிப்பதற்குச் சுலபமான பதங்கள் உபயோகிக்கிறோம். உதாரணமாக:- **உறட்டுக்கை** என்பது ஓர் பழைய தமிழ் மொழியாம், இடது கையென்று பொருள்படும், இடது கையென்று உச்சரிப்பது சுலபமாயிருப்பதால், சாதாரணமாக உறட்டுக்கை என்பது வழக்கற்றுப் போயிற்று. **உறட்டுக்கை மேஸ்திரி என்றும்** ஏனன மொழித்தொடரில் மாத்திரம் இது உபயோகிக்கப்பட்டு வருகிறது. **ஒட்டாரம்** என்றால் பிடிவாதம் என்று அர்த்தமாகும். ஆயினும் சாதாரணமாகப் பிடிவாதம் என்கிற மொழியே வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறித்தவை போன்ற பல தமிழ்மொழிகள் தமிழ்ச் செய்யுள்களில் மாத்திரம் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

## தமிழ்மொழியும் பூர்வீக நாகரிகமும்

ஒரு பாஷையிலுள்ள மொழிகளை ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்போமாயின் அப்பாஷை பேசுபவர்களைப் பற்றிப் பல விஷயங்கள் அறியலாம் என்று எல்லா பாஷா தத்துவ சாஸ்திரிகளும் கூறுகின்றனர், இங்ஙனம் நமது தமிழ் மொழிகளை எடுத்துக்கொண்டு அவைகள் நமக்கென்ன தெரிவிக்கின்றன பார்ப்போம்.

## நாடு, நகரம், முதலியவைகளைக் குறிக்கும் மொழிகள்

சாதாரணமாக நம் நாடுகளின் பெயர்களிலும், ஊர்களின் பெயர்களிலும் என்ன இருக்கிறது என்று எண்ணக்கூடும். கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போமாயின் இவற்றைக் கொண்டும் நாம் அறியக் கூடிய பல விஷயங்கள் இருக்கின்றன என்று வெளிப்படும். புரொபசர் பிளாகி (Prof. Blacki) என்பவர் ஒரு பாஷையின் மொழிகளை ஆராய்ச்சி செய்யுங்கால் ஊர்களின் பெயர்களும், மனிதர்களின் பெயர்களும், மற்றவைகளைவிட அபூர்வமானதும், நூதனமானதும், விசேஷமானதுமான, அநேக விஷயங்களை நமக்கு அறிவிக்கும் என்று கூறியுள்ளார். ஆகவே, நமது தமிழ்மொழிகளில் ஊர்களின் பெயர்களும் நாடு முதலியவைகளின் பெயர்களும் நமக்கு என்ன தெரிவிக்கக்கூடும் என்று ஆராய்வோம்.

தமிழ் வழங்கும் நாடானது முற்காலத்தில் முக்கியமாக சேரதேசம், சோழ தேசம், பாண்டிய தேசம், என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தது அனைவரும் அறிந்ததே; சேர, சோழ, பாண்டிய அரசர்கள் ஆண்டபடியால், இத்தேசங்களுக்கு அப்பெயர்கள் வந்தனவாம். ஆதிகாலத்தில் சோழன், சேரன், பாண்டியன் என்று ஒரு அரசனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்ததாகவும்; அவர்கள் தனித்தனியே பிரிந்து போய் ஜெயித்து ஆண்ட நாடுகளுக்கு அப்பெயர்கள் வந்ததாகவும் முற்காலக் கதையொன்றுண்டு. சோழம், என்பது சோளம் என்னும் பதமாம், அந்த தானியம் அதிகமாய் விளையும் நாடு சோள பூமி அல்லது சோழ பூமியாம், என்று சில தமிழ் அறிஞர் நினைக்கின்றனர். சேர தேசம் என்பது கேரளதேசமென்பதின் மருவாம்; கேரளம் என்றால் தேங்காய், தென்னமரங்கள் அதிகமாய் விளையும் பூமியாதலால் அதற்கு கேரளம் என்று பெயர் வந்தது என்று டாக்டர் கால்ட்வெல் முதலியோர் அபிப்பிராயப்படுகின்றனர். பாண்டிய தேசத்திற்கு முக்காலத்திய பெயர் பாண்டி நாடு என்பதாம். “தென் பாண்டி நாடே ஒளி” என்பதைக் காண்க. சிலர், அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையில் இடங்கு வந்து இத்தேசத்து அரச கன்னிகையாகிய சித்ராங்கதையை மணந்து பப்ருவாஹனன் என்பவனைப் பெற, அவன் மூலமாக பாண்டவ வம்சமானது இங்கு பரவியபடியால், பாண்டவ நாடு - பாண்டியநாடு என்றாயது என்று எண்ணுகின்றனர். இது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. மகாபாரதத்துக்கு முந்திய காலமாகிய ராமாயண காலத்திலேயே இத்தேசமானது பாண்டிய தேசம் என்று வழங்கப்பட்டிருக்கிறது. பாண்டி என்னும் பதத்திற்கு, எருது, வண்டி, ஓர்வகைப் பண் முதலிய பல அர்த்தங்கள் உள. அவற்றில் எதினால் இத்தேசத்திற்கு இப்பெயர் வந்தது என்று நிச்சயமாய்க் கூற முடியாது. இது இன்னும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயமாம்.

தற்காலம் செங்கற்பட்டு ஜில்லாவென்று வழங்கும் பூமிக்கும் அதைச் சுற்றிலுமுள்ள சில பாகங்களுக்கும் **தொண்டைமண்டலம்** என்று ஆதிகாலத்தில் பெயர் இருந்தது. ஒரு சோழ அரசனது புதல்வன், ஆதொண்டை என்பான், குறும்பர்களிடமிருந்து ஜெயித்து, வேளாளர்களைக் குடிபுகச் செய்து, ஆண்ட நாடாகையால் இதற்குத் தொண்டை மண்டலம் என்று பெயர் வந்தது என்று தமிழ் அறிஞர் ஒப்புக்கொள்கின்றனர். அதன் கொடியையோ, மலர்களையோ, கழுத்திற் சூடியபடியால் அந்த அரச குமாரனுக்கு பிறகு ஆதொண்டைச் சக்கரவர்த்தியென்று பெயர் வழங்கலாயிற்று, என்று புராணங்கள் கூறுகின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மேற்கு தேசமாகிய மலையாளத்திற்கு ஐரோப்பியர் **மலபார்** என்று வழங்கினர். இப்பதம் மலை + பார் = மலபார் என்றாயது என்பதற்கு ஐயமில்லை. பார் என்றால் பர்ஷியா பாஷையில் தேசம் என்று அர்த்தம்: இத்தேசத்தவர் தமிழ்நாட்டின் மேற்குக் கரையாகிய மலைகளையுடைய பிரதேசத்தில் ஆதியில் வர்த்தகம் செய்தபடியால் மலையாளம் எனும் இந்நாட்டை மலபார் என்று அழைக்க வேண்டும்.

சோழ அரசர்களுடைய புராதனமான ராஜதானி, **உறையூர்** என்பதாம். அரசன் உறைவிடம், உறையூர் என்றிருக்கலாமோ? இவ்வுறையூருக்கு கோழி என்று பழைய பெயர் ஒன்றுண்டு. ஒரு கோழி ஒரு யானையை இங்கு துரத்தியதாக இவ்வூருக்கு இப்பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது, கோழி வேந்தன் எனும் சொற்றொடரைக் காண்க. உறையூர் என்பது தற்காலம் திருச்சிராப்பள்ளியிலடங்கிய ஓர் சிற்றூராகும்.

பாண்டியர்களுடைய ராஜதானி, **"தென் மதுரை"** என்று ஓர் ஊர் முற்காலத்தில் இருந்ததாக அறிகிறோம். அதைக் கடல் கொண்டதாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. சிலகாலம் **கவாடபுரம்** என்பது ராஜதானியாக இருந்தது. இவ்வூரின் பெயர் சம்ஸ்கிருத ராமாயணத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் கொற்கை என்பதும் பாண்டியர்களுடைய ராஜதானியாகச் சிலகாலம் இருந்ததாக அறிகிறோம். (கொன்றை வேந்தன் கொற்கையாளி என்பதைக் காண்க.) இக்கொற்கை யெனும் ஊர் ஆதி காலத்தில் தாம்ரபர்ணி நதி கடலில் சங்கமமாகும் இடத்தில் இருந்ததாக அறிகிறோம். தற்காலம் கடலானது பின்னிட்டதனால் கொற்கை யெனும் ஊருக்கும் கடலுக்கும் இடையில் சிலதூரம் மணற்பாங்காய பூமி உண்டாயிருக்கிறது.

பாண்டியர்களுடைய கடைசி ராஜதானியாகவிருந்த இம்மதுரைப் பட்டணத்திற்கு மற்றொரு பெயர் கூடல் என்பதாம். 'நான்மாடக் கூடல்' என்று இதற்கு பழைய நூல்களில் பெயராகக் கூறப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் நான்குபுறமும் பெரிய மாடங்கள் (கோபுரங்கள்) உடைத்தாயிருந்ததால் அப்பெயர் வந்ததெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் கடம்பவனம் என்று மற்றொரு பெயர் உண்டு. (மதுரையில் வீற்றிருக்கும் பரமசிவத்திற்கு கடம்பவனநாதர் என்று பெயர் இருப்பதைக் கவனிக்க) ஆதிகாலத்தில் இங்கு பூமி கடம்பவனம் நிறைந்திருக்கவேண்டும். தற்காலத்தில் பெரியகோயிலில் ஸ்தலவிருட்சம் கடம்ப

மரமே. பாண்டியர்களுடைய பழய ராஜதானியைக் கடல்கொள்ள, ஓர் பாண்டிய மன்னன், இங்கிருந்த கடம்பவனத்தை யழித்து கோயில்களைக் கட்டி சுற்றிலும் பட்டணத்தை யுண்டாக்கினதாக ஸ்தல புராணம் கூறுகிறது. இப்பட்டணத்திற்கு ஆலவாய் என்று மற்றொரு பெயர் வந்ததற்குக் காரணம் பட்டணத்தின் எல்லையை அரசன் விரும்பியபோது, ஈசன் கட்டளையால் ஓர் பாம்பானது சுற்றி வந்து எல்லையைக் காட்டியதாக ஸ்தல புராணம். ஹாலம் + ஆஸ்யம் = ஹாலாஸ்யம் = பாம்பின்வாய் என்று பொருள்படும்.

சேரர்களுடைய் ராஜதானி கரூர் என்பதாம் கரு + ஊர் (கருமை நிறமுடைய ஊர்) என்பதாம். டாலமி (Ptolemy) என்னும் மேனாட்டு பூர்வீக ஆசிரியர் இதைக் குறித்திருக்கிறார். இதன் பழய பெயர் வஞ்சி என்பதாம். சிலப்பதிகார காலத்தில் இப்பெயர்தான் வழக்கத்திலிருந்தது. இது மலையாள நாட்டிலுள்ளது; மலையாள மன்னருடைய விருதுகளில் "வஞ்சிபாலன்" என்பது ஒன்றாகும்.

ஆதிகாலத்தில் தமிழ்நாட்டிலிருந்த ஊர்களின் பெயர்களெல்லாம் கேவலம் தமிழ்ச்சொற்களாக இருந்தனவென்று கூறலாம்; உதாரணமாக:- அதிகை, ஆரூர், காட்டூர், இருந்தையூர், கருவூர், மருவூர் முதலியவற்றைக் கூறலாம். சில ஊர்கள், ஆதிகாலத்தில் அவ்விடத்தில் நிறைந்திருந்த விருட்சம், கொடி, செடி முதலியவற்றினின்றும் பெயர் பெற்றிருக்கின்றன, உதாரணமாக:- கடம்பூர், பனங்காட்டூர், காஞ்சி, தில்லை, முல்லை, மருதூர், குறுப்பலா முதலியவற்றைக் கூறலாம். மிருகப் பட்சிகளின் பெயர்களைக் கொண்ட ஊர்களுக்கு உதாரணமாக:- புலியூர், மயிலாப்பூர், நாகப்பட்டணம், நாரையூர், ஆடுதுறை, மான்குடி முதலியவற்றைக் கூறலாம். காடு மலைகளின்றும் பெயர்பெற்ற ஊர்கள்:- முதுகுன்றம், காட்டுப்பள்ளி, வெண்காடு, வலஞ்சுழி, ஆத்தூர், ஆறுகாடு முதலியவற்றைக் கூறலாம். பூமியின் நில, வளம் முதலியவகைகளின்றும் பெயர்பெற்ற ஊர்களுக்கு உதாரணமாக:- களூர், நெல்லூர், கற்குடி, நத்திலம், களத்தூர், மணலி, முதலியவற்றைக் கூறலாம்.

சில தமிழ்நாட்டு ஊர்களின் பெயர்கள், சிதைந்தும் மாறியும் இருக்கின்றன உதாரணங்கள்:-

| தற்காலப் பெயர் | பூர்வீகப் பெயர் |
|---|---|
| தர்மபுரி | தகடூர் |
| திருக்கோயிலூர் | திருக்கோவலூர் |
| ராசிமங்கலம் | ராகசிம்மமங்கலம். |
| பழனி | ஆவினங்குடி |
| ஸ்ரீபெரும்புதூர் | பூதனூர் |
| தஞ்சாவூர் | ராஜராஜேஸ்வரம் |
| அழகர்மலை | திருமாலிருஞ்சோலை |
| | பழமுதிர்சோலை. |

சில ஊர்களின் பெயர்கள், வடமொழியாம் இங்குவந்த பிறகு சம்ஸ்கிருதத்தில் மொழி பெயர்த்திருக்கின்றனர் உதாரணமாக:-

| **தமிழ்ப்பெயர்** | **சம்ஸ்கிருதப்பெயர்** |
|---|---|
| வெண்காடு | ஸ்வேதாரண்யம் |
| மறைக்காடு | வேதாரண்யம் |
| திண்டுக்கல் | பத்மபுரி |
| திருப்புல்லணை(திருப்புல்லாணி) | தர்ப்பசயனம் |
| திருஇடைமருதூர் | மத்யார்ஜுனம் |
| முதுகுன்றம் | விருத்தாசலம் |

முதலியவற்றைக் கூறலாம்.

## கோயில்களினின்றும் பெயர்பெற்ற ஊர்கள்

பிட்சாண்டார் கோயில், சிங்கப்பெருமாள் கோயில், பசுபதி கோயில், மாரியம்மன் கோயில், சங்கரநாயனார் கோயில், சுந்தரப் பெருமாள் கோயில், வைதீஸ்வரன் கோயில் இவைபோன்ற ஊர்களின் பெயர்களெல்லாம், முற்காலத்தில் தமிழ்நாட்டு அரசர்கள், கோயில்களைக் கட்டி, அவற்றைச் சுற்றி குடிகளை வாழச் செய்த பிறகு, அவ்வூர்களுக்கெல்லாம் கோயில்களின் பெயரே வழங்கப்பட்டது என்று ஊகிக்கலாம்.

## கோட்டைகளைக் குறிக்கும் மொழிகள்

கோட்டை என்று சில ஊர்களின் பெயர்கள் முடிகின்றன. இவை ஆதியில் கோட்டைகளாக இருந்து பிறகு அவற்றை சுற்றிலும் ஜனங்கள் வசிக்க ஆரம்பிக்க, அப்பெயர்களையுடைய ஊர்களாயின எனலாம். உதாரணமாக புதுக்கோட்டை, சுந்தர்வக்கோட்டை, கள்ளர்கோட்டை, பட்டுக்கோட்டை, தம்பிக்கோட்டை முதலியவற்றை கூறலாம்.

## சமுத்திரம் என்று முடியும் ஊர்களின் பெயர்கள்

சமுத்திரம் என்றால் கடல் என்று சாதாரணமாய் பொருள்படும், அம்பா சமுத்திரம், ரவண சமுத்திரம், தொர சமுத்திரம் முதலிய ஊர்களுக்கு அப்பெயர் ஏன் வந்தது என்பது ஆராயத்தக்க விஷயம். பெரிய நீர்நிலைகளுக்கு சமுத்திரம் என்று பெயர் வந்திருக்கலாம். இங்கு பெரிய குளங்களிருந்தபடியால் அப்பெயர் வந்திருக்கலாம். பெரிய ஏரிகளுக்கு சாகரம் என்று பெயர் இருப்பதுபோல், கிருஷ்ணசாகர், உசெயின் சாகர் என்பவற்றைக் காண்க.

**மலையாளம்** என்பது மலைகள் அதிகமாயுடைய தேசம் என்பது கூறாமலே தெரியும்.

**கர்நாடகம்** என்பது கருமை நிறமுடையது என்று பொருள்படும். இங்குள்ள பூமி பெரும்பாலும் கருநிறமுடையதாயிருக்கிறது. கர்நாடகம் என்பதே கன்னடம் என்று மருவியதாம்.

**இலங்கை** என்பது லங்கா எனும் சமஸ்கிருத மொழியின் சிதைவாகும். லங்கா என்பதற்கு நான்கு புறமும் நீர் சூழ்ந்த பூமி என்று அர்த்தமாகும்; அதாவது தீவு. தற்காலம் ஆங்கிலத்தில் **சிலோன்** என்று கூறப்படும் தீவுக்கு இப்பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு தீவு அல்லவா? இதற்கு ஆதி காலத்தில் **இரத்தின தீபம்** என்று பெயர் இருந்தது. இதற்குக் காரணம் இங்கு முற்காலத்தில் இரத்தினங்கள் அதிகமாய்க் கிடைத்தபடியால் என்று கூறலாம்; தற்காலமும் அங்கு சில ரத்தினங்கள் கிடைக்கின்றன; சிலோன் எனும் ஆங்கில பதம் சிம்ஹளம் எனும் சம்ஸ்கிருத மொழியினின்றும் வந்ததாம். சிம்ஹளம், சிங்களம் என மருவியது. இப்பெயர் பாலி பாஷையில் சீஹளம் என்றாயது; இதனின்றும் சிலோன் எனப் பெயர் வந்தது. சிங்களத்திற்கு பழைய தமிழ்ப் பெயர் ஈழம் என்பதாம். *(ஈழ தேசம் ஈழ மண்டலம் என்பதைக் காண்க.)* இத்தேசத்தவர்களுக்கு ஈழவர் என்று பூர்வீகப் பெயர் அன்றியும் இலங்கைக்கு **நாக தீபம்** என்று மற்றொரு பெயர் உண்டு. நாக ராஜாக்கள் இங்கு ஆண்டபடியால் அப்பெயர் பெற்றதாம். மலையாள தேசத்தில் **தீயர்** எனப்பட்ட ஜாதியார் இத்தேசத்திலிருந்து வந்தவர்களாக சிலர் எண்ணுகின்றனர்.

இலங்கையின் ஒரு பாகத்திற்கு **யாழ்ப்பாணம்** என்று பெயர். யாழ்ப்பாணர் குடி புகுந்த நாடாகையால் அப்பெயர் பெற்றதாம்; யாழ்ப்பாணர் என்றால் யாழ் எனும் சங்கீதக் கருவியை வாசிப்பவர் என்று அர்த்தமாகும். இரண்டாயிர வருடங்களுக்குமுன் தென் இந்தியாவிலிருந்து தமிழர்கள் இங்கு குடி புகுந்தனர் என்று சரித்திரம் கூறுகிறது. இங்கு குடியேறிய தமிழர்கள் மற்ற பாஷைகள் பேசுபவர்களுடன் அதிகக் கலப்பில்லாமல் வசித்துவந்தபடியால், தற்காலமும் இங்கு பேசப்படும் தமிழ் மொழியானது மிகவும் சுத்தமாயிருக்கிறதென்பது அனைவரும் அறிந்த விஷயமே.

**குடகு** என்பது தற்காலத்தில் கூர்க் (Corg) என்னும் ஆங்கிலப் பெயர் பெற்ற நாடாம். இந்நாடு மேற்கிலிருந்தபடியால் குடம் அல்லது குடதிசை என்பதினின்றும் பிறந்திருக்க வேண்டும். *(குணதிசை, குடதிசை என்பதைக் காண்க).*

**மைசூர்** என்னும்பெயர் மஹிஷாசுரம் எனும் சம்ஸ்கிருத மொழியினின்றும் வந்ததாக எண்ணப்படுகிறது. மஹிஷம் என்றால் எருமை என்று அர்த்தம். ஆதிகாலத்தில் இப்பிரதேசத்திற்கு எருமை நாடு என்றே பெயர் இருந்தது. கொடுந் தமிழ் நாடுகளுள் எருமைநாடு என்று கூறப்பட்டிருக்கிறது. எருமைகள் நிறைந்த நாடு ஆதலால் அப்பெயர் வந்தது போலும்; தற்காலமும் இந்நாட்டிலுள்ள எருமைகள் மிகவும் புஷ்டியாக வளர்ந்து நன்றாகப் பால் கொடுக்கின்றன என்பதைக் கவனிக்கவும். ஆதிகாலத்தில் இங்கு ஓர்வித தமிழ் பாஷையே பேசப்பட்ட தென்பதற்குத் தடையில்லை, அப்பாஷைதான் நாளடைவில் மாறுதலடைந்து கன்னடமாயதென்பர் தமிழ் அறிஞர்.

## குடி என்று முடியும் ஊர்களின் பெயர்கள்

குடி என்றால் குடியிருக்குமிடம் என்று பொருள்படும் (குடிசை, குடில் என்னும் மொழிகளை ஒத்துப் பார்க்க) அன்றியும் தெலுங்கில் குடி என்றால் தேவாலயம் என்று பொருள்படுவதைக் காண்க. இம்மொழியில் முடிகின்ற சில ஊர்களுக்கு உதாரணமாக பரமக்குடி. ஆலக்குடி, கள்ளிக்குடி, பார்ப்பனக்குடி, விளாங்குடி, குத்தங்குடி, கற்குடி, தேவன்குடி முதலியவற்றைக் காண்க.

## குப்பம் என்று முடியும் ஊர்களின் பெயர்கள்

குப்பம் என்பது குப்பை என்னும் சொல்லிருந்து வந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது; ஊருக்கு அடுத்த இடத்தில், குப்பையைக் கொட்டுமிடமாவது, நாளடைவில் இழிகுலத்தார் வசிக்குமிடமாகி, குப்பமெனப் பெயர் பெற்றிருக்கலாம்; உதாரணமாக நெல்லிக்குப்பம் ஆண்டாள் குப்பம், முதலியவைகளைக் கூறலாம். அன்றியும், பல ஊர்களின் பக்கத்தில் குப்பம் எனப்பட்ட இடங்கள் இருக்கின்றன (தனிப்பாடல் ஒன்றில் "குப்பத்துச் செட்டி மகன்" என்கிற பாட்டைக் கவனிக்க.)

எனது தந்தை தாயார்
ப. விஜயரங்க முதலியார்
ப. மாணிக்கவேலு அம்மாள்
ஞாபகார்த்தமாக அச்சிடப்பட்டது

# 2-ம் பாகம்

## தமிழர்கள் பூர்வீக நாகரீகத்தை அறிவிக்கும் சொற்கள்

**பாக்கம்** என்பது பக்கம் என்னும் சொல்லிலிருந்து பிறந்திருக்க வேணும். பெரிய ஊரின் பக்கத்திலுள்ள இடம் என்றும்; உதாரணமாக. புரசைபாக்கம், காவிரிப்பாக்கம், நுங்கம்பாக்கம், காட்டுப்பாக்கம் முதலியவற்றைக் காண்க.

**பள்ளி** என்பது பள்ளத்தாக்கிலுள்ள சிற்றூர் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்; உதாரணமாக, காட்டுப்பள்ளி, செம்பொன்பள்ளி, சிராப்பள்ளி, அகத்தியான்பள்ளி முதலியவற்றைக் கூறலாம்; இதே பதம் தெலுங்கில் பல்லே என்று மாறியிருக்கிறது. கன்னடத்தில் ஹல்லி என்றாயது.

**பேடு** என்பது சிறிய ஊர் என்று சொல்லப்பட்டிருக்கிறது அமரம்பேடு, சூணாம்பேடு முதலியவற்றைக் காண்க.

**பேட்டை** என்பது பேடு என்பதிலிருந்து பிறந்திருக்கலாம். உதாரணமாக சிந்தாதிரிப்பேட்டை, வண்ணாரப்பேட்டை, சேத்துப்பேட்டை, தண்டையார்பேட்டை முதலியவற்றைக் காண்க. ஆதிகாலத்தில் இழி குலத்தவர் வசித்த இடங்களுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

**சேரி** என்பதும் அவ்வாறே முற்காலத்தில் தாழ்ந்த குலத்தவர் வசித்த இடங்களுக்குப் பெயராக இருக்கலாம், இடைச்சேரி, பறைச்சேரி என்பவற்றைக் காண்க.

*என் தந்தை-தாயார்*

*ப. விஜயரங்க முதலியார்*

*ப. மாணிக்கவேலு அம்மாள்*

*ஞாபகார்த்தமாக இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டது*

அநேகம் ஊர்களுக்கு இப்பெயர் உண்டு. கோவில்பட்டி, அக்கரைப்பட்டி, ஆண்டிப்பட்டி, சந்திரப்பட்டி, கணக்கன்பட்டி முதலியவற்றைப் பார்க்க.

**ஊர்-புரம்.** ஊர் என்பது தமிழ் மொழியாம். டாலமி (Ptolemy) என்னும் மேநாட்டு ஆசிரியர் தென் இந்தியாவில் மாத்திரம் *23* ஊர் என்று முடியும் பட்டணங்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார். புரம், புரி என்பவை சம்ஸ்கிருத பதங்களாம், உதாரணமாக பாடலிபுரம், புஷ்பபுரம், புருஷபுரம், ஹஸ்தினாபுரம், லட்சுமண புரம் என்பவற்றைக் காண்க. வடமொழிக்காரர் தமிழ் நாட்டிற்கு வந்த பிறகு தமிழ் ஊர்களுக்கு புரம் அல்லது புரி என்பதைச் சேர்த்து வழங்கலாயினர். உதாரணமாக காஞ்சீபுரம், மதுராபுரி, விறிஞ்சிபுரம், நாகலாபுரம் முதலியவற்றைக் காண்க. புரம் என்கிற மொழி ஆரியர்களால், ஆரியர்களல்லாதாருடைய காவலமைத்த ஊர்களுக்குப் பெயராக உபயோகப்பட்டதென சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

**கோட்டம் நாடு நத்தம்** தொண்டமண்டலமனது. குறும்பர் காலத்தில் *64* கோட்டங்களாகப் பிரித்திருந்ததாகத் தெரிகிறது. கோட்டம் என்பது காவலமைத்த இடம். பாசறை என்பதாம். மதிற் சுவரையுடையது என்றும் பொருந்தும், சிலப்பதிகாரத்தில் கோட்டம் என்பது கோயில் என்னும் பொருளில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கோயிற் சேவற்கொடியோன் கோட்டமும் என்பதைக் காண்க. கோயில்களெல்லாம் ஆதிகாலத்தில் தற்காலத்திலிருப்பது போலவே மதிற்சுவர்களை யுடைத்தாயிருந்தன வென்பதற்கு ஐயமிற்று. ஒவ்வொரு கோட்டமும், அதனைச் சார்ந்த பூமியும், நாடுகளாகப் பூர்வீகத்தில் பிரிக்கப்பட்டது. **நாடு** என்பது **நடு** என்னும் மொழியினின்றும் உற்பத்தியானதாகச் சிலர் எண்ணுகின்றனர். தொண்டைமண்டலம் *79* நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பூவிருந்தமல்லி நாடு, பொன்னேரி நாடு முதலியவற்றைக் காண்க. நாட்டார் என்பது தற்காலம் வேளாள வகுப்பிற் வழங்கும் பதம், நாடுகளின் தலைவர் என்று பொருள்படும். நாட்டாமை = நாட்டாண்மை = நாடு + ஆண்மை = நாட்டுத் தலைமை என்பதாம். ஒவ்வொரு நாட்டிலும் நத்தங்கள் இருந்தன; தொண்டை மண்டலத்தில் *999* நத்தங்களிருந்ததாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

**நத்தம்** என்றால் ஓர் ஊரில் குடியிருப்பிடமாம், வடமொழியர் தென்னாட்டிற்கு வந்த பிறகு பிராம்மணர்கள் வசிக்குமிடத்திற்கு அக்ரஹாரம் என்று பெயர் வந்தவுடன், பிராம்மணர்கள் அல்லாதார்

வசிக்குமிடத்திற்கு நத்தம் என்று வழங்கலாயிற்று. தற்காலமும் கிராமநத்தம் என்றால், வீடுகள் கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிலத்திற்குப் பெயராகும்.

**தாங்கல்** என்று சில ஊர்களுக்குப் பெயர் உண்டு. தாங்கல் என்றால் நீர் நிலை, நீர்தங்குமிடம், என்று பொருள் உண்டு. அதனின்றும் இவ்வூர்களுக்கும் அப்பெயர் வந்திருக்கக் கூடும். (சென்னைக்கு வடக்கில் ஒரு இடத்திற்கு தாங்கல் என்று பெயர் உண்டு.)

**களம்** என்றால் இடம் என்று பொருள்படும். திருக்ஷேத்திரக் கோவையில் 'களம்' அஞ்சும், என்றிருப்பதைக் காண்க. அஞ்சைக் களம், நெடுவங்களம், வேட்களம்.

**குளம், கரை, துறை** என்று முடியும் ஊர்களுக்குப் பெயர் வந்தது நாம் கூறாமலே அர்த்தமாகும்.

**பட்டு** என்பது தமிழ் மொழியாம். பட்டு என்றால் சிற்றூர் என்று பொருள்படும். உதாரணமாக, சேத்துப்பட்டு, செங்கல்பட்டு முதலியவற்றைக் காண்க.

**தேசம், மண்டலம், கிராமம், நகரம்** என்னும் சொற்கள் வடமொழியினின்றும் வந்தனவாம்.

இனி தமிழ்நாட்டிலுள்ள சில ஊர்களின் பெயர்களை எடுத்துக் கொண்டு அவைகளைப் பற்றி நாம் அறியக்கூடிய விஷயங்களை சிறிது ஆராய்வோம்.

*(1)* **காவிரிபூம்பட்டினம்.** இது சமுத்திரக்கரையோரம் இருந்த ஊராகையால் பட்டினம் என்று பெயர் பெற்றது, காவிரி நதி இங்கு சமுத்திரத்தில் சங்கமமாகிறபடியால் காவிரிப்பூம்பட்டினம் என்றாயது. இப்பெயரை நோக்கும்போது காவிரி+புகும்+பட்டினம், அதாவது காவிரியானது சமுத்திரத்தில் புகுமிடத்திலுள்ள பட்டினம் என்று இப்பெயர் வந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. இதற்கு புகார் என்று மற்றொரு பெயர் உண்டு. ஆறு புகு மிடம் என்று பொருள் கூற இப்பதமும் இடங்கொடுக்கிறது. சங்க காலத்தில் **இடையின ரகமும் வல்லின ரகமும்** மாறி உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. தற்காலமும் இப்பட்டினம் இப்பெயர் உடைத்தாயிருக்கிறது; இவ்வூருக்குக் **காகந்தி** என்னும் மற்றொரு பெயர் பூர்வகாலத்தில் வழங்கி வந்தது. அப்பெயர்கொண்ட அரசர்கள் இங்கு ஆண்டமையால் அப்பெயர் வழங்கலாயிற்று என்று அறிகிறோம்.

*(2)* **சோபட்டினம்** இது பழைய ஊர்களிலொன்று. இதைப் பெரிப்ளஸ் (Periplus) என்பதை வரைந்த ஆசிரியர் சோபட்மா (Sopatma) என்று அழைத்திருக்கிறார். பட்டினம் என்னும் பதம் அரண் அமைந்த ஊர்களுக்கு முன் காலத்தில் உபயோகப்பட்டதாக காலஞ்சென்ற தமிழ் அறிஞர் கே. கனகசபை பிள்ளை அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். சிறுபாணாற்றுப்படை இதை எயில்பட்டினம் என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. எயில் என்றால் மதில் என்று பொருள்படும்.

*(3)* **மயிலாப்பூர்** இதற்கு முற்காலத்தில் மயிலை என்றே பெயர் வழங்கி வந்தது. தேவாரத் திருத்தொண்டர் தொகையில் "பொன் மயிலை" என்று கூறப்பட்டிருப்பதால் இது ஒரு மிகவும் புராதனமான ஊர் என்பதற்கு சந்தேகமின்று. மயில் என்னும் பதத்தினின்றும் இப்பெயர் வந்திருக்க வேண்டுமென்று சாதாரணமாக எண்ணப்படுகிறது. சில பழைய நூல்களில் இது மயிலாப்பூர் என்று கூறப்பட்டிருக்கிறது. மயில்கள் சப்திக்குமிடம் என்று ஒருவாறு பொருள் கூறலாம். தேவாரத்தில் இதற்கு **மயிலாப்பு** என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. இதையொட்டி உமாதேவியார் மயில் வடிவமாக சிவபிரானைப் பூசித்ததாக ஸ்தல புராணம் கூறுகிறதைக் காண்க. திராவிட பாஷையின் ஒரு பிரிவென மதிக்கப்பட்ட காண்டி (Gondi) எனும், மத்திம மாகாணத்தில் பேசப்பட்ட ஓர் பாஷையில், மால்பூர் என்று அங்கு ஒரு பட்டணத்திற்கு பெயர் உளது; மால் என்றால் அப்பாஷையில் மயில் என்று அர்த்தமாம்; மயில் என்னும் பதமே அப்பாஷையில் மால் என மருவியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. மயிலை என்றால் ஓர்வகை மல்லிகை, அதனின்றும் இப்பெயர் வந்திருக்கலாம் என்றும் ஊகிக்கின்றனர் சிலர்.

*(4)* **திருவொற்றியூர்** இதுவும் புராதனமான தமிழ்நாட்டிலுள்ள ஊர். திருக்ஷேத்திரக் கோவையில் "**கடலொற்றியூர்**" எனக் கூறப்பட்டிருக்கிறது. இங்குள்ள கோயில் கல்வெட்டொன்றில் இதற்கு ஆதிபுரியென்று பெயர் இருந்ததாக அறிகிறோம்; ஆகவே, இதுவும் மிகவும் பழைய ஊராம். இதையாண்ட ஓர் அரசன் இதை ஒற்றி (குதுவை) யாக வைத்தபடியால் ஒற்றியூர் எனப் பெயர் பெற்றதாக, சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். மற்றும் சிலர் இங்கும் கடலானது ஒற்றிப் போனபடியால் கடல் ஒற்றியூர் எனப் பெயர் வந்ததெனக் கூறுகின்றனர்.

*(5)* **மஹாபலிபுரம்** இது தற்காலத்திய பெயராம்; முற்காலத்திற் இதற்கு மல்லை என்று பெயர் இருந்தது. வைஷ்ணவ ஆழ்வார்கள் இதைக்

கடற் மல்லை என்று அழைத்திருக்கின்றனர்; கடற்கரையிலுள்ள மல்லை என்பதாம். மல்லர் எனும் பல்லவ அரசர்கள் இங்கு ஆண்டமையால் இதற்கு மல்லபுரம் என்று பெயர் வந்திருக்க வேண்டும் என்று சில சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இச்சாதியார் நசித்துப் போகவே அப்பெயரின் அர்த்தமும் மறந்து போகப்பட்டது, பிறக இங்கு கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ள திருவிக்ரமாவதாரத்தில், மஹாபலி சக்ரவர்த்தியின் சிலையுருவத்தைக் கொண்டு மஹாபலிபுரம் என்று இதற்கு பெயர் வழங்கலாயினர். மஹாபலி, சக்ரவர்த்திக்கும் இவ்வூருக்கும் கொஞ்சமேனும் சம்பந்தமில்லை; இங்குள்ள பல பூர்வீகத் கல்வெட்டுகளில் **மாமல்லபுரம்** (மஹாமல்லனுடையபுரம்) என்று கூறப்பட்டிருக்கிறதேயொழிய மஹாபலிபுரம் என்று கூறப்படவில்லை. பூர்வீகத் தமிழ் மொழியின் அர்த்தம் தவறாகப் புதுப்பெயர் பெற்ற ஊர்களிலிது ஒன்றாம்.

*(6)* **தஞ்சாவூர்** தற்காலத்தில் தஞ்சாவூர் என்று சாதாரணமாக வழங்கப்படும் இவ்வூர் சுமார் *1000* ஆண்டுகளுக்குமுன் அரசாண்ட ஓர் சோழ அரசனால் உண்டாக்கப்பட்டதாம். அவன் ஓர் ராஜ ராஜேஸ்வரம் எனும் ஓர் சிவாலயத்தைக் கட்ட அக்கோயிலைச் சுற்றி உண்டாக்கிற ஊருக்கு ராஜராஜேஸ்வரம் என்று பெயராயிற்று. கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பாவில் இதற்கு தஞ்சை ராஜராஜேஸ்வரம் என்றே கூறப்பட்டிருக்கிறது. திருநாவுக்கரசு நாயனார் திருக்ஷேத்திரக் கோவையில் கூறியிருக்கும் தஞ்சையென்பது மற்றொரு பட்டணமாம்.

*(7)* **பழமுதிர்சோலை** என்பது தற்காலம் அழகர் கோயில் என்று வழங்கும் ஊர் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். அங்ஙனமாயின் ஆதிகாலத்தில் அது சுப்பிரமணிய ஸ்தலமாயிருக்கவேண்டும். பிறகு விஷ்ணு ஸ்தலமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். நற்கீரர் பாடிய ஆறுபடை வீடுகளில் இது ஆறாவது ஆகக் கூறப்பட்டிருக்கிறது. பழம்+உதிர்+சோலை = பழமுதிர்சோலையாம்.

*(8)* **சென்னப்பட்டிணம்** இதற்கு ஆங்கிலப் பெயர் **மட்ராஸ்** (Madras) ஆதியில் இது மட்ரா்ஸ் படாம் (Madras Patam) என்றே வழங்கப்பட்டது. இவ்வூர் ஆங்கிலேயரால் *1639* புதிதாய் உண்டாக்கப்பட்டதாம். இப்பெயர் வந்ததற்கு அநேகம் விடைகள் கொடுக்கப்பட்ட போதிலும். அவற்றுளெல்லாம், தற்காலம் பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்டது, மதுரேசன் பட்டணம் என்பதுதான். மதுரை நாயக்கன் அல்லது மதுரேச நாயக்கன் என்றொரு விஜய நகரத் தலைவன் பெயரால் இது வழங்கலாயிற்று

என்பதே. இவ்வூரைச் சாதாரணமாக மெட்ராஸ் என்று அழைத்த போதிலும், தமிழர்கள் இதை சென்னப்பட்டணம் என்றே அழைக்கின்றனர். இப்பெயர் வந்ததற்குக் காரணம் சென்னப்ப நாயக்கன் எனும் விஜயநகர சமஸ்தான அதிகாரி ஒருவன் பெயரினின்றும் வந்தது என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. சென்னப்பட்டணம் என்பது குறுகி, சென்னை என்று வழங்கப்படுகிறது.

*(9)* **பறங்கிமலை** இது சென்னைக்க *11* மைல் தூரமுள்ள ஓர் சிற்றூர். மலையின் தமிழ்ப் பெயர் பறங்கிமலை. பறங்கி என்பது பெரிங்கி **(Feringhee)** எனும் ஐரோப்பிய பதத்தின் மருவாம். அம்மலையில், அல்லது அம்மலையருகில் முற்காலத்தில் குடிபுகுந்த சில ஐரோப்பியர்கள் பெயரால் இது வழங்கலாயிற்று.

*(10)* **பல்லாவரம்** இது சென்னைக்கு *10* மைல் தூரமுள்ள ஓர் கிராமம். இதன் பூர்வீகப் பெயர் பல்லவபுரம். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் சுமார் *300* வருடங்கள் வரையில், காஞ்சியை ராஜதானியாகக் கொண்டு தமிழ்நாட்டில் பல்லவ அரசர்கள் ஆண்டது சரித்திர மூலமாக நாம் அறிந்த விஷயமாம். பல்லவர்கள் என்னும் பெயரினின்றும் பல்லவபுரம் வந்ததென்பதற்கு சந்தேகமில்லை. இங்கு பல்லவர்களால் வெட்டப்பட்ட ஒரு குகைக்கோயில் இருப்பது கவனிக்கத்தக்கது.

*(11)* **ஸ்ரீபெரும்புதூர்** இதன் பழய பெயர் பூதலூர். இங்குள்ள சில கல்வெட்டுகளில் இவ்வுர் பூதலூர் என்றே கூறப்பட்டிருக்கிறது. இங்கு புராதனமாக சிவன் கோயில் ஒன்றிருக்கிறது, சிவ ஸ்தலமாயிருந்தபோது பூதலூர் எனும் பெயர் பெற்றிருந்தது; வைஷ்ணவ ஆசாரியராகிய ராமானுஜர் காலத்தின்பின் வைஷ்ணவ ஸ்தலமாகி ஸ்ரீபெரும்பூதூர் எனும் பெயர் பெற்றது.

*(12)* **காஞ்சீபுரம்** இது தமிழ்நாட்டிலிருக்கும் மிகவும் பழய ஊர்களிலொன்றாம். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இங்கு அரசாண்ட பழய அரசர்களது காலத்திற்கு முன்பே இது இருந்ததென்பதற்கு சந்தேகமில்லை. ஆரியர்கள் வந்த பிறகு அவர்கள் கொண்டாடும் 'சப்தபுரி'களில் இது ஒன்றாம். அன்றியும் "நகரேஷுகாஞ்சி" எனும் சம்ஸ்கிருத மொழித் தொடர் இதன் பூர்வீகப் பெருமையை விளக்குகிறது. காஞ்சி என்பது சுத்தத் தமிழ் மொழியாம் - ஓர் வகைப் பூவரசின் பெயராம். காஞ்சிப் பூ மாலையைப புனைதல் ஓர் பழைய வழக்கம். புறத்துரை இலக்கணத்தில் நன்கு விளங்கும் முல்லையினின்றும் திருமுல்லைவாயல் வந்ததுபோல, காஞ்சியினின்றும் காஞ்சீபுரம் வந்திருக்கவேண்டும். பூர்வ

காலத்தில் இது ஒரு அரசனுடைய பட்டணமாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை; புரம் என்பது சாதாரணமாக மதில் காப்புடைய பட்டணங்களுக்கே கொடுக்கப்பட்டன என்பதை முன்பே குறித்துள்ளோம். மணிமேகலையில் "பொன் எயிற் காஞ்சி" என்று கூறியிருப்பதைக் காண்க. (எயில் = மதிற் சுவர்) இதற்கு *2* மைல் தூரத்திலுள்ள தற்காலம் சின்ன காஞ்சிபுரம் எனும் ஊர் ஆதியில் அத்தியூர் என்று பெயருடைத்தாயிருந்தது. ஆதியில் சிவ ஸ்தலமாயிருந்தது வைஷ்ணவ ஸ்தலமாக மாற்றப்பட்டபின் சின்னக் காஞ்சிபுரம் எனும் பெயர் வந்தது.

*(13)* **செவாப்பேட்டை** ஆங்கிலத்தில் செவாபெட் (Sevapet) என்று மாறியிருக்கிறது. இதன் சரியான பெயர் செவ்வாய்ப்பேட்டையாம். இதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போமாயின் இப்பெயர் வந்ததற்குக் காரணம் அறிவோம். முற்காலத்தில் சில இடங்களில் வர்த்தகர்கள் வாரத்திற்கொருமுறை ஓரிடத்தில் சந்தை கூடுவது வழக்கம். இப்பொழுதும் மதுரை முதலிய ஜில்லாக்களில் இவ்வழக்கம் உண்டு. செவ்வாய்க்கிழமைகளில் இந்த இடத்தில் ஆதிகாலத்தில் சந்தை கூடுவது வழக்கமாயிருந்தபடியால் செவ்வாய்ப்பேட்டை எனப் பெயர் வந்ததாம். புதவார்பெட், சுக்கிரவார்பெட், சனியார்பெட் என்னும் பெயர்களையுடைய கிராமங்கள் இதர ஜில்லாக்களில் இருப்பதைக் காண்க.

*(14)* **அச்சிறுபாக்கம்** அச்சு+இறு+பாக்கம். ஓர் சோழ அரசன் இங்கு ரதத்தின் மீது ஊர்ந்து செல்லுங்கால், ரதத்தின் அச்சானது இங்கு முறிய அரசன் அதை சரிப்படுத்திக்கொண்டு போக இங்கு தங்கவேண்டி வந்தபொழுது, இங்கு ஓர் லிங்கம் பிரதிஷ்டை செய்து, பிறகு கோயில் கட்ட, இவ்வூருக்கு அச்சிறுபாக்கம் எனப்பெயர் வந்ததாம். தேவாரத்தில் குறிக்கப்பட்ட சிவ ஸ்தலங்களில் இது ஒன்றாகும். திரிபுர சம்ஹார காலத்தில் சிவபெருமானுடைய தேரின் அச்சு முறிந்ததாக ஸ்தலபுராணம் கூறும்.

*(15)* **கோழியூர்** இது உரந்தைக்கு பழய பெயர். கோழி+ஊர். இங்கு சோழர்கள் சில காலம் அரசாண்டமையால் கோழிவேந்தன் என்று அவர்களுக்கும் பெயராயிற்று. உரந்தை (உறையூர்)யைப் பற்றி முன்பே கூறியுள்ளோம்.

*(16)* **பந்தர்** என்பது மசுலி பட்டணம். (மச்சிலிப்பட்டணம்) பந்தர் என்றால் முத்துக்குப் பெயர்பெற்ற கடற்கரை பட்டினம் என்று ஒரு அகராதியில் கூறப்பட்டிருக்கிறது. பொதுவில் பந்தர் என்கிற பதத்திற்கு கடல் வியபாரிகள் தங்கள் சரக்குகளை விற்குமிடம் என்று பொருள்படும்.

(பம்பாயில் அபாலோ பந்தர் முதலிய பல பந்தர்கள் இருப்பதைக் காண்க) சென்னையிலும் பந்தர் வீதி என்று ஒரு வீதியுண்டு. மசூலி பட்டினம் பூர்வத்தில் கடல் வியாபாரத்தில் சிறந்த ஊராயிருந்தமையால் இதற்கு பந்தர் எனும் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

*(17)* **தொண்டி** இது ஓர் ஊரின் பெயராம். பூர்வ காலத்தில் மேநாட்டார் தென் இந்தியாவில் இப்பெயர்கொண்ட ஓர் துறைமுகம் இருந்ததாகக் குறித்திருக்கின்றனர். தொண்டி என்கிற ஊர் கேரள தேசத்தில் ஒன்று உண்டு; ராமநாதபுரம் தாலுக்காவில் ஒன்றுண்டு. இப்பெயர்கொண்ட ஊர் சேர நாட்டிலும் ஒன்றுண்டு. வாஸ்தவம் என்னவென்றால், தொண்டி எனும் பதத்திற்கு 'கடற்கழி' என்று அர்த்தம். கடலானது நிலத்தில் பாய்ந்து கழியாகச் செய்யப்பட்ட நிலத்திற்கு தொண்டி என்று பூர்வத்தின் பெயர்; ஆகவே இப்பெயரைக் கொண்ட பல இடங்களிலிருப்பது ஆச்சரியமன்று.

*(18)* **கூடலூர்** என்பது ஓர் பழய தமிழ் ஊரின் பெயர். இதைத் தற்காலம் கடலூர் என்று பலர் கூறுகின்றனர். இது ஒருவிதத்தில் தவறாகும். கூடலூர் கிழார் என்பதைக் காண்க. கூடல்=கடல் சங்கமம் என்பதாம்.

*(19)* **செங்கல்பட்டு** என்பதற்குச் சாதாரணமாக செங்கல்+பட்டு; செங்கல் சூளை போடும் சிற்றூர் என்று அர்த்தம் கூறிவிடலாம். ஆயினும் அப்படி கூறுவது தவறாகும் இவ்வூரின் பழய பெயர் செங்கழுநீர்ப்பட்டு என்று கல்வெட்டுகளில் இருக்கிறது. செங்கழுநீர்ப்பட்டு உச்சரிப்பது சற்று சிரமமாயிருப்பதால் அதைக் குறுக்கி செங்கல்பட்டு என்று வழங்கலாயிற்று. இங்ஙனமே திருச்சிலம் பேரூர் என்பது திருச்சூர் எனவும், பழய பெயர்கொண்ட சோழபுரம் என்பது பழய செங்கடம் எனவும், மயூரபுரம் என்பது மாயவரம் என்றும் குறிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க,

*(20)* **கார்வேடி நகரம்** என்பது காடுவெட்டி நகரமாம், காட்டையழித்து நகரமாக்கப்பட்டது என்று பொருள்படும். காடுவெட்டிச் சோழன் என்பதைக் காண்க.

*(21)* **சோளிங்கபுரம்** என்பது சோழலிங்கபுரம் என்பதின் சிதைவாகும்.

*(22)* **கலிங்கம்** இது ஒரு தேசத்தின் பெயர். அங்கிருந்து முதலில் வந்த ஓர்வகை ஆடைக்கு கலிங்கம் என்று பெயர் வழங்கலாயிற்று.

*(23)* **துயிலி** இது ஒரு கிராமத்தின் பெயர். அக்கிராமத்திலிருந்து முதன் முதலாக நெய்யப்பட்டு வந்த ஆடைக்கு துயிலி என்று பெயர் வந்தது.

*(24)* **அஷ்டக்கிராம** என்பது மைசூரிலுள்ள ஓர் இடம். அவ்விடமிருந்து வரும் ஓர்வித வெள்ளைச் சர்க்கரைக்கு அப்பெயரே வந்துவிட்டது.

## ஆறுகளின் பெயர்கள்

இனி, தமிழ்நாட்டிலுள்ள ஆறுகளின் பெயர்களைப் பற்றி சற்று ஆராய்வோம். ஆறு அல்லது யாறு என்பது சுத்தத் தமிழ் மொழியாம். யாறு என்பது பழந்தமிழ் மொழி; நதம் நதி என்பவை சம்ஸ்கிருத மொழிகள்.

*(1)* **குமரி** என்பது பழங்காலத்தில் ஒரு ஆற்றின் பெயராயிருந்தது. 'தென் குமரி' என்றது குமரியாற்றைக் குறித்தேயாம்; இது தமிழ்நாட்டிற்குத் தெற்கு எல்லையாயிருந்தது; இதைக் கடல் கொண்டதென அறிகிறோம். தற்காலம் குமரி என்பது தென்இந்தியாவின் தெற்குமுனை (Cape)யின் பெயராயிருக்கிறது. கன்யாகுமரி என்பதைக் காண்க.

*(2)* **தாம்ரபர்ணி** இதன் பழய தமிழ்ப் பெயர் **'செம்பில்'** என்பதாம். இதை சம்ஸ்கிருதக்காரர்கள் தாம்பரபர்ணி என்று மொழிபெயர்த்தனர். தாமிரம் = செப்பு இதற்குப் பொருணை என்றும் பெயர் உண்டு. இச்சந்தர்ப்பத்தில் இலங்கைக் தீவிற்கு மிகவும் புராதனமான பெயர் 'தாம்ரபர்ணி' என்பது கவனித்தக்கது. கிரேக்கர்கள் இந்தத் தீவை 'தாம்ரபோன்' என்று அழைத்திருக்கின்றனர். இதற்குக் காரணம் தாம்ரபர்ணிக்களையினின்றும் இத்தீவிற்கு முதல் முதல் குடிபுகுந்தவர்கள், தாங்கள் வந்த இடத்தின் பெயரையே இதற்கும் கொடுத்திருக்க வேண்டுமென்று எண்ணப்படுகிறது. (அமெரிக்காவில் நியூயார்க் என்னும் பட்டணத்திற்கு பெயர் வந்ததைக் காண்க).

*(3)* **காவேரி** பழைய நூல்களில் இதைக் காவிரி என்று அழைத்துளார். இது சுத்தத் தமிழ் மொழியென்று சில தமிழ் அறிஞர் கூறுகின்றனர். மணிமேகலையில் ''காவிரி வாயிலில்'' என்று கூறப்பட்டிருப்பதைக் காண்க; காவிரிப்பூம் பட்டணம் என்பதையும் கவனிக்க; சிலப்பதிகாரத்தில் வேளாளரை காவிரிப் புதல்வர் என்று கூறப்பட்டிருக்கிறது. காவி வர்ணமுடைய ஜலத்தையுடையதால் இப்பெயர் இதற்கு வந்திருக்கலாம் என்று கால்ட்வெல் துரை நினைக்கிறார். காவேரி,

என்றதற்கு காகமானது குடத்தைச் சாய்க்க, அதனாலுண்டான நதி, என்பது புராணக் கதையாகும். கவேரன் என்பவனுடைய புதல்வி ஆதல்பற்றி காவேரி என்றாயது என்பது வடமொழியாளர் கொள்கையாம். இந்நதிக்கு பொன்னி என்று ஒரு பழய பெயர் உளது. பொன்னைப் போல் அத்துணை அருமையானது, அல்லது பொன்னைத் தருவது (தன் வளப்பத்தினால்) என்று பொருள்படும், (பொன்விளைந்த களத்தூர் என்பதை ஒத்திட்டுப் பார்க்க).

*(4)* **பாலாறு** இது சுத்தத் தமிழ் மொழியாம் இதை வட மொழிக்காரர்கள் க்ஷீர நதி என்று மொழி பெயர்த்திருக்கின்றனர்; பால்போன்ற ஜலத்தையுடையது அல்லது பால்போன்ற வெண் மலையையுடையது என்று பொருள்படும்.

*(5)* **பஃறுளி** என்று ஓர் பழய ஆறு தமிழ்நாட்டிலிருந்ததாகப் பழய தமிழ் நூல்கள் கூறுகின்றன; இதையும் கடல் கொள்ளை கொண்டதாம் பல்+துளி=பஃறுளி என்றாயதுபோலும் புறநானூற்றில் பஃறுளி **மணலிலும்** என்று கூறியிருப்பதைக் காண்க. இது குமரியாற்றிற்குத் தெற்கில் இருந்ததாம்.

*(6)* **வைகை** பழய தமிழ் நூல்களில் வையை என்று அழைக்கப்பட்டிருக்கிறது; இதற்குத் தமிழ் நதி என்று மற்றொரு பெயர் உண்டு.

*(7)* **பெண்ணாறு** என்பது சுத்தத் தமிழ் மொழியாம். பெண்+ஆறு=பெண்ணாறு; **பெண்ணை** என்றும் கூறப்பட்டிருக்கிறது.

*(8)* **குடத்தலை** இது சம்ஸ்கிருதத்தில் குசஸ்தலி என்று மாற்றப்பட்டிருக்கிறது.

*(9)* **வெள்ளாறு** **வெள்** (வெண்மையான)+ஆறு; அல்லது வெள்ளம்+ஆறு என்றிருக்கலாம்.

*(10)* **வெட்டாறு** என்பது வெட்டப்பட்ட ஆறு என்று பொருள்படும். ஒரு சோழ அரசன் இதை வெட்டி உண்டாக்கியபடியால் இப்பெயர் பெற்றது; இது சுபாவமாக உண்டான ஆறன்று.

*(11)* **குடமுருட்டி** குடம்+உருட்டி; குடத்தையே உருட்டிக் கொண்டு போகும்படியான, அத்துணை கனவேகமாய்ச் செல்லும் பிரவாகமுடையதெனப் பொருள்படும்.

## மலைகளின் பெயர்கள்

மலையென்பது பெரிய பர்வதத்தையும், குன்று என்பது சிறியதையும் குறிக்கும் தமிழ்ச் சொற்களாம். அவற்றுள் சிலவற்றை ஆராய்வோம்.

*(1)* **திருக்கழுக்குன்றம்** கழுகு+குன்றம் = கழுக்குன்றம், கழுகுகள் வசிக்கும் குன்றம் என்று பொருள்படும். (இந்தியாவின் வடக்கில் கிருத்திர கூடம் என்று ஒரு மலை இருப்பதைக் காண்க) கிருத்திரம் என்றால் கழுகு என்று பொருள்படும்.

*(2)* **திருப்பரங்குன்றம்** திரு+பரம்+குன்றம். இது புராதனமான ஜைனகாவியங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. பரன் என்பது பரமசிவத்தின் பெயராம்.

*(3)* **நீலகிரி** நீலம்+கிரி, நீலவர்ணமுடைய மலையாம். தூரத்திலிருந்து இம்மலையை நோக்கினால் நீலமலையாய்த் தோன்றுவதைக் காணலாம்.

*(4)* **நாகமலை** நாம்+மலை, பாம்பைப்போல் நீண்டும் வளர்ந்தும் இருக்கும் மலை.

*(5)* **பசுமலை** பசு+மலை. பசுவின் உருவத்தையுடைய மலை என்பதாம். மதுரை ஸ்தலபுராணத்தைப் பார்க்க.

*(6)* **யானைமலை** யானை+மலை யானையின் உருவுகொண்ட மலை. தூரத்திலிருந்து பார்த்தால் யானை படுத்திருப்பதுபோல் காணும்.

*(7)* **வள்ளிமலை** இப்பெயர் பூர்வீக திராவிடத் தெய்வமாகிய முருகர் மணந்த வள்ளியின் பெயரினின்றும் பிறந்ததாம். இந்த வள்ளிமலை எனும் பெயர் அநேக சுப்பிரமணிய ஸ்தலங்களிலிருக்கும் சிறுமலைகளுக்கும் பெயராயினது.

*(8)* **திருச்செங்கோடு** திரு+செம்+கோடு சிவந்தசிகரத்தையுடைய குன்று என்பதாம்.

*(9)* **பறங்கிமலை** முன்பே இதைப்பற்றி கூறியுள்ளோம்.

*(10)* **மலயபர்வதம்** இதற்கு மலயம் என்றும் பெயர். கன்யாகுமரிக்கு அருகிலுள்ள பர்வதம். மல்யம் என்றால் சந்தனம் என்று பொருள். சந்தன விருட்சங்கள் அதிகமாயுள்ளதால் இப்பெயர் வந்ததிருக்க வேண்டும்.

*(11)* **திண்டுக்கல்** திண்டு+கல் திண்டைப்போல் இருக்கும் ஒரே பாறையாலாய சிறு குன்று.

## பூர்வீக மனித வர்க்கத்தின் பெயர்கள்

பூர்வ காலத்தில் தமிழ்நாட்டில் வசித்த ஆண் பெண்களின் பெயர்களைச் சற்று கருதுவோம். ஆதிகாலத்தில் அப்பெயர்களெல்லாம் சுத்தத் தமிழ்மொழிகளாக இருந்தனவென்பதற்குச் சந்தேகமில்லை; உதாரணமாக - அதிகன், ஏலேலன், ஆதன், கிள்ளி, கோவலன், அந்திமான் பெயர்களையும், கண்ணகி, மாதவி, கவுந்தி, அஃதை, சோணனை, அங்கவை பரவை முதலிய பெண்டிரின் பெயர்களையும் கூறலாம். இப்பெயர்களெல்லாம் அவர்களின் பெற்றோர் வைத்த பெயர்களைப்போல் காண்கின்றன. எழிலி, காரி, ஓரி, ஒன்னி, பாரி, பேகன், மலையன் எனும் கடை எழு வள்ளல்களின் பெயர்களையும் கவனிக்க. பூர்வீக அரசர்களுடைய பெயர்களில் சேரமான் பெருஞ் சேரலிரும்பொறை, முதுகுடுமிப் பெருவழுதி, நலங்கிள்ளி, முதலியவற்றைக் கவனிக்க, செழியன் வழுதி என்பது பாண்டிய அரசர்களின் பெயராம். கிள்ளி என்பது சோழ அரசர்களுடைய பெயராம். பொறை என்பது சேர அரசர்களின் பெயராம்.

வடமொழிக் கலப்பு வந்த பிறகு பெரும்பாலும் பெயர்களெல்லாம் சம்ஸ்கிருத மொழிகளாக மாற்றப்பட்டன; உதாரணமாக, குலோத்துங்கன், பராந்தகன், அனபாயன், ராஜசிம்ஹன், விஷ்ணுவர்த்தனன், ராஜேந்திரன், விஜயவர்மன், மஹேந்திரவர்மன் முதலிய ஆண் மக்கள் பெயர்களையும், மாதவி, மணிமேகலை, காமாட்சி, விசாலாட்சி முதலிய ஸ்திரீகளின் பெயர்களையும் கூறலாம்.

இனி, சங்கப் புலவர்களின் பெயர்களைக் கருதுமிடத்து. முதல் இடைச்சங்கங்கள் இருந்தனவோ இல்லையோ என்று சிலர் சந்தேகிக்கிறபடியால், அப்பெயர்களைவிட்டு, கடைச்சங்கப் புலவர்களின் பெயர்களுள் சிலவற்றைக் கருதுவோம்; சிறு மேதாவியர், சேந்தம்பூதனார், அறிவுடையனார், நக்கீரனார் முதலியோர் கடைச் சங்கத்துப் புலவர்களுள் சிலருடைய பெயராகும்; இவற்றுள் சிறு மேதாவியர், பெருங் கூற்றூக்கிழார் முதலிய பெயர்கள் அவர்கள் தந்தை தாயார் இட்ட பெயராகத் தோன்றவில்லை. அவர்களுடைய சிறப்பு பெயர்களாகத் தோன்றுகிறது. இப்பெயர்களுள் சிலவற்றை எடுத்துக் கொண்டு ஆராய்வோம்:-

*(1)* **சிறு மேதாவியர்** என்பது அவரது புத்தியைக் குறிக்கும் சிறப்புப் பெயராகத் தோன்றுகிறதேயொழிய அவரது நாமகரண காலத்தில் வைத்த பெயராகக் காணோம்.

*(2)* **ஆதங்கோட்டாசான்** இதைப் படித்து பார்க்குமிடத்து ஆதங்கோடு என்னும் ஊரிலுள்ள ஆசான் = ஆசிரியன், என்று பொருள்படுகின்றதேயொழிய பிறந்தபோது வைத்த பெயராகக் காணப்படவில்லை.

*(3)* **கோவூர்கிழார்** கோவூர் என்பது அவர் பிறந்த ஊராகும் அல்லது அவர் வசித்துக்கொண்டிருந்த ஊர் ஆகும். கிழார் என்பது வேளாளர்களுக்குள் பழய காலத்தில் வழங்கப்பட்ட பட்டப்பெயராகும். அவருடைய சொந்தப் பெயர் தெரியவில்லை.

*(4)* **தொல்காப்பியர்** தொல்காப்பிய நூலாசிரியர் இவர். தொல்+காப்பியம்= பழைய காப்பியம் என்பதாம். இந்நூலை இயற்றியவருக்கு தொல்காப்பியர் எனும் பெயர் சிறப்புப் பெயராக வந்ததாகத் தோன்றுகிறது; இவரது தாய் தந்தையர் இவர் பிறந்தவுடன் இவருக்கு இப்பெயர் வைத்ததாக எண்ணுவது உசிதமன்று. தொல்காப்பியக்குடி என்று ஊரோ, குலமோ இருந்ததாகச் சிலர் கூறுகின்றனர். இதனின்றும் தொல்காப்பியக்குடியிற் பிறந்தவர் தொல்காப்பியர் என்று சிலர் கூறுகின்றனர்; இதைவிட தொல்காப்பிய நூலாசிரியர் உதித்த இடமோ, குலமோ, அவரது சிறப்பினால், அப்பெயர்பெற்றது என்று எண்ணுவது சிறிது மேலானது என்று எண்ணத்தக்கதாயிருக்கிறது.

*(5)* **மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்** மதுரையில் பிறந்த அல்லது வாழ்ந்த, கூலம் = நெல் முதலிய எண்வகைத் தானியம் வியாபாரம் செய்யும் சாத்தனார் என்று பொருள்படுமேயொழிய அவரது இயற் பெயராகாது.

*(6)* **இளங்கோவடிகள்** என்பது, அரசருக்குப்பின் பிறந்த இளையவராகிய சமண சன்யாசி என்று பொருள்படும். இவர் சன்யாசம் வாங்கிக் கொண்ட பிறகு இப்பெயர் வந்திருக்கவேண்டும். பூர்வ ஆசிரமத்துப் பெயரல்ல.

(புத்தநந்தி, பவணந்தி, திருத்தக்கதேவர், நேமிநாதர் முதலிய பெயர்கள் புத்த சமணர்களுடைய பெயர்களாகும்.)

*(7)* **சம்பந்தர்** இவரது முழுப்பெயர் திருஞானசம்பந்தர் என்பதாம். திரு+ஞானம்+சம்பந்தம். சம்பந்தர் என்பது சம்ஸ்கிருத மொழியினின்றும் வந்ததாம். சம்பந்தர் இதை நோக்கு மிடத்து இது இவரது இயற்பெயராகத் தோன்றவில்லை; சிறப்புப் பெயராகத் தோன்றுகிறது. இவருக்குப் பிள்ளையார் என்றும், ஆளுடையபிள்ளையார் என்றும் பெயர் உண்டு.

*(8)* **திருநாவுக்கரசர்** இப்பெயர் இவருக்குச் சிறப்புப் பெயராகும். இவரது இயற்பெயர் மருணீக்கியார் என்பதாம். மருள்+நீக்கியார்= மருளைநீக்கியவர். என்பது பொருளாம். இவர் சமண மதத்தைச் சார்ந்தபொழுது இவருக்கு தருமசேனர் என்று சமணர் பெயர் வைத்தார். தற்காலமும் ஒரு மதத்தைவிட்டு மற்றொரு மதத்தைச் சாரும் ஒருவனுக்கு புதுப்பெயர் கொடுக்கப்படுவதை கவனிக்க.

*(9)* **சுந்தரர்** இவருக்கு இவரது பெற்றோர் இட்ட பெயர் நம்பி ஆரூரர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆரூர் என்பது திருவாரூராம்; நம்பி என்பது ஆடவரின் சிரேஷ்டன் என்று பொருள்படும். இவரது முழுப்பெயர் ஆலால சுந்தரர் என்று இருப்பதால் இவரது இயற்பெயர் சுந்தரர் என்பதுதான் இருக்கலாமெனத் தோன்றுகிறது.

*(10)* **மாணிக்கவாசகர்** இப்பெயர் சிறப்புப் பெயரென தமிழ்ப் புலவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இவரது பிள்ளைத் திருநாமம் வாதவூரர் என்று சிலர் கூறுவர்; இதுவும் காரணப் பெயராகத்தான் காணப்படுகிறது. இவர் பிறந்த இடம் வாதவூர் என்பதாயின் இவரை வாதவூரர் என்று காரணப்பெயராக அழைத்திருக்க வேண்டும். இவருக்கு அரசன் தென்னவன் பிரமராயன் என்றும் பட்டப்பெயர் கொடுத்ததாக அறிகிறோம். ஆகவே, அக்காலத்திலும் அரசர்கள் பெரியோர்களுக்குப் பட்டப்பெயர்கள் வழங்கும் வழக்கம் உண்டென்பதை இதனால் அறிகிறோம்.

## இடைக்காலத்து தமிழர்களின் பெயர்கள்

இனி இடைக் காலத்து தமிழ் அறிஞர்களுடைய பெயர்களுள் சிலவற்றை ஆராய்வோம்.

*(1)* கவிச் சக்ரவர்த்தியாகிய **கம்பர்.** இவர் இயற்பெயர் கம்பர் என்பதுதானா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இவர் பிறந்த சாதியினின்றும் இவருக்கு இப்பெயர் வந்திருக்கலாம் எனச் சிலர் ஊகிக்கின்றனர். கம்பங் கொல்லையை இளவயதில் இவர் காத்தபடியால் இவருக்கு இப்பெயர் வந்ததெனவும் கூறுகிறார்கள்; இன்னும் சிலர் இவரைக் கம்ப நாடர், நம்ப நாட்டாழ்வார் என்று கூறியிருப்பதால் இவர் பிறந்த, அல்லது வசித்த தேசத்தினின்றும் இவருக்கு இப்பெயர் வந்திருக்கலாம் என்று எண்ணுகிறார்கள். (கம்பம் என்று ஓர் ஊர் தற்காலமும் தமிழ்நாட்டில் உளது. கம்ப நாடு என்றும் ஓர் நாடு உளது.)

*(2)* **ஒட்டக்கூத்தர்** இவர் இயற்பெயர் கூத்தர் என்று சொல்லப்படுகிறது. இவரது தாய் தந்தையர் இவருக்குக் கூத்தர் என்று பெயரிடப்பட்டிருப்பார்கள் என்பது சந்தேகத்திற் கிடமாம்; சிலர் அம்பலக் கூத்தர் என்று சிவபெருமானுக்குப் பெயரிருத்தலால் கூத்தர் என்று குறுகிய பெயராயிருக்கலாம் என்பார் சிலர். ஒட்டம் என்றால் பந்தயம் என்று பொருள்படும். இவர் மற்றப் புலவர்களுடன் பந்தயம் வைத்துப் பாடியபடியால் இப்பெயர் இவருக்குச் சிறப்புப் பெயரானது என்பார் மற்றவர்கள். சிலர் அந்தத் தலைகளை ஒட்டச் செய்ததினால் ஒட்டக்கூத்தர் என்று இவருக்கு சோழ அரசர்கள் பட்டப்பெயர் கொடுத்தார்கள் என்று கூறுகிறார்கள். இது தற்கால ஆராய்ச்சிக்கு பொறுத்தமானதாயில்லை.

*(3)* **புகழேந்தி** = புகழ்+ஏந்தி. இதை நோக்கு மிடத்து இப்பெயர் சிலருக்கு இயற்பெயராகத் தோன்றவில்லை; சிறப்புப் பெயராகத்தான் காண்கிறது.

*(4)* **பரிமேலழகர்** இவரது இயற்பெயர் அழகர் எனக் கூறப்பட்டிருக்கிறது. அழகர் மலை, அழகர் கோயில் என்பதைக் காண்க. பரிமேல்அழகர் என்பது இவரது சிறப்புப் பெயராகும்.

*(5)* **காளமேகப் புலவர்** இது இவரது சிறப்புப் பெயராம். காளமேகம் ஜலத்தை வர்ஷிப்பது போல் கவிகளை வர்ஷிப்பவர் என்று பொருள்படும். இவர் ஜாதியில் வைஷ்ணவப் பிராம்மணர் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இவர் பெயர் வேறாக இருந்திருக்க வேண்டும்.

*(6)* **சேக்கிழார்** பெரியபுராணம் இயற்றியவர். இது இவரது குடிப்பெயரினின்றும் வந்ததாம். குன்றத்தூரில் சேக்கிழார் குடியென்றும் சைவ வேளாளர் வகுப்பில் பிறந்தமையால் இப்பெயர் பெற்றவர் என்று நினைக்கலாம். (அல்லது இவர் பிறந்த பெருமையால் அவ் வகுப்பினருக்கு

சேக்கிழார் குடி என்று பெயர் வந்ததோ?) இவரது தந்தையின் பெயர் குன்றத்தூர் கிழார் என்று கூறப்பட்டிருக்கிறது. குன்றத்தூர் எண்ணத்தூர் என்று வழங்கும் ஊரின் பெயராகும். கிழார் என்பது ஒரு வேளாள வகுப்பின் பட்டப்பெயராகும். ஆகவே இப்பெயரை நாம் ஒருவாறு இவரது பட்டப்பெயராகக் கொள்ளலாம். சேய்+கிழார்=சேக்கிழார் என்றாயது என்பாருமுளர்.

*(7)* **ஸ்ரீ வில்லிப்புத்தூரார்** என்பது ஸ்ரீ வில்லிப்புத்தூரில் பிறந்தமையால் வந்த காரணப்பெயராகும்.

இதுபோலவே **அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர்** என்பவை காரணப் பெயர்களாகத்தான் காணப்படுகின்றன.

## சில வைஷ்ணவப் பெயர்கள்

*(1)* **பொய்கையார்,** *(2)* **பூதத்தார்,** *(3)* **பேயார்** என்னும் முதன் மூன்று ஆழ்வார்களின் பெயர்கள் காரணப்பெயர்களாகவே தோன்றுகின்றன. பொய்கையார் என்பது பொய்கையில் அவதரித்தவரென்றும், பூதத்தார் என்பது பூதம் எனும் பதத்தி நின்றும் பிறந்ததென்றும், பேயார் என்று பேய் எனும் மொழியினின்றும் உண்டான தென்றும், இம்மூன்று பெயர்களைக் காரணப்பெயர்களாதக் கொள்ளப்படுகின்றன. இவர்களது இயற்பெயர் தெரியவில்லை.

*(4)* **திருமழிசையாழ்வார்** திருமழிசை எனும் ஊரிற் பிறந்தபடியால் இவருக்குக் காரணப்பெயராகும்.

*(5)* **பெரியாழ்வார்** பெரிய - ஆழ்வார் எனும் காரணப் பெயராகும். இவரது இயற் பெயர் விஷ்ணு சித்தர் என்பதாம். விஷ்ணு வினிடத்தில் சித்தத்தை வைத்தவர் என்று பொருள்படும்.

*(6)* **ஆண்டாள்** மற்றொரு பெயர் **சூடிக்கொடுத்தாள்**. இவ்விரண்டும் சிறப்புக் காரணப் பெயர்களேயாம். இப் பெண்மணியின் இயற்பெயர் கோதை என்பதாம். நாய்ச்சியார் என்றும் மற்றொரு பெயர் உண்டு. நாய்ச்சி என்பதற்கு தலைவி என்று பொருளாம். தலைவன் தலைவி; நாயகன் நாய்ச்சி என்பதைக் காண்க.

*(7)* **திருமங்கையாழ்வார்** இவரது இயற்பெயர் **கலியன்**. இவருக்கு மற்றைப் பெயர்கள், கலிகள்ளி, மாகாலன், நீலன் என்பதாம். இவற்றுள் நீலன் என்பது இயற்கை பெயராகவும், மற்றவைக் காரணப் பெயர்களாகவும்

கொள்ளப்படுகின்றன. மாகாலன் என்பது பகைவர்களுக்கு யமனைப் போன்றவர் என்று பொருள்படும். கலியன் என்பது சேனைத் தலைவன் எனும் பொருளுடைத்து; கலிகள்ளியென்றால் கலியை துவம்சம் செய்தவர் என்று பொருள் தந்திடும். இவருக்கு அரட்டமுக்கி என்றும் சிறப்புப்பெயர் உண்டு. அரட்டு+அமுக்கி = குறும்பை அடக்கியவர் என்றாம்.

*(8)* **தேசிகர்** இவருக்குத் தற்காலம் வழங்கும் பெயர் வேதாந்த தேசிகர் என்னும் சிறப்புப் பெயராம். தேசிகன் என்றால் குரு என்று பொருள்படும். இவரது இயற்பெயர் வேங்கடநாதன் என்பதாம் திருவேங்கடத்திலெழுந்தருளியிருக்கும் விஷ்ணுமூர்த்தியின் வரப் பிரசாதத்தால் உதித்தபடியால் இவரது தாய் தந்தையர் இப்பெயரை இவருக்கு இட்டனர்போலும். இவரது பாசுரங்களின் கடையில் இவரது இயற்கைப் பெயரை அமைத்து இவர் பாடியிராவிட்டால் இவரது இயற்கைப் பெயர் மறைந்து போயிருக்கலாமென்றோ?

மேற்குறித்த பூர்வீகப் பெயர்களை ஆராயுமிடத்து, அக்காலத்தவர் "ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே என்னும் பழமொழியை மிகவும் கைப்பற்றி நடந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இடமிருக்கிறது.

## மத்திம காலத்தில் மனிதரின் பெயர்கள்

இவைகளை நாம் பெரும்பாலும் கி.பி. *1000* முதல் *1300* அல்லது *1400* வரையில் நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகளினின்றும் அறிகிறோம்; இவைகளுக்கு உதாரணமாக :- காங்கேயராயன், லங்கேஸ்வரன், காளிகேசன், காளிமாரன், வயிரமேக படாரன், தாரைக் காணி சிங்கன் - கூறலாம். இவைகளும் பெரும்பாலாக காரணப் பெயர்களாகவே காண்கின்றன.

## தற்கால மனிதர்களின் பெயர்கள்

தற்காலத் தமிழ்நாட்டிலுள்ள ஜனங்களின் பெயர்களைக் கருதுமிடத்து நூறு பெயர்களை எடுத்துக் கொண்டு ஆராய்வோமாயின், அவற்றுள் எண்பதுக்கு மேலாக விஷ்ணுவின் பெயரோ, சிவபிரான் பெயரோ, முருகக்கடவுள் பெயரோ, நாயன்மார்கள், ஆழ்வாராதிகள் பெயராகவோ யிருக்கும். இப்பெயர்களுள்ளும் ராமன், கிருஷ்ணன் என்னும் பெயர்கள் அல்லது அப்பெயர்கள் கலந்த நாமங்கள் நூற்றிற்கு முப்பதுக்கு மேலாக இருக்கும்.

சில பெயர்கள் சில ஜில்லாக்களில் மாத்திரம் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் சோணமுத்து, சுடலைமுத்து, பேச்சிமுத்து முதலிய பெயர்களைக் கவனிக்க.

## ஜாதிப் பெயர்கள்

இனி தமிழ்நாட்டில் வழங்கும் ஜாதிகளின் பெயர்களைச் சற்று ஆராய்வோம். பூர்வகாலத்தில் தமிழ்நாட்டு நிலங்கள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐவகையாகப் பிரிக்கப்பட்டிருப்பதை முன்பே குறித்துள்ளோம். பாலை என்பதை நீக்கி மற்ற நான்கு வகை நிலங்கட்கு நானிலம் எனப் பெயர் கூறப்பட்டிருகிறது.

*(1)* **குறவர்** இவர்கள் குறிஞ்சி நிலத்தில் வசிப்பவர் ஆவார். அதாவது மலைநாட்டில் வசிப்பவர். இவர்கள் வாழும் ஊர்களுக்கு குறிஞ்சி என்று சாதாரணப் பெயராம். இவர்கள் தெய்வமாகிய முருகவேளுக்கு குறிஞ்சிக் கிழவன் என்று பெயர் உண்டு. முருகர் மணந்த வள்ளிக்குக் குறமகள் என்று பெயரிருப்பதைக் காண்க.

*(2)* **வேளாளர்** இப்பதமானது வெள்ளாழன் அல்லது வெள்ளாளன் என்று சாதாரணமாக வழங்கப்படுகிறது; வெள்ளத்தை ஆள்பவன் வெள்ளாளன் என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. ஆறுகளின் மூலமாக வரும் வெள்ளத்தை மருத நிலத்திற்குத் திருப்பி, அவைகளைப் பயிரிடுவதற்கு உபயோகப்படும்படிச் செய்வதினால் இப்பெயர் கிடைத்தாம். வேளாளத் தலைவர்களுக்கு வேளிர் என்று பெயர். வேள் = நந்நிலம், ஆகவே நிலத்தை யாள்பவருக்கு வேளாளர் என்று பெயர் என்று திரு கனகசுந்தரம் கூறியுளார்.

*(3)* **காராளர்** கார்காத்தார், கார்+காத்தார் கார் என்றால் மேகம். மேகங்களினின்றும் இழியும் ஜலத்தை குளங்களிலும் ஏரியிலும் சொரிந்து நிலப்பயிருக்கு உபயோகப்படுத்துபவர் என்று அர்த்தமாகிறது. தற்காலமும் கார்காத்தார் என்று பிரிவினர் தெற்கில் தமிழ்நாட்டில் உளர்.

*(4)* **இடையர்** இடை நிலத்திலிருப்பவர் என்று பொருள்படும். அதாவது குறிஞ்சி நிலத்திற்கும், முல்லை நிலத்திற்கும் இடையிலிருப்பவர்களாம். இவர்களுக்கு ஆயர் என்று பெயர் உண்டு. ஆ என்றால் பசு. பசுக்களை மேயப்பவர்களாதலால் இப்பெயர் பெற்றனர். இவர்கள் வசிக்கும் ஊர்களுக்கு பாடி என்று பெயர்; ஆயர்பாடி என்பதைக் காண்க.

*(5)* **மறவர்,** பாலை நிலத்தில் வசிப்பவர்களுக்கு மறவர் என்று பெயர். **மறம்** என்றால் **வலிமை வீரம்** என்று பொருள்படும்.

*(6)* **உழவர்** மருத நில மக்களுக்கு இப்பெயர். உழுது பயிர் செய்பவர்கள் என்றாம்.

*(7)* **வேடர்** வேட்டையாடி ஜீவிப்பவர் இவர்களுக்கு எயினர் என்றும் பெயர்.

*(8)* **கள்ளர்**. கள்ளத்தொழிலினால் ஜீவிப்பராவார்கள்.

*(9)* **பரவர்** நெய்தல் நிலவாசிகள், அதாவது கடற்கரையோரம் இருப்பவர்கள். இவர்களுக்குக் கரையார் என்றும் பெயர்; சமுத்திரக் கரையில் வசிப்பதினால் இப்பெயர் பெற்றனர்; இவர்களுக்கு பரதவர் என்றும் பெயர் உளது.

மரவர், எயினர், பரதவர் இவர்களெல்லாம் **நாகர்** எனும் பூர்வீக ஜாதியாரின் பிரிவென்று காலஞ்சென்ற தமிழறிஞர் கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் எண்ணுகிறார். நாகர் என்னும் பெயர், நாகசின்னத்தை அவர்கள் தலையிலணிந்தபடியால் வந்தது என்று சிலர் கூறுகின்றனர்.

*(10)* **குறும்பர்** இவர்கள் ஒரு மிகப் பூர்வீக ஜாதியார். தொண்டை நாட்டில் வேளாளர் வருவதற்கு முன் இங்கு இருந்தவர்கள். குறும்பு எனும் பதத்தினின்றும் இப்பெயர் இவர்களுக்கு வந்திருக்க வேண்டும்; தேகமெல்லாம் மயிர் வளர்ந்திருந்தமையால் இவர்களுக்கு இப்பெயர் வந்தது போலும். குறும்பாடு எனும் தற்காலத்தில் வழங்கும் ஓர் ஆட்டு ஜாதியைக் காண்க. குறும்பாடுகளை மேய்த்ததினால் இவர்களுக்கு இப்பெயர் வந்ததாகச் சிலர் எண்ணுகின்றனர்.

*(11)* **பள்ளர்** பள்ளத்தாக்குகளில் ஆதியில் வசித்தவர்கட்கு இப்பெயர் வந்தது போலும். தற்காலத்தில் பள்ளி எனும் ஜாதியாரைக் கவனிக்க.

*(12)* **மள்ளர்** மல்லர் என்று ஓர் ஜாதிப்பிரிவு இருந்ததாக அறிகிறார். மல் = மற்போர் அல்லது வலிமை, எனும் தாதுவிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம். மாமல்லர் என்பதைக் காண்க.

*(13)* **கடையர்** கடைசி வகுப்பினர் என்று பொருள்படும்.

*(14)* **காடர்** காட்டில் வசிப்பவர்கள்.

*(15)* **பணிச்சவர்** பணி செய்பவர்கள் - வேலையாட்கள். மலையாளத்தில் பணிக்கர் எனும் ஓர் ஜாதி தற்காலமும் உண்டு. தமிழ்நாட்டில் சவத்தொழில் செய்பவர்களுக்கே இப்பெயர் வழங்கப்படுகிறது. பணிக்கர் என்பது மலையாளத்தில் நாடகம் நடத்துவோருக்குப் பெயராம்.

*(16)* **செம்படவர்** இப்பெயர் **சம்பு** எனும் பதத்தினிடையாகப் பிறந்த தென சிலரும், சிவன்+படவன் என்பதினாலாயது என்று சிலரும் எண்ணுகின்றனர். அல்லது **செம்மை** நிறம் வாய்ந்த படகோட்டிகள் எனினும் தகும்.

*(17)* **இருளர்** இருள்-கருமை என்பதினின்றும் பிறந்த பெயராம். கருநிறமுடையவர்கள், அல்லது இருட்டில் ஆதியில் சஞ்சரித்தவர் எனினும் தகும்.

*(18)* **படகர்** நீலகிரியிலுள்ள இச்சாதியார் பெயர் வடுகர் எனும் மொழியின் திரியாம். வடக்கேயிருந்து வந்தபடியால் அப்பெயர் வந்தது போலும்.

*(19)* **வில்லியர்**. வில்லையுடையவர், வில்லாளிகள் என்று பெயராம்.

*(20)* **மண்ணாடி** மன்னாடியின் மருவாயிருக்கலாம். மலைநாட்டு கிராமத்தலைவர்களின் பெயராம்.

*(21)* பொதுவாள் - பொது+ஆள். மலையாளத்தில் ஓர் ஜாதியார் பெயர்.

மேற்கண்ட பூர்வீக ஜாதிப்பெயர்களைக் கவனிக்குங்கால், தமிழ்நாட்டில் ஆதியில், பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் எனும் பிரிவுகள் இல்லை என்பது ஸ்பஷ்டமாகும். பெரும்பாலும் பூர்வீக ஜாதிப் பெயர்களெல்லாம் ஜனங்கள் வசித்த நிலத்தைப் பொறுத்ததாகக் காணப்படுகிறது. இப்பெயர்களெல்லாம் பெரும்பாலும் சுத்தத் தமிழ் மொழிகளாயிருப்பதைக் காண்க.

## ஆரிய ஜாதிப் பெயர்கள்

ஆரியர் தென்னாட்டிற்கு வந்தபின் ஆரியப் பிரிவுகளாகிய பிராமண, க்ஷத்திரியர், வைஸ்யர், சூத்திரர்கள் எனும் பிரிவுகள் இங்கு வழங்கலாயிற்று. இவைகளெல்லாம் சம்ஸ்கிருத பதங்கள் என்பது கவனிக்கத்தக்கது. "நால்வகைச் சாதி இந்நாட்டினில் நீர் நாட்டினீர்" என்பதைக் காண்க.

## தற்காலத்து ஜாதிப் பெயர்கள்

*(1)* **ஐயர்-ஐயங்கார்** பஞ்ச திராவிட பிராமணர்களான தமிழ்ப் பிராமணர்களைப் பற்றி மாத்திரம் நாம் கருதுவோம். அவர்களுள் ஸ்மார்த்தர்களும் சைவர்களும் **ஐயர்** எனும் பட்டப்பெயர் கொள்கின்றனர். வைஷ்ணவர்கள் ஐயங்கார் அல்லது ஆசாரியார் என்று பெயர் கொள்ளுகின்றனர். ஐயர் என்பது ஆரியர் எனும் பதத்தின் சிதைவாம்; அய்யங்காருமப்படியே; ஆர் எனும் விகுதியேற்ற தாம் ஆர்யர் என்றால் உயர்ந்தோர் பூஜ்யர் என்று பொருள்படும். ஆசாரியர் என்பது குரு எனும் அர்த்தம் கொடுக்கும் சம்ஸ்கிருத பதமாம். பிராமணர்கள் மற்றவர்களுக்கு குரு ஸ்தானத்திலிருந்தபடியால் இப்பெயர் வந்தது. ஆசாரி என்பதற்கும் ஆச்சாரி என்பதற்கும் உள்ள பேதத்தைக் கவனிக்க. ஆசாரி என்பது தச்சர், கம்மாளர்களுக்கும் பட்டப்பெயராம்.

*(2)* **ராவ்** என்பது ராகுத்தன் எனும் வடமொழியின் திரிபாம். ராகுத்தன் என்றால் குதிரை வீரன் என்று பொருள்படும். இது சாதாரணமாக மஹாராஷ்டிர பிராம்மணர்களுடைய பெயராயிருந்தது. அவர்கள் தஞ்சையில் ஆள ஆரம்பித்த காலமுதல் அவர்களுக்குச் சாதாரணப் பட்டப் பெயராயிற்று.

*(3)* **முதலியார்** முதலி எனும் மொழி ஆர் விகுதியைப் பெற்று முதலியார் என்றாயது. ஆர் என்பது பன்மையைக் குறிப்பதாயினும் மரியாதையின் பொருட்டு ஒருவருக்கு உபயோகிக்கப்பட்டிருக்கிறது. முதலி என்றால் முதன்மையானவன் என்றாம். இது பிராம்மணர்கள் உட்பட பல ஜாதியார்களுக்கு ஆதி காலத்தில் உபயோகிக்கப்பட்டதாக அறிகிறோம். முற்காலத்தில் இது அரசர்களால் கொடுக்கப்பட்ட பட்டப் பெயராயிருந்தது. ஜெயினர்களுட் சிலருக்கும் இப்பெயர் வழங்கியதாக எட்கர் தர்ஸ்டன் துரை (Edgar Thurston) கூறியிருக்கிறார். ஆயினும், வேளாளர்களே இடைக்காலத்தும் தற்காலத்தும் இதைத் தமது பட்டப்பெயராக உபயோகித்திருக்கின்றனர். வேளாளர்களுள் சேனைத் தலைவர்களாக இருந்தவர்களே இடைக் காலத்தில் இப் பட்டப்பெயர் வகித்திருந்தனர்; மதுரை நாய்க்கமார் காலத்தில் இருந்த அரியநாயக முதலி என்பவரின் பெயரைக் காண்க. முதலியார் எனும் பெயர் தற்காலம் தொண்டைமண்டலத்தில் தான் அதிகமாய் வழங்கப்படுகிறது. இதற்குக் காரணம் ஆதொண்டைச் சக்கரவர்த்தி துளுவ வேளாளர்களைச் சைனியமாகக் கொண்டு இங்கு வந்து நாட்டை ஜெயித்து அதில்

அவர்களைக் குடியேற்றியபொழுது, தன்சேனைத் தலைவர்களுக்கு முதலி, முதலியார் என்று பெயர் கொடுத்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அன்பாயசோழன் சேக்கிழார்க்கு முதலி எனும் பட்டம் வழங்கியதைக் கவனிக்க. திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களில் இன்னும் தளவாய் முதலியார் வமிசத்தார் இருக்கின்றனர். தளம்+வாய்=தளவாய் என்றாயது, சைனியத்தின் முன்பாகம் என்று பொருள்படும்; யுத்தங்களில் முன் அணியில் நின்று சைனியங்கள் நடத்தியவர்களுக்கு இப் பட்டப்பெயர் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். பிற்காலம் இவர்களது சந்ததியார்களெல்லாம், இப் பட்டப்பெயரைத் தமது ஜாதிப் பெயராக உபயோகித்திருக்க வேண்டும். செம்படவர்களுள் அவர்கள் தலைவருக்கு முதலி என்கிற பட்டப்பெயர் வழங்கப்படுகிறது; அச்சாதியாருக்குள் முற்பட்டவன், முதலி தலைவன் என்கிற பொருளில் உபயோகிக்கப்பட்டதாம்.

*(4)* **பிள்ளை** என்பது தமிழர்களுக்குள் மிகவும் புராதனமாக வழங்கிய பெயராம். பிள்ளையார் என்றும் ஆளுடைய பிள்ளையார் என்றும் திருஞானசம்பந்த ஸ்வாமிகளுக்குப் பெயர் வழங்கியிருந்ததைக் காண்க. திருவெண்காட்டடிகளுக்கு பட்டினத்துப் பிள்ளையார் என்று பெயர் இருந்ததைக் கவனிக்க. தற்காலத்தில் இப்பெயர் பெரும்பாலும் வேளாளர்களுக்குள்ளே வழங்கப்பட்டு வருகிறது மதுரை, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில். ஆதிகாலத்தில் தென்இந்தியப் பிராம்மணர் களெல்லாம் பிள்ளை என்கிற பட்டபெயரையே உபயோகித்தனரென்றும், பிறகு வேளாளர்கள் பிள்ளை என்கிற பெயரைக் கொண்டதன்மேல், பிராம்மணர், ஐயன், ஐயர் என்கிற பெயரைப் பூண்டனர் என்றும் எட்கர் தர்ஸ்டன் துரை அபிப்பிராயப்படுகிறார். மலையாள தேசத்து நாயர்களும் பிள்ளை என்கிற பட்டப் பெயரை உபயோகிப்பதைக் கவனிக்க. ராமன் பிள்ளை, மாதவபிள்ளை என்பதைக் காண்க. வன்னியர்களும், தமிழ்நாட்டில் பிள்ளை என்கிற பட்டம் வகிக்கின்றனர். ஆதியில் ஒருவன் இன்னாருடைய பிள்ளை என்றும் வழக்கத்திலிருந்து இப்பெயர் உண்டாயிருக்கலாம்.

*(5)* **நாயகர்** என்பதும் முதலியார் என்பதைப்போல் ஆதியில் அரசரால் வழங்கப்பட்ட, பட்டப் பெயராயிருந்து பிறகு ஜாதிப் பெயராக மாறியதாகும். நாயகன் என்றால் சம்ஸ்கிருதத்தில் தலைவன் என்று பொருள்படும். கதாநாயகன் என்பதைக் காண்க. இப்பெயர் பெரும்பாலும், விஜயநகர அரசர்கள், தமிழ்நாட்டை ஜெயித்த காலத்திற்குப் பிறகுதான் அதிகமாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது; திருமலை நாயகர், சொக்கநாத நாயகர் என்கிற பெயர்களைக் காண்க. நாயகர் என்பது சேனைத்

தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பட்டப்பெயராகும். பிறகு அவர்களது வம்சத்தார்களெல்லாம் நாயகர் பெயரையே உபயோகிக்க ஆரம்பித்தனர் போலும். **நாய்க்கர்** என்பது நாயகர் என்னும் மொழியின் திரிபாம். தற்காலம் வன்னியர் முதலிய ஜாதியர்களும் இப்பெயரைப் பூண்பதைக் காண்க. மலையாளத்திலுள்ள சூத்திரர்களுக்குப் பெயராகிய **நாயர்** என்பதும் நாயகர் என்பதின் மருவேயாம். நாயர் ஜாதியார் ஆதிகாலத்தில் படைவீரர்களாயிருந்தது கவனிக்கத்தக்கது. தெலுங்கில் **நாயுடு** என்னும் பதமும் இதன் மருவேயாம்.

*(6)* **கைக்கோளா** கையினால் தொழில் செய்பவர், நெசவுத் தொழில் செய்பவர் என்று பொருள்படும். கைக்கோல் என்கிற பதம் நெசவுத்தொழிலில் உபயோகப்படும் ஒரு மரத்துண்டின் பெயராம். கைக்கோலன் என்றும் இப்பெயர் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காண்க.

*(7)* **கம்மாளன்** இது தொண்டைமண்டல சதகத்திலும், ஏரெழுபதிலும் கண்ணாளன் என்று உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கம்+ஆளன்=வேலை செய்பவன் என்று பொருளாம். இரும்பு முதலிய லோகங்களில் வேலை செய்பவர்களாகும்; கருமான் என்பதைக் காண்க. கருமான் என்பது கர்மாரன் எனும் சம்ஸ்கிருத மொழியின் சிதைவாம்.

*(8)* **வாணியன்** வணிகன் என்னும் மொழியின் சிதைவாம். வாணிபம்=வர்த்தகம் செய்பவன். வணிகன். ஆதியில் எந்த வர்த்தகம் செய்பவர்களுக்கும் இப்பெயர் இருந்தது; கூல வாணிகர் சாத்தனார் என்பதைக் காண்க. தற்காலம் எண்ணெய் வர்த்தகஞ் செய்பவர்களுக்கே பெரும்பாலும் இப்பெயர் வழங்கப்படுகிறது.

*(9)* **வன்னியர்** என்பது வன்னி அல்லது அக்னி யென்பதின் திரிபென்று எண்ணப்படுகிறது. இச்சாதியார் அக்னியில் வந்தவர் என்று கூறிக் கொள்வதை கவனிக்க.

*(10)* **கன்னடியர்** கன்னட தேசத்தவர், கன்னட பாஷை பேசுபவர் என்று பொருள்படும். கன்னடம் என்பது கர்நாடகம் என்பதின் திரிபாம். சென்னை முதலிய ஊர்களில் தயிர், மோர் முதலிய விற்பவர்கள் இப்பாஷை பேசுவதால் கன்னடியர் என்று அழைக்கப்படுகின்றனர். கன்னட+இடையர் = கன்னடியர் என்றாயது என்று எண்ணுவதற்கும் இடமுண்டு.

*(11)* **செட்டி** என்பது சிரேஷ்டி என்பதின் திரிபாம். சிரேஷ்டமானவன் என்று பொருள்படும். இது முற்காலத்தில் வர்த்தகம் செய்பவர்களுக்குப் பட்டப் பெயராக அளிக்கப்பட்டதாம். வேளான்செட்டி யென்பதைக் காண்க. பிற்காலத்தில் செட்டி யென்றும் ஜாதிப் பெயராக மாறியது. சில தெலுங்கு பேசும் ஜாதியாரும் செட்டி யென்கிற பெயரைக் கொண்டிருத்தல் காண்க. சிரேஷ்டி என்பது சம்ஸ்கிருத மொழியாம். பெரும்பாலும் வியாபாரம் செய்யும் கோமுட்டி ஜாதியாரும் செட்டி எனும் பெயரை வைத்துக் கொள்ளுதல் கவனிக்கத்தக்கது.

*(12)* **சாத்தாணி** என்பது சாத்தாதவன் என்னும் பதத்தின் சிதைவென்று எண்ணப்படுகிறது, அதாவது பூநூல் சாத்தாவர் என்று பெயராகும். ஆயினும் இச்சாதியார் தற்காலம் தவறாது பூணூநூல் பூணுகிறதைக் கவனிக்க; இப்பதத்திற்கு தலையில் முடியில்லாதவர் என்றும் பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

*(13)* **போத்தி** என்னும் மலையாளப் பெயர் போற்றி என்பதின் மருவாம். பூசிக்கத் தக்கவர் என்று பொருளாம்.

*(14)* **பட்டினவர்** செம்படவர், மீன் பிடிப்பவர், இப்பெயர் இவர்கள் பட்டினங்களில் பெரும்பாலும் வசிப்பதால் வந்திருக்க வேண்டும். இதை பட்டனவர் என்று கொண்டு பட்டு நெய்பவர் என்று சிலர் கூறியிருப்பது தவறாகும்.

*(15)* **படையாச்சி,** படையாச்சி. படை+ஆட்சி. படை என்றால் சைனியம் இதனின்று இப்பெயர் வந்திருக்க வேண்டும்.

*(16)* **கணக்கர்** எனும் ஜாதிப் பெயர் கணக்கு எனும் மொழியினின்றும் வந்ததாம். ஆதிகாலத்தில் கணக்கு எழுதியவர்களுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. பிறகு பரம்பரையாக இத்தொழில் அவர்களால் செய்யப்பட்டு வந்தபொழுது, இது சாதிப்பெயராக மாறியது.

*(17)* **பூசாரி** பூசை செய்பவன். கிராம தேவதைகளின் கோயில்களில் பூசை புரியும் சூத்திரர். பரம்பரையாக இத்தொழில் புரிந்தவர். இது ஜாதிப்பெயராயிற்று.

*(18)* **சாணார்** இச்சாதியார் இம்மொழி சான்றோர் என்பதின் மருவு என்கின்றனர். இது அத்துணை உசிதமாகத் தோன்றவில்லை இவர்களுக்கு நாடார் என்னும் பெயர் சாதாரணமாக வழங்கப்படுகிறது. நாடு என்னும் பதத்தினின்றும் பிறந்தது போலும்.

*(19)* **ரெட்டி** என்கிற பதத்திற்கு பூர்வகாலத்தில் அரசர் என்று அர்த்தம் என்று எட்வர்ட் தர்ஸ்டன் துரை எழுதியிருக்கிறார் இது ஒரு பட்டப்பெயராம் ரெட்டி, நாயுடு என்பதைக் காண்க.

*(20)* **வண்ணார்** வண்ணம் என்கிற பதத்தினின்றும் இப்பெயர் வந்ததாகச் சிலர் கூறுகின்றனர்.

*(21)* **சாக்கியர்** இவர்கள் பழைய காலத்து சாக்கைக் கூத்தினர் பிரிவாம். தற்காலமும் மலையாளத்தில் இப்பெயர் கொண்ட ஜாதியர் இருக்கின்றனர். இம்மொழி சிலாக்கியம் என்பதின் திரிபு எனச் சிலர் கூறுகின்றனர்.

*(22)* **சக்கிலியர்** இவர்கள் தமிழ்நாட்டில் தோலில் வேலை செய்யும் ஜாதியர். பழைய நூல்களிலாவது பழைய கல்வெட்டுகளிலாவது இவர்கள் ஜாதிப்பெயர் கிடைக்கவில்லை; இவர்கள் தெலுங்கு கன்னட தேசத்திலிருந்து வந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் பெயர் ஷட்குலி எனும் சம்ஸ்கிருத பதத்தினின்றும் வந்ததாக எண்ணப்படுகிறது.

*(23)* **கிராமணி** கிராம, மணிய வேலை பார்க்கிறவன் என்று பொருள்படும்; ஆயினும் தற்காலம் மது வியாபாரம் செய்பவர்களுக்கே இப்பெயர் தமிழ்நாட்டில் வழங்கப்படுகிறது.

*(24)* **ஒச்சன்** உவச்சன் என்பது பழய மொழியாம். இம்மொழி ஒசை என்பதினின்றும் வந்ததாகச் சிலர் மதிக்கின்றனர்.

*(25)* **சோனகர்** என்பது யவனர் என்னும் மொழியின் திருபு என்று சிலர் மதிக்கின்றனர்.

*(26)* **தாசி**. தாசன் என்பதின் பெண்பால், வேலைக்காரி என்று பொருள்படும் சம்ஸ்கிருத பதமாம். கோயில் வேலை செய்பவர்களுக்கு தேவதாசிகள் என்று பெயர். அவர்கள் சாதாரணமாக கற்பின் வரம்பைக் கடந்தவர்களாய் இருந்தமையால், தாசி என்கிற பதம் விலைமாது எனும் அர்த்தத்தில் வழங்கலாயிற்று. தேவடியாள் : தேவர்+அடியாள் என்பதைக் காண்க.

*(27)* **மரக்காயர்** தென் இந்தியாவில் தமிழைத் தமது தாய் பாஷையாகப் பேசும் சில மகம்மதியர்களுக்கு இப்பெயர் உண்டு. இவர்கள் பெரும்பாலும் ஆதியில் அரேபியா தேசத்திலிருந்து வர்த்தகர்களாக இங்க வந்தவர்களுடைய சந்ததியார்கள். இப்பெயர் அராபிய பாஷைச்

சொல்லாகிய **மரக்காய** என்பதினின்றும் வந்ததாம். மரக்காயர் என்றால் படகு என்று பொருள்படும். படகு என்பதற்கு ஆதி தமிழ் மரக்கலம் என்று பெயரிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. இவர்களுள் சிலருக்கு **சோனகர்** என்றும் பெயர் உண்டு; சோனகம் என்பது அரபிய தேசத்திற்கு ஓர் பூர்வீகப் பெயராம். இவர்களுள் இன்னும் சிலருக்கு **காயலார்** என்கிற பெயர் உண்டு. காயல் என்றால் கழி, கழிமுகம் என்று பொருள்படும். சமுத்திரக் கரையோரம், சமுத்திர ஜலம் சில இடங்களில் தங்கியிருந்தால் அதற்குக் காயல் என்று பெயர். காயல்பட்டனம் என்பதைக் காண்க. காயல்களில் வசிக்கும் ஜனங்களுக்கு காயலார் என்று பெயராம்.

*(28)* **துலுக்கர்** இது சாதாரணமாகத் தமிழ்நாட்டில் மகம்மதியர்களைக் குறிக்கும் சொல்லாம். இம்மொழி **துர்க் (Turk)** என்பதினின்றும் வந்ததாகும். மகம்மதியர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்த போது அவர்களது தலைவர் களெல்லாம் பெரும்பாலும் துலுக்கர் களாயிருந்தனர்; அதனின்றும் மகம்மதியர்களுக்கெல்லாம் துலுக்கர் அல்லது துருக்கர் என்று பெயர் வழங்கலாயிற்று.

*(29)* **மேஸ்திரி** இது கொல்லர் முதலிய ஜாதியாருக்குள் பட்டப் பெயராக வழங்குகிறது. கொல்லத்து மேஸ்திரி என்பதைக் காண்க. முக்கியமாய் கொல்லன் என்று பொருள்படும். இம்மொழி போர்த்துகேய பாஷையிலுள்ள மெயிஸ்டர் (Maester). என்னும் பதத்தின் மருவாம்; கைத்தொழிலில் கை தேர்ந்தவனுக்குக் கொடுக்கும் பட்டப்பெயராம்; தையக்கார மேஸ்திரி, உப்பரவ மேஸ்திரி என்பதைக் காண்க.

*(30)* **தட்டான்** பொன் வெள்ளியைத் தட்டுபவன் என்பதாயிருக்கலாம்.

*(31)* **கொல்லத்துக்காரன்** - கொல்லற்றுக்காரன், கொல்லறு என்னும் ஆயுதத்தை உபயோகிப்பவனாம்.

*(32)* **தச்சர்**-தக்ஷர் என்னும் சம்ஸ்கிருத மொழியின் சிதைவாம்.

*(33)* **ஈழவர்** பூர்வகாலத்தில் ஈழநாடு அல்லது சிங்களத்திலிருந்து வந்தமையால் இவர்களுக்கு இப்பெயர் வந்ததாம். சிங்களம் என்பது சிலோன், இலங்கைத் தீவாம்.

*(34)* **பறையர்** என்றால் பறையடிப்பவர் என்று பொருள்படும். பறை என்பது புராதனமான ஓர் வகைத் தோற்கருவி; ஆதிகாலத்தில் அரசர்களது ஆக்கினைகளைச் சாதாரண ஜனங்களுக்கு பறையரைவித்துத் தான்

**தெரியப்படுத்தினர். தற்காலமும் கிராம தேவதைகளின் உற்சவாதிகளை பறை சாற்றித் தெரிவித்தல் என்கிற வழக்கத்தைக் கவனிக்க. மாட்டின் தோலை உறித்து பறைகள் செய்து அவற்றை முழக்கும் ஆதி ஜனங்களுக்கு பறையர் என்று பெயர் வந்ததாம்; ஆகவே, ஆதிகாலத்தில் இவர்கள் கீழ்ப்பட்ட ஜாதியாராக மதிக்கப்பட்டனர். இவர்கள் திராவிடர்களால் ஜெயிக்கப்பட்ட ஆதி ஜாதியார் என்று சிலர் எண்ணுகின்றனர்; தற்காலம் இவர்களும் நாகரீகம் அடைந்த பிறகு இவர்களை ஆதிதிராவிடர்களென்று அழைக்க வேண்டும் என்று ராஜாங்கத்தார் உத்தரவு செய்திருப்பதைக் கவனிக்க.**

*(35)* **புலையன்** புலால் = மாமிசம் உண்பவன் புலையன்.

**முத்தரையர்** என்பது முத்தேசத்து அரசர் என்பதின் குறுகலான பட்டப்பெயர். இவர்கள் சந்ததியார்களுக்கு முத்தரையர் என்று பெயரென சிலர் கூறுகின்றனர்.

**அம்பலக்காரர்** அம்பலம்=வெளியிடம், சபை கூடுமிடம், அல்லது கட்டடம் என்றும் பொருள் படும். இதிலிருந்து அச்சபைகளைக் கூட்டும் ஊர்த் தலைவனுக்கு அம்பலக்காரன் என்று பெயராயது.

## வலங்கை இடங்கை ஜாதிகள்

தமிழ்நாட்டில் வழங்கும் ஜாதிப் பெயர்களை ஆராயுங்கால் முக்கியமாக தொண்டை மண்டலத்தில் வலங்கை இடங்கை ஜாதிகள் என்று இரு பிரிவாக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது.

| **வலங்கை ஜாதிகள்–உதாரணம்** | **இடங்கை ஜாதிகள்–உதாரணம்** |
|---|---|
| வெள்ளாழர் | வடுகுசெட்டிகள் |
| ரெட்டிகள் | வன்னியர் |
| கோமட்டிகள் | பள்ளிகள் |
| கம்மவார் | கருமார் |
| பொந்திலியர் | கன்னார் |
| வீரமுஷ்டிகள் | செம்படவர் |
| குயவர் | சக்கிலியர் |
| பண்டாரங்கள் | கைக்கோளர் |
| தமிழ் செட்டிகள் | கல்தச்சர் |

சேணியர் கருமார்
கணக்கர்
சாத்தாணியர்
தச்சர்
அம்பட்டர்

வலங்கை, இடங்கை என்பது வலது பக்கம், இடது பக்கம் என்று பொருள்படும்; இவ்விரண்டு பிரிவுகள் வந்ததற்குக் காரணம் தமிழரசர்கள் சபையில் அவர்கள் அரசரது எதிரில் உட்கார வேண்டி வந்தபொழுது, இன்னின்ன ஜாதியார் வலதுபுறமும், இன்னின்ன ஜாதியார் இடதுபுறமும் உட்கார வேண்டுமென்று, வகுத்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அன்றேல், யுத்தத்திற்குச் செல்லுங்கால், வலதுபுறம் இருந்து யுத்தம் செய்தவர்கள், இடதுபுறமிருந்து யுத்தம் புரிந்தவர்கள் என்று பிரிக்கப்பட்டிருக்கலாம். தற்காலமும் தமிழ்நாட்டில் பூர்வீக நகர்களில் ஒன்றாகிய காஞ்சீபுரத்தில், ஏகாம்பரீஸ்வரர் உற்சவத்தில் வலதுபுறம் நிற்கவேண்டிய தாசிகள் சில ஜாதியார், இடதுபுறம் நிற்கவேண்டிய தாசிகள் சில ஜாதியார் என்று வகுக்கப்பட்டிருப்பதைக் காண்க. இதில் கவனிக்க வேண்டிய விந்தையென்னவென்றால் கைக்கோளர் இடங்கையைச் சேர்ந்தவர்கள், கைக்கோள தாசிகள் வலங்கையைச் சேர்ந்தவர்களாம்! இதற்குக் காரணம் தெரியவில்லை.

## அர்த்தம் மாறிய தமிழ் மொழிகள்

காலப்போக்கில் சில தமிழ் மொழிகள் பூர்வீக அர்த்தம் மாறி, வேறு அர்த்தத்தைக் கொடுப்பனவாயிருக்கின்றன; அவற்றுள் சிலவற்றை ஆராய்வோம்.

*(1)* **கோயில்** ஆதியில் கோ=அரசர்+இல்=வீடு என்று அர்த்தமுடையதாயிருந்தது; ஆதி காலத்தில் இது அரசர்களுடைய இருப்பிடத்தையே குறிப்பதாயிருந்தது. மேற்கு நாட்டிற் கிடைத்த சில பழய தமிழ்க் கல்வெட்டுகளில் கோயில் என்னும் பதம் அரசனது மாளிகை என்கிற அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் அங்குள்ள சில யூதர்களுடைய சாசனங்களிலும் தமிழ் அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. தற்காலமும் மலையாளத்தில் கோயில் தம்புரான் என்னும் சொற்றொடரைக் கவனிக்க. தற்காலம் தமிழ்நாட்டில் இப்பதம் தேவாலயம் எனும் அர்த்தத்தில்தான் வழங்கப்படுகிறது. இவ்வாறு

இம்மொழி அர்த்தம் மாறியதற்கு இரண்டு காரணங்களிருக்கலாம். ஒன்று ஆதிகாலத்தில் அரசரது இருப்பிடங்களில் தெய்வங்கள் வைக்கப்பட்டு, பூசிக்கப்பட்டிருத்தலால் கோயில் என்பது தெய்வமிருக்குமிடம் என்று அர்த்தம் மாறியிருக்கலாம், அல்லது அரசர்களுக்கெல்லாம் அரசனானவர் ஈசன் ஆனபடியால் அவர் இருப்பிடத்திற்கு சிறப்புப்பெயராக கோயில் என்பது வழங்கப்பட்டிருக்கலாம்.

*(2)* **பலஹாரம்.** பலம்+ஆஹாரம்=பலஹாரமாயது. அதாவது பலங்களைச் சாப்பிடுவது என்று பொருள்படும். பலம் என்றால் பழம். ஆகவே பழவர்க்கங்களை மாத்திரம் புசிப்பது என்று அர்த்தமாகும். இதைவிட்டு இப்பதத்திற்கு தற்காலம், அரிசிச்சாப்பாட்டை விட்டு வேறு எதையும் புசிப்பது எனும் அர்த்தத்தில் இம்மொழி உபயோகிக்கப்படுகிறது. அதாவது அரிசியை புசிப்பதைவிட்டு, போளி, ஆமவடை, சர்க்கரைப் பொங்கல், லட்டு, பாயசம் முதலிய எல்லா பட்சணங்களையும் புசிக்கலாம் என்று எண்ணப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் **ஒருபொழுது** என்பதையும் கவனிக்க. பதத்திற்குப் பொருள் ஒரே வேளை புசிப்பது என்றும்; அதைவிட்டு தற்காலம் ஒருபொழுது என்றால், ஒரு வேளை அரிசிச் சாதம் புசித்துவிட்டு, மற்ற வேளைக்குப் பட்டினியாயிராது. பாதுமைஹல்வா, பால் கோவா, பகோடா, காரபூந்தி முதலியவற்றை புசிக்கும் வழக்கத்திற்கு இப்பதம் உபயோகப்படுகிறது.

*(3)* **சகுனம்** இது சம்ஸ்கிருத மொழியாம்; பட்சி என்று பொருள்படும். ஆதியில் கருடன், காகம், வல்லூறு முதலிய பட்சிகள் வலமிருந்து இடம்போனால், அல்லது இடமிருந்து வலம் போனால் இன்னின்ன நேரிடும் என்று பட்சி சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது; ஆகவே ஏதாவது காரியத்தை ஆரம்பிக்கும் போது சகுனம் பார்ப்பதென்றால், பட்சிகள் எப்படிப் போகின்றன என்பதைக் கவனித்து தாங்கள் மேற்கண்ட காரியம் சித்தியாகுமா ஆகாதா என்று கவனிப்பது வழக்கமாயிருந்தது. தற்காலத்தில், இப்பதத்தின் ஆதி அர்த்தத்தை மறந்து தும்பல், மழை பெய்தல், ஒற்றை பிராமணன் எதிர் வரல், பூனை குறுக்கிடல் முதலிய எல்லாவற்றிற்கும் சகுனம் என்னும் பதம் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

*(4)* **நாற்றம்** என்றால் வாசனை என்றுதான் அர்த்தம் பொதுவில்; அது நல்ல நாற்றம், துர்நாற்றம் இரண்டையும் குறிக்கும் சொல்லாம். **வாசனை** என்கிற சொல்லும் நல்ல வாசனை கெட்ட வாசனை இரண்டையும் குறிக்கும் மொழியாம். ஆயினும் நாளாவர்த்தத்தில் நாற்றம்

என்றால் கெட்ட நாற்றம் என்கிற அர்த்தத்திலேயே உபயோகிக்கப்படுகிறது. பழய நூலில் "பொன் மலர் நாற்றமுடைத்து" என்பதில் நாற்றம் என்பது நல்ல வாசனையுடையது என்னும் அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காண்க. தற்காலத்தில் நாற்றம் அடிக்கிறது என்றால் கெட்ட நாற்றம் வீசுகிறது என்றப் பொருளையே தரும். இங்ஙனமே வாசனை என்கிற பதம் நல்ல மணத்தையே தற்காலம் குறிக்கிறது. **மணம்** என்கிற பதமும் இத்தகைத்தே. நல்ல வாசனையைக் குறிப்பதானால் பூர்வீகர்கள் நறுமணம் என்று உபயோகித்திருக்கின்றனர். தற்காலம் மணம் என்றால் நல்ல வாசனைக்குத் தான் உபயோகிக்கப்படுகிறது. சாக்கடை மணம் வீசுகிறது என்று சொல்வாரில்லை.

*(5)* **ஸ்தனம்** என்பது சம்ஸ்கிருத்திலிருந்துவந்த மொழியாம். ராமாயணம் முதலிய பழய சம்ஸ்கிருத நூல்களில் இப்பதம் ஆண் மக்கள், ஸ்திரீகள் இவர்களுடைய மார்பிற்கும் பொதுவாக உபயோகிக்கப் பட்டிருக்கிறது. ஸ்தனாந்தரே என்று ராவணன், லட்சுமணர் முதலியவர்களுடைய மார்பிற்கு உபயோகப்பட்டிருக்கிறது. தமிழில் இம்மொழி உபயோகத்திற்கு வந்த பிறகு பெண்டிருடைய அவயவத்திற்கே உரித்தான பதமாக மாற்றப்பட்டிருகிறது. ஆண் மக்களுடைய அவயவத்திற்கு மார்பு என்பது வழங்கலானது.

*(6)* **நாரி** என்னும் பதம் ஸ்திரீ என்னும் அர்த்தமுடைய சம்ஸ்கிருத மொழியாம்; இதற்குப் பொதுவில் பெண்பால் என்றே அர்த்தமாகும். நாரீ மணி என்றால் ஸ்திரீ ரத்தினம் என்று பொருள்படும். ஆயினும் தற்காலம் ஒரு ஸ்திரீயைப் பார்த்து ஒருவன் **நாரி** என்று அழைப்பானானால், அது வசையாக மதிக்கப்படும்; இதை நாரி என்று வல்லினத்துடன் உபசரித்து வசையாக்கியதை ஆராய்ந்து அறிந்து கொள்க.

*(7)* **பரதேசி** என்கிற பதத்திற்கு வேறுதேசத்திலிருந்து வந்தவன் என்பதே முதற்பொருளாம்; அதாவது வேற்றூரார் என்பதாம்; அவன் பணக்காரனாயிருக்கலாம்; ஏழையாயிருக்கலாம். ஆயினும், தற்காலம் இம்மொழி, ஏழை பிச்சைக்காரன் என்கிற பொருளிலேயே உபயோகப்படுகிறது. இதற்குக் காரணம் சாதாரணமாக ஒருவன் ஒரு தேசத்தை விட்டு மற்றொரு தேசத்திற்குப் போய் வாழப் பார்ப்பவன் பெரும்பாலும் ஏழையாய்த்தானிருப்பான் என்பதாம்.

*(8)* **பஜாரி** என்பது பஜார் எனும் ஹிந்துஸ்தானி பதத்திலிருந்து தமிழுக்கு வந்த மொழியாம். பஜாரி என்றால் கடைக்காரி என்று

பொருள்படும். தற்காலம் பஜாரி என்றால் சண்டைக்காரி எனும் பொருளில் வழங்கப்படுகிறது; சாதாரணமாகக் கடைக்காரிகள் சண்டைக் காரிகளாயிருப்பதால் இம்மாதிரியான அர்த்தத்திற்கு இடங் கொடுக்கலாயிற்று என்பதற்கு சந்தேகமில்லை; தண்டு பஜாரி எனும் சொற்றொடரையும் காண்க; சாதாரணக் கடைக்காரிகளே சண்டைக்காரிகளாயிருந்ததால், தண்டு அல்லது சைனியத்துடன் செல்லும் சண்டைக்காரிகள் இன்னும் அதிகக் கூச்சலிட்டு சச்சரவிடும் பெண்டிரா யிருப்பார்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயமே.

*(9)* **சீமை** என்றால் தேசம் என்று பொதுவில் பொருள்படும். ஆயினும், தற்காலம் அது வேறுதேசத்தைக் குறிப்பதாக உபயோகப்பட்டு வருகிறது. சீமையிலிருந்து வந்ததென்றால், வேறு தேசத்திலிருந்து வந்தது என்று அர்த்தமாகும். சீமைச் சரக்கு, சீமைப் பெருச்சாளி, சீமைக்கரி, சீமைச் சுண்ணாம்பு என்பதைக் காண்க; அதிலும் மேற்கிலுள்ள வேறு தேசங்களுக்குத்தான் இப்பெயர் அடைமொழியாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. சாதாரணமாக சீமை என்றால் இங்கிலாண்டு தேசத்தைத்தான் குறிப்பதாகும். சீமைக்குப் போகிறான் என்றால் இங்கிலாண்டுக்குப் போகிறான் என்றுதான் அர்த்தமாகும். இதற்குக் காரணம் நமது அரசாங்கத்தார் அங்கிருந்து வந்தவர்களாதல் பற்றி, என்பது கூறாமலே தெரியும்.

*(10)* **எண்ணெய்** எனும் பதம் எள்+நெய் = எண்ணெய் என்பதாம் எள்ளினின்றும் எடுக்கப்பட்ட நெய் அல்லது சாரம் என்று பொருள்படும். பிறகு இந்த அர்த்தத்தை மறந்தவர்களாகி தமிழர் தேங்காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், மண்ணெண்ணெய், பாதுமை எண்ணெய் என்று வழங்கலாயினர்.

*(11)* **எசமானன்** இப்பதம் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்தது. இதன் பூர்வீக அர்த்தம் யாகம் செய்பவன், யாகத்தலைவன் என்பதாம். தமிழ் பாஷையில் இது நுழைந்த பிறகு, இதை மறந்தவர்களாய் பொதுவாகத் தலைவன் என்கிற பொருளில் உபயோகப்பட்டு வருகிறது.

*(12)* **தளிச்சேரி** என்பது ஓர் பூர்வீகத் தமிழ்ப்பதமாம். தளி என்றால் கோயில். (ஓணகாந்தளி என்பதைக் காண்க) தளிச்சேரி என்றால் கோயிலைச் சார்ந்த இடம் என்று பொருள்படும். ஆயினும் நாளாவட்டத்தில் கோயிலுக்கருகில் **தேவதாசிகள் வசிக்குமிடம்** சாதாரணமாயிருப்பதால், தளிச்சேரி என்றால் **விலைமாதர் வசிக்குமிடத்தைக்** குறிப்பதாயது.

## சிறப்புப் காரணப் பெயர்கள்

இங்கு நாம் சிறப்புக் காரணப்பெயர்கள் எனும் மொழிகளைக் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். சிறப்புக் காரணப்பெயர் என்னும் ஒரு மொழி பலவற்றைக் குறிப்பதாயினும் சிறப்புக் காரணத்தால், ஒன்றையோ ஒருவரையோ குறிப்பதாம், உதாரணங்களாக:-

"**வரதன்** என்றால் வரத்தைக் கொடுப்பவன் என்று பொருளாம். இப்பெயர் மஹாவிஷ்ணுவுக்கும் சிவபெருமானுக்கும் பொதுவில் உபயோகிக்கலாம், வரத்தைக் கொடுக்கும் எந்த தெய்வத்திற்கும் உபயோகிக்கலாம்; தேவாரத்தில் நமச்சிவாயத் திருப்பதிகத்தில் "வரதநாம நமச்சிவாயவே" என்றிருப்பதைக் காண்க. ஆயினும், தற்கால வழக்கத்தில் வரதன் என்றால் விஷ்ணுவின் பெயராகவே கொள்ளப்படுகிறது.

**தோகை** என்றால் வால் என்று அர்த்தம். வாலையுடைய அநேக பட்சிகள் இருக்க, அழகிய வாலையுடைய மயிலுக்கே இப்பெயர் உரித்ததானது சிறப்புக் காரணம் பற்றியேயாம்.

## பதங்களின் சரித்திரம்

டாக்டர் டிரென்ச் (Dr. Trench) என்னும் ஆங்கில வித்வான் தான் எழுதிய ஓர் புத்தகத்தில் "ஒரு பாஷையிலுள்ள பதங்களை எடுத்துக் கொண்டு. அவைகளை ஆராய்வோமாயின், அப்பாஷை பேசுபவர்களுடைய பூர்வீக நாகரீகம் முதலியவற்றைப் பற்றி நமக்கு அப்பதங்கள் அநேக விஷயங்களைத் தெரிவிக்கும்" என்று கூறியுள்ளார். இதன் பிரகாரம் சில தமிழ் மொழிகளை எடுத்துக் கொண்டு தமிழர்களுடைய பூர்வீக நிலை முதலியவற்றைப் பற்றி அவைகள் நமக்கு என்ன தெரிவிக்கக் கூடும் என்று பார்ப்போம்.

**தமிழ்** முதலில் தமிழ் என்னும் மொழியையே எடுத்துக் கொள்வோம்; இது நமது தாய் பாஷையின் பெயர்; தமிழ் என்பது இயற்பெயராக அமைந்தது என்று சிலர் கூறுகின்றனர், அதாவது இது ஒரு காரணப்பெயரல்ல. ஆகவே, அதற்கு அர்த்தம் கூறப்புகில் பிரயோசனமற்ற காரியம் என்று நினைக்கின்றனர். இப்பாஷைக்கே உரிய ழகரம் கூடிய சொல்லாதலையே இதற்கு ஒரு நியாயமாகக் கொள்கின்றனர். டாக்டர் போப் எனும் தமிழ் அறிஞர் தென்+மொழி = தென்மொழி ; தெற்கு தேசத்தில் பேசப்பட்ட பாஷை; தென்மொழி தமிழ் என மாறியது என்று

எண்ணுகிறார். வடமொழி என்பது சம்ஸ்கிருதத்தைக் குறிப்பதால் தென்மொழி என்பது இப்பாஷையைக் குறிப்பதாம் என்பர். இன்னும் சிலர் ஒரு ஜாதியார்க்கோ, அல்லது அவர்கள் பாஷைக்கோ அவர்களே பெயர் வைத்துக்கொள்வது வழக்கமன்று, ஏனையர் தாம் அவர்களுக்கும் அவர்களுடைய பாஷைக்கும் பெயரிடுவது வழக்கம். வடமொழியார் தமிழ்நாட்டை திராவிடமென்று அழைத்திருக்கின்றனர், பூர்வீக சம்ஸ்கிருத நூலாசிரியராகிய பாணினியும் திராவிடம் என்று இந்நாட்டைக் குறித்திருக்கின்றனர். திராவிடம் எனும் இப்பதம் பிராகிருதபாஷையில் தமிளம் என்றாயது, அதிலிருந்து தமிழ் என்றாயது என்று எண்ணுகின்றனர். திராவிடத்தின் பாஷை திராவிட பாஷையாம் டாக்டர் கால்ட்வெல் துரை இவ்வாறு நினைக்கின்றனர். பழய சரித்திர ஆராய்ச்சி செய்த பி.டி. ஸ்ரீனிவாசாச்சாரியாரும் இவ்வாறே எண்ணுகின்றனர். இதற்கு நேர் விரோதமாக தமிழ் எனும் மொழியே திராவிடம் என மாறியது என்பார் சிலர்; டாக்டர் ஆபர்ட்துரை திருமன்றம் என்பது சிதைந்து, திரிமளிப், தமிழ் என்றாயது என்று கூறியுள்ளார். மற்றும் சில வித்வான்கள் தமிழ் என்றால் இனிமை என்று அர்த்தம். ஆகவே, இது மிகவும் இனிமையான பாஷையாதலால், இதற்கு இப்பெயர் வந்தது என்று கூறுவர். தேன்+மொழி= தமிழ் என்றாயது என்பாருமுளர். சிங்களத்தில் எழுதப்பட்ட மஹாவம்ஸோ (Mahavamso) என்னும் பரிபாஷை நூலில் தமிள்ளோ (Dammilo) என்று இப்பாஷையைக் குறிப்பிட்டிருக்கிறது. இவ்வாறு பல அறிஞர் பலவிதமாய்க் கூறியிருப்பத்தில் இதுதான் நிச்சயமான கொள்கை எனக் கூறுவது கஷ்டமாயிருக்கிறது. இது இன்னும் ஆராய்ந்து அறிய வேண்டிய விஷயம்.

*(1)* **அரவம்** இது தமிழ் பாஷைக்கு மற்றொரு பெயர். இம்மொழி தெலுங்கர் இப்பாஷைக்கு வைத்த பெயராம். இதற்குக் காரணம் தெலுங்கு பாஷை பேசப்படும் தேசத்திற்கு அருகாமையிலிருந்த பூர்வீகத் தமிழ்பாஷை பேசப்பட்ட நாடாகிய அருவாநாடு அல்லது அரவநாடு என்னும் பதத்திலிருந்து வந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அரவநாட்டிலுள்ளார் பேசும் பாஷைக்கு அரவபாஷை என்று பெயர் வந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

*(2)* **எழுத்து** எழுது என்னும் சொல்லிலிருந்து வந்ததாம்; எழுதப்படுவது என்று பொருள்படும். பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம் என்னும் பிரிவு இருப்பதைக் காண்க. அக்காலத்தில் தமிழ் பாஷை எழுதப்பட்ட பாஷையாயிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எகிப்து முதலிய தேசங்களுடன் வர்த்தகம் செய்த தமிழர்கள் அங்கிருந்த ஓர் வகை லிபியைக் கற்று. தமிழ்நாட்டில் அதைப் பரவச் செய்தனர் என்றும், சம்ஸ்கிருதமானது அதன் பிறகே எழுத ஆரம்பிக்கப்பட்ட தென்றும் சில சாஸ்திர அறிஞர் எண்ணுகின்றனர். டாக்டர் பர்னல் **(Dr. Burnell)** என்பவரும் இம்மாதிரியாகவே எண்ணுகின்றனர். வட இந்தியாவில் வழங்கும் லட் (Lut) எழுத்துக்கள் திராவிட எழுத்துகளினின்றும் பிறந்தவை என்று எட்வர்ட் தாமஸ் (Edward Thomas) என்பவர் நினைக்கின்றார். ஆகவே, ஆரியக் கலப்பு உண்டாவதற்கு முன்னேயே தமிழர்கள் எழுத்துக்களை எழுதும் முறையை அறிந்திருந்தார் என்று நாம் நிச்சயிக்க இடமுண்டு. எழுத்து என்பது சுத்தத் தமிழ் மொழியாம். சம்ஸ்கிருதத்திலிருந்து வந்ததன்று. சம்ஸ்கிருத எழுத்துக்கள் தேவநாகரி, கிரந்தம் என்று இருவகைப்பட்டன. தேவநாகரி என்பது நாகஜாதியாரிடமிருந்து கற்றதென்றும், பூர்வீகத் தமிழர்களுக்கு நாகர் என்று ஒரு பெயர் இருந்ததென்றும், பாஷா தத்துவ சாஸ்திரிகளில் (Philogists) சிலர் கூறுகின்றனர். நாகர்களிடமிருந்து ஆரியர்கள் எழுத்துக்களைக் கற்றனர் என்று தமிழ் வித்வான் கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் எண்ணுகின்றார். நாகர் என்பவர் ஓர் திராவிட ஜாதியேயாம். கிரந்தம் என்றால் புஸ்தகம் என்று பொருள்படும். கிரந்த எழுத்துக்கள் பெரும்பாலும் தமிழ் எழுத்துக்களினின்று வந்தன என்று பழய எழுத்தாராய்ச்சி அறிஞர் **(Epigraphists)** கூறுகின்றார்.

ஆகவே, சம்ஸ்கிருத பாஷையும் தனது எழுத்துக்கள், தமிழினின்றும் ஓர் வகையில் கொண்டது என எண்ண இடமுண்டு.

*(3)* **ஓலை** என்பதற்கு புஸ்தகம் என்று ஒரு பொருள் உண்டு. அன்றியும் பனை முதலிய மரங்களின் இதழ்களுக்கும் இப்பெயர் உண்டு. இதனால் ஆதிகாலத்தில் தமிழ் புத்தகங்களும் கடிதங்களும் ஓலைகளில் எழுதப்பட்டன வென்று அறிகிறோம். ஓலைகளைத் துண்டுகளாக வெட்டி அவற்றின் மீது கூறாகச் செய்யப்பட்ட ஆணிகளால் (எழுத்தாணிகளால்) தமிழ் மொழிகளை நமது பூர்வீகர் வரைந்தனர். ஆகவே, ஓலை என்றால் புஸ்தகம் என்று அர்த்தமாயது. இதற்கு மற்றொருபதம் சுவடி என்பதாம், சுவடி என்பது சுவடு என்னும் பதத்தினின்றும் பிறந்ததாம். சுவடு என்றால் பதித்தலால் உண்டாகும் குறி என்றாம். நூல் என்றும் புஸ்தகத்திற்கு ஒரு பழம் பெயர் உளது. (புஸ்தகம் என்பது சம்ஸ்கிருத மொழியாம்) பழய

ஓலைச் சுவடிகளை நூலில் கோர்த்துக் கட்டி வைக்கும் வழக்கத்திலிருந்து ஆகுபெயராக நூல் என்பது புஸ்தகத்திற்கும் பெயராயது.

*(4)* **வாசல்** புது வாயில் என்னும் பூர்வீகத் தமிழ்பதத்தின் மருவாம். வாய்+இல் = வாயில் என்றாயது, இல்லத்தின் *(வீட்டின்)* வாய், வாயில் என்றாயது; கடைப்புறம் புறம் கடை என்றாயது போல. வீட்டிற்கு, உட்புகவும், வெளிவரவும் மார்க்கமாதலால் வீட்டின்வாய் அல்லது வாயில் என்றாயது. அன்றியும் பூர்வீகத் தமிழர்களது வீடுகளைக் கட்டும் முறைப்படி வீட்டில் ஒவ்வொரு கட்டிற்கும், ஒவ்வொரு வாயில் இருக்க வேண்டுமென்று விதித்திருப்பதைக் கவனிக்க.

*(5)* **பலகணி** என்றால் சன்னல். சன்னல் என்பது போர்த்துகேய பாஷையிலிருந்து வந்ததால் இதற்குப் பழய தமிழ்மொழி பலகணி என்பது; பல+கண்ணணி=பலகண்களையுடையது என்று பொருள்படும். இப்பொழுதும் பழய கோயில்கள் முதலிய கட்டிடங்களைக் கவனிப்போமாயின் அங்கு காற்றும், வெளிச்சமும் புகுவதற்காக, ஏற்படுத்தப்பட்ட சன்னல்கள், பல கண்களைப் போன்ற துவாரங்களையுடையவைகளாகப் காணப்படும். சம்ஸ்கிருதத்தில் இதற்கு கவாட்சம் என்று பெயர், கவாட்சம் என்றால் பசுவின் கண் என்று பொருள்படும். பசுவின் கண்களைப் போன்ற துவாரங்கள் அமைக்கப்பட்டதால், அப்பெயர் வந்தததைக் கவனிக்க. மான் கண்களும் போன்ற துவாரங்களையுடைய சன்னல்கள் பூர்வகாலத்தில் இருந்ததாகச் சீவக சிந்தாமணியில் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க.

*(6)* **கொடி** என்கிற பதம் செடியின் படர் கொடிக்கும் உபயோகப்படுகிறது. ஆடைகளை உலர்த்தும் கொடிக்கும் உபயோகப்படுகிறது. பூர்வ காலத்தில் மரங்களின் அல்லது செடிகளின் நீண்ட கொடிகளிலேயே ஆடைகளை உலர்த்தும் வழக்கம் இருந்திருக்க வேண்டும். அதன்பின் கயிறுகளையும் மூங்கில்களையும் இதற்காக உபயோகித்தபோதிலும், பழய வழக்கத்தால் இவைகளுக்கும் கொடி என்ற பெயர் வழங்கலாயிற்று என்று ஊகிக்கலாம்.

*(7)* **சிங்கநாதம்** சாதாரணமாக யாராவது அட்டகாசம், டம்பம் பண்ணினால் என்ன சிங்கநாதம் பண்ணுகிறான் என்று சொல்கிறோம்; சிங்கநாதம் என்பது, சிருங்கம்+நாதம் என்கிற இரு சொற்களாலாயது. சிருங்கம் என்றால் மிருகத்தின் கொம்பு. முற்காலத்தில் அரசர்களோ அல்லது பெரிய கனவான்களோ புறப்பட்டால் மிருகங்களின் கொம்புகளாலாகிய தாரைகள் - ஊது கொம்புகள் - முழங்குவது வழக்கம்.

ஊது கொம்புகளை ஊதிக்கொண்டு அட்டகாசமாய் மனிதர்கள் வருவதினின்றும், யாராவது ஒருவன் டம்பமாக ஏதாவது செய்தால், என்ன சிங்கநாதம் செய்கிறான் என்றும் சொற்றொடர் உண்டாயிருக்க வேண்டும்.

*(8)* **திருவிளக்குச் சீட்டு** ஏதாவது இரண்டிலொன்றை நிர்ணயிக்க வேண்டுமென்றால், தற்காலம் சிலர் இரண்டு கடிதங்களில் அவற்றை எழுதி, கோயில் ஸ்வாமியின் சந்நிதானத்திலோ, அல்லது வீட்டில் செய்வதென்றால் விளக்கின் முன்பாகவோ, அவைகளை வைத்து, ஒன்றுமறியாத சிறு குழந்தையை, அவற்றுள் ஒன்றை எடுக்கும்படிச் செய்யும் வழக்கமுண்டு. அநேகம் வீடுகளில் தற்காலத்தில் பூஜாக் கிரஹமும் பூஜிக்கப்படும் விக்ரஹங்களோ, படங்களோ இல்லாவிட்டால் சாயங்காலங்களில் குத்து விளக்கையேற்றி, அதன்முன் பெண்டிர் தொழுவதைக் காணலாம். இப்பழக்கித்தினின்றும், திருவுளச் சீட்டு; திருஉள்ள+சீட்டு (ஸ்வாமியின் உள்ளத்தை யறியும் சீட்டு) வந்திருக்க வேண்டும். திருஉள்ள சீட்டு போய் திருவிளக்குச் சீட்டாகியது.

*(9)* **ஐம்பால்** என்றால் மகளிர் கூந்தல் என்று அர்த்தம். பூர்வ காலத்தில் தமிழ்நாட்டுப் பெண்கள் தங்கள் கூந்தலை ஐந்துவிதமாக (கொண்டை, சுருள், குழல், பணிக்கை, முடி) கட்டிய வழக்கத்தினின்றும் இப்பெயர் வந்தது என்பது நிச்சயம்.

*(10)* **மட்டிப்பால்** இது மட்டுப்பால் என்பதின் மருவாம். மட்டு என்றால் வாசனை. "மட்டுவார் குழலி" என்பதைக் காண்க. இதையறியாது மட்டுப்பால் என்கிற பதம் மட்டிப்பால் அல்லது மட்டு சாம்பிராணி என்பதும் மட்டி சாம்பிராணி ஆயினதைக் கவனிக்க. இதனின்றும் மட்டி என்றால் மடையன் என்கிற பொருளில், மட்டி சாம்பிராணி எனும் வசைச்சொல் வந்ததைப் பார்க்க.

*(11)* **பட்டுப்பூச்சி** பட்டு+பூச்சி, பட்டையுண்டாக்கும் பூச்சி அல்லது புழு என்பதாம், பட்டு என்பது தமிழ் மொழி; ஓர்வகைப் பூச்சியினின்றும் பட்டு உண்டாகிறது என்னும் உண்மையை ஐரோப்பிய சீனர்களிடமிருந்து கற்கு முன்னரே தமிழ்நாட்டார் அதை அறிந்துளார் என்கிறதை இதனால் ஊகிக்கலாம்.

*(12)* **அம்மிக்குழவி** குழவி என்றால் குழந்தை. அப்படியிருக்க குழவி என்பது சிறு கல்லுக்கு எப்படி பெயராயிற்று? முன்காலத்தில் பெரிய கல்லின்மீது ஏதாவது ஒரு பதார்த்தத்தை வைத்து, அதை அரைக்கவோ,

நசுக்கவோ, சிறு கல்லொன்றை உபயோகிப்பது வழக்கம். நாளா வர்த்தத்தில் அவைகளிலிருந்து சற்றேறக்குறைய நீண்ட சதுரமாயிருக்கும் அம்மியும், உருளையாயிருக்கும் குழவியும் உற்பத்தியாயின. தாயைவிட்டு குழந்தை பிரியாதிருப்பதுபோல், அம்மியை விட்டு, அதன்மீது அறைக்கும் சிறுகல் பிரியாதிருப்பதால், அச்சிறுகல்லிற்கு குழவி என்று பெயர் வந்திருக்க வேண்டும்.

*(13)* **ஜோடுதவலை** தவலை என்றால் பெரிய பாத்திரம். அதினின்றும் த்ண்ணீரை எடுத்துக் கொள்ள உபயோகப்படும் சிறு பாத்திரத்திற்கு ஜோடுதவலை என்று பெயர். சாதாரணமாக தவலையின் பக்கத்தில் எப்பொழுதும் வைக்கப்பட்டிருப்பதால், தவலையின் ஜோடு, தவலையுடன் இருப்பது, தவலையைப் பிரியாதிருப்பது, எனும் அர்த்தத்தில் ஜோடுதவலை எனும் சொற்றொடர் வழங்கலாயிற்று.

*(14)* **சொம்பு** தற்காலத்தில் இம்மொழி எந்த லோகத்தினாலும் செய்யப்பட்ட சிறு பாத்திரத்தைக் குறிப்பதாயிருக்கிறது. வெள்ளிச் சொம்பு, பித்தளைச் சொம்பு, வெண்கலச்சொம்பு என்பவற்றைக் காண்க. ஆதி காலத்தில் தமிழகத்தில் பாத்திரங்களெல்லாம் செம்பினால் செய்யப்பட்டமையால், அதனின்றும் சொம்பு என்ற பெயர் பாத்திரங்களுக்கு உபயோகிப்பட்டது. செம்பு-சொம்பாயது என்னலாம்.

*(15)* **பழம், பழுத்தது**. சாதாரணமாகத் தமிழர் ஒரு காரியம், காயா, பழமா*?* என்றுங் கூறுகிற வழக்கமுண்டு. பலிதமாயதா, வியர்த்தமாயதா*?* அதாவது பலன் (பழம்*)* கொடுத்தா*?* பிரயோஜனமின்றிப் போயதா*?* என்னும் அர்த்தத்தில் உபயோகப்படுத்துகிறார்கள். இப்படியிருக்க **பழுத்தது** அல்லது பழுத்துப் போயிற்று என்றால் பிரயோஜனமற்றதாயது என்னும் அர்த்தத்தில் அப்படி வழங்கலாயிற்று, இந்த அர்த்தத்தில் பழுத்தது என்கிற மொழி, பழம் என்கிற பதத்திலிருந்து வந்ததல்ல*;* பழுத்தது என்றால் இச்சந்தர்ப்பத்தில் பழுப்பு நிறமடைந்தது என்று சில பொருளில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்று கொண்டால் அர்த்தம் சரியாக வெளியாகும்*;* அதாவது நெற் பயிரோ, அல்லது பச்சை நிறமாயிருக்கும் எந்தப் பயிரோ, திடீரென்று பழுப்பு நிறம் அடைந்துவிட்டால் (சாவியாகப் போய்விட்டால்*)* பிறகு பலன் தாரது. இந்த அர்த்தத்தில் காரியம் பழுத்துப் போயிற்று என்றால் நிஷ்பிரயோஜனமாகிவிட்டது என்று அர்த்தம் கொடுக்கும்.

*(16)* **தாலி** இது சுத்தத் தமிழ் மொழியாம்; மாங்கல்யம் என்பது வடசொல்; அச்சொல் மங்களகரமானது என்று பொருள்படும்; மாங்கல்ய சூத்திரம் என்று தாலிக்குப் பெயராகச் சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது மங்களகரமான கயிறு என்பதாம், பிராம்மணர்கள் முதலிய ஆரியர்களுடைய விவாகத்தில் தாலி கட்டுகிறதைப் பற்றி வேத வாக்கியம் ஒன்றும் கிடையாது; கிருஹ்ய சூத்திரங்களிலும் கிடையாது. ஆகவே தாலி கட்டுதல் பூர்வீகத் தமிழர்களுக்குரிய வழக்கமேயாம் என்று ஊகிக்கலாம். தமிழர்களிடமிருந்து இங்கு குடியேறிய ஆரியர்கள் கற்ற வழக்கங்களில் இது ஒன்றாகும். பழய தமிழ் நூல்களில் **புலிப்பற்றாலி** என்று சொல்லப்பட்டிருக்கிறது. புலியினது பல்லாலாகிய அல்லது புலியின் பல்லைப் போன்ற தாலி என்று பொருள்படும். இதனால் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் பூர்வீக ஜனங்களின் வழக்கம்போல், தமிழ்நாட்டிலும் முற்காலத்தில், ஒருவன் ஒரு பெண்ணை விவாகம் புரிவதென்றால், தன் வீரத்தைக் காட்ட வேண்டுமென்பது அர்த்தமாகும். பூர்வீகத் தமிழன் புலியொன்றைக் கொன்று அதன் பல்லை அதற்கடையளாமாகத் தாலியாகத் தன் காதலியின் கழுத்தில் கட்டினன்போலும். தற்காலத்திலும் வேளாளர்களில் சில ஜாதியார் உபயோகிக்கும் தாலியானது புலிப் பல்லைப் போல் பொன்னாற் செய்யப்பட்டிருப்பதைக் காண்க.

*(17)* **குடவோலை** இச்சொல் குடம்+ஓலை=குடவோலை என்பதாம். குடத்திலிடப்பட்ட ஓலைத்துண்டு என்று பொருள்படும். முற்காலத்தில் தமிழ் அகத்தில் கோயில் காரியங்களைப் பார்க்கவோ, அல்லது வேறு ஏதாவது கிராமப் பொது வேலைகளைச் செய்யவோ, ஒருவனைத் தேர்ந்து எடுக்க வேண்டியிருந்தால், அக்கிராமத்தார், கோயில் முற்றம் முதலிய இடங்களில் கூடி, ஒரு குடத்தை அங்கு வைத்து, ஓலைத் துண்டுகளில் ஒவ்வொருவனும்தான் அவ்வேலைக்கு விரும்பும் மனிதனுடைய பெயரை, எழுதி அக்குடத்திலிட, பிறகு அவ்வோலைத் துண்டுகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து யாருடைய பெயர் அதிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறது என்ற தேர்ந்து எடுக்கும் வழக்கம் பூர்வ காலத்திலேயே உண்டு என்பதை இப்பதம் நமக்கு நன்றாய்த் தெரிவிக்கிறது. தற்காலத்தில் இதை ஆங்கிலத்தில் வோட் பை பாலட் (Vote by Ballot) என்பார்கள்.

*(18)* **ஏனம்** இம் மொழி தற்காலத்தில் எவ்விதமான பாத்திரத்திற்கும் உபயோகப்படுகிறது. திவாகரத்தில் இம்மொழிக்குப் பொருள், ஓலைக்கலம், அதாவது ஓலையினாற் செய்யப்பட்ட பாத்திரம் என்று கூறப்பட்டிருக்கிறது. மிகவும் பூர்வீககாலத்தில் ஆதித்தமிழர்கள் காடுகளில் வசித்துக்

கொண்டிருந்த பொழுது, ஒலைகளைக் கட்டி பாத்திரங்களாக உபயோகப் படுத்திருக்க வேண்டுமென்பது திண்ணம், அவற்றிற்கு ஏனம் எனும் பெயர் இருந்தது. தற்காலத்திலும் வாழை இலை முதலியவற்றைக் கொண்டு தொன்னைகள் செய்து உபயோகிப்பதைக் காண்க. பிற்காலம் மண்ணாலும், செம்பு, வெண்கலம், வெள்ளி முதலியவற்றால் ஏனங்கள் செய்யப்பட்டன.

*(19)* **படியாள்–படியளத்தல்** படியாள் என்றால் கூலியாள் ; படியளத்தல் என்றால் கூலி கொடுத்தல் என்று தற்காலம் பொருள்படும். அகம்படியாள் என்பதைக் காண்க. ஆதிகாலத்தில் நெல்வயல்களில் வேலை செய்தவர்களுக்கும் வீட்டு வேலை முதலியவைகளைச் செய்த வேலைக்காரர்களுக்கும் கூலி, படியினால் அளக்கப்பட்ட தானியங்களேயாம் என்பதை இதனால் அறியலாம். தற்காலமும் சில கிராமங்களில் வேலைக்காரர்கள் கூலியை தானியங்களிலேயே பெறுகிறார்கள். கூலியாகக் காசு கொடுக்கும் வழக்கம் பிற்காலத்தில் வந்ததாம்.

*(20)* **வடகலை–தென்கலை** கலை என்றால் கல்வியாம். வடகலை என்பது சம்ஸ்கிருதமாம்; தென்கலை தமிழாம்; இம்மொழிகள் தென்னாட்டில் வசிக்கும் வைஷ்ணவ பிராம்மணர்களுக்குள் உள்ள முக்கியமான இரண்டு பிரிவுகளைக் குறிக்கின்றன. மற்ற பேதங்களுடன்; முக்கியமாக இவ்விரண்டு பிரிவினர்க்குமுள்ள பேதம் என்னவெனின், வடகலையார் வேதத்தை முதன்மையாகக் கொண்டு, விஷ்ணு கோயில்களில் உற்சவாதிகளில் சம்ஸ்கிருத வேத பாராயணம் செய்கின்றனர்; தென்கலையார் அச்சமயங்களில் தமிழ் வேதமாகச் சொல்லப்பட்ட நாலாயிர பிரபந்தங்களை பாராயணம் செய்கின்றனர்.

*(21)* **பாளயக்காரர்:** பாளயம்+காரர் அகராதியைப் பார்ப்போமாயின் இப்பதத்திற்கு "விஜயநகர வேந்தர் ஆட்சியில் அதிபராக ஆண்டுவந்த தலைவர்கள்" என்று கூறப்பட்டிருக்கிறது. இப்பெயர் எப்படி வந்ததென ஆராய்வோம். பாளயம் என்றால் சேனை. பாரதத்தில் "இரு பாளயத்தினிடம்தோறும்" என்று கூறப்பட்டிருப்பதைக் காண்க.

*(22)* **போக்கிரி** இது போக்கிலி எனும் தமிழ் மொழியின் திரிபாம். போக்கு+இலி லகரத்திற்கு ரகரம் போலி என்பதைத் தமிழ் மாணவர் அறிவார்கள். பந்தல், பந்தர் என்பதைக் காண்க. போக்கு இலி எங்கும் போக்கில்லாதவன் என்று பொருள்படும். ஒரு போக்குமில்லாதவன் சாதாரணமாக துஷ்டனாயிருப்பதைப் பற்றி, போக்கிலி அல்லது போக்கிரி; துஷ்டன் என்கிற அர்த்தத்தில் உபயோகிப்பட்டதாம்.

*(23)* **வாசாங்கள்ளி** இது வாசாங்கள்ளி என்கிற சொற்றொடரின் திரிபாம். அதாவது வாசாவில்=வார்த்தையில், கள்ளத்தனம் செய்கிறவள். அல்லது வார்த்தையை மாற்றிப் பேசுகிறவள்; வார்த்தையில் திருட்டுத்தனம் செய்கிறவள் என்று பொருள்படும்.

*(24)* **கிரஹசாரம்** இது சம்ஸ்கிருதத்திலிருந்து வந்ததாம். கிரஹம்+சாரம்; அதாவது கிரஹத்தின் பலன்; இங்கு கிரஹம் என்றால் சூர்ய சந்திரர்கள் முதலான நவக்கிரஹங்களைக் குறிப்பதாம். இதற்குப் பூர்விகத் தமிழ் பெயர் கோள் என்பதாம். "கோளாறு திருப்பதிகம்" என்னும் திருஞான சம்பந்த ஸ்வாமிகள் பாடிய பாடலைக் காண்க. சூரியன் செல்லும் ஆகாய வீதியை பன்னிரண்டாக வகுத்து, அவைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கிரஹம் அல்லது வீடு என்று அழைக்கின்றனர் வான சாஸ்திர அறிஞர். தற்காலமும் சந்திரன் எந்த வீட்டில் இருக்கிறான்? என்று ஜாதகம் கணிக்கும்போது கவனிப்பதை நோக்குக. இந்த கிரஹங்களில் சஞ்சரிப்பதினால் அங்காரகன், பிரஹஸ்பதி முதலிய நட்சித்திரங்களுக்கு கிரஹங்கள் என்று பெயர் வழங்கலாயிற்று; நவக்கிரஹங்கள் என்பதைக் கவனிக்க. நமது ஜோதிட சாஸ்திரப் பிரகாரம் இந்த கிரஹங்களெல்லாம் ஒவ்வொரு மனிதனுக்கும் நன்மை தீமையைப் பயப்பதாகக் கருதப்படுகிறபடியால் கிரஹசாரம் என்றால் கிரஹத்தின் பலன் என்னும் அர்த்தத்தில் வழங்கலாயிற்று. இச்சந்தர்ப்பத்தில் கிரஹசாரம் என்றும் சாதாரணமாகக் கெட்ட அர்த்தத்திலேயே உபயோகிக்கப் படுகிறதைக் கவனிக்கவும்.

*(25)* **ஈரோட்டு:** இப்பதம் சாதாரணத்தில் ஈரெட்டு என்று வழங்கப்படுகிறது. தமிழ் அகராதியில் இப்பதத்தை இரண்டு ஒட்டு என்று பிரித்திருக்கிறது; இரண்டில் ஒன்று என்று பொருள்படும்; ஆகவே நிச்சயமின்மையைக் குறிப்பதாம். ஈரெட்டாகச் சொன்னான் என்றால் இரண்டில் ஒன்றாகச் சொன்னான்; நிச்சயமாகக் கூறாமல் சந்தேகமாய்ச் சொன்னான் என்று அர்த்தம் தரும். ஒரு பொருளை ஈரெட்டாக வாங்கிக்கொண்டு போனான் என்றால், முடிவாக வாங்கிக்கொண்டு போகவில்லை. வாங்கிக் கொண்டாலும் வாங்கிக் கொள்வான். திருப்பிக் கொடுத்தாலும் கொடுத்துவிடுவான் என்கிற பொருளைத் தருவதாம்.

*(26)* **துபாசி** இப்பதம் ஆதிகாலத்தில் தரகன் என்கிற அர்த்தத்தில் உபயோகப்பட்டிருக்கிறது. இதற்கு அகராதியில் "ஐரோப்பியரின் வியபாரத்தில் இடை நின்றுதவும் தரகன்" என்று அர்த்தம்

செய்யப்பட்டிருக்கிறது. இப்பதத்திற்கு இந்த அர்த்தம் எப்படி வந்ததென்ற சற்று ஆராய்வோம். துபாஷி என்பது இந்துஸ்தானி பதம். தோ+பாஷி அல்லது துவி+பாஷி – அதாவது இரண்டு பாஷை பேசுகிறவன் என்று பொருள்படும். ஆதிகாலத்தில் ஐரோப்பியர் தென்இந்தியாவிற்கு வந்து வர்த்தகம் செய்ய ஆரம்பித்தபோது அவர்களுடன் வாங்கல் கொடுக்கல் எனும் லேவாதேவி செய்பவர்களுடைய பாஷை அவர்களுக்குத் தெரியாமலிருந்தது; ஆகவே, தமிழ்நாட்டுப் பாஷையும் ஆங்கிலமும் இரண்டும் தெரிந்தவர்கள் அவர்களுக்கிடையிலிருந்து, ஒருவர் பேசுவதை மற்றொருவருக்குத் தெரிவித்து, வியாபாரத்தை முடித்து வைக்க வேண்டியதாயிருந்தது; ஆகவே, இரண்டு பாஷை கற்றவர்கள் இத்தொழிலுக்கு ஏற்றவர்களாயிருந்தனர். தமிழில் இல்லாதபடியால் துபாசி என்றாயது. மேற்கண்டபடி இருதிறத்தார்க்கும் வாங்கல் கொடுக்கல் முடித்துவைப்பதில், இருதிறத்தாரிடமிருந்து அவர்கள் ஊதியம் பெற்றபடியால் (Commission) துபாசி என்கிற பதத்திற்கு தற்காலம் தரகன் என்கிற அர்த்தம் கிடைக்கலாயிற்று.

*(27)* **நாமம் போடல்** என்றால் தற்காலம் ஏமாற்றல் என்று உபயோகப் படுகிறது; அவனுக்கு நாமம் போட்டான் என்றால் அவனை ஏமாற்றிவிட்டான் என்று அர்த்தமாகிறது. இச்சொற்றொடருக்கு இந்த அர்த்தம் வந்ததற்குக் காரணம் அடியில் வருமாறாக இருக்கலாம் என்று ஊகிக்க இடம் கொடுக்கிறது. ஆதியில் தமிழ்நாட்டில் சைவர்களாயிருந்த சிலர் ராமானுஜாசாரியார் காலத்தில் வைஷ்ணவர்களாக மாற்றப்பட்டபோது அவர்கள் நாமம் அணியலாயினர். அக்காலத்தில் சைவர்கள் 'அவனுக்கு நாமம் போட்டுவிட்டார்கள்" என்று வழங்கியிருக்கலாம். இதனினிறும் நாமம் போடல் என்றால் ஏமாற்றல் என்கிற பொருள் வந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. இச்சந்தர்ப்பத்தில் இதைப்போன்ற, இதே அர்த்தத்தைத் தரும்படியான, தொப்பி போடுதல், குல்லாய்ப் போடுதல், என்கிற இரண்டு சொற்றொடர்களையும் ஆராய்ந்து பார்க்க தொப்பி அல்லது டொப்பி என்பது சாதாரணமாக கிறிஸ்தவர்கள் அணியும் சிரோத் பூஷணமாம். குல்லாய் என்பது மகம்மதியர்கள் அணிவதாம். ஒரு ஹிந்து மதத்தைச் சார்ந்தவன் கிறிஸ்தவனானால் சாதாரணமாக டொப்பி அணிகிறான். மகம்மதிய மதத்தைச் சார்ந்தால் குல்லாயணிகிறான். இவ்விரண்டு சொற்றொடர்களுக்கும் தற்காலம் ஏமாற்றுதல் எனும் அர்த்தமிருப்பதைக் காண்க.

*(28)* **குத்து விளக்கு** என்பது குத்து+விளக்கு. பூர்வகாலத்தில் மண்ணால் கட்டப்பட்ட வீடுகளின், தரையில் தண்டகளைக் குத்தி வைக்கப்பட்ட விளக்குகளுக்குப் பெயராயிருந்தது.

*(29)* **எச்சிற்கல்லை** எச்சில்+கல்லை. கல்லையென்றால் இலையினாற் செய்த கலம் என்று அர்த்தமாகிறது. தற்காலம் இது சாப்பிட்ட இலைக்கு உபயோகிக்கப்படுகிறது.

*(30)* **அப்பாணை** அப்பன்+ஆணை; தகப்பனாருடைய உத்திரவு அல்லது கட்டளை. தற்காலம் இப்பதம் சத்தியம் என்கிற அர்த்தத்தில் உபயோகிக்கப்படுகிறது. மொழியின் பூர்வோத்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் நமது பூர்வீகத் தமிழர்கள் தகப்பனாருடைய கட்டளைக்கு எவ்வளவு கௌரவம் கொடுத்தனர் என்பதை அறிவோம்.

*(31)* **அத்தான், அம்மான்ஜி** அத்தான் என்பது அத்தை மகன் என்பதாம். அம்மான்ஜி என்பது அம்மான்+சேய்=அம்மான்மகன் என்பதாம், பின்கண்ட பதம் சாதாரணமாக பிராம்மணர்களுக்குள் தான் வழங்கப்படுகிறது.

*(32)* **ஓரகத்தி, சக்களத்தி** ஓரகத்தி என்பது ஓர் அகத்தில் வாழ்பவள் என்று பொருள்படும். ஒரே குடும்பத்தில், ஓர் வீட்டில் வாழும் அண்ணன் தம்பிகளுடைய மனைவிகளுக்கு அக்காரணம் பற்றி ஓரகத்தி எனும் பெயர் வழங்கலாயிற்று. சக+களத்தி; களம் என்றால் மனைவியாம். சக்களத்தி என்றால், தன் புருஷனுடைய இரண்டாம் மனைவியைக் குறிக்கும் பதமாயிற்று.

*(33)* **மனைவி** என்னும் மொழி மனையிலிருப்பவளைக் குறிப்பதாம். அகமுடையாள், அகத்திலிருப்பவள், வீட்டிலிருப்பவள் என்பதைக் கவனிக்க. அகம்=வீடு இல்லாள் என்பதையும் பார்க்க; இல்=வீடு.

*(34)* **காப்பு** என்பது தற்காலத்தில் கையிலணியும் ஓர் ஆபரணத்தைக் குறிக்கும். காப்பு என்றால் ரட்சை என்று பொருளாம். பூர்வகாலத்தில் விவாக காலத்திலோ, யாக காலத்திலோ மற்றும் இதரச் சடங்குகள் நடக்கும்பொழுதோ, ரட்சையாக கயிறோ கொடியோ கட்டப்பட்டிருக்க வேண்டும். பிறகு பொன் வெள்ளியினால் அவைகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். பிறகு தமிழர்கள் பொன் காப்புகளைச் சாதாரணமாக ஆபரணமாக அணியத் தலைப்பட்டனர். இச்சந்தர்ப்பத்தில் **வளையல்**

**என்பதையும் கவனிக்க, வளையல் என்பது வளை என்கிற மொழியினின்றும் வந்ததாம். ஆதிகாலத்தில் எதையாவது வளைத்து கையில் அணிந்திருக்க வேண்டும். பிறகு பொன் வெள்ளிகளாகிய வளையல்களை ஆபரணங்களாக அணியும் வழக்கம் உண்டாயிருக்க வேண்டும்; தற்காலம் ரவை கெம்பு வளையல்கள் உபயோகிக்கப்படுவதைக் காண்க.**

*(35)* **கம்மல்** இது பெண்கள் காதில் அணியும் ஆபரணமாய் தற்காலம் வழங்கப்படுகிறது. கம்மா என்றால் ஓலை என்று பொருள்படும். ஆதிகாலத்தில் தமிழகத்து மாதர்கள் ஓலைச் சுருள்களைத்தான் காதில் அணிந்திருக்க வேண்டும்; பிறகு பொன்னால் செய்யப்பட்டு, தற்காலத்தில் மலையாள தேசத்தில் இன்னமும் வழக்கத்திலிருக்கும் காதணிகளைப்போல் உபயோகத்திற்கு வந்திருக்க வேண்டும். பிறகு கெம்பு, ரவை முதலியவைகள் இழைத்த காதணிகளாக மாறியிருக்க வேண்டும். தற்காலமும் **வயிர ஓலை** என்று வயிரக் கம்மலுக்கு தெற்கில் வழங்கப்படுகிறதைக் காண்க. அன்றியும் கம்மல், ஓலை என்கிற மேற்கண்ட பதங்களைக் கொண்டு ஆதிகாலத்தில் தமிழ்நாட்டு ஸ்திரீகள் தற்காலத்தில் திருநெல்வேலி, மலையாளம் முதலிய இடங்களில் ஸ்திரீகள் தங்கள் காதுகளில் பெரும் துவாரமாக்கி, அவைகள் தொங்கும்படியாக வளரவிட்டுக் கொண்டிருந்தனர் என்பது புலப்படும். பூர்வீகச் சித்திரங்களையும் சிலைகளையும் ஆராய்ந்து பார்ப்போமாயின் இதன் உண்மை வெளியாகும்.

*(36)* **மரக்கால்** என்பது தானியத்தை அளக்கும் ஓர் அளவைக் கருவியாம். மரம்+கால்=மரக்கால் ஆயது. அதாவது பூர்வத்தில் மரங்களின் அடிப்பாகத்தைக் குடைந்து அதைக்கொண்டு அரிசி முதலியவற்றைக் அளந்திருக்க வேண்டும்; பிறகு இரும்பு முதலியவற்றால் அவைகள் செய்யப்பட்டிருக்க வேண்டுமல்லவா? பழய சேர, சோழ, பாண்டியர்கள் காலத்தில் மரக்கால் முதலிய அளவைக் கருவிகளுக்குப் பெயர்கள் உண்டு. வீரபாண்டியன், ஆடவல்லான் என்கிற பெயர்களைக் காண்க. மரக்காலுக்கு மரக்கால் அளவில் வித்யாசப்படுமாகையால், அப்படிக்கில்லாதபடி, ஒரே அளவைக் குறிக்கும் வண்ணம், அவ்வரசர்கள் காலத்தில் முகத்தளவைக் கருவிகள் ஏற்படுத்தப்பட்டு, அவைகள் கோயில்களில் சாதாரணமாக வைக்கப்பட்டிருந்தன; அவைகளைக் கொண்டு கோயில் வரும்படித் தானியங்களையும் ராஜாங்க வசூல் தானியங்களையும் அளக்கும் வழக்கம் இருந்தது.

*(37)* **அடி, சாண், முழம், அங்குலம்** என்னும் நீட்டலளவு பதங்கள் நமது தேசத்திலுள்ள அவயுவங்களினின்றும் பிறந்தவை என்று சுலபமாயப் புலப்படும்.

*(38)* **கூவோலி** என்பது ஓர் பூர்வீகத் தமிழ் மொழியாம். கூப்பிடு தூரம் என்பது தற்காலம் வழங்கும் மொழி. ஒருவன் உரத்துக் கூவினால் எவ்வளவு தூரம் கேட்குமோ அவ்வளவு தூரம் என்று பொருள்படும்.

*(39)* **காணிக்கை.** அரசர் முதலிய பெரியோர்களைக் காணும் பொழுது ஒருவன் சமர்ப்பிக்கும் பொருளுக்குக் காணிக்கை என்று பெயர்ாயது போலும்.

*(40)* **அமுது,** என்பது அமிர்தம் எனும் சம்ஸ்கிருத பதத்தின் திரிபாம். பிறகு உணவு எனும் பொதுப்பெயராக உபயோகிக்கப்பட்டதாம். திருக்கண்ண மது என்பது திரு+கண்ணன் (கிருஷ்ணன்) + அமுது என்பதாம். அமுது பொடி என்பது அரிசி என்று வழங்கலாயிற்று.

*(41)* **பச்சடி** என்பது தமிழர்கள் சாதாரணமாக வழங்கும் ஓர் பதமாம். இது பச்சையென்னும் மொழியினின்றும் வந்தது என்பதற்குத் தடையில்லை. பச்சை அதாவது பசுமை நிறமுடையது. வேக வைக்காதது என்று பொருள்படும். வேக வைத்தால் பதார்த்தங்களின் நிறம் கொஞ்சம் மாறுமன்றோ? ஆகவே, பச்சடி என்பது எந்த பதார்த்தத்தையாவது அடுப்பில் வேக வைத்துச் சித்தம் செய்யாததாம். தற்காலத்து மேனாட்டுச் சுகாதார சாஸ்திர நூல்களில், நமது தேக ஆரோக்கியத்திற்கு தினம் ஏதாவது பச்சை நிறமமைந்த காய்கறிகளை, அப்படியே, தீயில் வாட்டாது புசித்தல் நலமென்று கூறுகின்றனரல்லவா? இந்த உண்மையை நமது முன்னோர்கள் முன்பே அறிந்திருந்தனர் என்பதற்கு அவர்கள் உண்ட பச்சடிகளே சான்றாகும்.

*(42)* **நீச்சத் தண்ணீர்.** இது கிராமாந்தரங்களில் சூத்திரர்கள் சாதாரணமாகக் காலையில் அருந்துவதாம். இதன் சரியான பதம் நிசித்தண்ணீர் என்பதாம். நிசி என்றால் இரவு. முன்னாள் இரவு சோற்றுடன் கலந்துவைக்கப்பட்ட தண்ணீர் என்று புலப்படும்.

*(43)* **குப்பன்.** இப்பெயர் தமிழ்நாட்டில், சாதாரணமாக எல்லா ஜாதியார்களுக்கும் பெயராக உபயோகப்படுகிறது; குப்பையர், குப்பனையங்கார், குப்பாசாரி, குப்புராவ், குப்புசாமி முதலியார், குப்புசாமி நாயுடு, குப்புசாமி பிள்ளை என்பவற்றைக் காண்க. அன்றியும்

பெண்பாலார்க்கும் சாதாரணமாக குப்பம்மாள் எனும் பெயர் பல ஜாதிகளில் உண்டு. இப்பெயர் எப்படி வழங்கலாயிற்று என்று விசாரிப்பது வேடிக்கையாயிருக்கும். இப்பெயர் குப்பை எனும் பதத்தினின்றும் பிறந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. தமிழ்நாட்டில் ஓர் பூர்வீக வழக்கமென்னவென்றால், ஒரு தம்பதிகளுக்கு, பல குழந்தைகள் பிறந்து இறந்துபோனால், பிறகு பிறக்கும் குழந்தையைக் குப்பையில் எறிந்து விடுவதுபோல் எறிந்துவிட்டு, பிறகு அதையெடுத்து குப்பையர், குப்புசாமி, குப்பம்மாள் என்று பெயர் வைப்பதாம். இப்படிச் செய்வதினால் அந்த தோஷம் நீங்கி நெடுநாள் ஜீவித்திருக்கும் என்பது அவர்கள் கொள்கை.

*(44)* **அம்பட்டன், பரியாரி** அம்பட்டன் என்பது அம்பஷ்டன் எனும் சம்ஸ்கிருதத்தின் மருவாம். இது சாதாரணமாகச் சென்னைக்கருகில் உள்ளவரால்தான் உபயோகிக்கப்படுகிறது. மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி முதலிய பிராந்தங்களில் பரியாரி எனும் பதம்தான் உபயோகத்திலிருக்கிறது. பரியாரி என்பது ப்ரிஹாரி என்பதின் மருவுபோலும். நோய்க்கு பரிஹாரம் செய்பவன், அல்லது வயித்தியன் எனப் பொருள்படும். அம்பட்டர்கள் தற்காலமும் சாதாரணமாக வைத்தியர்களாயிருப்பதைக் கவனிக்க. அம்பட்டத்தி என்றால் பிரசவ காலத்தில் வயித்தியம் செய்பவளுக்குத் தற்காலப் பெயராம்.

*(45)* **கேப்மாறி** இது கேப் அல்லது காப் (Cap) என்னும் ஆங்கில பதத்தினின்றும் பிறந்ததாம். காப் என்றால் குல்லாய், குல்லாயை மாற்றுகிறவன், அதாவது அயோக்கியன். மோசக்காரன் என்று பொருள்படும். "தலைப்பா மாற்றி" என்கிற இதைப் போன்ற சொற்றொடரையும் கவனிக்க. இச்சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்க வேண்டியது இன்னொன்றுண்டு. காப், டொப்பி ஆங்கில பதங்களாம். குல்லாய் பாகை என்பது உர்து பதங்களாம். ஆகவே, இவைகளையெல்லாம் அணியும் வழக்கம் தமிழ்நாட்டில் பின் வந்ததாம். பூர்வத்தில் தமிழர்கள் அணிந்தது தலைகுட்டையென்பதைக் கவனிக்க; சிரோ பூஷணம் உஷ்ணீஷம் என்பவை சம்ஸ்கிருத மொழிகளாம்.

*(46)* **ஒன்பது** என்பது ஆதியில் தொன்பது என்றிருந்ததாக எண்ணப்படுகிறது. தொள்+பத்து=ஒன்று குறைய பத்து. தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பதைக் கவனிக்க.

*(47)* **ஆப்பம்** என்பது அப்பம் எனும் தமிழ் மொழியினின்று வந்ததாகும்.

*(48)* **ஆமவடை** என்பது தமிழர்கள் சாதாரணமாக அருந்தும் பட்சணமாம். இது ஆமம்+வடை; அதாவது பச்சைத் தயிரில் இட்ட வடையென்று பொருள்படலாம். ஆமம் என்றால் கடலைக்குப் பெயர். ஆகவே, கடலையால் செய்ததாம் என்பாருமுளர்.

*(49)* **கெடாரங்காய்** என்பது கடு+நாரங்காய். கடு என்றால் துவர்ப்பு. துவர்ப்புக் கிச்சிலிக்காய் என்றாம். நாரங்காய் என்பது நாரஞ்சி எனும் மேல்நாட்டு பதத்திலிருந்து வந்ததாம்.

## சில வேடிக்கையான மொழிகள்

*(50)* **ஓடக்கால்** இது சென்னையில் சில வருடங்களுக்கு முன் பாம்பஸ் பிராட்வே (Pophams Broadway) என்னும் வீதியருகிலுள்ள ஒரு வீதியின் பெயராயிருந்தது. இங்கு நெடுநாளாக மிகவும் இழிந்த விலை மாதர் வசித்து வந்தனர். ஓடக்கால் என்று ஒரு ஸ்திரீயைக் கூப்பிட்டால் அது ஒரு பெரிய வசையாயிருந்தது. இவ்வீதிக்கு இப்பெயர் ஏன் வந்தது என்று பல வர்த்தமானப் பத்திரிகைகளில் பலர் தங்கள் அபிப்பிராயங்கள் எழுதினர். (ஒருவர் Why do you call என்னும் ஆங்கிலத்தின் திரிபு என்றுகூட எழுதினார்!) இந்தத் தமிழ் பதத்தை ஆராய்ந்து பார்த்திருந்தால் இதன் உண்மையான அர்த்தம் வெளியாயிருக்கும். ஓடம் (அல்லது ஓடை) +கால். ஓடக்கால். ஓடம் என்றால் படகு; கால் என்றால் கால்வாய். படகுகள் விடும் கால்வாய் என்று பொருள்படும். (தற்காலமும் ராமநாதபுரம் ஜில்லாவில் ஓடைக்கால் என்கிற கிராமம் இருப்பதைக் காண்க.) ஆயினும் நீர்நிலை இங்கு ஒன்றுமில்லாத இடத்திற்கு இப்பெயர் வருவானேன் என்று கேட்கலாம். சுமார் *300* வருடங்களுக்கு முன் சென்னப் பட்டணம் எப்படியிருந்தது என்பதை ஆராய்ந்து பார்த்தால் இந்த சந்தேகம் நிவர்த்தியாகும். அக்காலத்திய படம் (Map) ஒன்றை எடுத்துப் பார்த்தால், தற்காலம் பிராட்வே என்று சொல்லப்பட்ட வீதி வழியாக சிறு அருவியானது ஓடிக்கொண்டிருந்தது என்பதை அறிவோம் அது கோட்டையின் வடபுறமாக அச்சமயம் பாய்ந்த கொண்டிருந்த கூவத்தின் ஒரு கிளையிற் போய்க் கலந்ததைக் காணலாம். பிறகு ஓடக்கால் என்று கூறப்பட்ட வீதியானது அச்சிற்றருவியிலிருந்து ஓடங்கள் கட்டிவைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கால்வாயாகும். வர்த்தக ஓடங்கள் இரவுகளில் தங்கும் இடங்களிலெல்லாம் சாதாரணமாக குச்சுக்காரிகள் (இழிகுல மாதர்கள்) வசிப்பது வழக்கமாம். பிறகு இவ்வாய்க்காலும், இச்சிறு அருவியும் அடைக்கப்பட்ட போது, அந்த

இடத்திற்கு பிராட்வே எனும் பெயராகி, இந்த இடத்திற்கு ஓடக்கால் வீதி என்று பெயராது.

**இனி, சில நாணயங்களின் பெயர்களை ஆராய்வோம்**

*(51)* **வராஹன்** என்பது சில வருடங்களுக்கு முன்பாக 3½ ரூபாயாக மதிக்கப்பட்டிருந்தது. இது மத்திம காலத்தில் வழங்கிய ஒரு பொன் நாணயத்தின் பெயராம். இதற்கு அப்பெயர் வந்ததற்குக் காரணம் அதன் பேரில் ஒரு வராஹத்தின் உருவம் அமைக்கப்பட்டிருந்ததாகும், வராஹம் என்றால் பன்றி. இது சாளுக்கியர்களுடைய பிருதாம். தமிழ்நாட்டில் இடைக்காலத்தில் சாளுக்கியர்கள் அரசாண்டதை நாம் சரித்திர மூலமாக அறிகிறோம். ஆகவே, இந்த வராஹன் எனும் நாணயமானது அவர்கள் காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கலாயிற்று.

*(52)* **சவரன்**. இது ஆங்கிலேயர் வந்த பிறகு இந்நாட்டிற்கு வந்த நாணயமாம். சவரன் என்பது சாவ்ரன் எனும் ஆங்கில மொழியின் திரிபாம். சாவ்ரன் என்றால் அரசன் என்று ஒரு அர்த்தமுண்டு. அந்நாணத்தின் மீது அரசருடைய உருவம் அமைக்கப்பட்டதால் அப்பெயர் வந்ததாம்.

*(53)* **பகோடா** இது ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் (East India Co) இங்கு ஆண்ட காலத்தில் வழங்கிய ஓர் பொன் நாணயமாம். பகோடா என்றால் கோயில் என்று பொருள் ஆகும். அந்நாயணங்களின் மீது கோபுரம் பொறிக்கப்பட்டபடியால் அப்பெயர் வந்தது. தென்நாட்டில் கோபுரங்கள் விசேஷம் என்பதைக் கவனிக்க. பொன் நாணயங்களில் கோபுரங்களை முத்திரிக்கும் வழக்கம் விஜயநகர அரசர்கள் காலத்திலிருந்து வந்ததாக நாம் அறிகிறோம்.

*(54)* **காசிமாலை** என்பது காசுமாலை யென்பதின் திரிபாம். காசு என்பது பழய தமிழ்நாட்டில் வழங்கிய நாணயப் பெயராம். பொற்காசு, செப்புக்காசு என்பதைக் காண்க. இக்காசுகளாலாகிய மாலைக்கு காசுமாலை எனப் பெயர் வந்தது. காசு க்ஷேத்திரத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

*(55)* **ரூபாய்** என்பது ரூப்யம் என்றும் சம்ஸ்கிருத மொழியினின்றும், ஹிந்துஸ்தானி வழியாக வந்ததாம். ரூப்யம் என்றால் வெள்ளி. இது மகம்மதியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்த பிறகுதான் பெரும்பாலும் வழங்கலாயிற்று.

*(56)* **சுங்கம்** கி.பி. பதினோராம் நூற்றாண்டில் சில நாணயங்களின் பேரில் 'சுங்க' என்று பொறிக்கப்பட்டிருந்தது. இது சுங்கம் எனும் பதத்தின் முதல் மூன்று எழுத்துக்களாகும். அக்காலத்தில் அரசாண்ட குலோத்துங்கச் சோழனுக்கு 'சுங்கம் தீர்த்தவர்' என்று விருதுப் பெயர். ஆகவே, அவன் நாணயங்களில் மேற்சொன்ன எழுத்துக்கள் பொறிக்கப்பட்டனவாம்.

## தமிழர்களுடைய பூர்வீக, சிறந்த நாகரீகத்தை விளக்கும் மொழிகள்

*(57)* **கலங்கரை** இப்பதம் பெரும்பாணாற்றுப்படையில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இதன் பொருள் 'இங்கு கரையுள்ளது என்று மாலுமிகள் அறியும்பொருட்டு உயரமாக விளக்கு வைக்கப்பட்ட இடம் என்பதாம். ஜீவகசிந்தாமணியில் கலங்கரை விளக்கம் என்று கூறப்பட்டிருக்கிறது; அன்றியும் சிலப்பதிகாரத்தில் "**தீநா**' என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதன் பொருள். கப்பல்கள் திசை தப்பாமலிருப்பதற்காக' பனைகளைக் காலாக் நாட்டி அதன்மீது மண் வைத்து எரிக்கும் விளக்கு என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் பூர்வகாலத்தில் தமிழர்கள் கப்பல் யாத்திரை சாதாரணமாகச் செய்தனர் என்றும், அதற்காகவேண்டிய சௌகர்யங்களை யெல்லாம் செய்து கொண்டனர் என்றும் ஸ்பஷ்டமாகிறது. கலங்கரை விளக்கம் என்பது கலங்+கரை+விளக்கம் என்று பிரியும், கப்பல்களுக்கு கரையருகிலுள்ளது என்று தெரியப்படுத்தும் வெளிச்சமாம். தீநா என்னும் மொழி மிகவும் அழகாய் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்க்க; கப்பலில் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு இது ஒரு தீயினாலாகிய நாக்கைப் போல் தோன்றுமல்லவா?

*(58)* **காராணை** என்றால் கடலின் மீதிருந்து கீழிறங்கி நீரை முகந்து பெருந் தூணைப்போல் நிற்கும் மேகம் என்று பொருள். இதனை ஆங்கிலர் வாடர் ஸ்பௌட் (Water Spout) என்பர். இது சாதாரணமாகக் கப்பல் யாத்திரை செய்பவர்களுக்குத்தான் தெரியும். இது கடலில் அபூர்வமாகக் காணப்படும் காட்சியாம். இப்பூர்வீக பதத்தினால் நமது முன்னோர்கள் இதை நன்றாயறிந்திருந்தனர் என்பது வெளியாகும்.

*(59)* **காவிதி** இது ஒரு பூர்வீகமான பதம், தற்காலம் வழக்கிலில்லை. இது, வேளாளர்க்கு பாண்டிய அரசர்கள் கொடுத்த பட்டம் என்பதைத் தொல்காப்பியத்தின் உரையினின்றும் அறிகிறோம்; அன்றியும், இப்பட்டம் பெற்றவர் அரசர்களிடமிருந்து அப்பட்டத்திற்கு அறிகுறியாக ஒரு பொன்

பூவையும் பெற்றனராம். அதற்குக் **காவிதிப்பூ** என்று பெயராம். தற்காலமும் ஆங்கில ராஜாங்கத்தார் ராவ், சாயபு, ராவ்பகதூர், திவான்பகதூர் முதலிய பட்டங்கள் அளித்து, அப்பட்டங்களுக்கு அறிகுறியாக வெள்ளி, பொன் பதக்கங்களையும் அளிப்பது போல, ஏறக்குறைய இரண்டாயிர வருடங்களுக்கு முன்னமே தமிழ்நாட்டில் இத்தகைய வழக்கம் இருந்தது என்பதை இதனால் நாம் அறிகிறோம். அன்றியும் மேற்சொன்ன தமிழ் பட்டம் வைசிய மாதர்களுக்கும் தமிழ் அரசர்களால் அளிக்கப்பட்டது என்பதைப் 'பெருங்கதை' மூலமாக அறிகிறோம். "எட்டி காவிதிப் பட்டந் தாங்கிய மயிலியன் மாதர்" என்று கூறியிருப்பதைக் காண்க. ஸ்திரீகளும் தமிழகத்தில் ஆதிகாலத்தில் எவ்வளவு உயர்வாக மதிக்கப்பட்டனர் என்பதை இதனால் அறிகிறோம். **சேரகோன், செம்பியன், தமிழ்வேள்** என்கிற பட்டங்கள் பிற்காலத்து தமிழ் அரசர்களால் அளிக்கப்பட்ட பட்டப் பெயர்களாம். தென்னவன் பிரமராயன் என்று மாணிக்கவாசக ஸ்வாமிகளுக்குப் பட்டப் பெயர் அளிக்கப்பட்டதைக் காண்க.

*(60)* **எட்டி** என்பது பூர்வீகத் தமிழ் அரசர்கள் வைசியர்களுக்குக் கொடுத்த பட்டப் பெயராகும். எட்டிப்பூ என்பது அப்பட்டம் பெற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பொற்பூவின் பெயராகும். இது, பூர்வீக கிரந்தமாகிய மணிமேகலையினின்றும் நாம் அறிவதாகும்; அன்றியும் எட்டிப் பெயர்பெற்ற வைசியருடைய மனைவிகளும் எட்டி எனும் பட்டம் பெற்றதைக் கவனிக்க. தற்காலம் 'சர்' எனும் பட்டம் பெற்றவருடைய மனைவிக்கு 'லேடி' என்று வழங்குவதுபோல் அக்காலமும் அந்த கௌரவம் ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட்டது என்பது நாம் அறிகிறோம்.

*(61)* **ஏனாதி** என்பது பழய தமிழ் அரசர்களால் தங்கள் மந்திரிகளுக்குக் கொடுக்கப்பட்ட, பட்டப்பெயராம். ஏனாதி மோதிரம் என்றால் ஏனாதி பட்டம் பெற்றவர்கட்கு அரசனளிக்கும் மோதிரம் என்பதாம். இதற்குத் திருக்கைச் சிறப்பு என்றும் பூர்வீகப் பெயர் உண்டு ஜீவக சிந்தாமணியின் உரையில் இதைப் பற்றி காண்க.

*(62)* **மெய்க்காப்பு** மெய்+காப்பு. உடலைக் காப்பான் என்று பொருள்படும். மெய்க்காப்பாளன் என்றால் அத்தொழிலை அருகிலிருந்து செய்பவன் என்றும் பூர்வகாலத்தில் பாண்டிய மன்னர்கட்கு எந்நேரமும் அவர்களருகிலிருந்து அவர்களைக் காப்பவர்கட்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. தற்காலமும் அவ்வழக்கம் பற்றி மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் பட்டாபிஷேக காலத்தில், பாண்டிய அரசனாக

வரும் பட்டருடன், மெய்க்காப்பாளன் என்று ஒருவன் வேடம் தரித்து வருவதைக் காண்க. அன்றியும் **"உடநிலைக்** குதிரைச் சேவகர்" என்று பூர்வீகத் தமிழர் கல்வெட்டுகளில் கூறப்பட்டிருக்கிறது. இச்சொற்றொடர்க்கும் பொருள், பரியேறும் மெய்க்காவலர் என்பதாம்; தற்காலத்தில் அரசர்க்கும் ராஜப்பிரதிநிதிகள் முதலியோருக்கும் பாடிகார்ட் (Body Guard) என்றிருப்பதுபோல் அக்காலத்திலும் தமிழ்நாட்டிலிருந்தது என்பதை இச்சொற்களால் நாம் நன்கு அறிகிறோம்.

*(63)* **ஊராளன்தேர்** என்னும் பதத்தை மணிமேகலையில் காண்கிறோம். இதற்கு ஆகாய விமானம் என்று பொருள் செய்யப்பட்டிருக்கிறது; அதாவது, பூமியின் பேரில் செல்லாத தேர் என்று. ராமாயணக் காலத்தில் புஷ்பகம் முதலிய ஆகாய விமானங்களை அறிந்திருந்தது உண்மையாயின், மணிமேகலைக் காலத்தில், தமிழர்கள் ஆகாயத்தேர்களை ஏன் அறிந்திருக்கலாகாது எனும் கேள்வி நாம் கேட்கக்கூடும்.

*(64)* **கரந்து வரல் எழினி-பொருமுக வெழினி** எழினி என்றால் ~~பூர்வீகத்தில் திரைக்குப் பெயராம்.~~ கரந்துவரல் எழினி என்றால் மேலே மறைந்து, கீழே இறங்கும் திரைக்குப் பெயராம்; பொருமுக வெழினி என்றால் திரை இரண்டாகப் பிரிந்து மறுபடியும் விழும்போது எதிர்த்துச் சந்திக்கும் திரையாம். பூர்வகாலத்தில் மூவகைத் திரைகள் தமிழ் நாடகங்களில் உபயோகப்பட்டதாக அறிகிறோம். இதைக் கொண்டு அக்காலத்தில் தமிழ் நாடகங்கள் எவ்வளவு சீர்திருத்தம் உடையனவாயிருந்தன வென்பதை ஊகிக்கலாம். சம்ஸ்கிருத நாடகங்களில் நேபத்தியத்தில் ஒரே திரை குறிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க.

*(65)* **திங்கள்** என்றால் சந்திரன் என்று அர்த்தம். திங்கட்கிழமை சந்திரனுடைய கிழமையாம். திங்கள் என்றால் மாதம் என்றும் பொருள்படும். தொல்காப்பியத்தில் திங்கள் என்றால் மாதம் என்கிற அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பண்டைக் காலத்தில் தமிழர்கள் சாந்திர மாசத்தையே கணித்தனர் என்று கூறலாம். "ஐயிரண்டு திங்கள்" என்று திருவெண்காட்டடிகள் கூறியிருப்பதையும் காண்க. தற்காலமும் ஸ்திரீகள் பிரசவ காலத்தை *10* மாதம் என்று வழங்குவது சாந்திர மாசக் கணக்கைப் பொறுத்ததாகும். **திங்கட் காசு** என்று மாதம் தோறும் தண்டப்படும் ஓர் பூர்வீக வரிக்கும் பெயராகும்.

*(66)* **வீராக்கல்.** இதற்குப் பொருள் கல்லில் வீரனுடைய பெயரும் பெருமையும் எழுதி அல்லது பொறித்து நட்டக் கல்லாம். இது தமிழகத்தில் மிகவும் பூர்வீகமான ஓர் வழக்கத்தைக் குறிப்பதாம். பூர்வகாலத்தில் ஒருவன் யுத்தத்திலோ, அல்லது தன் அரசனுயிர் காப்பதிலோ, பெரும் வீரச் செய்கை செய்து, தன் உயிரை விட்டவனாயின், அவன் பெயரும் வீரச் செயலும் மழுங்காதிருக்கும் வண்ணம், அவனைப் போன்ற உருவத்தை சிலையில் பொறித்து, அதில் அவன் பெயரையும் பொறித்து வைத்தல் வழக்கமாம். பொறித்தல் என்றால் கல்லில் செதுக்கி வைத்தல் என்று பொருள்படும்.

*(67)* **சாலேஸ்வரம்.** இது சாலீஸ் எனும் வட சொல்லிலிருந்து பிறந்தது. சாலிஸ் என்றால் ஹிந்துஸ்தானியில் *40* என்று அர்த்தம். *40*ஆம் வயதில் மனிதர்களுக்கு கண்களில் உண்டாம் ஓர் நோய்.

*(68)* **மண்சேய்** என்று செவ்வாய்க்குப் பெயர். மண்=பூமி, சேய்=புத்திரன். பூமியினின்றும் ஒரு துண்டம் செவ்வாய் எனும் கிரகமானது என்று சில வான சாஸ்திரிகள் தற்காலம் கூறுகின்றனர். இந்த சூட்சுமம் தமிழர்க்கு முன்பே தெரிந்திருந்தது போலும்.

**ஒரு பாஷை பேசப்படும் நாட்டில், சில பகுதிகளில் மாத்திரம் அப்பாஷையைச் சார்ந்த சில மொழிகள் உபயோகப்படுகின்றன.** இதற்கு ஆங்கிலத்தில் புரோவின்ஷலிஸம் (Provincialism) என்று பெயர். சென்னை ராஜதானியில் தற்காலம் தமிழ் வழங்கும் ஜில்லாக்கள் செங்கல்பட்டு, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கோயமுத்தூர், தென் ஆற்காடு, சிற்றூரின் சில பாகம், வட ஆற்காட்டின் சிறிது பாகமாம்; இலங்கையில் யாழ்ப்பாணத்தை இதனுடன் சேர்க்க வேண்டும். இவற்றுள் சுத்தமான தமிழ் பேசுமிடங்கள் மதுரை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், ராமநாதபுரமாம்; தஞ்சாவூர், கோயமுத்தூர், ஆற்காடு முதலிய இடங்களில் பேசப்படும் தமிழ் கொஞ்சம் கலப்படமாயிருக்கும். சுத்தமாயிராது; செங்கல்பட்டு, சித்தூர், வட ஆற்காடு, சென்னப்பட்டணம், முதலிய இடங்களில் பேசப்படும் தமிழ் எல்லாவற்றிற்கும் கீழ்ப்பட்டதாம் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். நாம் மொத்தமாகக் கூறுமிடத்து தெற்கத்திய தமிழ் வடக்கத்திய தமிழைவிட சுத்தமானது என்பதற்குச் சந்தேகமில்லை. சில ஜில்லாக்களில் மாத்திரம் உபயோகப்படும் சில தமிழ் மொழிகளைக் கருதுவோம்.

| மதுரை | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| அங்கிட்டு-அங்கே | நாட்சோறு=மணவிருந்து<br>மாடி=மெத்தை | திரும்ப-மறுப்பு |
| சொளகு-முரம் | கேப்பை-கேழ்வரகு | தியாக்கியம்-பொரிஅரிசி<br>மகா ருத்திரன்-இடையன் |
| விளக்குமாறு-துடப்பம் | ஊருணி-கிணறு | |
| ஒசி-அமிஞ்சி, இரவல் | முடை-தேவை | |
| | ஆலி-கோயில் உற்சா வதிகளில் கொண்டுபோகும் ஆண் பெண் பூதங்கள் | |
| பைய-மெல்ல | | |

**சென்னை**. சில தமிழ் பதங்கள், சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மாத்திரம் வழுங்கப்படுகின்றன. தெற்கிலுள்ள தமிழர்கள் அவற்றின் அர்த்தத்தை அறிய அகராதிகளைத்தான் எடுத்துப் பார்க்க வேணும் உதாரணமாக:-

| | | |
|---|---|---|
| தொத்தா | - | சிறிய தாயார் |
| தேட்டக்காரன் | - | திருடன் |
| கடுக்காய் கொடுத்தல் | - | மோசம் செய்தல் |
| சுற்றிக்கொண்டு போதல் | - | திருடிக்கொண்டு போதல் |
| புழுக்கம் | - | வியர்வை |

சென்னையில் வீடு முதலியவற்றை சுத்தம் செய்வதற்கு பெருக்கல் என்கிறார்கள்; தெற்கே. கூட்டல் என்கிறார்கள்.

## தமிழ் மொழிகளில் ஜாதிகளைப் பொறுத்த பேதங்கள்

தமிழ் பாஷையில் இடங்களைப் பொறுத்த பேதங்களன்றி, ஜாதிகளைப் பொறுத்த பேதங்களுமுண்டு. கீழே குறித்த மொழிகள் சாதாரணமாக பிராம்மணர்களால் உபயோகிப்படுகின்றன. மற்ற ஜாதியார் இவைகளை அவ்வளவாக உபயோகிப்பதில்லை; இவ்வாறு ஒரு ஜாதியார் அல்லது கூட்டத்தார் மட்டும் உபயோகிக்கும் பதங்களுக்கு பரி பாஷை யெனும் பெயருண்டு:-

| | | |
|---|---|---|
| அத்திம் பேர் | - | (அத்தை அன்பர்) |
| பிம்மாலே | - | (பின்மாலை) |
| அமுதுபொடி | - | அரிசி |
| அகம் | - | வீடு |
| கூட்டமது | - | கூட்டுக்கறி |
| சாற்றமது | - | ரசம் |
| தளிகை | - | சமயல் |

## குழுஉக்குறி மொழிகள்

சில ஜாதியார் ரகசியமான அர்த்தத்தில் உபயோகிக்கும் மொழிகளுக்கு அவர்களது குழுஉக்குறி என்று பெயர். அக்கூட்டத்தார் அல்லது ஜாதியார் ஒருவரோடொருவர் ரகசியமாகப் பேசிக்கொள்ள வேண்டுமென்றால் இம்மொழிகள் உபயோகிப்பார்கள்.

*(1)* நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வழங்கும் மொழிகள்

| | | | |
|---|---|---|---|
| மதி | - | ஒன்று | மனது ஒன்றாயதல் பற்றி |
| வினை | - | இரண்டு | தீவினை நல்வினை |
| குணம் | - | மூன்று | முக்குணம் |
| ஸ்ருதி | - | நான்கு | நான்கு வேதங்கள் |
| சரம் | - | ஐந்து | பஞ்ச சரம் |
| மதம் | - | ஆறு | ஷண் மதம் |
| திரை | - | ஏழு | ஏழு கடல் |
| கிரி | - | எட்டு | அஷ்டகுலாசலம் |
| மணி | - | ஒன்பது | நவமணி |
| திசை | - | பத்து | பத்துதிசை |

*(2)* திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் வழங்குவன.

| | | |
|---|---|---|
| முந்திரி அணா | - | ஒரு அணா |
| ஏ அணா | - | இரண்டணா |
| பூ அணா | - | நான்கணா |
| மணி அணா | - | அணா எட்டணா |
| முனு அணா | - | பன்னிரண்டணா |

*(3)* சென்னையில் வழங்கும் மொழிகள்.

| | |
|---|---|
| தீக்குச்சி | - போலீஸ்காரன் (பழைய தீக்குச்சிகள் தலையில் சிகப்பான கந்தகமுடையவைகளாயிருத்ததால் போலீஸ்காரர்கள் சிகப்புதலை அணி அணிவதினால்) |
| சாரம் | - பெண்பால் |
| புலன் அறிதல் | - துப்பறிதல் |
| தேட்டைபோடல் | - அடித்தல் |
| மட்டம் போடுதல் | - பள்ளிக்குப் போகாதிருத்தல் |

## சில தமிழ் மொழிகளும் அவைகளின் தாதுக்களும்

தாது என்பது சம்ஸ்கிருத மொழி, ஆங்கிலத்தில் இதை 'ரூட்' என்பர். ஒரு பதத்தினின்று மற்றொன்று பிறந்ததாயின், ஆதி பதத்திற்கு 'ரூட்' அல்லது தாது என்று பெயராம்.

*(1)* **வெள்ளி.** வெள் அல்லது வெண்மையிலிருந்து பிறந்ததாம் வெளிச்சம். வெள்ளி (நட்சத்திரம்) வெளுத்தல் என்னும் மொழிகளைக் காண்க.

*(2)* **ஓடம்** ஓடு என்பதினின்றும் பிறந்ததாம், அதாவது கடலின் மீது ஓடுவதாம். திரைகடலோடியும் திரவியம் தேடு என்பதைக் காண்க.

*(3)* **மீன்** என்பது மின் என்பதினின்றும் வந்ததாம். மின் என்றால் வெளிச்சம் என்று பொருள்படும். மின்னல், விண்மீன் எனப்படுகிற மொழிகளைக் காண்க.

*(4)* **குதிரை** இது குதி எனும் தாதுவிலிருந்து பிறந்ததாக எண்ணப்படுகிறது. குதித்தோடும் மிருகம் குதிரையாம்.

*(5)* **செம்பு** செம் அல்லது செம்மை என்பதினின்றும் பிறந்ததாம். அதாவது **செம்மை** நிறமுடையது என்று பொருள்படும்.

*(6)* **கிழங்கு** கீழ் எனும் மொழியினின்றும் பிறந்ததாம். பூமியின் கீழிலிருந்து தோண்டி எடுக்கப்படுவது கிழங்காம்.

*(7)* **குறம்** குறி என்பதினின்றும் வந்ததாம். குறி அல்லது குறம் சொல்பவள் குறத்தி.

*(8)* **நரம்பு** உடலில் நார் போல் இருப்பது பற்றி நரம்பென்றாயது.

*(9)* **நயினா** நயனம் எனும் சம்ஸ்கிருத மொழியினின்றும் வந்ததாம் கண்ணைப் போன்றவன். அவ்வளவு அருமையானவன் எனப் பொருள்; ஆகவே இப்பதம் தகப்பனுக்கும் உபயோகப்படுகிறது, பிள்ளைக்கும் உபயோகப்படுகிறது.

*(10)* **கரை** நீரோட்டத்தினால் கரைக்கப்படுவது கரையாகும் ஆற்றங்கரை, சமுத்திரக்கரை என்னும் மொழிகளைக் காண்க.

*(11)* **அச்சாரம்** அச்சம்+வாரம் அதாவது அச்சத் (பயம்) திற்காகக் கொடுக்கப்படும் பணமாம், முன்பணம்.

## குறுகிய தமிழ் மொழிகள்

எல்லா பாஷைகளிலும் அவைகளைப் பேசும் ஜனங்கள் அப்பாஷையிலுள்ள நீண்ட பதங்களைக் குறுக்கிச் சொல்கிற வழக்கமுண்டு, ஆங்கிலத்தில் பைசிகல் என்ற பதத்தைக் குறுக்கி பைக் (Bicycle, Bike) என்று வழங்குகிறது போல், தமிழர்களும் பெரிய தமிழ் பதங்களைக் குறுக்கிற வழக்கமுண்டு. உதாரணமாக:-

| | | |
|---|---|---|
| என் தங்கை | - | எங்கை |
| என் தம்பி | - | எம்பி |
| சட்டதம்பி | - | சட்டம்பி |
| சாத்தன்தந்தை | - | சாத்தந்தை, |
| அருமருந்தன்ன பிள்ளை | - | அருமந்த பிள்ளை |
| ராயசிம்மபுரம் | - | ராசிபுரம் |

### ஒரு பொருளுக்குப் பல பெயர்கள்

தமிழின் ஓர் சிறப்பு என்னயெனின் ஒரு பொருளுக்கு பல பெயர்கள் உண்டு. இதற்குச் சில உதாரணங்கள் இங்கு குறிப்போம்.

*(1)* **பூமி** என்பதற்கு அகவிடம், அகிலம், அவனி, காகினி, குந்தி, குவலயம், கூ, ஞாலம், தரணி, தராதலம், தரித்திரி, தரை, தலம், தாரணி, தாலம், நாடு, நிலம், நேமி, படி, பாரகம், பாரி, பார், புவனம், புவி, பூ, மண், மாதிரம், மேதினி, வசுமதி, விபுலம், வையகம் முதலியவைகளைக் காண்க.

*(2)* **பொன்** என்பதற்கு, அரி, அடுச்சலம், அடுத்தம், அநந்தம், ஆக்கம், ஆடகம், இரணியம், ஈளம், உரை, ஏமம், கலியம், கனகம், களம்,

காங்கேயம், காஞ்சனம், காரம், கூழ், சந்திகம், சாதரூபம், சாம்பூநதம், சுவர்ணம், தமனியம், தனம், திரவியம், நிதி, பிங்கலம், பூரி, பொலம், மாடை, மாழை, வசு, வித்தம், வெறுக்கை முதலிய பெயர்கள் உண்டு.

*(3)* **அழகு** என்பதற்கு அணி, அந்தம், அபிராமம், அவுரி, ஆரியம், இராமம், இல்லிதம், லாவண்யம், எழில், ஏர். ஐ, நண்பை, கலின், களை, காந்தி, காமர், குழகு, கொம்மை, கோலம், அலி, சாயல், சீர், சுந்தரம், செவ்வி, சொக்கு, சோமம், சௌமியம், தகைமை, தநிமம், தவ்வி, பாங்கு, பொற்பு, மஞ்சுளம், மனோக்கியம், மாண்பு, மாதர், முருகு, வனப்பு, வாமம், விடபகம் என்னும் மொழிகள் உள.

## ஒரு மொழிக்குப் பல பொருள்கள்

மேற்கூறியதற்கு நேர்விரோதமான சில மொழிகளை, ஆராய்வோம், அதாவது ஒரே பதத்திற்கு பல்வித அர்த்தங்கள் உள. இவற்றிற்கு உதாரணமாக:-

*(1)* **அத்திரி** என்பதற்கு, ஒட்டகம், குதிரை, கழுதை, கோவேறு கழுதை, உலைத்துருத்தி முதலிய பொருள்கள் உள.

*(2)* **அலகு** என்பதற்கு அளவு, பலகரை, கதிர், ஆயுதம், தாடை, கைம்மரம், துடப்பம், அகலம், முதலிய அர்த்தங்கள் உள.

*(3)* **உடு** என்பதற்கு அகழ், நக்ஷத்திரம், ஆடு, அம்பு, ஒடம் இயக்குங்கோல் முதலிய பொருள்கள் உள.

*(4)* **கக்ஷ** எனும் மொழிக்கு வாசனை, கலியாணம், புதுமை, விளக்கம், மிகுதி, விளாவு, பூசை, சிறப்பு, கூர்மை, இன்பம், ஒசை, அச்சம், அதிசயம், தேற்றம், சந்தேகம், சகிப்பு, காலம், ரூபாய், சிறு கொடி என்று இத்தனை அர்த்தங்கள் உள.

*(5)* **சாளம்** என்னும் சொல்லுக்கு, பாதம், வேதப்பகுதி அடைக்கலம். மருதநிலத்து நகரம், வீடு, அரசு, மயிற்றோகை, மயில், பெருங்காயம் முதலிய பல அர்த்தங்கள் உள.

இப்படிப்பட்ட உதாரணங்கள் நூற்றுக்கணக்காக அகராதிகளில் காணலாம். இங்கு ஒரு மொழிக்கு ஒரே அர்த்தம் இருப்பதுதான் நலமென முதலில் தோன்றியபோதிலும், ஒரு பாஷையின் புஷ்டிக்கு இப்படியிருத்தல் நலமென்றே ஆயுங்கால் அறிவோம், முக்கியமாகத் தமிழ் பாஷையில்

**சிலேடை** என்பதைக் கவிகளில் உபயோகிப்பதற்கு இது இன்றியமையாததாம். இவ்வாறில்லாவிட்டால் கலம்பகங்கள் முதலிய கிரந்தங்களின் சில அடிகள் பெரும்பாகம் குறைந்து போகுமன்றோ,

## நேர் விரோதமான அர்த்தங்களையுடைய தமிழ் மொழிகள்

தமிழில் ஒன்றன்றி ஒன்று சம்பந்தமில்லாத நேர் விரோதமான அர்த்தங்களையுடைய சிலமொழிகள் உள. அவற்றிற்கு உதாரணமாக:-

*(1)* **எச்சம்** என்றால் பறவைகளின் மலத்துக்குப் பெயர்: ஓர் வாசனைப் பண்டத்திற்கும் பெயர்!

*(2)* **எட்டன்** என்றால் அரசனுக்குத் தொழில் புரியும் மங்கலப் பாடாகனுக்கும் பெயர், மடையனுக்கும் பெயர்!

*(3)* **பணம்** என்றால் திரவியத்திற்கும் பெயர், பாம்பின் படத்திற்கும் பெயர்.

*(4)* **காசம்** என்றால் அழகிய தாமரைக்குப் பெயர்! மிகுந்த பயங்கரமான ஓர் வியாதிக்கும் பெயராம்.

*(5)* **இரிட்டம்** இது சுபத்திற்கும் அசுபத்திற்கும் உபயோகப்படுகிறது.

தமிழ் பாஷையில் சம்ஸ்கிருதத்திலிருப்பது போல சில எழுத்துக்கள் இல்லாமையால், சம்ஸ்கிருதத்தில் வெவ்வேறாக இருக்கும் பதங்கள் தமிழில் ஒன்றாய்த் தோன்றுகின்றன. உதாரணமாக:-

*(1)* சம்ஸ்கிருதத்தில் ka, kha, ga, gha என்னும் நான்கு எழுத்துக்களுக்கும் தமிழில் க ஒரே எழுத்துதானுண்டு.

*(2)* சம்ஸ்கிருதத்தில் pa, pha, ba, bha என்னும் நான்கு எழுத்துக்களுக்கும் தமிழில் ப ஒரே எழுத்துதானுண்டு.

*(3)* சம்ஸ்கிருதத்தில் ta, tha, da, dha என்னும் நான்கு எழுத்துக்களுக்கும் தமிழில் த ஒரே எழுத்துதானுண்டு.

இன்னும் இதர எழுத்துகளுக்கும் இப்படியே இருப்பதைக் கண்டு கொள்க. இப்படி இருப்பது தமிழ் பாஷைக்கு ஒரு குறையே என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இப்படியிருத்தலால் வெவ்வேறாக சம்ஸ்கிருத பதங்கள் தமிழில் வரும்பொழுது, உருவத்தில் வேறுபடாது

அர்த்ததில் மாத்திரம் வேறுபட்டிருப்பதைக் காண்க. உதாரணமாக:-

| | | |
|---|---|---|
| தீரம் | - | (tha) தைரியம் |
| தீரம் | - | (ta) நதியின் கரை |
| பங்கம் | - | (pa, ka) சேர் |
| பங்கம் | - | (ba, bha) அவமானம் |
| சாபம் | - | (pa) வில் |
| சாபம் | - | (ba) சாபம் கொடுத்தல் எனும் அர்த்தத்திலும் உபயோகப்படுகிறது. |
| பலம் | - | (ba) வன்மை |
| பலம் | - | (pa) பழம் |
| கதை | - | (ka) சரித்திரம் |
| கதை | - | (ga) ஓர் ஆயுதம் |

சில தமிழ் மொழிகள் பெயர்ச் சொற்களாக உபயோகப்படும் பொழுது ஒரு பொருளையும், வினைச் சொற்களாக உபயோகப்படும் பொழுது வேறு பொருளையும் கொடுப்பனவாம். உதாரணமாக:-

| பெயர்ச்சொல் | | வினைச்சொல் |
|---|---|---|
| ஆடு=மேஷம் | - | ஆடு=நடி |
| கொள்=ஓர்வகைத் தானியம் | - | கொள்=வாங்கு |
| வில்=தனுசு | - | வில்=விற்பனைசெய் |
| கார்=மேகம் | - | கார்=காப்பாற்று |
| செல்=கரையான் | - | செல்=போ |
| வரை=மலை | - | வரை-எழுது |

தமிழ் பாஷையில் இரண்டு ர கரங்கள் உண்டு. இடையின ரகரம் (ர) வல்லின றகரம் (ற) சம்ஸ்கிருதம் ஆங்கிலம் முதலிய பாஷைகளில் இப்பேதமில்லை. தமிழ் பாஷையின் தத்துவத்தை யறியாதவர்கள் இரண்டு ர கரங்கள் இருப்பானேன், என்று கேட்கின்றனர் தமிழ் மொழிகளை எழுதும் பொழுதும் மாணவர்கள் இவ்விரண்டு ர கரங்களுக்கும் உள்ள பேதத்தை அறியாமல் சொற்பிழைகள் அதிகமாய் எழுதுகின்றனர். இடையின ரகரம் ஒரு மொழியிலிருந்ததால் அதற்கு ஒரு பொருளும் அதே உச்சரிப்பையுடைய மொழியில், வல்லின றகரம் இருந்தால் வேறு பொருளும் தருவதாம் உதாரணமாக:-

| | | |
|---|---|---|
| அரை | - | பாதி |
| அறை | - | சிற்றில், அறை என்ரேவல் |
| உரம் | - | மார்பு |
| உறம் | - | உறுதி |
| ஏராளர் | - | உழவோர் |
| ஏறாளர் | - | படை வீரர் |
| கரை | - | ஓரம் |
| கறை | - | களங்கம் |
| குரவர் | - | ஆசாரியர் |
| குறவர் | - | ஓர் ஜாதியார் |
| குரவை | - | ஓர் கூத்து |
| குறவை | - | ஓர் வகை மீன் |

இங்ஙனமே தமிழ் பாஷையில், தந்நகரம் என்றும் றன்னகரம் என்றும் இரண்டு எழுத்துக்கள் உள. இவைகளின் வித்தியாசம் தெரியாது தமிழ் மாணவர்கள், எழுதுங்கால் பல பிழைகள் இழைக்கின்றனர். த எனும் எழுத்திற்கு முன்பாக வரும் நகரம் தந்நகரமாம்; ற எனும் எழுத்திற்கு முன்பாக வரும் நகரம் றன்னகரமாம். இதை மாற்றி எழுதுதல் தவறாகும். உதாரணமாக:- அந்த, இந்த வந்தாள், என்பவை சரியான மொழிகளாம், இவைகள், அன்த, இன்த, வன்தான் என்று எழுதுவது தவறாகும்; இங்ஙனமே, சென்றாள், கொன்றை, கொன்றாள், இவைகள் சரியான பிரயோகங்களாம்; இவற்றை செந்றாள், கொந்றை, கொந்றார் என்று எழுதுவது தவறாகும், அன்றியும் ந எனும் எழுத்து மொழிக்கு வராது. இச்சந்தர்ப்பத்தில் அடியிற் கண்ட சில பதங்களின் வித்தியாச அர்த்தத்தைக் கவனிக்க:-

**முன்னீர்** என்றால் சமுத்திரமாம், அதாவது மூன்று வகையான நீர் என்று பொருள்படும் அதாவது ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர், இவைகளாலாயது என்பதாம்.

**முந்நீர்** என்றால் முற்பட்ட நீர் என்று பொருள் தரும். மண்ணைப் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மூன்று நீர்மையுடையதெனவும் கூறப்பட்டிருக்கிறது.

**முற்றீர்** மண் தோன்றாததற்கு முன்பிருந்த நீர் என்னும் அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது.

**முன்னூறு** என்பது மூன்று நூறு என்பதாம்.

**முந்நூறு** என்பது முதல் நூறு என்று பொருள்படும்.

ஒரே உருவைக் கொண்ட தமிழ் மொழி. ஒரே சொல்லாகக் கருதப்பட்டால் ஒரு அர்த்தத்தையும், இரண்டு சொற்கள் சேர்ந்ததாகக் கருதப்பட்டால் வேறு அர்த்தத்தையும் கொடுப்பதாகும். உதாரணமாக:-

| | | |
|---|---|---|
| வேங்கை | - | புலி |
| வேம்+கை | - | வேவுகிற கை |
| அம்புலி | - | சந்திரன் |
| அம்+புலி | - | அழகிய புலி |

ஒரு மாவின்கீழ்— *(1)* ஒரு+மாவின்+கீழ்=ஒரு மரத்தடியில் *(2)* ஒரு மாவின்+கீழ்=ஒரு மா என்னும் எண்ணுக்குக் கீழாக.

மேற்கண்ட உதாரணங்கள் தமிழ் மொழிகளின் அழகினைக் குறிப்பனவாம். இவைகள் தமிழில் கவி பாடுங்கால் மிகவும் உபயோகப்படுவனாம். முக்கியமாகக் கலம்பகங்களில் "அம்மானை" பாடுங்கால் இன்றியமையாதனவாம்.

இதுவரையில் இதர பாஷைகளிலிருந்து தமிழ் பாஷைக்குள் புகுந்த பதங்களைக் கவனித்தோம். இப்பொழுது தமிழிலிருந்து இதர பாஷைகளுக்குட் புகுந்த சில மொழிகளை ஆராய்வோம்:-

தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய பாஷைகள் தமிழிலிருந்து பிறந்தனவாகையால், அவைகளிலுள்ள தமிழ்ப் பதங்களைக் குறித்து இங்கே எழுதுவது மிகையாம்.

*(1)* **ஹீப்ரு பாஷை** இப்பாஷையில் அடியிற் கண்ட தமிழ் மொழிகள் குடியேறியுள்ளன: *தந்தம், குரங்கு, இஞ்சி, மிளகு, அரிசி, சந்தனக் கட்டை, தோகை.*

*(2)* **கிரீக் பாஷை** இதிலுள்ள (Aryze) என்பது தமிழ் அரிசி என்னும் பதமாம். இதனால் தமிழ்நாட்டிலிருந்து அரிசி கிரீஸ் (Grees) தேசத்திற்கு கொண்டு போகப்பட்டதாக எண்ண இடமுண்டு. கிரீஸ் பாஷையிலுள்ள கார்ப்பிய் (Karpea) என்பது கற்பூரம் எனும் தமிழ் மொழியினின்றும் பிறந்ததாம்.

*(3)* **துர்க்கி பாஷை**. இதிலுள்ள கான் *(Khan)* என்பது தமிழிலுள்ள கோள் என்னும் பதத்தினின்றும் வந்திருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

*(4)* **சம்ஸ்கிருத பாஷை**. அடவி, ஆணி, *(அச்சாணி)*, வளையல், அக்காள், ஆத்தா, அம்மா முதலிய பதங்கள் தமிழிலிருந்து சம்ஸ்கிருதத்துட் புகுந்ததாக டாக்டர் கால்ட்வெல் துரை எண்ணுகிறார். டாக்டர் குண்டர்ட் (Gundert) என்பவர் இதற்கு உதாரணமாகக் கீழ்வரும் பதங்களைக் குறிக்கிறார்:-

| **தமிழ்** | | **சம்ஸ்கிருதம்** |
|---|---|---|
| சண்பகம் | - | Champaka |
| பெட்டி | - | Pitaka |
| முத்து | - | Mukthir |
| இரவு | - | Rathri |

இன்னும் சிலர் முகிழ் என்னும் மொழியினின்றும் சம்ஸ்கிருத Mukulam பிறந்ததாக நினைக்கின்றனர்.

| | | |
|---|---|---|
| மீன் | - | மீனம் |
| துலா | - | துலாம் |
| அனல் | - | அனலா |
| கடுகு | - | கடுகா |

*(5)* **பிரெஞ்சு பாஷை**. ஆயா எனும் தமிழ் மொழி இப்பாஷையில் புகுந்திருக்கிறது. ஆயா என்றால் அப்பாஷையில் (போர்த்துகேய பாஷையினுமப்படியே) வேலைக்காரி என்று பொருள்படும். இவர்கள் இந்தியாவில் முதலில் வந்தபொழுது அவர்களுக்கு வேலைக்காரிகளாக, முது வயதுடைய தமிழ் மாதர்கள் அமர்ந்தபடியால், ஆயா என்றால் வேலைக்காரி எனும் அர்த்தத்தில் வழங்கப்பட்டது. தற்காலமும் ஒரு ஆங்கிலேய வீட்டில் *18* வயதுடைய தமிழ்ப் பெண் வேலை செய்தாலும் அவளுக்கு ஆயா என்றுதான் பெயர்.

*(6)* **இங்கிலீஷ் பாஷையில்** அநேகம் தமிழ் பதங்கள் நுழைந்துள்ளன. உதாரணமாக:-

| **தமிழ்** | | **இங்கிலீஷ்** |
|---|---|---|
| தேக்கு | - | Tecak |
| இஞ்சி | - | Ginger |

| | | |
|---|---|---|
| கொப்பரை | - | Copra |
| கட்டு மரம் | - | Catamaram |
| மிளகு தண்ணீர் | - | Mulgatany |
| சுருட்டு | - | Cheroot |
| பந்தல் | - | Pandal |
| கறி | - | Curry |
| கூலி | - | Cooly |

இச்சந்தர்ப்பத்தில் பெலுசிஸ்தானி (Baluchistan)ல் வசிக்கும் சில ஜாதியாரும், உதகமண்டலம் (Ootacamund) எனும் இடத்தில் வசிக்கும் தோடர்களும், ராஜமகாலில் வசிக்கும் சாந்தாளர்களும், அநேகம் தமிழ் மொழிகளை உபயோகிப்பதைக் கவனிக்கவும்.

இவ்வாராய்ச்சிப் பகுதியில் இன்னொரு விஷயம் நாம் கவனிக்க வேண்டும். அதாவது, இரண்டு பாஷைகளில் ஒரே ரூபத்தையுடைய மொழிகள் வழங்கப்பட்டால், ஒன்று முதல் பாஷையிலிருந்து இரண்டாவது பாஷைக்கு அவை போயிருக்கலாம். அல்லது இரண்டாவது பாஷையிலிருந்து முதல் பாஷைக்கு அவை போயிருக்கலாம்; அல்லது இவ்விரண்டு பாஷைகளுக்கும் தாய் பாஷையாகிய மூன்றாவது புராதனமான பாஷையிலிருந்து அவைகள் இவ்விரண்டு பாஷைகளுக்கும் வந்திருக்கலாம். அல்லது அவை உச்சரிப்பில் ஒன்றாகத் தோன்றியபோதிலும், அவைகளுக்கு ஒரு சம்பந்தமு மில்லாதிருக்கலாம். சற்று முன்னால் தமிழிலிருந்து சம்ஸ்கிருதத்திற்குப் போன மொழிகள் என்று உதாஹரிக்கப்பட்ட வார்த்தைகள். மேற்கூறியபடி தமிழ் சம்ஸ்கிருதம் இரண்டிற்கும் தாய் பாஷையாயிருந்த ஒரு புராதன பாஷையிலிருந்து அவைகள் வந்திருக்கலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். மஹாவித்வான் ராகவ ஐயங்கார் அவர்கள் எப்படி இப்பாஷையில் பிறந்தன என்று நாம் அறியக்கூடாத அநேக தமிழ் பதங்களின் மூலத்தை நாம் ஆராய்வோமாயின், அவைகள் நம்மை **சீனபாஷைக்குக்** கொண்டுபோய்விடும் என்றும், சிறிது சப்த வேறுபாடுகளையும் மாற்றங்களையும் கவனிப்போமாயின் சீனபாஷையிலுள்ள பல பதங்களும், தமிழ் பாஷையிலுள்ள பல பதங்களும், ஒன்றாயிருப்பதை அறியலாம் என்றும் எழுதியிருக்கிறார். இதற்கு உதாரணமாக அடியிற் கண்ட பதங்களைக் கூறலாம்:-

| தமிழ் மொழி | சீன மொழியின் உச்சரிப்பு |
|---|---|
| நீ | நீ |
| நான் | ஞான் (மலையாளத்தில் இப்பதமேயிருப்பதைக் காண்க) |
| யாம் | யாம் |
| பெண் | பெண் |
| எஃகு | எஃ |
| மை | மை |
| கண் (இடம்) | ஙகண் |
| இரண்டு | ஈர், (ஈரெட்டு முதலிய சொற்களில் இர் என்றே உபயோகிக்கப்பட்டிருப்பதை கவனிக்க) |

## புதிதாய் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான சாஸ்திர மொழிகள்

நமது தமிழ் பாஷையாது புஷ்டியடைந்து, அபிவிருத்தியடைய வேண்டுமானால், மேநாட்டில் புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் பல விஞ்ஞான சாஸ்திர மொழிகளை நாம் நமது தமிழ் பாஷையில் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமே. இப்படிச் செய்வதில் இரண்டு கட்சிகள் பிறந்திருக்கின்றன. சில தமிழ் அபிமானிகள் அப்படியே அப்பதங்களை அவைகளின் உச்சரிப்புடன் ஏற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கின்றனர்; இன்னும் சிலர் அவைகளுக்குத் தக்க தமிழ் மொழிகளைக் கண்டுபிடித்து, மொழி பெயர்த்து ஏற்க வேண்டும் என்ற எண்ணுகின்றனர். எனது அபிப்பிராயம், சுலபமான தமிழ் மொழிகளால் அவைகளை மொழி பெயர்க்கக் கூடுமாயின் அவ்வாறு செய்தல் உசிதம்; அங்ஙனமில்லா மொழிகளை யெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ளல் நலம் என்பதாம்.

சுலபமாய் மொழி பெயர்க்கப்பட்டு, வழக்கத்திற்கு வந்த சில மொழிகளுக்கு உதாரணமாக:-

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Gunpowder | வெடிமருந்து |
| Baloon | புகைக்கூண்டு |
| Steamer | புகைக்கப்பல் |

| | |
|---|---|
| Aeroplane | ஆகாய விமானம் |
| Electricity | மின்சாரம் |
| Telegram | தந்தி |

சில ஆங்கில பதங்கள் மொழி பெயர்க்கப்படாது, அப்படியே தமிழில் வழக்கத்துக்கு வந்துவிட்டன. இவைகளுக்கு நாம் மிகவும் கஷ்டப்பட்டுத் தமிழ் மொழி பெயர்ப்புகளைக் கூறலாம். ஆயினும் அவ்வாறு சொல்வது உசிதமன்று என்பது என் அபிப்பிராயம்; அப்படிச் செய்தாலும், சாதாரணத் தமிழர்கள் தற்கால வழக்கச் சொற்களையே உபயோகிப்பார்களே யொழிய, கஷ்டப்பட்டு மொழி பெயர்த்த பதங்களை உபயோகிக்க மாட்டார்கள் என்பது என் அபிப்பிராயம்; இவற்றிற்கு உதாரணமாக.

| இங்கிலீஷ் | தமிழ் |
|---|---|
| Cigarette | சிகரெட் |
| Varnish | வார்னிஸ் |
| Circus | சர்க்கஸ் |
| Funnel | புனல் |
| Cycle | சைகில் |
| Cricket | கிரிகெட் |

மேற்கண்ட உதாரணங்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு ஆராய்வோம். **Funnel** என்பது ஆங்கில பதம், அதைத் தமிழில் புனல் என்று நமது ஸ்திரீகளும் உபயோகிக்கின்றனர்; இதற்கு "ஒடுக்கமான வாயுள்ள, திரவப் பொருளை ஊற்றும் கருவி" என்று மொழி பெயர்க்கலாம்; ஆயினும் புனல் என்று சொல்லுவதை விட்டு அம்மொழிபெயர்ப்பை எத்தனைபெயர் கையாளுவார்கள் தமிழ் உலகில்?

## தமிழில் மொழி பெயர்ப்பதற்குக் கஷ்டமான மொழிகள்

இவைகள் அப்படியே உபயோகிக்கப்படுமேயொழிய இவைகளின் மொழிபெயர்ப்புகள் வழக்கத்திற்கு வரமாட்டா என்பது என் அபிப்பிராயம்; உதாரணமாக:-

| ஆங்கில பதம் | தமிழ் |
|---|---|
| Radium | ரேடியம் |

| | |
|---|---|
| Radio | ரேடியோ |
| Sacharine | சாக்ரைன் |
| Insulin | இன்சுலின் |
| Tram | டிராம் |
| Motor | மோட்டார் *(வண்டி)* |
| Coach | கோச்சு வண்டி |
| Phaeton | பீடன் வண்டி |

ஆகவே, சாதாரணமாக சாஸ்திர சம்பந்தமான புதிய ஆங்கில மொழிகள் அப்படியே உபயோகித்தல் நலமெனத் தோன்றுகிறது. ஆயினும் நமது காலசாலைகளில் உயர்தரக் கல்வி பயிலும் மாணவர்கள், மேற்கத்திய விஞ்ஞான சாஸ்திர புஸ்தகங்கள் ஆங்கிலத்தில் படிப்பதைவிட்டு. தமிழில் அவைகளைப் படிக்குங் காலம் வந்தால்தான் இப்பொழுது வழங்கி. வரும் எல்லா சாஸ்திர ஆங்கில மொழிகளுக்கும் தமிழ் மொழிபெயர்ப்புகள் வழக்கத்திற்கு வரலாகும் என்று தோன்றுகிறது. இதுவரையில் என் சிற்றறிவின் ஆராய்ச்சிக்குட்பட்ட பல விஷயங்களைப் பற்றி எழுதியுள்ளேன். இன்னும், தமிழ் மொழிகளில் ஆராய்ச்சி செய்ய வேண்டிய அநேகம் விஷயங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து தமிழ் அறிஞர்கள் நமது பாஷையின் அபிவிருத்திக்காகத் தமிழ் உலகத்திற்கு அளிக்க வேண்டுமென இறைவன் இன்னருளை பிரார்த்திக்கிறேன்.

# சிவாலய சில்பங்கள்

## முதலியன

நமது தாய் தேசமாகிய இந்தியா, கோயில்கள் நிறைந்த தேசம் என்று அன்னியர்களால் புகழப்பட்டிருக்கிறது. அக்கோயில்களைக் கண்டு மகிழ, ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய கண்டங்களிலிருந்து பலர் வருஷா வருஷம் வருகின்றனர். நமது கோயில்களைப்பற்றி இதுவரையில் பிரசுரிக்கப்பட்ட புஸ்தகங்களெல்லாம், பெரும்பாலும், சூவெல், பெர்கூசன், டுப்ரெயில் முதலிய ஐரோப்பியர்களால் எழுதப்பட்டவைகளே. இது இந்தியர்களாகிய நமக்கு ஒரு மானக் குறைவாகும்; ஆகவே, இக்குறையைச் சிறிதளவாவது நீக்க வேண்டியது நமது கடன் என எண்ணி இச்சிறுநூலை இயற்றலானேன்.

## கோயில்கள் உண்டானது

மனிதன் இவ்வுலகில் உண்டாகி, தெய்வம் ஒன்றுண்டு எனும் உணர்ச்சியைப்பெற்ற பிறகு, அத்தெய்வத்திற்கு இருப்பிடமாக, அதனைத்தொழ, அவன் ஓர் இடத்தை ஏற்படுத்தி யிருக்கவேண்டு மென்பது நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமே.

மனிதர்கள், வேட்டையாடி குகைகளில் வசிக்கும் நாகரீகத்தை யடைந்தபோது, அக்குகைகளில் அழகியவற்றுள் தாங்கள் வணங்கும் தெய்வங்களை நியமித்துக் கோயில்களாகப் பாவித்திருக்கவேண்டும். பிறகு ஆடுமாடுகள் மேய்த்து பயிர்களை உண்டாக்கி, குடிசைகளில் வசிக்கும் நாகரீகத்தை யடைந்தபோது, அழகிய சிறு குடிசைகளில் பிரத்தியேகமாகத் தங்கள் தெய்வங்களை வைத்து கோயில்களாகப் பாவித்திருக்கவேண்டும். பிறகு செங்கற்களால் வீடுகள் கட்டி பட்டணங்களில் வசிக்கும் நாகரீக திசை யடைந்தபோது, செங்கல் மரம் முதலியவைகளால் கோயில்களைக் கட்டியிருக்க வேண்டும், என்று நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய

விஷயமே. ஆயினும் இப்படிப்பட்ட கோயில்களெல்லாம் பலநூற்றாண்டுகள் அழியாமலிருப்பது கடினம். கருங்கற்களால் கோயில்களை அமைக்க மனிதர்கள் கற்ற பிறகுதான், அக்கோயில்கள் பல நூற்றாண்டுகளாக நிரந்தரமாய் இருக்கத் தலைப்பட்டன. இந்தியாவில் புத்தர் காலத்திற்கு முன்பாக எல்லாக் கட்டிடங்களும் மரத்தாலானவை யென்றும், செங்கல் கட்டிடங்கள் கி.மு. 5-ஆம் ஆண்டிற்கு பிறகுதான் பெரும்பாலும் தோன்றினவென்றும், அதற்குப் பிறகுதான் கருங்கல் கட்டிடங்கள் கட்டத்தலைப்பட்டன வென்றும் எண்ணப்படுகிறது.

நமது தேசமாகிய இந்தியாவிலும் கோயில்கள் இம்மாதிரியாகத்தான் வளர்ந்து வந்தன என்று நாம் கூறலாம். தற்காலத்திலும் நாட்டுப்புறங்களிலும், பெரிய இரண்டு மூன்று கற்பாறைகளாலாகிய பொந்துகளில் கிராம தேவதைகள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மூங்கில்களை நிறுத்தி ஓலைகளைக்கொண்டு மூடப்பட்ட குடிசைகளில் கிராமத்தார் வணங்கும் சிறு தெய்வங்கள் இருப்பதை இன்னும் காணலாம். அன்றியும் மண் சுவர்களை யெழுப்பி, ஒடுகளினால் கூரைகளை அமைத்துக் கட்டிய பல சிறு கோயில்களை கிராமாந்திரங்களில் பல இடங்களில் இன்றும் காணலாம்; சாதரணமாய் எல்லாக் கிராமங்களிலும், கிராமப் பிடாரி ஐயனார் கேரயில்கள் பெரும்பாலும் தற்காலமும் செங்கல் கட்டிடங்களாகத்தா னிருக்கின்றன. கடைசியாகக் கருங்கள் கோயில்கள் பல நமது தேசத்தில் கட்டப்பட்டன.

கட்டிடங்களைக் கட்டும் சாஸ்திரத்திற்கு சில்பசாஸ்திரம் என்று பெயர். அப்படிப்பட்ட கட்டிடங்களில் கோயில்களைக் கட்டும் சாஸ்திரத்திற்கு கோயில் சில்பசாஸ்திரம் என்று கூறலாம்; இதற்கு உதாரணமாக மானச சாரமெனும் நூலக் கூறலாம். கோயில்களைப் பற்றிக் கருதுமிடத்து நமது இந்தியா தேசத்தை முக்கியமாக இருபிரிவாகப் பிரிக்கலாம்; விந்திய பர்வதத்திற்கு மேல்பாகம்முள்ள பிரதேசம், கீழ்பாகமுள்ள பிரதேசம்; மேல்பாகத்திற்கு ஆர்யாவர்த்தம் எனப் பெயரிட்டு, அங்குள்ள கோயில்களை ஆரிய சில்பம், அல்லது பெர்கூசன் துரை கூறுகிறபடி, இந்திய-ஆரிய சில்பம் உடையவை என்றும், கீழ்பாகத்தை, திராவிட தேசமென அழைத்து, இங்குள்ள கோயில்களை திராவிட சில்ப முடையவை என்றும் கூறலாம்.

இவ்விரண்டு சில்பங்களில் நமது தேசத்தில் புராதன மாயிருந்தது திராவிட சில்பமே. புராதன விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் சாஸ்திரக்காரர்கள், ஆரியர்கள் இந்தியாவுக்குள் பிரவேசித்தது சுமார்

நாலாயிரம் வருடங்களுக்குப் பிறகுதான் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, ஆரிய சில்பம் எனப்பட்டது அதற்குப் பிறகு தான் நமது தேசத்தில் தோன்றியிருக்க வேண்டும். திராவிடர்கள் இந்தியாவில் அதற்கு முன்பே யிருந்த ஜனங்களாவார்கள். இன்றைக்கு 5000 வருடங்களுக்கு முன்பே திராவிட நாகரீகமானது நமது தேசத்தில் பரவியிருந்ததென எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சர்ஜான்மார்ஷல் முதலிய சாஸ்திரிகர்கள், மோஹஞ்சதரோ, ஹராப்பா முதலிய இடங்களில் பூமி மட்டத்திற்கீழ் தோண்டி, அங்கு அகப்பட்ட பல மிகவும் புராதனமான கட்டிடங்களை வெளிப்படுத்தி யிருக்கின்றனர். இவர்கள் இக்கட்டிடங்களெல்லாம் திராவிடக் கட்டிடங்களே என்றும் கூறியிருக்கின்றனர். ஆகவே, திராவிட சில்பம் நமது தேசத்தில் மிகவும் புராதனமானது என்று கூறலாம்.

மேற்சொன்ன, வட இந்தியாவிலுள்ள சிந்து நதிக் கரைக்கடுத்த இரண்டு ஊர்களில் தோண்டி எடுக்கப்பட்ட கட்டிடங்களில் சிவலிங்கங்கள் அகப்பட்டிருக்கின்றன. ஒரு லிங்கமானது அதன் பீடத்துடன் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மற்ற இடங்களிலும் தோண்டிப் பார்த்தால் இன்னும் பல கிடைக்கலாம் என்று எண்ண இடமுண்டு. இவ்விஷயத்தில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய தென்னவென்றால், லிங்க பூஜை புராதனமான திராவிடர்களுக்குரியதாம் என்பதே. ஆகவே, நமது தேசத்தில் சிவாலயங்களே மிகவும் முற்பட்டவை என்று கூறலாம். ஆகவே, இதுவரையில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின்படி இந்தியாவில் மிகவும் புராதனமான ஆலயம் திராவிட சில்பமமைந்த சிவாலயம் எனக் கூறலாம்.

## ஆரிய சில்பம்

இனி, வட இந்தியாவிலுள்ள ஆரிய கோயில் சில்பத்தைப்பற்றி சிறிது ஆராய்வோம். இது இந்திய ஆரிய சில்பம் என்றும் அழைக்கப்படுகிறது. சிலர் இதற்கு வேசர சில்பம் என்று பெயரிட்டிருக்கின்றனர். இன்னும் சிலர், வேசர சில்பம் ஆரிய சில்பத்தின் பகுதி என்று கூறுகின்றனர்; இதை இச்சிறு நூலில் இனி ஆரிய சில்ப மென்றே கூறுவோம். இச்சில்பமமைந்த கோயில்கள், வட இந்தியாவில், சிந்து, கூர்ஜரம், ராஜஸ்தான், அயோத்யை, ஐக்கிய மாகானங்கள், வங்காளம், ஒரிஸ்ஸா முதலிய இடங்களில் இருக்கின்றன; மொத்தத்தில் விந்திய பர்வதத்திற்கு வடக்கேயுள்ள கோயில்களெல்லாம் ஆரிய சில்ப முடையவை. இந்த ஆரிய சில்பத்துக் கோயில்களின் முக்கிய அம்சங்கள் அடியில் வருமாறாகும்:-

*(1)* இக்கோயில்களின் முக்கிய அம்சம் விமானமேயாகும் *(2)* இவைகளில் கோபுரங்கள் கிடையா *(3)* விமானங்களில் திராவிட கோயில்களில் இருப்பதுபோல் நிலைகள் அல்லது மாடிகள் கிடையா *(4)* சதுர வடிவாயுள்ள கர்ப்ப கிரகத்தின் மீது கட்டப்பட்ட (Spires) வளைந்த ரேகைகளையுடைய கும்மட்டங்கள் போன்ற உருவை உள்ளனவாயிருக்கும். (Curvilinear) *(5)* விமானங்கள் வட்ட வடிவமானவை *(6)* விமானங்கள் நான்கு பக்கங்களிலும் உச்சியினின்றும் கீழே இறங்கும் நான்கு பட்டைகளையுடையவை, *(7)* சிகரமானது சிறிது நடுவில் அழுத்தப்பட்ட நெல்லிக்கனியைப் போலிருக்கும். இதற்கு முக்கிய உதாரணமாக, வட இந்தியாவிலுள்ள சிற்றூர், நாசிக், காசி, உதயபுரி ஈஸ்வர கோயில்களைக் கூறலாம். இப்படிப்பட்ட விமானங்கள் பௌத்த ஸ்தூபங்களின்றும் பிறந்தவை என்று எண்ணப்படுகிறது. ஸ்தூபங்கள், உள்ளே குடையப்பட்ட அறைகளாக மாறி, சதுரமான பீடங்களின் மேற்கட்டப்பட்டு, மேலே நீண்ட கும்மட்டங்கள் போன்ற சிகரங்களை யுடையவைகளாயின, என்று ஆக்ஸ்போர்டு (Oxford) சம்ஸ்கிருத பேராசிரியர் அ.அ. மெர்டானல் என்பவர் அபிப்பிராயப்படுகிறார்.

## ஓரிஸ்ஸா சில்பம்

இது ஆரிய சில்பத்தின் பகுதியாகும்; இதன் முக்கியமான அம்சம் என்னவென்றால் இச்சில்பக் கட்டிடங்களில் தூண்களே கிடையாது எனலாம். இதற்கு உதாரணமாக புவனேஸ்வரில் உள்ள பல ஆலயங்களைக் கூறலாம்; இதனை வேசர சில்பம் என்று சிலர் அழைக்கின்றனர்.

## காஷ்மீர் சில்பம்

இது அப்பெயர் குறிக்கிறபடி காஷ்மீர் தேசத்திலுள்ள சில கோயில் சில்பத்தைக் குறிக்கிறது. இச் சில்பக் கோயில்களின் காலம் சுமார் கி.பி. *600* முதல் *1100* வரையில் என்று எண்ணப்படுகிறது.

இச் சில்பத்தின் முக்கிய அம்சங்கள் *(1)* சீன சில்பத்தில் இருப்பதுபோல் கூரை மேற்கூரைகள் *(2)* இக் கூரைகளில் பலகணிகள் (Dormer windows) அமைக்கப்படுகின்றன. *(3)* தூண்கள் ஐரோப்பிய (Doric) தூண்களைப் போன்றவை; இம்மூன்று குறிகளும் கிரேக்க சில்பத்தினின்றும் இத்தேசத்திற்கு வந்ததாக எண்ணப்படுகிறது. *(4)* மூன்று வளைவுகளையுடைய கமான்கள். (Three foiled arches)

இச் சில்பத்தின் முக்கியமான கோயில் இங்குள்ள மார்த்தாண்ட ஆலயமாம். இது *60* அடி நிகளம் *36* அடி அகலம்; கிழக்கு நோக்கியுள்ளது; மேற்குபுரம் இரண்டு கட்டடமுகங்கள் (facades) சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளை சேர்த்து மொத்தம் அகலம் *660* அடி யாகிறது, இதன் உயரமும் *60* அடி இருந்திருக்கலாம் என்று கன்னிங்காம்துரை அனுமானிக்கிறார். இதன் கூரை முற்றிலும் அழிந்து போயிருக்கிறது. பெர்கூசன் துரை இதன் கூரை மரத்தால் ஆயிருக்கவேண்டுமென்று எண்ணுகிறார். இதன் சுற்றுப்பிராகாரம் *220* அடி x *142* அடி; கோயிலைச் சுற்றிலும் தண்ணீர் தேக்கப்பட்டதாக எண்ணுகிறார்கள். இது சூர்ய நாராயண விஷ்ணு ஆலயமாயிருந்தது. இது லலிதா முக்த பீடன் எனும் அரசனால் *(725-760)* கட்டப்பட்டது. சிகண்டர்ஷா *(1393-1416)* வினால் கோயிலும், ஸ்வாமியும் அழிக்கப்பட்டது.

இதற்கு மற்றொரு உதாரணம் வந்திபுரம் என்று தற்காலம் வழங்கப்படும் அவந்திபுரத்திலுள்ள சிவாலயமாம்; இது அவந்தி வர்மனால் *(855-883)* கட்டப்பட்டதாம்.

## நேபாள கோயில் சில்பம்

இங்குள்ள இந்து ஆலயங்கள் பெரும்பாலும் மரத்தாலாயவை; பெரும்பாலும் அடிபீடம் மாத்திரம் கல்லால் அமைக்கப்பட்டிருக்கிறது. கோயில்கள் ஒன்றின்மேலொன்றான பல கூரைகள் உடையவை; சீன கோயில்களைப் போன்றவை. இதற்கு உதாரணமாக பாட்கேவான், படான், பசுபதி, முதலிய இடங்களிலுள்ள கோயில்களைக் கூறலாம். இவைகளெல்லாம் *16*-ஆம் நூற்றாண்டிற்குப் பின்பட்டுதான் கட்டப்பட்டவை.

## திராவிட சில்பம்.

இனி திராவிட சில்பத்தைப்பற்றி ஆராய்வோம். திராவிட சில்பமென்பது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் ஜாதியார்களாகிய திராவிடர்களுடைய சில்பமாகும். இந்த சில்பமானது ஏறக்குறைய தென் இந்தியாவில்- அதாவது விந்திய பர்வதத்திற்கு தெற்கிலுள்ள பிரதேசத்தில்-வழங்கப்பட்டதாகும். திராவிட சில்பம் தென் இந்தியாவில் சுயமாய் ஏற்பட்டது என்று சிலர் எண்ணுகிறார்கள். கருங்கல்லாலாகிய திராவிட சில்பம் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து கற்றது என்று சிலர் கூறுகின்றனர்; இதற்கு அத்தாட்சியாக எகிப்தில் தீப்ஸ் நகரத்தில் ஆமான் (Aman) கோயிலுக்கும், இந்தியாவில் பம்பாய்க்

கடுத்த கோயில்களில் பல தூண்கள் அமைந்த மண்டபங்களுக்கும், திராவிட கோயில்களிலுள்ள நூற்றுக்கால் மண்டபத்திற்கும், ஒற்றுமையிருப்பதைக் காட்டுகின்றனர். அன்றியும் எகிப்தில் பைலே (Philae) என்னும் நகரத்திலுள்ள கோயிலிலுள்ள தூண்கள் இந்தியாவில் பம்பாய்க்கடுத்த யானைக்குகைக் கோயிலிலும், எல்லோரா கோயில்களிலுமுள்ள தூண்களைப்போலவே இருப்பது எடுத்துக் காட்டப்படுகிறது. எகிப்து தேசத்திலுள்ள ஆபிலிஸ்க் (Obelisk)லிங்கவடிவா யிருப்பதும் இங்கு கவனிக்கத் தக்கது. மாமல்லபுரத்து கடற்கரைக் கோவிலிலுள்ள சிகரத்தைப்போல், எகிப்து தேசத்தில் சில இருப்பதும் ஆராயத்தக்கது. இந்த ஆராய்ச்சியில், கிப்பன் (Gibbon) எனும் உலக பிரசித்திபெற்ற சரித்திரக்காரர், எகிப்து தேசத்திற்கும் தென் இந்தியா மலையாள தேசத்திற்கும், இலங்கைத் தீவிற்கும், ஆதிகாலத்தில் போக்குவரத்து இருந்ததாகக் கூறியது கவனிக்கத்தக்கது.

இராமாயண இதிகாச காலத்தில் தென்னிந்தியாவைச் சார்ந்த விடங்களில் கோயில்களும், கோபுரங்களும் இருந்தனவென்று நாம் கூறலாம். கோபிநாதராயர் அவர்களும் இப்படியே எண்ணுகிறார். அவைகளெல்லாம் மரத்தாலானவை என்றும் ஊகிக்கலாம் (ஆகவே ஹநுமான் ஒரு நாளில் லங்கையைக் கொளுத்தினார் என்று கூறியிருப்பது ஆசாத்தியமான காரியமல்ல! )

பௌத்த ஜைன ஆலயங்கள் சென்னை ராஜதானியில் ஆதிகாலத்தில் இருந்தன என்பதற்குச் சந்தேகமில்லை ; மணிமேகலை முதலிய பூர்வீகத் தமிழ் நூல்களினின்றும் அக்காலத்தில் சைவ வைஷ்ணவ ஆலயங்கள் இங்கிருந்தன என்று நாம் ஸ்திரமாய்க் கூறலாம். அவைகளுக்குப் பெரும்பாலும் கோட்டங்கள் என்று பெயராம். (தற்காலமும் காஞ்சீபுரத்தில் குமரகோட்டம் எனும் சுப்பிரமணியர் கோயிலிருப்பதை நோக்குக). திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசுகள், முதலிய சைவ சமயாசாரிகள் காலத்திலும் வைஷ்ணவ ஆழ்வார்கள் காலத்திலும், ஹிந்து கோயில்கள் பல இருந்தன என்பதற்குச் சந்தேகமில்லை. பல நூற்றுக் கணக்கான இக்கோயில்களெல்லாம் பெரும்பாலும், மரத்தாலும், சுண்ணாம்பினாலும், கட்டப்பட்டவை என்று நாம் அறிகிறோம்; இவைகளெல்லாம் மரத்தாலாகிய திராவிட சில்பப் பகுதியைச்சார்ந்தவை. இவைகளெல்லாம், வெயில், மழை, தீ, முதலியவைகளால் அழிந்துபோக, எஞ்சியவை சுமார் ஏழாம் நூற்றாண்டில் கருங்கற்களால் பெரும்பாலும் புதுப்பிக்கப்பட்டதற்குச் சான்றாக, நமக்கு ஒரு கல்வெட்டு

கிடைத்திருக்கிறது. சென்னை ராஜதானியில், செங்கல்பட்டு ஜில்லாவில் இருக்கும், மண்டகப்பட்டி எனும் கிராமத்தில், ஓர் குகைக்கோயிலில் உள்ள கல்வெட்டில், இவ்வாறு கூறப்பட்டுள்ளது-"விசித்திர சித்தனான நான், பிரம்மா, ஈஸ்வரன், விஷ்ணு என்ற மூன்று மூர்த்திகளுக்கும் கோயில் செங்கல், மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமலே செய்வித்தேன்" என்று பொருள்படும் ஒரு சம்ஸ்கிருத ஸ்லோகம் இருக்கிறது. விசித்திரசித்தன் என்பது பல்லவ அரசனான மஹேந்திரவர்மனுடைய மற்றொரு பெயராகும்; இவனது காலம் ஏழாம் நூற்றாண்டு.

மேற்குறித்த மரக் கோயில்கள், எப்படி இருந்தன என்று நாம் உறுதியாகக் கூறுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லாவிட்டாலும், தற்காலம் மலையாள தேசத்திலிருக்கும், சில மரக் கோயில்களைப் போல்தான் இருந்திருக்கவேண்டுமென்று ஊகிப்பதற்கு இடமுண்டு. இக்கோயில்கள் கருங்கல்லினாலும், மரத்தாலும் ஆன அஸ்திவாரத்தின் மீது, மேற்பாகமெல்லாம் மரத்தால் கட்டப்பட்டவைகளாம். இவைகள், பெரும்பாலும், ஒன்றிற்கு மேற்பட்ட, கூரைகள் உடையவை. கூரைகள் வெளியே நீட்டப்பட்டவைகளா யிருக்கின்றன. சுவர்கள் மரத்தாலமைக்கப் பட்டிருக்கின்றன; அல்லது சுவர்கள் இருக்க வேண்டிய இடங்களில், மரத்தாலாய வேலிகள் போன்ற அடைப்புகள் அமைந்திருக்கின்றன. பௌத்த ஸ்தூபங்களுக்குப் பாதுகாப்பாக, ஆதியில் மரத்தால் செய்யப்பட்டு, பிறகு கருங்கற்களால் அமைக்கப்பட்ட சான்சி (Sanchi) முதலிய இடங்களிலிருக்கும் ரெய்லிங்ஸ் (Railings) என்பவைகளைப்போல் இவைகள் இருக்கின்றன. மலையாள தேசமானது சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரையில், மலைகளால் சூழப்பட்டிருந்தமையால், மற்ற நாடுகளுடன் அதிக போக்குவரத்தின்றி பூர்வீக நாகரிகமானது அப்படியே வளர்ந்துவர இடங்கொடுத்ததென்று கூறுவதற்கு, பல ஆதாரங்கள் உண்டு. ஆகவே., அங்குள்ள சில கோயில்கள் பூர்வகாலத்திலிருந்தபடியே, புதுப்பிக்கப்பட்டு வந்தன என்று நாம் எண்ணக்கூடும்.

ஆதியில் செங்கல் கட்டிடங்களாயிருந்த பல கோயில்கள், கருங்கற்கட்டிடங்களாக மாற்றப்பட்டன வென்பதற்கு நமக்கு தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. இதற்கு உதாரணமாக தஞ்சை ஜில்லாவிலுள்ள மேலப்பழுவூர் ஆலயத்தையும், திருக்கோடிக்காவல் ஆலயத்தையும் கூறலாம்.

கருங்கற்களால் கட்டிடங்களை நிர்மாணிப்பது, எகிப்து கிரிஸ் **(Egypt, Greece)** முதலிய தேசங்களினின்றும், வட இந்தியாவிற்கு வந்து, பிறகு குப்த,**(Gupta)** சளுக்கிய **(Chalukyua)** அரசர்களால், வாதாபி **(Vatapi)**முதலிய இடங்களில் பரவி, அதன்பின் சென்னை ராஜதானியின் தெற்குப்பாகத்தில், பல்லவ அரசர்களால், விஸ்தரிக்கப்பட்ட தென்று கூறாம். திராவிட கருங்கற் சில்பக் கோயில்கள், தமிழகத்தில் பரவியதற்கு, இதுதான் காரணம் என்று இதை ஆராய்ந்த பல சாஸ்திரீகர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

## சிவாலய அமைப்பு

இந்துக்களுடைய ஆலயங்களின் முக்கிய பாகம் கர்ப்பக்கிரஹமாம்; பெயருக்கேற்றபடி இதன் மத்தியில் ஆராதிக்கப்படும் தெய்வம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த கர்ப்பக்கிரஹம் இரண்டுவகைத்தாகும்; ஒன்று வட்டாகாரமானது; மற்றொன்று சதுராகாரமானது. வட்டாகாரமான கர்ப்பக்கிரஹத்திற்கு கஜப்பிருஷ்ட ஆகிருதி உடையதெனப் பெயர்; அதாவது, யானையின் முதுகைப்போன்ற உருவத்தை உடையதென்று பொருள்படும். இந்த கஜப்பிருஷ்ட கர்ப்பக்கிரஹங்கள் பௌத்த சைத்தியங்களைப் பார்த்து கட்டப்பட்டனவென்று பெர்கூசன் துரை **(Ferguson)** எண்ணுகிறார். சதுராகாரமான கர்ப்பகக்கிரஹங்கள் பௌத்த விகாரங்களைப்போல் கட்டப்பட்டவைகளாம். ஹிந்து ஆலயங்களில் கர்ப்பக் கிரஹத்திற்குமேல், விமானங்கள் அமைக்கப்பட்டிருக்கும். திராவிட சில்ப விமானங்கள் எல்லாம், பல மாடிகள் அல்லது அடுக்குகளுடைய பௌத்த விஹாரங்களைப்போல் கட்டப்பட்டன என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த மாடிகள் அல்லது நிலைகள், வரவர குறுகிக்கொண்டுபோய் கடைசியில் சிகரத்தில் முடிகின்றன. திராவிட சில்ப சிகரங்கள் எல்லாம் கலசம் போன்றவை. கர்ப்பக் கிரஹத்திற்கு எதிரில் சாதாரணமாக மண்டபம் உண்டு. ஆதியில் ஒரே மண்டபம் தானிருந்தது; பிறகு மண்டபத்திற்கு முன்பாக பெரிய மண்டபம் கட்டப்பட்டது; முன் மண்டபத்திற்கு அர்த்தமண்டபம் என்று பெயர் வழங்கலாயிற்று. கர்ப்பக்கிரஹத்திற்கும் அர்த்தமண்டபத்திற்கும் உள்ள இடைவழி அந்தராளம் என அழைக்கப்பட்டது.

கர்ப்பக்கிரஹத்திற்கு எதிரில் பலிபீடம் அமைக்கப்பட்டது. பலிபீடம் பௌத்த ஸ்தூபத்தைப்போல் கட்டப்பட்டது என எண்ண இடமுண்டு. இதற்கு முன்பாக நமது ஆலயங்களில் துவஜஸ்தம்பம் அமைக்கப்பட்டிருக்கும்; திராவிட சில்ப ஆலயத்தில் இது ஒரு முக்கிய

பாகமாகும். உன்னதமான இந்த ஸ்தம்பங்களில் கொடிகளைக்கட்டி, உற்சவ காலத்தை எல்லோருக்கும் அறிவிப்பது பூர்வீகத் திராவிட வழக்கமாம். இதைப்பற்றி பழைய தமிழ் நூல்களில் இந்திர விழா முதலிய உற்சவ காலங்களில் இந்திர துவஜம் நாட்டப்பட்டதைக்குறித்து வர்ணித்திருப்பதைக் கவனிக்கவும், உற்சவ முடிவில் இந்தக் கம்பங்கள் வீழ்த்தப்பட்டன. தற்காலத்திலும் நமது ஆலயங்களில் திருவிழாக் காலத்தில் துவஜாரோஹணம், துவஜ அவரோஹணம் என்னும் கிரியைகள் நடப்பதைக் கவனிக்கவும். சில கோயில்களில் இந்த துவஜஸ்தம்பத்திற்கு அருகில் அல்லது அது இருக்கவேண்டிய இடத்தில், தீபஸ்தம்பங்கள் இருப்பதைக் காணலாம். இது ஜைன ஆலய வழக்கத்தின் முறையை அனுசரித்த வழக்கம் என்று எண்ணப்படுகிறது.

பழைய ஆலயங்களிலெல்லாம் ஒரே மதில் சுவர்தான் அமைக்கப்பட்டிருந்தது. ஆகவே, ஒரே பிராகாரம்தானிருந்தது. பிறகு பல பிராகாரங்கள் சேர்க்கப்பட்டன. அன்றியும் பிராகார வாயில்களில் பெரிய கோபுரங்கள் கட்ட ஆரம்பித்தார்கள். இக் கோபுரங்கள், பல்லவர்கள் காலத்தில் வெட்டப்பட்ட மாமல்ல புரத்திலுள்ள (மாபலிபுரம்) பீமன் ரதம் என்று வழங்கப்படுகிற கோயிலின் ஆகாரத்திலிருந்து உண்டானவைகள் என்று பெர்கூசன் துரை அபிப்பிராயப்படுகிறார். இந்த பீமன் ரதத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், மற்ற விமானங்கள் ஏறக்குறைய சதுரமாயிருப்பது போலல்லாமல், இது நிகளத்தில் அதிகமானது; இது *48* அடி நிகளம் *25* அடி அகலமுடையது. இப்படிப்பட்ட கட்டிடங்களின்மீது ஒன்றின் மீதொன்று அடுக்கிக் கட்டினால் தற்காலக் கோபுரமாகிறது. கோபுரங்களின் அடுக்குகளுக்கு நிலைகள் என்று பெயர். பிற்காலத்தில் கட்டப்பட்ட பல கோபுரங்கள் *9* அல்லது *11* நிலைகளை உடையனவா யிருக்கின்றன. எல்லாக் கோபுரங்களிலும் நிலைகள் சிற்ப சாஸ்திரப்படி, *1,3,5* முதலிய ஒற்றைப்படையா யிருக்கவேண்டும். இக்கோபுரங்களுக்கு மேல், கோபுரத்தில் எத்தனை நிலைகள் இருக்கின்றனவோ, அத்தனை ஸ்தூபிக் கலசங்கள் வரிசையாக அமைக்கப்பட்டிருக்கும். கோபுரம் *11* நிலையுடையதாயிருந்தால் *11* கலசங்கள் வைக்கப்பட்டிருக்கும், *5* நிலை யுடையதாயிருந்தால் *5* கலசங்கள் உடையதாயிருக்கும். மற்றவைகளுக்கும் இப்படியே இருக்கவேண்டும்.

பிற்காலத்தில் நமது ஆலயங்களில் பிராகாரங்களில் பல மண்டபங்கள் சேர்க்கப்பட்டன. சிற்ப சாஸ்திரங்களின்படி ஏறக்குறைய

108 மண்டபங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன; இவைகளின் பெயர்களையெல்லாம் இங்கு குறிப்பதற்கு இடமில்லை. இவற்றுள் சில நூற்றுக்கால் மண்டபம் ஆயிரக்கால் மண்டபம் என்பதை மாத்திரம் குறிக்கிறேன்.

கடைசியாக, உற்சவ மூர்த்திகள், அமைக்கப்பட்ட பிறகு, பெரிய கோபுரங்களுக்கெதிரில், நான்கு அல்லது பதினாறுகால் மண்டபங்கள் கட்டப்பட்டன. பதினாறுகால் மண்டபத்தருகில் ரதோற்சவ காலத்தில் ஸ்வாமி ரதத்தில் ஆராஹிணப்பதற்காக தேர்முட்டிகள் என்று சொல்லப்பட்ட தேர் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

ஆதிகாலத்திலேயே ஒவ்வொரு கோயிலுக்கும் எதிரில் பெரிய குளம் வெட்டப்பட்டது. சில பெரிய கோயில்களில் உள்ளேயும் குளங்கள் வெட்டப்பட்டன. இவைகள் பக்தர்கள் கோயிலுக்குள் போகுமுன் தங்களைப் பரிசுத்தம் செய்துகொண்டு போகவேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்டவை என்பதற்குச் சந்தேகமில்லை. திராவிட கோயில் சில்ப விதிப்படி இக்குளங்கள் முக்கியமான அம்சங்களாகும்.

நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய இன்றொரு விஷயம் என்னவென்றால், சிவாலயங்களில் அம்மனுக்குப் பிரத்தியேகமான கோயில் கட்டப்பட்டது பிற்காலத்தில் என்பதேயாம்; பல்லவ சில்ப கோயில்களில் அம்மன் அல்லது தேவிக்கு வேறு கர்ப்பக்கிரஹகம் கிடையாது; தற்காலம் அம்மனுக்கு கோயிலில்லாத சிவாலயமே கிடையாதென்று கூறலாம். இவைகளெல்லாம் பிற்காலத்தில் கட்டப்பட்டவை. மிகவும் பூர்வீக சிவாலயங்களில், கணநாதருக்கும், சுப்பிரமணியருக்கும் பிரத்தியேகமான சந்நிதிகள் கிடையா; அவைகளெல்லாம் பிற்காலத்தில் கட்டப்பட்டவை. இச்சந்தர்ப்பத்தில் பூர்வீக திராவிடர்களுக்கு லிங்க பூஜைதான் பிரதானமாயிருந்தது; பிறகுதான் சக்தி அல்லது தேவி அல்லது அம்மன் பூஜை அதனுடன் சேர்க்கப்பட்டது, என்பது கவனிக்கத்தக்கது.

மிகவும் புராதனமான பல்லவக்குகைக் கோயில்களிலும், கட்டிடக் கோயில்களிலும், கர்ப்பக் கிரஹத்தின் உட்புறச் சுவரில் சோமாஸ்கந்த மூர்த்தி செதுக்கப்பட்டிருந்தது; லிங்கமானது அதற்குமுன் வைக்கப்பட்டிருந்தது. அம்மனுக்கு முன்பு கூறியபடி பிரத்யேகமான அறை கிடையாது; இதற்கு உதாரணமாக மாபலிபுரத்திலிருக்கும் சில கோயில்களைக் கூறலாம். இங்கு சில இடங்களில் கஜலட்சுமியின் உருவம் வெட்டப்பட்டிருக்கிறது உண்மையே; நாம் குறிக்கவேண்டிய விஷயம்

என்னவென்றால் பிற்காலத்திய சிவாலயங்களில் பரமசிவத்தின் சக்தி ஸ்வரூபமாகிய பார்வதி தேவிக்கு, கோயில்கள் தற்காலம் பிரத்யேகமாயிருப்பதுபோல், ஆதிகாலக் கோயில்களில் இல்லை என்பதேயாம். சிவாலயங்களில் ஒரே மூலஸ்தானம் தான் இருந்தது; ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் இரண்டு மூலஸ்தானங்கள் கிடையாது. இதற்கு உதாரணமாக, மகாபலிபுரக் கரைக்கோயில், மேலகிட்டி சிவாலயம், பத்ததாக்கலிலுள்ள விருபாட்சர் கோயில், சங்கமேஷ்வர் கோயில், காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் முதலியவற்றைக் கூறலாம். மேற்சொன்ன கோயில்களில் ஒன்றாகிய விரூட்பாட்சர் கோயிலானது, லோகமாதேவி என்னும் ஓர் அரசியால் கட்ப்பட்டபோதிலும், அதில் அம்மன் சந்நிதி பிரத்தியேகமாயில்லை யென்பது முக்கியமாய்க் கவனிக்கத்தக்கது. மைசூர் ராஜ்யத்தில் ஹலபேட் என்னும் ஊரிலுள்ள சிவாலயத்தில் இரண்டு சிவ சந்நிதிகளுள்; ஒரு ஸ்வாமிக்கு ஹொய்சா லேஸ்வரரென்றும், மற்றொன்றிற்கு சாந்தாளேஸ்வரர் என்றும் பெயர்; இரண்டும் சிவ சந்நிதிகளே, அம்மனுக்கு இக்கோயிலில் பிரத்யேகமாக சந்நிதி கிடையாது இங்கும் சாந்தாளேஸ்வார் சந்நிதி சாந்தாதேவி எனும் அரசியால் கட்டப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

அன்றியும் பூர்வீக சோழ கட்டிட சிவாலயங்களிலும் ஆதியில் அம்மனுக்கும் பிரத்யேகமாக மூலஸ்தானம் கட்டப்படவில்லையெனத் தெரிகிறது. இதற்கு உதாரணமாக ஸ்ரீ காஞ்சீபுர ஏகாம்பர நாதர் கோயிலைக் கூறலாம்; காஞ்சீபுரம் இந்தியாவில் வெகுகாலத்திற்கு முன்பே பிரசித்திபெற்ற சப்த புரிகளிலொன்றாம். அங்கு சிவாலயங்கள் ஆதிகாலத்திலேயே இருந்திருக்கவேண்டும்; அப்படியிருந்தும், ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தில் அம்மனுக்கு மூலஸ்தானக் கோயில் கிடையாது; காமாட்சி அம்மனுக்கு உற்சவ விக்ரஹம் இருக்கிறது; மூல விக்ரஹம் கிடையாது. இவ்வூரிலுள்ள பழய கோயில்களாகிய, ஐராவதேஸ்வரர் கோயில், மாதங்கேஸ்வரர் கோயில், முக்தீஸ்வரர் கோயில், முதலியவற்றுள், அம்மன் சந்நிதிக்கு இம் வேறாக ஏற்படுத்தப்படவில்லை. திருக்கழுக்குன்றத்து, மலைமீதிருக்கும் வேதகிரீஸ்வரருக்கு, அம்மன் சந்நிதி அங்கு கிடையாது என்பதையும் நோக்கவும்.

சில பூர்வீக சோழ சிவாலயங்களில் ஆதியில் நிர்மானிக்கப்பட்டபோது அம்மன் சந்நிதியே யில்லாது, பிறகு கட்டப்பட்டிருக்கின்றது. இதற்கு சில உதாரணங்கள் *(1)* சுமார் *1012*ல் கட்டப்பட்ட தஞ்சாவூர் பிரஹதீஷ்வரர் கோயிலில், பிறகுதான் அம்மன்

சந்நிதி கட்டப்பட்டது. *(2)* சிதம்பரத்திலும் தற்காலத்திய அம்மன் சந்நிதி பிறகுதான் கட்டப்பட்டதாம். *(3)* சென்னைக்கு அருகிலுள்ள திருவொற்றியூரிலும் அப்படியே. மேற்கூறிய கோயில்களில் ஸ்வாமி கர்ப்பக்கிரஹத்தின் சில்பத்தையும் அம்மன் சந்நிதி சில்பத்தையும் ஆராய்ந்து பார்த்தால் இது நன்கு விளங்கும்.

பிற்காலத்தில் ஏற்பட்ட சிவாலயங்களிலெல்லாம் அம்மனுக்குப் பிரத்யேகமாக ஆலயமில்லாத கோயிலே கிடையாது என்று கூறலாம். இக்காலத்திய சிவாலயங்களிளெல்லாம் ஸ்வாமி சந்நிதி கிழக்குப் பார்த்ததாயும் அம்மன் சந்நிதி தெற்கு பார்த்ததாயும் இருக்கும். இப்படிக்கில்லாவிட்டால், இதற்கு ஏதாவது காரணம் நாம் சாதாரணமாகக் கூற முடியும். இதற்கு ஒரு உதாரணமாக, பூர்வீக கோயில் அழிக்கப்பட்டு, சில நூற்றாண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட திருமயிலை கபாலீஸ்வரர் கோயிலைக் கூறலாம். இங்கு ஸ்வாமி சந்நிதி மேற்கு பார்த்ததா யிருப்பதைக் கவனிக்க.

சில பெரிய சிவாலயங்களில் ஸ்வாமி சந்நிதியும் அம்மன் சந்நிதியும் அக்கம்பக்கமாய், அதாவது இரண்டும் ஒரே திக்கு நோக்கியவைகளாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. மதுரை, திருவாரூர், இராமேஸ்வரம் முதலிய ஸ்தலங்களில் இப்படித்தானிருக்கிறது.

வட இந்தியாவிலுள்ள சிவாலயங்களில், அம்மனுக்குப் பெரும்பாலும் சந்நிதியே கிடையாது என்று கூறலாம்; காளி, துர்க்கை, கோயில்கள் பல இருந்தபோதிலும் சிவாலயங்களில் அம்மன் சந்நிதி கிடையாது. மிகவும் பிரசித்தி பெற்ற காசி விஸ்வேஸ்வரர் கோயிலும் விசாலாட்சி சந்நிதி கிடையாது; அது வேறோர் இடத்தில் தனியாக சிவபக்தர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆதி சிவாலயங்களில் சுப்பிரமணிய ஸ்வாமிக்குப் பிரத்யேகமாக சந்நிதி ஏற்பட்டதும் பிறகுதான் என்று கூற வேண்டும். முன்பு கூறியபடி பழய பல்லவ சிவாலயங்களில் சொமாஸ்கந்த விக்ரஹத்தில் நடுவில் பாலசுப்பிரமணியர் சிறு உருவத்தில் இருக்கிறார்; இதைத் தவிர்த்து சுப்பிரமணியருக்கு பிரத்யேக கோயில் கிடையாது; மேற்கூறிய பழய பல்லவ சிவாலயங்களை உற்று நோக்குக. பதினோராம் நூற்றாண்டின் முன் பகுதியில் கட்டப்பட்ட தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலிலும், ஆதியில் சுப்பிரமணியருக்கு ஆலயம் கட்டப்படவில்லை. தற்காலமிருக்கும்

சுப்பிரமணியர் ஆலயத்தைப்பற்றி, பெர்கூசன் துரை அடியிற் கண்டவாறு எழுதுகிறார். "இக்கோயில் தற்காலத்தில், தென் இந்தியாவிலுள்ள ஆலயங்களில் மிகவும் அழகிய சில்ப மமைந்ததெனக் கூறலாம்; இது பெரிய கோயில் (பிரஹதீஸ்வரர் கோயில்) கட்டப்பட்ட பிறகு இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கப்பால் கட்டப்பட்டது". முற்றிலும் புதுப் பிக்கப்பட்டவை நீங்கலாக, பூர்வீக சிவாலயங்களை ஆராய்ந்து பார்த்தால், அவைகளில் ஏறக்குறைய எல்லாவற்றிலும் சுப்பிரமணியருக்குப் பிரத்யேக சந்நிதி பிற்காலம்தான் கட்டப்பட்டதென்பது நன்கு விளங்கும்.

சிவாலயங்களில் விக்னேஸ்வாருக்கும் பிரத்யேக சிறுஆலயம் கட்டப்பட்டதும் பிற்காலத்திய பழக்கமாம். ஆதிகாலத்தில் அவ்வாறில்லையென்றே கூறலாம். தற்காலத்தில் பிள்ளையாருக்கு பெரிய ஸ்தலங்களில் நூற்றுக்கணக்கான சிறு கோயில்களைக் காணலாம்; ஆயினும் ஆதி காலத்தில் ஒரு விக்னேஸ்வர ஆலயமாவது கிடைக்காது. இச்சந்தர்ப்பத்தில், மஹாபலிபுரத்திலுள்ள தற்காலம் கணேசர் ரதம் என்று அழைக்கப்படும் கோயிலில் தற்காலம் ஒரு புதிய கணநாதரை வைத்திருக்கிறார்கள். இது ஆதியில் சிவாலயமாகத்தான் கட்டப்பட்டது. இதற்கு அத்தாட்சி அங்கிருக்கும் கல்வெட்டேயாம். அதில் "இக்கோயில் ஏழாவது நூற்றாண்டில், அத்யாந்த காமரண ஜெயன் எனும் பல்லவ அரசனால் கட்டப்பட்ட சிவாலயம்" என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்த பழய லிங்கமானது ஓர் ஐரோப்பியரால் இங்கிலாண்டுக்குக் கொண்டுபோகப் பட்டதென்றும் அறிகிறோம்; அதன்பின் காலியாயிருந்த இடத்தில் விநாயகரது சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் பூர்வீக பல்லவ சிவாலயங்களில் விக்னேஸ்வரார் சிலையே கிடையாது எனச் சொல்லலாம்.

தற்காலத்திய எல்லாச் சிவாலயங்களிலும் ஸ்வாமி கர்ப்பக் கிரஹத்திற்கு அருகாமையில், வெளியில் வடக்குப் பாரிசம் சண்டேஸ்வருக்கு சிறு கோயில் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதை இதை வாசிக்கும் சிவ நேயர்கள் அனைவரும் அறிவார்கள். இதுவும் பிற்காலம் வந்த வழக்கமாம். பல்லவர்கள் காலத்தில் கட்டிய சிவாலயங்களில் சண்டேஸ்வர மூர்த்தியே கிடையாதென்னலாம்; அப்படி ஏதாவது ஏகதேசமாயிருந்தாலும், அவருக்குப் பிரத்யேகமாக சந்நிதி கிடையாது என்று கூறலாம்.

இங்ஙனமே, நடராஜப் பெருமானுக்கும், தியாகேசப் பெருமானுக்கும் பிரத்யேக சந்நிதிகள் பிற்காலத்தில்தான் உண்டானவை என்று கூற இடமுண்டு.

இனி, தற்காலத்தில் கட்டப்படும் சிவாலயங்களின் சில்ப முறையை கவனிப்போம். தற்கால சிவாலயங்களெல்லாம் கிழக்கு நோக்கியவைகளா யிருக்கும்; இது சில்ப சாஸ்திரத்திலும் சைவாகமங்களிலும் குறித்த முறையாம். அப்படி யில்லாது வேறு எத்திக்கையாவது நோக்கியிருந்தால் அதற்கு ஏதாவது அவசியமான காரணம் இருக்கவேண்டும். சிவாலயத்தின் முக்கிய வாயிலுக்கு எதிராக, பெரிய கோயில்களில் 16 கால் மண்டபமும் சிறிய கோயில்களில் 4 கால் மண்டபமும் அமைந்திருக்கும். இது முக்கியமாக ஸ்வாமியின் திருவிழாக் காலத்தில் தீபாராதனைக்காக ஸ்வாமி தங்குவதற்காகக் கட்டப்பட்டதாம். இதற்கு உதாரணமாக பெரிய காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயில் தெற்கு கோபுரத்திற்கெதிரிலுள்ள 16 கால் மண்டபத்தைக் கூறலாம். கோயிலின் கிழக்கு வாயிலின் பேரில், சாதாரணமாக பெரிய கோபுரமிருக்கும். பெரிய கோயில்களில் நான்கு வாயில்களிலும், நான்கு போபுரங்கள் இருக்கும்; உதாரணமாக சிதம்பரத்திலுள்ள நான்கு கோபுரங்களையும் கூறலாம். சில கோயில்களில் இரண்டு கோபுரங்கள்தானுண்டு; இன்னும் சில கோயில்களில் ஒரே கோபரமுண்டு. கிழக்கு போபுரவாயிலின் மூலமாக உள்ளே நுழைந்தால், ஒரே பிரகாரமுடைய கோயில்களில், வாயிலுக்கு நேராக துவஜஸ்தம் இருக்கும்; அதற்குப் பின்னால் பலிபீடம், இவ்விரண்டிற்கும் பின்னால் மகாமண்டபத்தில் ஒரு சிறு மண்டபத்தில் நந்திதேவர் இருப்பார்; சில சிறு கோயில்களில் நந்திக்கு மண்டப மில்லாதிருக்கலாம். கோயிலுக்குள் புகுந்தவுடன் வலதுபுறமிருந்து இடது புறமாக (பிரதட்சணமாக) சுற்றிவர வேண்டுமென்பது சிவனடியார்கள் அனைவரும் அறிந்த விஷயமே. அப்படிச் சுற்றிவரும் போது தென்கிழக்கு மூலையில், (அதாவது அக்னி மூலையில்) சில்ப நூலின்படி மடப்பள்ளி கட்டப்பட்டிருக்கும். சாதாரணமாக பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் வினாயகருடைய கோயிலும், வடமேற்கு மூலையில் சுப்பிரமணியருடைய கோயிலும் இருக்கும். இதற்குக் காரணம் கோயிலுக்கு வரும் சேவார்த்திகள் முதலில் வினாயகரையும், பிறகு சுப்பிரமணியரையும் தொழுதுவிட்டு, பிறகே சிவ சந்நிதிக்குப் போகவேண்டு மென்பதாம். பிராகாரத்தின் வடகிழக்கு மூலையில் யாகசாலை மண்டபம் இருக்கும், இது உற்சவ காலங்களில் ஸ்வாமி உள் பிராகாரம் சுற்றிவந்தவுடன், வாஹனத்தின்மீது ஆரோகணிக்குமுன் யாகசாலையில் தீபாராதனையும்

ரட்சையும் பெறவேண்டுமெனும் ஆகம விதிக்காகும். முன்னால் குறித்தபடி நடுவில் ஸ்வாமியின் கர்ப்பக்கிரஹமிருக்கும்; இதற்கு வெளியில் தென்முகமாக அம்மன் சந்நிதி அமைக்கப்பட்டிருக்கும். நந்தி மண்டபத்தின்பின் அர்த்த மண்டபமும், அதற்கும்பின் அந்தரானமு மிருக்கும்; கடைசியாக மூலஸ்தானம், இந்த மூலஸ்தானத்தின்பேரில் முன்பு கூறியபடி கோயிலின் முக்கிய விமானமிருக்கும். விமானத்தின் உச்சியில் பெரிய கோயில்களில் எல்லாம் தங்கக் கலசங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

சில்ப சாஸ்திரப்படி கர்ப்பக்கிரஹங்கள் நான்குவகைப்பட்டன. *(1)* சமச்துராஸ்ர விமானம் **(Square)** *(2)* விருத்த விமானம் **(Circular)** *(3)* ஆயதாஸ்ர விமானம் **(Rectangular)** *(4)* விருத்தாயத விமானம் **(Oval)** தற்காலத்திய கோயில்கள், ஏறக்குறைய எல்லாம், சதுரமான கர்ப்பக் கிரஹங்களும் விமானங்களும் உடையனவா யிருக்கின்றன.

கற்பக்கிரஹத்திற்கு ஒரே வாயில்தானிருக்கும், அதற்கிருபுரமும் துவாரபாலகர்கள் இருக்கவேண்டியது விதி. கர்ப்பக்கிரஹத்தின் தென்பாரிசத்தில் தட்சிணாமூர்த்தியின் உருவமும்; மேற்கு பக்கம் லிங்கோற்பவரும், வடக்குபுறம் காளியின் உருவமும் சாதாரணமாக அமைக்கப்பட்டிருக்கும்; சில கோயில்களில் காளிக்கு பதிலாக மஹாவிஷ்ணுவாவது அல்லது பிரம்மாவாவது அமைக்கப்பட்டிருக்கும். கர்ப்பக்கிரஹத்திற்கு வெளியில் வடக்குப் பக்கம் சண்டேஸ்வரர் சந்நிதி அமைக்கப்பட்டிருக்கும். கர்ப்பக்கிரஹத்தின் வடக்குப்பக்கம், அபிஷேக தீர்த்தம் வெளியே போவதற்காக கோமுகம் அமைக்கப்பட்டிருக்கும்.

சில பெரிய கோயில்களில் ஐந்து பிராகாரங்கள் உண்டு. அப்படிப்பட்ட கோயில்களில் ஒவ்வொரு பிராகாரத்திற்கும் கோபுரங்கள் இருக்கலாம். பெரிய கோயில்களில் வாகன மண்டபம் கடைசி வெளிப்பிராகாரத்தில் கட்டப்பட்டிருக்கும்; அன்றியும் உற்சவமூர்த்தியின் வாகனங்களை வைப்பதற்காக வெளிப்பிராகாரத்தில் சிறு அறைகள் அமைக்கப்பட்டிருக்கும். உற்சவமூர்த்தியும் அறுபத்து மூவர் முதலியவர்களுடைய விக்ரஹங்களும் கோயிலின் உட்பிராகாரத்தில் வைக்க இடம் ஏற்பாடு செய்திருக்கும்.

பெரிய கோயில்களில் சூரியன், சந்திரன், பைரவர், மஹாலட்சுமி, சரஸ்வதி முதலிய பரிவார தேவதைகளுக்கும் இடம் உண்டு.

என் அபிப்பிராயம், இடைக்காலத்து பெரிய சிவாலயங்களில் மஹாவிஷ்ணுவுக்கு பிரத்யேகமாக சந்நிதி யிருந்ததென்பதாம்; அவற்றுள்

சில பிறகு அப்புறப்படுத்தப்பட்டன. ஆயினும் சில சிவாலயங்களில் தற்காலமும் விஷ்ணு சந்நிதிகள் உண்டென்பதை இதை வாசிக்கும் சிவநேயர்கள் ஒப்புக்கொள்வார்கள். இதற்கு உதாரணமாக பெரிய காஞ்சீபுரத்தில் எகாம்பரேஸ்வரர் கோயிலில் நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதியையும், சிதம்பரம் நடராஜர் கோயிலில், கோவிந்தராஜர் சந்நிதியையும் கூறலாம். மதுராபுரியில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலிலிருந்த பெருமாள் சந்நிதியும், திருவையாற்றில் பஞ்சன தேஸ்வரர் கோயிலிலிருந்த பெருமாள் சந்நிதியும் அப்புறப்படுத்தப் பட்டனவென்பது சரித்திரமறிந்த விஷயமே.

தென் இந்தியாவில் பல சிவாலயங்களில் கள்ள அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்பது பலர் அறிந்த விஷயமே; இந்த இரகசியமான அறைகள், சாதாரணமாகப் பூமிமட்டத்தின் கீழ், பிறருக்குத் தெரியாதபடி கட்டப்பட்டனவுமாம். ஆபத்காலங்களில், உற்சவ விக்ரஹங்கள் முதலியவைகளையும், திருவாபரணங்களையும் சேமித்துவைக்க இவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பது திண்ணம். திருவாலங்காடு சிவாலயத்தில் பல வருடங்களுக்கு முன்பாக, இப்படிப்பட்ட கள்ள அறை யொன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதிலிருந்த வெள்ளிப்பெட்டி சென்னை மியூஜியம் (Museum) எனும் பழய பொருட்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. ராய வேலூரிலும் ஒரு மண்டபத்தின்கீழ் மற்றொரு மண்டபம் ரகசியமாக கட்டப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பூலிருந்தவல்லி வைதீஸ்வரன் கோயிலில் ஒரு கள்ள அறை சிலவருடங்களுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டது. இன்னும் பல கோயில்களில்; இதுவரையிலும் கண்டு பிடிக்கப்படாத பல ரகசிய அறைகள் இருக்கலாம். சில கோயில்களில் ரகசியமான சுரங்கங்கள் இருக்கின்றன; உதாரணமாக பெங்களூர் கங்காதரேஸ்வரர் குகைக் கோயிலில் ஒரு பெரிய சுரங்கம் இருப்பதைக் கூறலாம். ஒருவிதத்தில் இப்படிப்பட்ட கள்ள அறைகளும் சுரங்கங்களும் *1310* ஆம் ஆண்டில் மகம்மதியர்கள் தென் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து ஹிந்து ஆலயங்களை அழிக்க ஆரம்பித்த காலத்தின் பிறகுதான், உண்டானவை யெனக் கூறலாம்.

## சிவாலய சூர்ய நமஸ்காரம்

தென் இந்தியாவிலுள்ள சில திராவிட சில்ப சிவாலயங்களில் வருடத்திற்கு ஒருமுறை சூர்ய பூஜை நடப்பதாகச் சொல்லப்படுகிறது; அதாவது, வருடத்தில் இரண்டு மூன்று தினங்கள் காலையில் சூர்ய

ரஸ்மி அல்லது கிரணம், நேராக சிவலிங்கத்தின்மீது விழ்கிறது; இப்படி சூர்யபகவான் ஸ்வாமியை நமஸ்கரிப்பதாக ஐதிகம். கோயிலைக் கட்டும் பொழுது சில்பியின் சாதுர்யத்தினால், ஓர் ரந்திரத்தின் வழியாக, வருஷம் ஒரு முறை காலையில் இவ்வாறு சூரிய கிரணங்கள் லிங்கமூர்த்தியின் மீது விழக் கட்டியதாகும். இதற்கு ஒரு உதாரணமாக பூவிருந்தவல்லி வைத்தியநாத ஸ்வாமி ஆலயத்தின் மாசிமீ- *22*உ முதல் *29*உ வரையில், மேற் குறித்த சூர்ய பூஜையைக் காணலாம். இன்னும் பல சிவாலயங்களில் இது உளது.

## திராவிட சிவாலயப் பிரிவுகள்

திராவிட சில்பக் கோயில்களை அடியிற்கண்ட முக்கிய பிரிவுகளாகக் கருதலாம். *(1)* பல்லவ ஆலயங்கள் *(2)* பூர்வீக சோழக் கோயில்கள் *(3)* பிற்காலத்திய சோழக் கோயில்கள் *(4)* விஜயநகர சில்பக் கோயில்கள் *(5)* சளுக்கிய அல்லது ஹொய்சால் சில்பக் கோயில்கள்.

*(1)* முதலாவது பல்லவ கோயில்களை எடுத்துக்கொள்வோம். இவைகளை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்; குகைக் கோயில்கள், பெரிய கற்பாறைகளில் வெட்டப்பட்ட கோயில்கள், துண்டிக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட ஆலயங்கள்.

**குகைக்கோயில்கள்:-** பலலவ குகைக் கோயில்களுக்கு உதாரணமாக, மாபலிபுரத்திலுள்ள மஹிஷாசுரமர்த்தினி மண்டபத்தின் பக்கத்திலுள்ள சிவாலயத்தையும், திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோயிலிலிருந்து இறங்கிவரும்போது மலைப்பாறையில் வெட்டப்பட்ட சிவாலயத்தையும், திருச்சிராப்பள்ளி குகைக் கோயில்களையும் கூறலாம். இவைகளுக்கெல்லாம் குடவரைக் கோயில்கள் என்று பெயர்; கற்பாறைகளில் குடைந்து எடுக்கப்பட்ட கோயில்கள் என்று பொருள்படும்.

**வெட்டப்பட்ட கோயில்கள்:-** பெரிய கற்பாறைகளைச் செதுக்கி கோயில்களாக சமைக்கப்பட்ட ஆலயங்களுக்கு உதாரணமாக, மஹாபலிபுரத்திலுள்ள ரதக் கோயில்களையும், எல்லோராவிலுள்ள கைலாசக் கோயிலையும் கூறலாம். இவைகள் ஒரே கற்பாறையிலிருந்தோ, குன்றிலிருந்தோ, மேலே இருந்து செதுக்கிக் கொண்டுவந்து, நிர்மாணிக்கப்பட்ட கோயில்களாம்.

**கட்டப்பட்ட கோயில்கள் :-** துண்டுகளாக வெட்டப்பட்ட கருங்கற்களை அடுக்கிக் கட்டிய பல்லவ ஆலயங்களுக்கு உதாரணமாக,

காஞ்சீபுரம் கைலாச நாதர் கோயில், மஹாபலிபுரம் கடற்கரைக் கோயில் முதலியவற்றைக் கூறலாம். பூர்வக் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்கள் இப்படிப்பட்டவைகளே.

இவைகளின் சிற்பங்களைப்பற்றி சிறிது ஆராய்வோம். குகைக் கோயில்களில் விமானங்கள் கிடையா; வெட்டப்பட்ட கோயில்களிலும் கட்டப்பட்ட கோயில்களிலும் விமானங்கள் உண்டு. இந்த விமானங்கள் பௌத்த மதத்தைச் சார்ந்த விஹாரங்களைப் போன்றவை என்று சிற்ப சாஸ்திரிகள் கூறுகின்றனர். இந்த "விஹாரங்கள்" ஒன்றின் மேல் ஒன்றாய் ஆதியில் மரத்தில் கட்டப்பட்ட மாடங்கள் உடையவைகளா யிருந்தன. இதைப்போலவே கருங்கற்களில் முதலில் சிவாலயங்கள் வெட்டப்பட்டன; பிறகு கட்டப்பட்டன. வெட்டப்பட்ட கோயில்களில் பெரும்பாலும் பிராகாரங்கள் கிடையா; கட்டப்பட்ட கோயில்களில் முதலில் கர்ப்பக்கிரஹமும் அதைச் சுற்றி ஒரு பிரகாரமும்தானிருந்தது. பிராகாரத்தின் உட்புறத்துச் சுவரில் சிறு அறைகள் அமைக்கப்பட்டிருந்தன; இதற்கு உதாரணமாக ஸ்ரீ காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் பிராகாரத்திலிருக்கிற சிறு அறைகளைக் கூறலாம்; இவ்வறைகளில் பரமசிவம் பார்வதியின் பல கோலங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல்லவ கோயில்களுக்குக் கோபுரங்கள் கிடையா என்றே கூறலாம். விமானங்களில் சாதாரணமாக வெளியில் சிலையுருவங்கள் கிடையா; ''கோஷ்டங்களும்'' மகர தோரணங்களும் உண்டு. 'கூடு' களின் மத்தியில், மண் வெட்டிபோன்ற உருவங்கள் இருக்கின்றன; இவைகள் எதைக் குறிக்கின்றன என்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பல்லவ சில்பத்தூண்களை சாதாரணமாகக் கண்டுபிடித்துவிடலாம்; மிகவும் புராதனமான தூண்கள் சிங்கங்களின்மீது வைக்கப்பட்டனபோலிருக்கும். பிற்காலத்திய தூண்களில் இந்தச் சிங்கங்கள் விடப்பட்டன. பல்லவ தூண்களின் "போதிகைகள்'' வளர்ந்திருக்கும்; மிகவும் சாதாரணமானவை; ஆதிகாலத்துப் பல்லவ தூண்கள் இரண்டு பிரிவினை உடையவை, பிற்காலத்துத் தூண்கள் மூன்று பிரிவினை உடையவை; பல்லவ தூண்களில் "நாகபந்தம்" கிடையாது. பல்லவ கோயில்களில், துவாரபாலகர்கள் உருவங்களுக்கு ஆதியில் இரண்டு கைகள்தானிருந்தன. இந்த துவாரபாலகர்களுக்கும் மற்ற மனிதர்களுடைய உருவங்களுக்கும நீண்ட துளைக்கப்பட்ட காதுகள் உண்டு; அவைகளில் பெரிய குண்டலங்களும் உண்டு; தலையில் கேசம் நிகளமா யிருக்கும், தலையணிகள் உயர்ந்திருக்கும்.

மேற்குறித்த பல்லவ சிவாலயங்களின் காலம் சுமார் கிபி. 600 முதல் கிபி. 900 வரையிலாம். இவைகளில்:-

**கி.பி. 600 முதல் 640 வரை** ஆண்ட மஹேந்திரவர்மன் காலத்தியவை:- முக்கியமாகக் குகைக் கோயில்களேயாம். இவைகளில் திரண்ட வடிவுடைய லிங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன; துவாரபாலகர்களுக்கு இரண்டே கைகள்; இவர்கள் நேர்முகமான பார்வை உடையவர்கள். 'திருவாட்சி' அல்லது 'தோரணங்கள்' இரட்டைச் சுருள் உடையவை, தூண்கள் சதுர வடிவமான நான்கு பக்கங்கள் உடையவைகளா யிருக்கும். குகைக் கோயில்களில் முதலில் சோமாஸ்கந்த முகூர்த்தம் நிர்மாணிக்கப்பட்டது; பிறகுதான் லிங்கங்கள் நடுவில் வைக்கப்பட்டன. (இது என் அபிப்பிராயம், இவ்விஷயம் இன்னும் ஆராயத் தக்கது) இதற்கு உதாரணமாக மஹாபலி புரத்திலிருக்கும் சில குகைக் கோயில்களைக் கூறலாம்.

**கிபி. 640 முதல் 674 வரை** ஆண்ட மஹாமல்லன் காலத்தியவை:- கர்ப்பக்கிரஹத்தின், உட்புறச் சுவரில் சோமாஸ்கந்தர்; துவாரபாலகர்களுக்கு இரண்டே கைகள், துவாரபாலகர்கள் நேர்முகமானவர்கள்; உட்கார்ந்த சிங்கங்களின்மீது தூண்கள்; குகைக் கோயில்களும், ஒரே கல்லில் வெட்டப்பட்ட கோயில்களும்:- உதாரணமாக மஹாபலிபுரத்து ரதக் கோயில்களைக் கூறலாம்.

**கி.பி. 674 முதல் 800 வரை**- ராஜசிம்மன் முதலியவர்கள் காலத்தியவை:- கைகளைத் தூக்கி, பின்னங்கால்களால் நிற்கும் சிங்கங்கள்; சோமாஸ்கந்தரின் முன்பாக பலபட்டைகள் தீர்த்தலிங்க மூர்த்திகள்; ஒரே வளைவினையுடைய திருவாட்சி; வெட்டப்பட்ட கற்பாறைகளை அடுக்கிக் கட்டப்பட்ட கோயில்கள்:-உதாரணமாக ஸ்ரீ காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயில் மஹாபலிபுரம் கடற்கரைக்கோயில் களைக் கூறலாம்.

**கிபி. 800 முதல் 900 வரை** அபராஜிதன் முதலிய அரசர்கள் காலத்தியவை:- திரண்ட வடிவுள்ள (cylindrical) லிங்கமூர்த்திகள்; பின்பக்கம் சோமாஸ்கந்தர் கிடையாது; துவாரபாலகர்களுக்கு நான்கு கைகள்; இவர்கள் பக்கப் பார்வை யுடைய்வர்கள் ; சிங்கமுகங்களையுடைய 'கூடு'கள்; தூண்களின் கீழ்ப்பக்கம் சிங்கங்கள் கிடையா.

பல்லவ ஆலயங்களில் ரிஷபங்களை வைக்கும் வழக்கம் இரண்டாவது நரசிம்மவர்மன் காலத்தில்தான் உண்டானது என்று எண்ணப்படுகிறது.

அன்றியும் பல்லவ ஆலயங்களில் பெரும்பாலும் 'உபபீடமே' கிடையாது; தூண்களில் 'நாகபந்த'ம் கிடையாது; தலைப்புகளில் 'இதழ்' கிடையாது; தூண்களில் பலகை (Abaces) கிடையாது ; போதிகைகள் வளைவு உடையன ; போதிகைகளில் 'நாணுதலும்' பூமுனையும் கிடையாது.

பல்லவர்கள் காலத்திற்குப் பிறகு, மலைகளில் கோயில்கள் வெட்டுவது நின்றுவிட்டது.

## சோழ சிவாலயங்கள்

இவைகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம் *(1)* பழய சோழக் கோயில்கள் *(2)* பிற்காலத்திய சோழக்கோயில்கள்.

சோழர் காலத்து சிவாலயங்களின் முற்பகுதி சுமார் கி.பி. *650* முதல் *1100* வரை என்று கூறலாம். இக்காலத்து சிவாலயங்கள் பெரிய விமானங்கள் உடையவைகளா யிருந்தன; கோபுரங்கள் மிகவும் சிறியவைகளாயிருந்தன; இவைகளைப் பெரிய வாசற்படிகள் என்றே கூறலாம்; விமானங்கள் உயரத்தில் அதிகரித்துக்கொண்டே போயின, விமானங்களில் சித்திரிக்கப்பட்ட 'கூடுகளின்', நடுவில் மண்வெட்டி யைப்போன்ற சிலபமானது சிங்க முகங்களாக மாற்றப்பட்டன. கோஷ்டங்களும் மகர தோரணங்களும் கூட்டின் ரூபத்தை யடைந்தன. கோயில்களில் உப பீடங்கள் உண்டாயின; வளைந்த போதிகைகள் மாறி, நேர் கோடுகள் உடையவைகளாயின. இக்காலத்து கோயில்களுக்கு உதாரணமாக, தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலையும், கங்கைகொண்ட சோழபுரக் கோயிலையும் கூறலாம்.

## பிற்காலத்திய சோழக் கோயில்கள்

இக்காலத்திய கோயில்களை அறியும் அடையாளங்கள்:- விமானங்கள் குறுகிக்கொண்டே போயின; போபுரங்கள உயர ஆரம்பித்தன; தூண்களின் போதிகைகள் மணி கட்டித் தொங்குவதுபோல செதுக்கப்பட்டன, போதிகைகளுக்கு 'தரங்கு' போதிகைகள் என்று பெயர். கோஷ்டத்தின் மேல்பாகம் மண்டபத்தைப்போல ஆகிறது. இக்காலத்தில் கும்ப பஞ்சரங்கள் சில்பிக்கப்பட்டன. *12*-ஆம் நூற்றாண்டுமுதல் நாகபந்தம்

செதுக்கப்பட்டது; அன்றியும் போதிகைகளில் 'இதழ்க'ள் செதுக்கப்பட்டன. கோயில்களில் பெரிய குளங்களும் அவைகளைச் சுற்றி தூண்கள் நிறைந்த மண்டபங்களும் கட்டப்பட்டன. இவைகளுக்கு உதாரணமாக, சிதம்பரம், திருவண்ணாமலை, ஜம்புகேஸ்வரம் கோயில்களின் சிற்பங்களைக் கூறலாம்.

**மாடக்கோயில்கள்:-** இக்காலத்தில் மாடக்கோயில்கள் என்று சொல்லப்பட்ட சில சிவாலயங்கள் கட்டப்பட்டின; அவைகளை முதன்முதல் கட்டியவன் கோச்செங்கணான் எனும் சோழ அரசன், அவன் தன்காலத்தில் *64* மாடக் கோயில்கள் கட்டியதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் சோழ சில்ப மமைந்தவைகளே. இவைகள் மாடங்களையுடைய சோயில்களாம்; ஆயினும், குறுகிய வாசற்படிகளை உடையவை; யானை நுழையக்கூடாத கட்டிடங்கள் என்று சொல்லப்படுகிறது. தமிழ் அகராதியில் மாடக்கோயில் எனும் பதத்திற்கு "மேட்டிடங்களில் குறுகிய வழியுள்ளதாக, கோச்செங்கண்ணனால் கட்டப்பட்டவைகள்" என்று அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது.

## விஜய நகரச் சில்ப சிவாலயங்கள்

இவைகளின் காலம் சுமார் *1350* முதல் *1600* வரையில் எனக் கூறலாம். இக்காலத்திய சிவாலயங்கள் பெரும்பாலும், மிகவும் உன்னதமான கோபுரங்களை உடையவை; மிகவும் பெரிய கோபுரங்கள் *15*-ஆம் ஆண்டுமுதல் *17*-ஆம் ஆண்டுவரையில் கட்டப்பட்டன. இக்காலத்தில்தான் நூற்றுக்கால் மண்டபங்களும் ஆயிரக்கால் மண்டபங்களும் கட்டப்பட்டன; இதற்கு உதாரணமாக மதுரை, சிதம்பரம், திருநெல்வேலி கோயில்களைக் கூறலாம். கோபுரங்களில் (முன்பிருந்த துவாரபாலகர்களுடன்) பல உருவங்கள் சித்திரிக்கப்பட்டன. தூண்களில் தாமரைப்பூ போதிகைகள், வாழைப்பூ உள்ள போதிகைகளாக மாற்றப்பட்டன. பெரிய ஸ்தம்பங்களில் குதிரை வீரர்களுடைய உருவங்கள் வெட்டப்பட்டன, கோயில் அடிமட்டத்தில் கோலாட்டம் போடும் ஸ்திரீகளின் உருவங்கள் வெடடப்பட்டன; இதற்கு உதாரணமாக ஹம்பியிலுள்ள விரூபாட்சர் கோயிலைக் காண்க. போதிகைகளில் மணிபோன்ற சில்பம், புஷ்பம்போல் மாறியது. அன்றியும் இக்காலத்து கோயில்களில் கல்யாண மண்டபங்கள் எனும் அழகிய மண்டபங்கள் கட்டப்பட்டன; இதற்கு உதாரணமாக, ராயவேலூர் கல்யாண மண்டபத்தைக் காண்க. தூண்கள் மூன்று பிரிவினை உடையவைகளாயின; அம்மனுக்கு கோயில்களில் பிரத்தியேகமான சந்நிதி இக்காலத்தில்தான் உண்டானதென்று மைசூர் சர்வகலாசாலைப் போராசிரியர் டாக்டர்

கிருஷ்ணா அவர்கள் அபிப்பிராயப்படுகிறார். போதிகைகளில் 'நாணுதல்' சில்பிக்கப்பட்டது. அன்றியும் "அணிவெட்டுக்கால்"; தூண்கள் உண்டாக்கப்பட்டன. இதற்கு உதாரணமாக தாட்பத்ரி கோயிலைக் கூறலாம்.

## கடம்ப சில்பக் கோயில்கள்

இவைகள் திராவிட சில்பக் கோயில்களின் ஓர் பகுதியாம். இக்கோயில்கள் சதுர வடிவமான சிகரங்களை யுடையவை. சாதாரணமாக திராவிட சில்ப சிகரங்கள் 8 பக்கங்களுடையவைகளா யிருக்கும்.

## ஹேமாத்பன்ட் கட்டிடங்கள்

இந்த சிவாலயங்களும் திராவிட சில்பமமைந்த கட்டிடங்களே; ஆயினும் இவைகள், பெரிய கருங்கற்பாறைகளைத் துண்டுகளாக வெட்டி அல்லது செதுக்கி, ஒன்றின் பேரில் ஒன்றாய் அடுக்கிக் கட்டப்பட்ட கோயில்கள்; கற்களுக் கிடையில், சுதையோ அல்லது சிமெண்ட் போன்ற வஸ்துவோ கிடையாது. இப்படிப்பட்ட கோயில்கள் ஒரு ராஷ்டிர கூடத்து அரசனது மந்திரியாகிய "ஹேமாத்பன்ட்" என்பவரால் முதலில் கட்டப்பட்டபடியால் ஹேமாத்பன்ட் கட்டிடங்கள் எனும் பெயர்பெற்றன. இவரது காலம் 14-ஆம் நூற்றாண்டிற்கு முன் பகுதியாம்.

## கேரள சில்பக் கோயில்கள்

இவைகள் ஒருவிதத்தில் பர்மா, சீனா, முதலிய இடங்களிலுள்ள கோயில்களைப் போன்ற சில்ப முடையவை. பெரும்பாலும் அஸ்திவாரம் கருங்கல்லாலாயதா யிருந்த போதிலும், மேல்கட்டிடமெல்லாம் மரத்தாலானவை. கோயில்கள் கூரைகளை உடையன. இவற்றிற்கு இரண்டு அல்லது மூன்று கூரைகளும் உண்டு. உள் பிராகராங்களெல்லாம் பெரும்பாலும் மரத்தினாலானவை. சுண்ணாம்பு சுவர்களுக்குப்பதிலாக மரத்தால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

## சாளுக்கிய சில்பக் கோயில்கள்
## (கி.பி. 500 முதல் 1300 வரை)

ஆதியில் சாளுக்கியர் குகைக் கோயில்களை வெட்டினர். இதற்கு உதாரணமாக வாதாபி (பாதாமி) குகைக் கோயில்களைக் கூறலாம். இவர்களிடமிருந்துதான் தென்னிந்தியர் குகைக் கோயில்களை வெட்டும் முறையைக் கற்றனர் என்று எண்ணப்படுகிறது.

சளுக்கிய சில்பத்தை இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கின்றனர் *(1)* நாகரம்:-இதில் விமானங்கள் கடைசிவரை நான்கு மூலைகளை யுடையவை. *(2)* வேசரம்:- இவைகளின் விமானங்கள் இந்து ஆரிய (Indo-Aryan) விமானங்களைப் போன்றவை.

**ஹொய்சல சில்பம்:-** சிலர் சளுக்கிய சில்பத்தின் பிரிவு என்று எண்ணுகின்றனர். மைசூர் ராஜ்யத்தில் பல கோயில்களை ஆராய்ச்சிசெய்த காலஞ்சென்ற ராவ்பகதூர் நரசிம்மாசாரியார் அவர்கள் இதைப் பிரத்தியேகமாக மதிக்கின்றார். இந்த சில்பக் கோயில்களெல்லாம் *3* அடி முதல் *5* அடிவரை உயரமுள்ள அடிப்பீடத்தின்மேல் கட்டப்பட்டவை. பீடமானது பல கோணங்களையுடைய நட்சத்திரங்களைப் போன்றவை. விமானங்கள் படிப்படியாயிருக்கும். இச்சில்பக் கோயில்கள், சாதாரணமாக அடிப்பீடத்தின் பேரில், மூன்று கர்ப்பக்கிரஹங்களை யுடையனவா யிருக்கும், பெரும்பாலும் மத்தியிலுள்ள கர்ப்பக்கிரஹம் கிழக்கு நோக்கியிருக்கும், இதற்குச் சிறிது முன்பாக, வடக்கு பார்த்த கர்ப்பக்கிரஹமொன்று, தெற்குபார்த்த கர்ப்பக்கிரஹமொன்று உடையது; இவைகளின் இடையில் இருக்கும் மண்டபத்திற்கு நவரங்கம் என்று பெயர். ஆதியில் இம்மூன்று கோயில்கள், மும்மூர்த்திகளாகிய பிரம்மா, சிவம், விஷ்ணுவுக்காக அமைக்கப்பட்டனவென்று டாக்டர் கஸின்ஸ், கோபிநாத் ராயர் முதலியவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்; ஆதிகாலத்தில் மும்மூர்த்திகளும் வணங்கப்பட்டனவென்றும், பிறகு பிரம்மாவுக்கு கோயில்கள் அற்றுப்போய், சிவாலயங்களும், விஷ்ணு ஆலயங்களும், மிகுதியாயின என்று எண்ண இடமுண்டு.

சளுக்கிய சில்பத்தில் ஒரு முக்கியமான அம்சம் மிகவும் அழகிய தூண்கள்; எல்லாத் தூண்களும் ஒரு மாதிரியாக செதுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு ஜதையும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும்; இவைகள் சாணையில் கடைசல் பிடிக்கப்பட்டவைபோல் மெருகு உடையவைகளா யிருக்கும்; மிகவும் அருமையான வேலைப்பாடுடையவை; பெரும்பாலும் ஓர்வித கருப்புக் கல்லால் செய்யப்பட்டவை. மைசூர் ராஜ்யத்திலுள்ள சளுக்கிய கோயில்களெல்லாம் இப்படிப்பட்ட கருப்புக் கற்களால் ஆனவை என்றே கூறலாம்.

கோயிலுக்குள்ளே காற்று புகுவதற்காக பல கண்களையுடைய பலகணிகள் அமைக்கப்பட்டிருக்கும்; இவைகள் மிகவும் அருமையான வேலைப்பாடுடையவை.

இப்பிரிவு கோயில்களின் கோஷ்டங்களில் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

கர்ப்பக்கிரஹங்களில் அதிக சித்திர வேலைப்பாடுண்டு; பல வரிசைகளாக சில்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும்; கீழே யானைகள் வரிசை, அதற்குமேல் சிம்மங்கள் அல்லது சார்தூலங்களின் வரிசை, (புலிகள் வரிசை) அதற்குமேல் கொடிவேலை வரிசை; அதற்குமேல் குதிரை வீரர்கள் வரிசை, அதற்குமேல் கொடி வேலப்பாடு; அதற்குமேல் ராமாயணம் முதலிய புராணக் கதைகளின் சில்ப வரிசை; அதன்மீது ஹம்சங்கள் முதலிய பட்சிகளுடைய வரிசை; அதற்குமேல், தேவர்கள் கந்தர்வர்கள் அப்சரசுகள் வரிசை; இவைகளில், சிவ உருவங்கள் வைணவ உருவங்கள் எனும் பேதமின்றி, எல்லாத் தேவதைகளின் உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன; கூத்தாடு வினாயகர், நிர்த்த சரஸ்வதி முதலிய அபூர்வ சிலைகளு மிருக்கின்றன. தற்காலத்து சில்பிகள் ஏதாவது அபூர்வமான உருவங்களை நிர்மாணிக்க வேண்டுமென்றால், இப்படிப்பட்ட கோயில்களுக்குத்தான் போய்க் கற்றுக்கொள்கின்றனர். இச்சில்பத்தைப்பற்றி டாக்டர் சர் பெர்கூசன் என்பவர் மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறார். 3-அடி சதுரத்திற்குள் இப்படிப்பட்ட அருமையனா வேலைப்பாடுள்ள சில்பமே உலகெங்கும் கிடையாதெனக் கூறியுளார். இந்த நுட்பமான அழகிய வேலைப்பாட்டுக்கு ஒரு உதாரணத்தை மாத்திரம் இங்கெடுத்து எழுதுகிறேன். மைசூரிலுள்ள ஒரு சளுக்கிய சில்பக் கோயிலில், ஒரு பெண்மணி கையில் பழம் வைத்துக்கொண்டிருப்பது போலும், அந்தப் பழத்தின்மீது ஒரு ஈ உட்கார்ந்திருப்பதுபோலும் தத்ரூபமாய் செதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஈயின் இறகுகளையும் ஸ்பஷ்டமாகக் காணலாம்! இவைகளெல்லாம் வெட்டப்பட்ட பொழுது ஒரு வித நீல நிறமாயிருந்து பிறகு கருப்பாக மாறும் கற்களால் ஆனவை என்று கூறப்பட்டிருக்கிறது.

ஹொய்சல கோயில்களில் சாதாரணமாக அம்மன் சந்நிதியே கிடையாதென்று கூறலாம். இக்கோயில்களில் சாதாரணமாக ஹொய்சல அரசர்களுடைய பிருது செதுக்கப்பட்டிருக்கும்; இந்தப் பிருது என்னவென்றால், ஓர் வீரன் ஓர் சார்தூலத்தைத் தனியாக எதிர்த்து தன் வாளால் கொல்வதுபோலிருக்கும். சளுக்கிய வம்சத்து ஆதி புருஷன் ஒருவன் இத்தகைய வீரச்செயல் செய்ததாக சரித்திரம்.

இச் சில்பக் கோயில்களுக்கு உதாரணமாக, மைசூர் ராஜ்யத்தில் ஹலபேட் எனும் ஊரிலுள்ள கேதாரேஸ்வரர் கோயிலையும், ஹொய்சலேஸ்வரர் கோயிலையும் கூறலாம்.

## தற்காலத்திய கோயில்களின் சில்பம் -சுமார் 1600 முதல்

இவைகளில் விசாலமான மண்டபங்கள் கட்டப்பட்டிருக்கும்; பல பிரதட்சிண பிராகாரங்கள் அமைக்கப்பட்டவைகளா யிருக்கும். தூண்களிலுள்ள போதிகைகளின் தொங்கட்டங்கள், வாழைப்பூவைப்போல முற்றிலும் மாறிவிட்டன.

கோபுரங்கள் நிரம்ப பல உருவங்கள் சுதை (சுண்ணாம்பு) யினால் நிர்மாணிக்கப்பட்டன. தூண்கள் மூன்று பிரிவினை உடையவைகளாயிருக்கும்; அன்றியும் நாணுதல் அமைக்கப் பட்டவைகளாயிருக்கும். மண்டபங்களின்மேற் கூரைகளில் சில கும்பாகிருதியாக (Dome like) அமைக்கப்பட்டன.

இதற்கு உதாரணமாக புதுப்பிக்கப்பட்ட திருப்பதிரிப்புலியூர் சிவாலயத்தையும், இராமேஸ்வரத்து சொக்கட்டான் மண்டபத்தையும், மதுரை புது மண்டபத்தையும், கோபுரங்களையும், திருச்செந்தூரிலுள்ள ஷண்முகவிலாச மண்டபத்தையும் கூறலாம்.

இக்காலத்துக் கோபுரங்கள் பல வர்ணம் தீட்டப்பட்டவைகளா யிருக்கும்; ஆதிகாலத்து கோபுரங்களில் அப்படி கிடையாது.

ஆதிகாலத்து கோயில்களிலிருந்து சிலை உருவங்கள் இயற்கைக்கு மிகவும் ஏத்தவைகளா யிருந்தனவென்றும், தற்காலத்தில் கட்டப்படும் கோயில்களிலுள்ள உருவங்கள் அப்படி யில்லையென்றும் பெர்கூசன் முதலியோர் அபிப்பிராயப் படுகின்றனர்.

## பஞ்சாயதனக் கோயில்கள்

இவைகள் புதிதாய் தற்காலத்தில் கட்டப்பட்டவை. இவைகளில் சிவலிங்கப் பெருமானுடைய முக்கிய சந்நிதியுடன், விஷ்ணுவுச் தும் (ராமாவதாரம், கிருஷ்ணாவதாரம்) விக்னேஸ்வரருக்கும், துர்க்கை அல்லது அம்பாளுக்கும், ஹனுமாருக்கும் பிரத்யேகமாய், ஒரே ஆலயத்தில் சந்நிதிகள் கட்டப்பட்டுள்ளன. இவைகளை பெரும்பாலும் மைசூர் ராஜ்யத்தில் காணலாம். பஞ்சாயதனம் என்றால், ஐந்து சந்நிதிகள் அல்லது கோயில்கள் அடங்கியது, என்று அர்த்தமாகும்.

## கோயில்களின் காலத்தை அறிதல்

மேற்குறித்த சில்ப விவரங்களைக்கொண்டு, நமது நாட்டிலுள்ள சிவாலயங்களும் அவைகளின் பகுதிகளும், எக்காலத்தில் கட்டப்பட்டனவென்று நாம் சுமாராகக் கூறக்கூடும். ஒரே காலத்தில் முற்றிலும் கட்டப்பட்ட சிவாலயமா யிருந்தால், அதன் சிலபத்தைக் கொண்டு, இக்காலத்தில் கட்டப்பட்டதென நிர்ணயித்தல் சுலபமாகும். அப்படிப்பட்ட சிவாலயங்கள் சிலவே. பல்லவ கட்டிடங்களெல்லாம் பெரும்பாலும் ஏககாலத்தில் முற்றிலும் கட்டப்பட்டவையென்று கூறலாம். அவைகளெல்லாம் ஒரே வகைச் சில்ப முடையவைகளா யிருக்கின்றன. சோழர்கள் காலத்திய சிவாலயங்கள், கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்தப்பட்டு பூர்த்தியாயின என்று ஒருவாறு கூறலாம். இதற்கு சில உதாரணங்களைக் கருதுவோம்.

**தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயில்:-** இது ராஜராஜன் எனும் கீர்த்திபெற்ற சோழ அரசனால் கி.பி. *1003* ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு *1007*ல் முடிக்கப்பட்டது. இது சோழ சில்பமுடையது. கிழக்கு கோபுரம் *1330*ல்

கட்டப்பட்டது; இது விஜயநகர சில்ப மமைந்தது. வடபுறமுள்ள சுப்பிரமணியர் கோயில் 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக மதிக்கப்படுகிறது; சிலர் இது 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக எண்ணுகின்றனர். ஆயினும், ஒன்றுமாத்திரம் நிச்சயம்; இது ராஜராஜனால் கட்டப்பட்டதல்ல. இங்குள்ள தட்சிணாமூர்த்தி சிறு கோயிலும் பிறகே கட்டப்பட்டதாகும். மேற்கிலுள்ள சித்தர்கோயில் மிகவும் புதிய கட்டிடமாகும். இங்குள்ள வினாயகர் கோயில் 1801ல் சரபோஜி மகாராஜாவால் கட்டப்பட்டது.

**சிதம்பரம் பெரியகோயில்:-** இது மிகவும் புராதன காலத்தில் மரத்தாலாய சிறு ஆலயமா யிருந்ததென்று எண்ணுவதற்கு ஆதாரங்கள் உள; அது காலக்கிரமத்தில் ஜீரணமாயாவது போயிருக்கவேண்டும், அல்லது அதைப் பிரித்து கற்கோயில்கள் உண்டானபோது, கற்கோயிலாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். தற்காலக் கோயிலில் மிகவும் பூர்வீகபாகம் இங்கிருக்கும் நிர்த்தசபையாம். இதற்கருகிலுள்ள கனகசபையும் மிகவும் புராதனமானதாம். இது கி.பி. 985ல் இருந்ததென்பதற்கு, கல்வெட்டுகள் உள. இதைச் சுற்றிலும் உள்ள மதிலிலடங்கிய 320 அடி சதுரமுள்ள கோயில்தான் பழய கோயில்; இது விக்கிரம சோழனால் கட்டப்பட்டதென்பர். இங்குள்ள பார்வதி ஆலயம் 14 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கோபுரங்கள் சுமார் 15 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை, இவைகள் விஜயநகர சில்ப முடையவை; பெரும்பாலும் இரண்டாம் பிராகாரமும் அக்காலத்தியதே. ஆயிரக்கால் மண்டபம் 1395-1655 வருடங்களுக்குள் கட்டப்பட்டதாம். சுப்பிரமணியர்கோயில் 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக மதிக்கப்படுகிறது. வடக்கு கோபுரம் 1516ல் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. இங்குள்ள கோவிந்தராஜருடைய சந்நிதி தற்காலம் ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்களால் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது.

**திருவாரூர் கோயில்:-** இங்கு வன்மீகநாதர் கர்ப்பக்கிரஹம் தான் மிகவும் பழமையானது. இது 191 x 156 அடி விஸ்தீரணமுடையது; இது ஒரே பிராகார மடங்கியது; இதற்கு ஒரு சிறு கோபுரமும் உண்டு. இங்குள்ள அசலேஸ்வரர் கோயில்தான் மிகவும் புராதனமானதென்று சிலர் எண்ணுகின்றனர். வெளி கோபுரங்களெல்லாம் விஜயநகரத்தரசர்கள் காலத்தில் கட்டப்பட்டவைகளாம்.

**பெரிய காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயில்:-** இது தேவார காலத்திற்கு முன்பாக இருந்திருக்க வேண்டும். ஆதியில், இது மரத்தாலாய கோயிலாயிருந்தது பிறகு செங்கல்களாலும் சுண்ணாம்பினாலும் அமைக்கப்பட்ட ஆலயமாயிருந்திருக்கலாம். பிறகுதான் கருங்கல்லால் கட்டப்பட்டதா யிருக்கவேண்டும் என்பதற்கு சந்தேகமில்லை. ஆதியில் இந்த கர்பக்கிரஹம் பழய சோழ கட்டிடமாம். இது சுமார் 50 வடங்களுக்கு முன் நாட்டுக்கோட்டை செட்டியார்களால் முற்றிலும் பிரிக்கப்பட்டு, புதிதாய்க் கட்டப்பட்டது. ஒரு சிவாலயத்திற்குரிய எல்லா அங்கங்களும் இருந்தபோதிலும், இவைகளெல்லாம் ஒரு ஒழுங்காயிராமல், கோணல் மாணலாக கட்டப்பட்டிருக்கிறதென டாக்டர் பெர்கூசன் கூறுகிறார். இப்படி நேரிட்டது அப்போதைக்கப்போது பல புதிய

கட்டிடங்களைச் சேர்த்துக் கொண்டு வந்தபடியால் இருக்கலாம். பெரிய கோபுரம் விஜயநகர சில்பம், கிருஷ்ணதேவராயர் காலத்தில் *(1509-1530)* கட்டப்பட்டது; இது தெற்குப்பார்த்தது; இக்கோயிலில் பல கோபுரங்கள் இருந்தும் இரண்டு கோபுரங்களாவது, ஒன்றுக்கொன்று நேராக இல்லை. *1000* கால் மண்டபம் என்று சொல்லப்படுவதில் *540* கால்கள் தானிருக்கின்றன. இம் மண்டபமும் விஜயநகர சில்பமமைந்ததே. கோயிலில் பெரிய பிராகாரத்திற்குள் மணற்கல்லாலாகிய (Sandstone) இரண்டு பூர்வீக கோயில்கள் இருந்தன சுமார் *55* ஆண்டிற்குமுன் வரையில்; இவைகளில் ஒன்றாகிய மயானீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்பட்டது சில வருடங்களுக்கு முன் பிரிக்கப்பட்டு, கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. அவ்வாறு பிரிக்கப்படாது முன் ஸ்தியிலிருக்கும் மற்றொரு கோயில் ரிஷபேஸ்வரர் கோயிலாம். இதுவும் பழய மயானேஸ்வரர் கோயிலும் *11*-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவைகள். இவையிரண்டும் மேற்கு பார்த்த கோயில்கள். இங்குள்ள அகத்தீஸ்வரர் மண்டபமும், சபாநாதர் மண்டபமும் பழய சோழ கட்டிடங்கள். இங்குள்ள காலியாண மண்டபம் *1174*ளு தென்னாட்டு வள்ளல் பச்சையப்ப முதலியாரால் கட்டப்பட்டது. கோயிலுக்கு எதிரிலுள்ள பெரிய பதினாறுகால் மண்டபம் *1030*ளு கட்டப்பட்டதாம். இங்கு முன்பே கூறியபடி அம்மனுக்கு மூலஸ்தானம் கிடையாது என்பது கவனிக்கத்தக்கது.

**திருவொற்றியூர் கோயில்**:- இக்கோயிலைப்பற்றி சிறிது ஆராய்வோம். இதுவும் தேவார காலத்தில் இருந்த கோயிலாம்; பழய மர்க்கோயில் மாற்றப்பட்டு, தற்கால கர்ப்பக்கிரஹ விமானம் *1012-1042* வருடங்களில் ஆண்ட ராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது; இக்கர்ப்பக்கிரஹம் கஜப்பிருஷ்ட ஆகிருதி யுடையது. தென்பாரிசத்தில் இருக்கும் கௌளீஸ்வரர் கோயில் என வழங்கப்படுகிற சிறு கோயில், வீரராஜேந்திரர் காலத்தில் *(1067-1068)* கட்டப்பட்டதாகும். அம்மன் சந்நிதி பிற்காலத்தில் உண்டான தென்பதற்குச் சந்தேகமில்லை. தியாகராஜர் சந்நிதியும் அதற்குப் பிற்காலத்தில் உண்டானதாகும். கோயிலின் உட்பிரா்காரத்தில், மிகவும் பூர்வீகமான வட்டபலிநாய்ச்சியார் எனும் துர்க்கையின் கோயிலிருப்பது கவனிக்கத் தக்கது; இது பூமியின் மட்டத்திற்கு கீழ் இருக்கிறது. தற்காலத்திய கர்ப்பக்கிரஹம் கட்டப்பட்ட காலத்திலேயே இது இருந்திருக்கவேண்டும். ஆதியில் இக்கோயிலுக்கு கோபுரமே இல்லாம லிருந்தது. சென்ற நூற்றாண்டின் கடைசியில் எல்லப்ப செட்டியார் என்பவரால், பழய கருங்கல் அஸ்திவாரத்தின்மீது, கோபுரம் செங்கல் கட்டிடமாகக் கட்டப்பட்டது. வடமேற்கு மூலையில் சென்ற இருபதாண்டுக்குள் ஸ்ரீமான் இராமசாமி பிள்ளையவர்களால் ஒரு சிவாலயம் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது.

(இன்னும் மற்ற சிவாலங்களைப்பற்றி அறிய விரும்புவோர், நான் தற்காலம் அச்சிட்டுவரும் "சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும்" எனும் புஸ்தகத்தில் கண்டு கொள்க).

# சிவாலய ஜீரணோத்தாரணம்

இதுவரையில் சிவாலயங்கள் கட்டப்பட்டதைப்பற்றி சிறிது எழுதினேன்; இனி சிவாலயங்களை ஜீர்ணோத்தாரணம் செய்வதைப் பற்றி கொஞ்சம் எழுத விரும்புகிறேன்.

முதலில் "பத்து புதிய ஆலயங்களைக் கட்டுவதைவிட, பழயதொரு சிவாலயத்தை ஜீர்ணோத்தாரணம் பண்ணுதல் அதிக புண்ணியமாம்" எனும் பழமொழியை இதை வாசிக்கும் சிவநேயர்களுக்கு நினைப்பூட்டுகிறேன். அப்படி பழய சிவாலயங்களைப் புதுப்பிப்பதில் மிகுந்த சிவ பக்திமான்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு, நாம் அனைவரும் முதல் ஸ்தானத்தைக் கொடுக்கவேண்டும். அவர்களது தயாள குணமும் விடா முயற்றியு மில்லாவிடின் நமது நாட்டிலுள்ள பல பெரிய சிவாலயங்கள், இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோயிருக்கும் என்பது நிச்சயம். பழய சிவாலயங்களை ஜீர்ணோத்தாரணம் செய்வதில், அவர்களுக்கும், அத்திருப்பணியைப் பூணும் மற்றவர்களுக்கும் அடியேனுடைய விண்ணப்பம் அடியில் வருமாறு:-

பழய கோயில்களை மராமத்து செய்யும்பொழுது கூடுமானவரையில் கர்ப்பக்கிரஹம் முதலிய முக்கியமான பாகங்களையெல்லாம் பூர்வகாலத்தில் இருந்தபடியே மராமத்து செய்து, நிலைநிறுத்த வேண்டியது மிகவும் அவசியம். கூடுமானவரையில் அபூர்வமான சில்பங்களை அப்படியே பாதுகாத்தல்தான் சிவபக்தர்களுடைய கடமையாகும்; பழய சில்பிகளைப்போல் தற்காலத்து சில்பிகள் அவ்வளவு திறமை வாய்ந்தவர்களன்று, என்பது சில்ப சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்த பல பெரிய சாஸ்திரிகர்களுடைய அபிப்பிராயம். அப்படிக்கின்றி தற்காலத்து சில்பிகள் அத்துணை திறமை வாய்ந்தவர்களா யிருந்தபோதிலும், பழய சில்பங்களுக்குரிய அருமையும் பெருமையும், புதிய சில்பங்களுக்கு கிடைக்கமாட்டாதென்பது திண்ணம்.

அன்றியும் அநேக பழய சிவாலயங்களில், மிகவும் அருமையான பழய கல்வெட்டுகள் உள. அவைகளைப் பாதுகாப்பது நம்மவர்களுடைய கடமையாகும். கோயில்களைப் பிரித்துக் கட்டும்பொழுது அக்கல்வெட்டுகள் உள்ள கற்களை, பழயபடியே வைக்காமல் மாற்றிவிடுவதினால், பழய கல்வெட்டுப் பரிசோதகர்களுக்கு நேரிடும் கஷ்டம் கொஞ்சமல்ல. முக்கியமாகத் தென் இந்தியாவின் பூர்வீக சரித்திரத்திற்கு இக்கல்வெட்டுகள்தான் மிகவும் ஆதாரமாயிருக்கின்றன என்பதை வற்புறுத்த விரும்புகிறேன். மேலும் அப்படிப்பட்ட கல்வெட்டுகள் உள்ள இடங்களில் சுண்ணாம்பு அடிப்பது உசிதமல்ல. கோயில்களில் சுண்ணாம்பு கட்டிடங்களுக்கும் வெளி மதில் சுவர்களுக்கும் தவிர, கருங்கற்பாகங்களுக்கெல்லாம் வெள்ளைச் சுண்ணாம்படிப்பது அவ்வளவு அழகாயில்லை என்பது என் அபிப்பிராயம் மாத்திரமன்று, நமது கோயில் சில்பங்களைப் புகழ்ந்து பேசும் பலநாட்டு சாஸ்திரிகர்களுடைய அபிப்பிராயமுமாம்.

கோயில்களை ஜீரணோத்தாரணம் செய்யும் பக்திமான்கள் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், பழய மண்டபங்கள் முதலியவைகளை மராமத்து செய்யும்பொழுது, புதியனவாய் ஏதாவது கட்டும்போதும், கருங்கற்களையும் செங்கற்களையும் உபயோகிக்க வேண்டுமே யொழிய, தகரக் கொட்டைகளையும், துத்தினாமத்தாலாகிய மேற்பரப்புகளையும் உபயோகிப்பது ரசாபாசமாகத் தோன்றுகிறது என்பதற்குச் சந்தேகமில்லை. இதை அவர்கள் முற்றிலும் தவிர்க்கும்படியாக நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.

பழய கோயில்களைப் புதுப்பிப்பதில் மைசூர் ராஜ்யத்து பூர்வீக நாகரீக சாஸ்திர இலாகாதார்கள் மிகவும் அருமையாக, பழய அழகும் அருமையும் கெடாதபடி மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்து வருகிறார்கள். சில இடங்களில் அவர்கள் மராமத்து செய்திருக்கிறார்கள் என்பதே தெரியாதபடி, அவ்வளவு அழகாகப் பூர்வீக வேலையை ஒட்டிச் செய்திருக்கிறார்கள்; இவர்கள் முறையை மற்றவர்களும் கைப்பற்றுவது மிகவும் நலமாகும்.

## தென் இந்தியா சிவாலயங்களிலுள்ள சில அருமையான சிற்ப வேலைப்பாடுகள்

மைசூர் ராஜ்யத்திலுள்ள கேதாரீஸ்வரர் கோயில் முதலிய சிவாலயங்களிலுள்ள ஹொய்சல சில்ப விசித்திரங்களைப் பற்றி முன்பே எழுதியிருக்கிறேன். மற்ற இடங்களிலுள்ள சில்ப விசித்திரங்களில் சிலவற்றை இங்கு குறிக்கிறேன். இவைகளை ஹம்பி, தென்காசி, மதுரை, திருநெல்வேலி, முதலிய இடங்களிலிருக்கும் பெரிய கோயில்களில் காணலாம்.

*(1)* யாளிகளின் வாயில் உருளும்படியான கருங்கற் குண்டுகள்.

*(2)* பெரிய தூண்களில் சுழலும்படியான சிறு தூண்கள்.

*(3)* முற்றிலும் கருங்கற்களினாலாகிய சங்கிலிகள்.

*(4)* பெரிய தூண்களில் வெட்டப்பட்ட பல சிறு தூண்களை சுத்தியினாலாவது, கையினால் பலமாகவாவது தட்டினால் சப்த ஸ்வரங்கள் பேசும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

*(5)* ஒரே பெரிய கல்லில் செதுக்கப்பட்ட சஹஸ்ர முகலிங்கம், பீமன், அர்ச்சுனன், ரதி, மன்மதன், அகோர வீரபத்திரர், ஊர்த்துவத் தாண்டவ மூர்த்தி, பத்ரகாளி, முதலிய பெரிய உருவங்கள்.

*(6)* இரட்டைக் கொடுங்கைகள்; இவைகளைக் கருங்கல்லில் செய்வது மிகவும் கஷ்டமான வேலை; மிகவும் ஜாக்கிரதையாகச் செய்யா விட்டால் ஒடிந்து போகும். இவைகள் ஆவுடையார் கோயிலில் இருக்கின்றன; சாதராணமாகப் பிற்காலத்து சில்பிகள் வேலை செய்ய ஒப்பந்தம் செய்து கொள்ளும்போது "ஆவுடையார் கோயில் கொடுங்கை நீங்கலாக மற்றெல்லா சில்பங்களையும் செய்கிறோம்"; என்று ஒப்பந்தத்தில் எழுதிக்கொள்வது சகஜம்.

## வர்ணம் தீட்டிய சித்திர சில்பம்

வட இந்தியாவில் அஜெண்டா குகைகளில் வர்ணம் தீட்டிய சித்திரங்கள் இருப்பது போல, தென் இந்தியாவிலும், பல பூர்வீக கோயில்களில் வர்ணம் தீட்டிய சித்திரங்கள் வரையப்பட்டன என்பதற்குச் சந்தேகமில்லை. சில வருடங்களுக்கு முன்பாக காஞ்சீபுரம் கைலாச நாதர் கோயில் பிராகாரத்தில் அதே மாதிரியான உருவங்கள் சித்திரிக்கப்பட்டிருப்பதை துப்ரெயில் (Dubreil) துரையவர்கள் கண்டு பிடித்திருக்கிறார். அன்றியும் தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலில் உள் பிராகாரத்தில் அத்தகைய சித்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பாக, புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள சிட்டனவாசல் எனும் இடத்திலும் வர்ணம் தீட்டிய சித்திரங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

தற்காலமும் மதுரை, முதலிய ஸ்தலங்களில் ஸ்தல புராணங்களைப்பற்றிய வர்ணம் தீட்டிய சித்திரங்கள் இருக்கின்றன வென்பது பலர் அறிந்த விஷயமே.

## சிவாலயங்களில் கல்வெட்டுகள்

மிகவும் புராதனமான சிவாலய கல்வெட்டுகள் பூர்வீக பல்லவ கிரந்த எழுத்துகளில் வெட்டப்பட்டனவாம்:- உதாரணமாக மஹாபலிபுரத்து கோயில்களிலுள்ள கல்வெட்டுகளைக் கூறலாம்.

பிறகு அவைகள் பெரும்பாலும் கிரந்த எழுத்துகளிலும் தமிழ் எழுத்துகளிலும் உள்ளன; தெலுங்கு தேசத்து சிவாலயங்களில் தெலுங்கிலும் மைசூர் முதலிய இடங்களில் கன்னட எழுத்துகளிலும் உள்ளன, பெரும்பாலும்.

கல்வெட்டிகளில் மிகவும் பழய தமிழ் எழுத்துகளுக்கு வட்டெழுத்து என்று பெயர். பெரும்பாலும் வட்டவடிவமாக இருக்கிறபடியால் இவைகளுக்கு அப்பெயர் வந்திருக்கலாம்.

பிற்காலத்திய தமிழ் கல்வெட்டுகள் தமிழிலேயே இருந்த போதிலும், "ஸ்வஸ்தி -ஶ்ரீ" என்று கிரந்த எழுத்துகளில் ஆரம்பிக்கின்றன.

இக்கல்வெட்டுகள் முக்கியமாக அந்தந்தக் கோயில்களுக்கு அரசர்கள் முதலியோர் தானம் செய்த நிலங்கள், ஆபரணங்கள், தீபக் கட்டளைகள் முதலியவற்றைக் குறிக்கும். இவைகள் பெரும்பாலும் கோயில் கர்ப்பக்கிரஹத்தின் வெளிப்புரம் வெட்டப்பட்டிருக்கும்; சில தூண்கள், மண்டபங்கள், பக்கச் சுவர்கள் முதலிய இடங்களிலும் உண்டு, இக்கல் வெட்டுகளின் எழுத்துகளின் மாதிரியைக்கொண்டு, கோயில்களின் காலத்தை ஒருவாறு நாம் கணிக்கலாம்.

இதைப்பற்றி இன்னும் அறிய விரும்புவோர் டாக்டர் பர்னல் என்பவர் அச்சிட்டுள்ள "பேலியாக்கரபி" என்னும் புஸ்தகத்தில் கண்டுகொள்க.

## பெரிய சிவாலயங்களில் சிறு சிவாலயங்கள்

அநேகப் பெரிய சிவாலயங்களில், கர்ப்பக் கிரஹத்திலுள்ள மூலஸ்தான லிங்கம் தவிர, பிராகாராங்களிலும் பல சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அவைகளுக்கு சிறு கோயில்களும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது பிற்காலத்தில் வந்த வழக்கமாகும். தாங்கள் செய்துகொண்ட பிரார்த்தனையைச் செலுத்தவோ, அல்லது லிங்கப்பிரதிஷ்டையின் புண்ணியத்தைப் பெறவோ, பல சிவபக்தர்கள் பெரிய கோயில்களில் இவ்வாறு சிறு கோயில்கள் கட்டியிருக்கின்றனர் என்பதற்குச் சந்தேகமில்லை. சில இடங்களில் வெளிப் பிராகாரங்களிலுள்ள சிறு சிவலிங்கங்கள் சன்யாசம் பெற்ற சிசவபக்தர்களுடைய சமாதிலிங்கங்கள் என்று எண்ணப்படுகின்றன. (இது இன்னும் ஆராய வேண்டிய விஷயம்.)

## மாற்றப்பட்ட சிவாலயங்கள்

இவைகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம் (1) பூர்வீக சிவாலயங்கள் வேறு மதக் கட்டிடங்களாக மாற்றப்பட்டவை (2) வேறு மதக் கட்டிடங்கள் சிவாலயங்களாக மாற்றப்பட்டவை. இவ்வாறு இவைகள் மாற்றப்பட்டபோது இவைகளிலுள்ள சில சில்பங்களும் மாற்றப்பட்டன வென்பதற்குச் சந்தேகமில்லை.

முதற் பிரிவிலடங்கிய, வேறு மத ஆலயங்களாக மாற்றப்பட்ட சிவாலயங்களை முதலில் கருதுவோம். வட இந்தியாவில் மகம்மதியர்கள் வந்தபிறகு பல சிவாலயங்கள் இடிக்கப்பட்டு, மசூதிகளாய் மாற்றப்பட்டன வென்பதற்கு சரித்திர அத்தாட்சியே உளது. இதற்கு முக்கிய உதாரணமாக காசி க்ஷேத்திரத்திலிருந்த பூர்வீக விஸ்வநாதர் ஆலயம் இடிக்கப்பட்டு ஔரங்கசீப்பினால் மசூதியாகக் கட்டப்பட்டதைக் கூறலாம். அம்மசூதியில் தற்காலமும் சிவாலய சிற்பங்கள் சில இருக்கின்றன.

தென் இந்தியாவில் பதினான்காம் நூற்றாண்டில் மகம்மதியர்கள் நுழைந்த பிறகு, சில சிவாலயங்கள் மாற்றப்பட்டன என்பது நிச்சயம். பெரிய காஞ்சிபுரத்தில் இரண்டொரு சிவாலய மண்டபங்கள் மசூதிகளாக மாற்றப்பட்டிருப்பதைத் தற்காலமும் காணலாம்.

அன்றியும் பல பூர்வீக சிவாலயங்கள், வைஷ்ணவ ஆலயங்களாக மாற்றப் பட்டிருக்கின்றன; இவைகளில் சிலவற்றைக் கருதுவோம்.

*(1)* சின்ன காஞ்சிபுரத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் ஆதியில் சிவாலயமாயிருந்த தென்பதற்கு பல அத்தாட்சிகள் உண்டு; அவைகளில் சிலவற்றை சுருக்கமாக எழுதுகிறேன். இந்த ஊர் ஆதியில் அத்தியூர் என்கிற பெயரையே உடைத்தா யிருந்தது; பழய ஆலயம் கிழக்குநோக்கி யிருந்தது; பெரிய கோபுரம், சைவ ஆகமப்படி கிழக்கில்தானிருக்கிறது, தென்கிழக்கு மூலையில் தான் மடப்பள்ளி யிருக்கிறது; தற்கால ஸ்ரீ வரதராஜப் பெருமாள் உற்சவங்களெல்லாம் மேற்கிலிருக்கும் சிறிய கோபுர வழியாகத்தான் நடந்தேறி வருகிறது. சிவாகமப்படி கோயில்களில் ஸ்வாமியின் கர்ப்பக்கிரகம் முதலிலும், அம்மன் கர்ப்பக்கிரகம் பிறகும் இருப்பது வழக்கம், தற்காலம் மேற்கு கோபுரவாயிலாக நுழைந்தால் அம்மன் கர்ப்பக்கிரகம் முந்தி யிருக்கிறது; ஸ்ரீ வரதராஜப் பெருமாள் மலைமீதிருப்பதாக ஐதிகம், இங்கு மலையே கிடையாது; பூர்வீக சிவாலயம் நான்குபுறமும் மூப்பட்டு அதன் பேரில் ஸ்ரீ வரதராஜப் பெருமாளை எழுந்தருளப் பண்ணி யிருக்கிறார்கள் என்பது நிச்சயம்; ஸ்ரீ வரதராஜர் சந்நிதிக்குப் போவதென்றால், மேற்குபக்கம் நுழைந்து போய், கிழக்கி லிருக்கும் படிகளின் மீதேறி மறுபடியும் திரும்பிப் போகவேண்டும்; இங்குள்ள கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் அத்தியூர் என்றே இருக்கிறது; அத்தியுரிலிருந்த சிவாலயத்திற்கு புண்யகோடீஸ்வரர் கோயில் என்று பெயர் இருந்ததாக அறிகிறோம்; தற்காலம் ஸ்ரீ வரதருடைய விமானத்திற்கு புண்யகோடி விமானம் என்று பெயர் வழங்கப்படுகிறது. கடைசியாக பழய வைஷ்ணவ ஆழ்வார்கள் ஸ்ரீவரதராஜரைப்பற்றி பதிகங்கள் பாடினதாக இல்லை; காஞ்சிபுரத்திலுள்ள பல திருப்பதிகளுக்கு பாசுரங்கள் இருக்கின்றன (இன்னும் பல ஆதாரங்கள் உண்டு அவைகளை யெல்லாம் இங்கு எடுத்து எழுதுவதற்கு இடமில்லை). சென்னை ராஜதா்னி ஜில்லா டைரெக்டரி (District Gazetteer) எனும் புஸ்தகத்தில், நிஷ்பட்சபாதமாக இதைக் கருதவல்ல ஒரு ஆங்கிலேயர், இது ஆதியில் சிவாலயமாயிருந்து பிறகே வைஷ்ணவ ஆலயமா மாற்றப்பட்டதெனக் கூறியுளார்; காலஞ் சென்ற பண்டித நடேச சாஸ்திரிகளும் இதே அபிப்பிராயம் கொண்டிருந்தார். விஜயநகரத்தரசர்கள் காலத்தில், ஒரு தளகர்த்தர், கிலமாக விருந்த சிவாலயத்தை, வைஷ்ணவ ஆலயமாக மாற்றினாரென்று நம்புவதற்கு அத்தாட்சிகள் உண்டு. இவ்விஷயம், மத அபிமானத்தை ஒரு புறம் ஒதுக்கி, கேவலம் விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் பார்ப்பவர்களுக்கு ஸ்பஷ்டமாய் விளங்கும்.

*(2)* திருப்பதி வெங்கடேசப் பெருமாள் மலைக்கோயில் ஆதியில் சைவாலயமா யிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை; இதை பிற்காலத்தில் ஸ்ரீ இராமாநுஜாசாரியார் வைஷ்ணவ ஆலயமாக மாற்றியதாக வைஷ்ணவ கிரந்தங்களே கூறுகின்றன. தற்காலமும் மூல விக்கரத்திற்கு மூன்றாவது கண்ணும், தாழ்சடையு மிருப்பதைக் காணலாம்; கைகளில் மஹாவிஷ்ணுவுக்கு இருக்க வேண்டிய சங்கு சக்கரங்கள் சிலையில் கிடையாது, மேலே தொடுப்புகள்தான் போட்டிருக்கிறார்கள்.

*(3)* செங்கல்பட்டு ஜில்லாவில் வண்டலூர் எனும் சிறு கிராமத்தில் இருக்கும் தற்கால வைஷ்ணவ ஆலயம், முன்பு சிவாலயமாயிருந்ததே. இங்கு பழய சிவாலயம் கிலமாய்ப் போக, மலையாக மாற்றப்பட்டு, அதன் மீது மஹாவிஷ்ணுவை ஆரோகணம் பண்ணி யிருக்கிறார்கள்; பழய சில்பங்களும் மாற்றப் பட்டிருக்கின்றன.

*(4)* மதுரைக் கருகாமையிலுள்ள அழகர் கோயிலும் ஆதியில் சிவாலயமாக இருந்தது. இதன் பழய பெயர் பழமுதிர்சோலை யென்பதாம். இப்பழமுதிர்சொலை ஸ்வாமிக்குப் பல திருப்புகழ் பாட்டுகள் பாடப் பட்டிருக்கின்றன; நற்கீரர்பாடிய திருமுருகாற்றுப்படையில் இதை சிவஸ்தலமாகவே பாடியிருக்கிறார். கல்வெட்டுகளில் ஸ்வாமியின் பெயர் பரமஸ்வாமின் என்றிருக்கிறது. மலையிலுள்ள பொய்கைக்கு புண்ய சரவண மென்றே பெயர்; இங்கு தற்காலமும் வினாயகர் விக்கரமும் பைரவருடைய விக்கரமும் இருக்கிறது; இச்சந்நிதிகளில் கொடுக்கப்படும் பிரசாதம் விபூதியே. இக்கோயிலின் வெளிப் பிராகாரத்தில் சிவாலயங்களிலிருக்க வேண்டிய சில பரிவார தேவதைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன; கருப்பண்ணன் கோயில் இவைகளில் ஒன்றாம், சப்த மாத்ருக்கள் ஆலயம் மறறொன்றாம். இங்கு பூர்வம் சுப்பிரமணியர் ஆலயம் இருந்த இடம் தற்காலமும் காட்டப்படுகிறது. இக்கோயிலுள்ள வைஷ்ணவ சில்பங்களெல்லாம் புதியவை, விஜயநகரத் தரசர்கள் காலத்திற்குப் பிறகு வெட்டப்பட்டனவாம்.

(இன்னும் இப்படி மாற்றப்பட்ட சில ஸ்தலங்களைப் பற்றி அறிய விரும்புவோர், எனதுமேற் குறித்த "சிவ ஆலயங்கள்- இந்தியாவிலும் அப்பாலும்" எனும் புஸ்தகத்தில் பார்த்துக் கொள்ளவும்.)

## பிறமத ஆலயங்களாயிருந்து சிவாலயங்களாக மாற்றப் பட்டவை

இனி மேற்கூறிய இரண்டாம் பிரிவாகிய, பௌத்த, ஜைன, வைஷ்ணவ ஆலயங்களா யிருந்தவை சிவாலயங்களாக மாற்றப் பட்டவைகளைப்பற்றி சிறிது கருதுவோம்.

*(1)* சென்னை ராஜதானியில் கிருஷ்ணா ஜில்லாவில், அநந்தபூர் தாலுகாவிலுள்ள "செஜர்லா" என்னும் ஊரிலுள்ள தற்கால சிவாலயம், ஆதியில் பௌத்த சைத்யமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதாகும்.

*(2)* கோதாவரி ஜில்லாவில், குண்டுபல்லெ எனும் இடத்திலுள்ள வட்டவடிவமான குகைக் கோயில் ஆதியில் புத்த ஆலயமாயிருந்தது, பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டது. புத்த தாதுகர்ப்பம் (தாகோபா) சிவலிங்கமாக மாற்றப்பட்ட தென்று டாக்டர் கசின்ஸ் கூறுகிறார்.

*(3)* மைசூர் ராஜ்யத்தில் பலஹொன்னூர் தாலுகாவில் 'களாசா' என்னும் இடத்தில் இருக்கும் சிவாலயம் ஆதியில் ஜைன கோயிலாயிருந்ததாம்.

*(4)* சென்னை ராஜதானி அநந்தபூர் ஜில்லாவிலுள்ள கம்படுரேனும் இடத்திலுள்ள சிவாலயமும், பூர்வம் ஜைன ஆலயமா யிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டது.

*(5)* மைசூர் ராஜ்யத்தில் நந்தி துர்க்கம் என்னும் இடத்திலுள்ள சிவாலயம்; சிலகாலம் ஜைன ஆலயமா யிருந்ததென எண்ணுவதற்கிட முண்டு; அச்சமயம் இதற்கு நந்தகிரி என்று பெயர் இருந்ததாம்.

பூர்வம் விஷ்ணு ஆலயமாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதற்கு இரண்டொரு உதாரணங்களைக் கருதுவோம்.

*(1)* சென்னை ராஜாதானியில, திருநெல்வேலி ஜில்லாவில் குற்றாலத்திலிருக்கும் தற்கால சிவாலயம் ஆதியில் விஷ்ணு ஆலயமாயிருந்ததை அகஸ்திய முனிவர், விஷ்ணுவின் விக்ரஹத்தை சிவலிங்கமாக மாற்றி, சிவாலயமாக மாற்றிது புராணக்கதையாம் தற்காலம் சிவலிங்கத்தின் பின்பாக மஹா விஷ்ணு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சிவலிங்கத்திற்குத் தற்காலமும் துளசி பூஜை செய்யப்படுகிறது. கோயிலில் தற்காலமும் சில பழய வைஷ்ணவ சின்னங்களிருக்கின்றன. ஸ்காந்த புராணம் இம்மாறுதலை ஒப்புக் கொள்கிறது.

## அழிக்கப்பட்ட பூர்வீக சிவாலயங்கள்

வட இந்தியாவில் மகம்மதியர்களுடைய ஆளுகை வந்த பிறகு பல சிவாலயங்கள் முக்கியமாக ஔரங்கஜீப் காலத்தில் அழிக்கப்பட்டன வென்பது சரித்திரப் பிரசித்தமான சங்கதியாம்; இதற்கு உதாரணமாக அழிக்கப்பட்ட பூர்வீக காசி சிவாலயத்தைக் கூறலாம். தென் இந்தியாவிலும் மாலிக்காபூர் பிரவேசித்த காலத்தில் பல சிவாலயங்கள் இடிக்கப்பட்டன: இதற்கு உதாரணமாக பதின்மூன்றாம் ஆண்டில் இருந்த மதுரை கோயிலிடிக்கப்பட்டதைக் கூறலாம். போர்த்துகேயர் இந்தியாவிற்கு வந்த பிறகு நாகபட்டணம் முதல் சென்னை சாந்தோம் வரையில் கடற்கரை யோரமிருந்த பல சிவாலயங்கள் அவர்களால் அழிக்கப்படடது அவர்கள் சரித்திரத்தின் மூலமாகவே நாம் அறிந்த விஷயம். அவ்வாறு அழிக்கப்பட்ட சிவாலயங்களில் கடற்கரை யோரமிருந்த ஆதி மைலாப்பூர் கோயிலும் ஒன்று என்று நாம் எண்ணுவதற்கு பல ஆதாரங்கள் உள; தற்காலத்திய கபாலீஸ்வரர் கோயில் சுமார் *300* வருடங்களுக்கு முன்புதான் கட்டப்பட்டதாகும்.

சில சிவாலயங்கள் முற்றிலும் அழிக்கப்படா விட்டாலும் அவைகளின் சிலபாகங்கள் இடிக்கப்பட்டு வேறு கட்டிடங்களாக உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. இதற்கு ஒரு உதாரணமாக கங்கைகொண்ட சோழபுரத்து சிவாலயத்தைக் கூறலாம். கோயிலைச் சுற்றி பிராகாரத்தில் கட்டப்பட்டிருந்த மேற்கட்டுடன் கூடிய அழகிய கட்டிடமானது பெரும்பாலும் இடிக்கப்பட்டு, அதிலிருந்த கற்கள் முதலியவைகள் .எல்லாம் *1836*ல் காவேரியில் கீழ் அணைகட்டுவதற்காக உபயோகிக்கப்பட்டது; நல்ல காலமாக லார்ட்கர்ஜான் (Lord Curzon) கவர்னர் ஜெனரலாயிருந்த போது அவர் பிறப்பித்த "பூர்வீக

கட்டிடங்களை காக்கும் சட்டம்" உண்டான பிறகு, இப்படிப்பட்ட கெடுதிகள் சிவாலயங்களுக்கு ஏற்படவில்லை என்று கூறலாம்.

## சில சிவாலயங்கள் கோட்டைகளாக உபயோகிக்கப்பட்டன

விஜய நகரத்தரசர்கள் காலம் முதல், சில சிவாலயங்கள், யுத்த காலத்திலும் ஆபத்காலத்திலும் கோட்டைகளாக உபயோகிக்கப்பட்டு வந்தன என்பதற்குச் சந்தேகமில்லை. இதற்காகவே அவர்கள் பெரிய கோயில்களிலெல்லாம் உயர்ந்த மதிற்சுவர்கள் எழுப்பினார்கள்; அன்றியும் அவர்கள் கட்டிய பெரிய கோபுரங்கள், உச்சமான நிலையிலிருந்து எதிரிகள் தூரத்தில் வருவதை கவனிக்கவே இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி யாளர்களால் ஒப்புக் கொள்ளப்படுகிறது. பெரிய சிவாலயங்களில் வெளி கோபுர வாயில்களின் கதவுகளில் கூர்மையான பெரிய இரும்பு ஆணிகள் அமைத்ததும், எதிரிகள் யானை முதலிய படைகளைக்கொண்டு இவைகளை எளிதில் பெயர்க்க முடியா வண்ணம் இருக்கவேண்டு மென்னும் எண்ணத்துடனேயாம். பல ஊரிலுள்ள ஜனங்களில் பெரும்பாலர், மகம்மதியர் முதலிய பகைவர் படை யெடுத்து வந்த போது, கோயில்களுக்குள் புகுந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்த்தார்கள் என்பது சரித்திரமறிந்த விஷயம்; ஐதர்கலாபனை காலத்தில் இது பன்முறை நடந்திருக்கிறது. ஐதர் காஞ்சிபுரத்து பெரிய சிவாலயத்தை பன்முறை தாக்கியதாகத் தெரிகிறது; அவனது பீரங்கி குண்டுகளினால் உண்டாய வடுக்களை சிவாலயத்தில் சில இடங்களில் இன்னும் காணலாம். தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலை பிரஞ்சுக்கார்கள் கோட்டையாக உபயோகித்ததாக நாம் சரித்திர மூலமாக அறிகிறோம். சென்னை ராஜதானியில் செஞ்சிக் கோட்டைக்குப் போகும் வழியிலுள்ள பெருமுக்கலில் இருக்கும் சிவாலயம், ஒரு கோட்டையாகச் சிலகாலம் பாவிக்கப்பட்ட தென்பது திண்ணம்; எதிரிகளின் குண்டு வீச்சினால் கோயில் பல இடங்களில் இருந்திருப்பதை இன்னும் காணலாம். சென்னைக் கடுத்த திருவொற்றியூர் கோயிலின் பழய உட்பிராகாரத்தின் மதில் சுவரை, பிறகு விஜய நகரத்தரசர்கள் அரணுக்காக உயர்த்தியிருப்பதைக் காணவும். சென்னை ராஜதானியில் சில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு அடிமட்டத்துடன், பூர்த்தியாகாமல் விடப்பட்டிருக்கும், "ராயகோபுரங்கள்" என்று தற்காலம் அழைக்கப்படும் விஜய நகரக கட்டிடங்கள், அதிக உயரமாகக் கட்டப்பட்டு அவைகளின் உச்சியிலிருந்து பகைவர் தூரத்தில் வரும்பொழுதே க்ண்டுபிடிக்க உபயோகப் படத்தக்க வைகளாய் ஆரம்பித்திருக்க வேண்டுமென்று எண்ண இடமுண்டு. விஜய நகரராஜ்யம் தலைக்கோட்டை யுத்தத்தில் அழிந்த போது இவைகளைப் பூர்த்திசெய்யாமல் விட்டுவிட்டனர். இவைகளைக் கட்டும்போது எதோ கருங்கள்லிற்குள் தேரை யொன்று அகப்பட்டது, ஆகவே, அவைகள் அப்படியே முடிக்கப்படாமல் விடப்பட்டன, என்பது கட்டுக்கதையாம்.

*— முற்றிற்று —*

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113**
**அண்மை வெளியீடுகள்**

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி–2 | 80.00 |
| குறுந்தொகை – ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ்நாடகம்–நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம்–தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி–4 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம் பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு–ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி–1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி–2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை–4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| தமிழ்மொழி–இன–இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| அறிவியல் தொழில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |
| WORK BOOK SPOKEN TAMIL | 50.00 |

**438** **தமிழ் அன்னை** **40.00**

